


கடவுள் துணை.

யாகோபு அருளிச்செய்த

வைத்திய சிந்தாமணி

எழுநூறு

இஃது

மதுரை யானைக்கல்தெரு வித்துவான்

மூ. குழந்தைவேலுப்பிள்ளை அவர்கள்

கேட்டுக்கொண்டபடி

மதுரை வித்துவான்

த. குப்புசாமிநாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்றது.

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ரா ம.

குருசாமிக்கோனர்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீராமச்சந்திரவிலாசம் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன்விலை] 1922 [ரூ. 1-8-0.

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

கடவுள் துணை.

யாகோபு அருளிச்செய்த
வைத்திய சிந்தாமணி 700.

ஆரணத்தில் அகிலாண்ட கோடிதன்னில்
அலைகடலில் வரையினிலு மமர்ந்தேயெங்கும்
பூரணமாய் நிறைந்துநின்ற பொருளேகாப்பு
புகழ்பெரிய ரிமார்கள் பாதங்காப்பு.
காரணமாய் எனக்குப்போ யாகோப்பென்று
கருணையுடன் குணமைத்த குருவேகாப்பு
தாரணியுள் ளோர்பிழைக்க யிந்நூல்தன்னைச்
சாற்றுதற்கு ஆண்டவன்றன் பாதங்காப்பே.

பூரணியாள் பெற்றவிரா மகனுர்தன்னைப்
போக்கோடே புந்திதனில் வைத்துக்கொண்டு
காரணமாய்க் கையைந்து முகத்தான்றன்னைக்
கற்பகத்தின் செல்வனைத்தான் கருத்திலெண்ணி
நாரணன்றன் மருமகனை நவின்றுகூறி
நற்பாதஞ் சிரசில்வைத்துப் பணிந்துபோற்றி
பாரதனிற் பண்டிதத்தைப் பலநூலாய்ந்து
பார்த்தறிந்த சிந்தையினுற் பாடினேனே. (1)

சிகையில்மதி அமுதத்தை யணிந்தயீசன்
செப்பரிய விடையேறி நின்றேன்மிக்க
தகையகன மழுவெடுத்த பெரியோன்றனும்
தன்மையாய்க் காளியுடன் வாதுசெய்தோன்
தொகையாத மானிடரைப் படைத்தோன்ஞானச்
சொன்மைதரு நகைசெய்து யெரித்தோனுன
இகமகிழுஞ் சிவனுடைய பதமம்போன்ற
இணையடியைத் தொழுதுபணி யியல்புள்ளோரே. (2)

சூரனைத்தான் சூலமுறுத்து வள்ளிதன்னைச்
சருதிபெறச் சிறையெடுத்த சீமான்றன்னைப்
பாரமுள்ள தேவருக்கு பிடுக்கைதீர்த்த
பார்வதியாள் புதல்வனெனும் பயன்பெற்றிருக்கும்
கோரமுள்ள யெக்கியத்திற் கலந்துநின்ற
குணவானை மயிலூர்ந்தகுமரன்பாதம்
வீரமுடன் சிரசில்வைத்துத் தொழுதுபோற்றி
விதமான பண்டிதத்தை விளம்புவேனே. (3)

நெஞ்சுதனில் விற்றிருக்க நெடியோனுக்கு
நித்தியமும் பணிசெய்யுந் துணைவிதன்னை
அஞ்சியே தக்கனுட யெக்கியத்தின்
அழகியநீ தனிந்தவளே அனைத்துலோகம்
மிஞ்சியே படைத்தவளே ராசஞ்சேடே
பிகப்பிரிய மாயிருந்து வளர்த்தாள்தன்னைத்
தஞ்சிலா மனத்துள்வைத்துப் போற்றிசெய்து
தொல்லுலகிற் பண்டிதத்தைச் சொல்லுவேனே. (4)

பொதிகைவாழ் மாமுனிவர் பாதம்போற்றி
புகலரிய தன்வந்திரி பாதம்போற்றி
விதியிலுயர் காலாங்கி பாதம்போற்றி
வெற்றிபெற்ற போகருட பாதம்போற்றி
பதியான யூகிமுனி பாதம்போற்றி
பத்திதருஞ் சட்டைமுனி பாதம்போற்றி
நிதிபுகழும் புலத்தியர்தன் பாதம்போற்றி
நினைவில்வைத்துப் பண்டிதத்தை நிசஞ்சொல்வேனே.

ஆதிமுத லென்பேரு ராமதேவர்
அடவாகக் குளிகையிட்டு மக்காதேசம்
வீதியிலே சென்றுபுக்கச் சாய்புகண்டு
விரும்பியே சாஸ்திரத்தில் மிகவும்பேசி
நீதியா யென்மனதிற் றோற்றமாகி
நேராகக் கொண்டணைத்து நேர்த்தபார்த்து
ஓதியதோர் ஞானத்தின் செயலுங்கண்டேன்
உற்றுணர்ந்து பிற்பாடு உறுதியானேன். (6)

உறுதியுற்று யிருக்கையிலே யாகோப்பென்று
உண்மைப்பேர் கொடுத்துச்சுன் னத்துச்செய்து
அருமைபெறவுப்பி யொன்று யிப்தாப்போ
அசனுசனும் வேறல்ல நீகானென்றேன்
பருதியுற்றப் பண்டிதத்தை மிகவும்பார்த்துப்
பகுத்தறிந்து வைத்தியங்கள் பலிக்கவென்று
பிருதியுற்று வடதேசம் மக்காசென்று
பேதமது யில்லாமற் பேசினேனே. (7)

பேசினேன் வைத்யசிந்தா மணியதாகப்
பேர்பெறவே யெழுநூறு விருத்தமாக
வீசினேன் மதுரகவி போலேசொன்னேன்
விதமாக யெந்நூலே விரும்பிப்பாரு
ஆசுகவி போலாகும் அனந்தம்போக்கு
அடுத்துகின்ற பண்டிதர்கள் பிழைக்கவேண்டி
வாசினையாய்ப் பார்த்தறிந்தால் யெல்லாம் வாய்க்கும்
வகைசொன்ன பொருளென்று மருவிப்பாரே. (8)

மருந்துவகை.

சொன்னதொரு லேகியங்கள் கிருதம்யெண்ணெய்
சொற்பெரிய வங்கசற்பம் உப்புச்சொன்னேன்
நன்னயமாய் அயபற்பம் நாகபற்பம்
நலமான களங்குமுதல் அன்னபேதி
இன்னிலத்திற் கல்நாறின் பற்பமோடு
இங்கிதமாய் வைப்புமுதல் திராவகங்கள்
கன்னல்பெற ஆக்ராணம் நசியப்போக்கு
காரணமாய் ரசவாதக் தைலமாமே. (9)

தயிலமொடு பொட்டணங்கள் புடத்தின்பாகர்
தாக்கரிய கிருதமொடு பிட்டுமார்க்கம்
ஓயிலொடு கருங்கோழி யெண்ணெய்மார்க்கம்
உறமாகப் பினிசத்தி னெண்ணெய்யோடு
அயிலமொடு செம்பினுட பற்பந்தானும்
அடவான தங்கச்செந் தூரமார்க்கம்
அயிலமொடு கோழியுட சூரணங்கள்
துகையாகப் பாடியதால் துலக்கந்தானே. (10)

துலக்கமாய்க் கெந்தகத்தின் பற்பமோடு
துடியான அரிதாரஞ் சிலையுஞ்சாரம்
விலக்கமாய் வைப்போடு காந்தம்வங்கம்
விரும்பியே அப்பிரேகம் விதங்கள்ரெம்ப
பிலக்கவே பார்த்தாக்கால் களங்கந்தோணும்
பிசகாது யென்வசனம் பொய்யாகாது
மலைக்குள்ளே ஜலமிருந்த விதமேபோலாம்
மகிழ்வாக யாக்கோபு வழுத்தும்வாறே. (11)

தன்மருக்குங் கன்மருக்குந் தனங்கள்ரொம்பத்
தாஷ்டிகமாய்க்கொடுப்போர்க்கும்வழிபட்டோர்க்கும்
வன்மவினை தீருமென்று யின்னூல்தன்னை
வாழ்த்தியே கொடுத்துவிடு மற்றுமின்னம்
கன்மமுள்ள கசடருக்கும் கயவனேழை
கலிமிடியின் காமியற்கும் பாதகற்கும்
நன்மையுள்ள நூல்கொடுத்தால் நரகமெய்தும்
நானிலத்தில் யாக்கோபு நலஞ்சொன்னேனே. (12)

வாலரசம்.

வன்னிகெற்பம் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
வகைசமமாய்க் கொடிவேலி வேருசேர்த்து
உன்னிதமா யிடித்துநய்யக் கிடத்திலிட்டு
ஒழுங்காக மேல்மூடிச் சீலைசெய்து
பன்னியே வாலரசமாகச் சாமம்
பதாமல் யெரித்திடவே உயரேறும்
சென்னியே வாலரச மாகும்பாரு
செப்பினர் யாக்கோபு திறமைதானே. (13)

திரமான கல்லுப்புப் படியும்நாலு
திட்டமா யிடைசேருசெங்கல் மாவை
வரமாகச் சேர்த்திடித்துச் சட்டியிட்டு
வன்மையா யமுழ்த்தி நீர் நடுவிலேதான்
அரமாகப் பள்ளமிட்டு வகையதாக
அதிலிடுவாய் வாலரசம் பலமும்நாலு
காமாக மேல்மூடிச் சீலைமண்ணேழ்
கட்டிவைக்க யாக்கோபு கருதினாரே. (14)

சொன்னதொரு அடுப்புதனிற் றூக்கிவைத்துச்
சுகமாகச் சாமமெட்டு மெரித்துவாரீ
நன்னயமாய் மேலேறும் பதங்கம்பாரு
நாட்டியே மயிர்க்குச்சு தன்னுலேதான்
சின்னபின்ன மாக்காமல் வழித்துக்குப்பி
சிறப்பாக அடைத்துமூடிப்போட்டு
கன்னலதா மெரித்திடவே உயரவேருவ்
கருத்துரைத்தார் யாக்கோபு கருணைதானே. (15)

குப்பி மெரிப்பு.

எரித்திடவே பதங்கமது தேங்காய்போலே
எறியே தானிருக்கும் உடைத்துமெள்ள
வரித்திடவேகுரூவாகும் வைத்துக்கொண்டு
வன்மையாய் லேகியங்கள் கிருதமெண்ணெய்
நரித்திடவே செந்தூர மிதிலே போட்டு
நலமாக உண்டிடவே நாட்டிலுள்ள
பெருத்திட்ட பீனிசங்கள் கடலேபுக்கும்
பேசாதே யென்றுசொன்னர் யாக்கோப்தானே. (16)

பண்டிதத்தைக் கண்டிதமாய்ப் பார்த்துத்தேறிப்
பரிவான பிணியினுட பருவம்பாரு
கண்டிதமா யிருந்தாக்கால் தூரஓடு
கருத்துள்ளே தீருமென்றுல் மருந்துதாக்கு
மூண்டிதமால் வியாதியெல்லாங் கடலேபுக்கும்
முதுமையாய்ப் பத்தியந்தான் காக்கச்சொல்லு
தண்டியா யிருந்தாக்கால் மருந்துதன்னைத்
தாக்கென்று யாக்கோபு திடஞ்சொன்னரே. (17)

அயிலிதன்னைத் தேவேந்திரன் சினேகஞ்செய்ய
அதிற்பிறந்த தெங்கள்குலம் ஓழிந்தபோது
பயிலாகக் கௌதமர்தம் மரபிதென்றூர்
பதிவாக யென்பேரு ராமதேவர்
ஓயிலாகப் பட்டப்பேர் தேவராகும்
உறுதிபெறச் சாஸ்திரங்கள் மிகவும்பார்த்து
குயில்போலச் சொல்லி விட்டேன் பண்டிதத்தைக்
கூறினேன் தண்டகத்தின் குருவைப்பாரே. (18)

அயச்செந்தூரம்.

எருவதனைத் தகடாக்கி எட்டிச்சாற்றில்
ஏழுதரந் தோய்த்தாட்டி யிடிக்கத்தூளாம்
பகருமுன் னிலைச்சாற்றி லரைத்தருட்டிப்
பரும்புடமாய்ப் போட்டெடு செந்தூரமாகும்
அகிலமதில் நோயாளி அன்பாய்வந்தால்
அரிசி யிடையே கொடுக்க குன்மமூலம்
வெகுபிணிக ளறுமென்று வெழுநூற் சொல்லி
விளங்கவைக்கும் யிந்திரியம் வினவுமாமே. (19)

நல்லிரும்பு அரப்பொடியைக் காந்தத்தாலே
நாடியே யெடுத்ததனைக் கல்வத்திட்டு
சொல்லினிய சம்புமர மூத்தப்பட்டை
அவைக்கவருஞ் சாறுவிட்டுச் சாமமூன்று
மெல்லியதாய் நலநீத மாருமட்டும்
விடாதரைத்து உலர்த்தியதை வைத்துக்கொண்டு
சொல்லுமனுப் பானத்தோ டெயப்பாண்டு
சுகம்உஷ்ணம் குன்மமூடல் சொல்தமாமே. (20)

தாம்பூரப் பல்பம்.

சுத்திசெய்த தாம்பூரந் தகடதாக்கித்
துண்டித்துப் புளியிலைபோல் தகடுசெய்து
குத்தமறக் கெந்தி சமனுய்ப்பொடித்து
கூட்டியே எழுமிச்சம் பழத்தின்சாற்றை
வத்தவத்த விட்டுரவி தனில்காளெட்டு
வார்த்ததிலே தலைசுருளி மேனிச்சாறும்
நித்தநித்தம் வகைக்கொரு நாளுரவைத்து
நெருடிப்பார் தகடுருகி மெழுகுமாமே (21)

மெழுகுதா னுலர்ந்தபின்பு பொடியதாக்கி
மூக்கடுகுஞ் சீரகமும் யிந்துப்பைந்தும்
மெழுகுபோலரைக் களஞ்சிபற்பந்தன்னை
மிகத்தேனி லுண்டுவரக் குன்மமெட்டும்
பழுவாதம் நீர்பித்தஞ் சூலைபுண்ணும்
பருகிகண்ட பனிபோலா மென்றுயிசன்
மழுவெடுத்தா நிம்மருந்தி னுண்மைகண்டு
வானவரு மாலயனும் மகிழ்ந்தாராமே. (22)

அக்கினிக்குச்மாரசேந்தூரம்.

ஆய்ந்தெடுத்த அரைபொடியைப் பழச்சார்விட்டு
அரைத்துநன்றாய் வில்லைதட்டி ரவியில்வைத்து
காய்ந்தபின்பு முன்போலே அரைத்துக்கட்டிக்
காயவைத்து மறுபடியும் முன்போற்செய்து
மாய்ந்தபின்பு கெர்தகத்தைச் சுத்திசெய்து
வளர்பிரண்டை களாக்கொடிச் சாற்றினூடு
தோய்த்திடவே ரவியிலிட்டுக் காயவைத்துச்
சூதத்தைப் பதங்கித்துத் தூயதாக்கே. (23)

ஆக்கிவைத்து தாம்பூரந் தகடாய்செய்து
ஆறிரண்டு அரைச்சதுரக் கள்ளிச்சாற்றில்
போக்கதிலே தகடதனைச் சுத்திசெய்து
பொடியாக்கி மூன்றிலொன்று வாணகெந்தி
தாக்கியரை முன்சாற்றில் தகட்டிற்சேர்த்து
தண்டாமல் குகையிலிட்டுச் சில்லுமூடி
வாக்கினிய சீலைமண்பிலக்கச்செய்து
வனத்துவெரு வடக்கியதைப் புடத்தைப்போட்டே. (24)

போட்டிடத்தாம் பூரமது களிம்பற்றுப்பால்
போலாகும் புகழ்ந்திடுமூன் சூதபற்பம்
நாட்டொருகல் வீரங் கெந்தியாலும்
நாள்மூன்று தாம்பூர பற்பத்தோடு
கூட்டியரை கல்வத்தில் பழுக்கும்வன்னி
குமரியுட சாற்றினுல் நாலுசாமம்
ஆட்டிநன்றாய் மெழுகுபட அரைத்துவாங்கி
ஆதித்தன் ஒளிபடவே தட்டிவையே (25)

தட்டிவைக்கத் தாளமதின் புரத்தின்மேலே
தனல்பறந்து வெந்து நீராகுமித்தைக்
கட்டிவைத்து அனுப்பானந் தன்னிலீயக்
கடினமாங் குன்மங்க ளெட்டுந்தீரும்
மூட்டிவிடுஞ் சூலவகை யாறுந்தீரும்
மூதிர்வாய்வு மூன்றில்வரும் பாண்டுபோகும்
குட்டமறும் வாதபித்த மற்றதாலே
கூடிவரும் வியாதிகளுங் குணமதாமே. (26)

சத்திகுன்மம் வெட்டுக்கும் அயம்.

சார்ந்தத்தா லெடுத்த அயப் பொடிபலமும்பத்து
கனகநிறம் போலநிம்பக் கனிநால்பத்து
சேர்ந்திருக்க நால்கித்தாய்ப் பிளந்துவைத்துத்
தினமுமொன்று தானருந்து தோலிலீக்கு
மாந்தராய்க் கர்மமது செய்துவந்த
வலிசத்தி குன்மமது வெட்டும்போகும்
பூர்த்தஅரி முனிவர்களு மெய்த்துக்கொள்வார்
புகலாதே யாவருக்கும் புதுமையாமே. (27)

நாகபற்பம்

இலுப்பைநெய்யிற் சாரத்தைப் பொடித்துத்தூவி
இருபத்தோர் தரமுருக்கிச் சாய்த்தநாகம்
வலுத்தநிற்குள் சட்டிதனி லிட்டிருக்கி
வாகாகக் கொடிக்கள்ளி மரத்தின்மேழே
பழுத்துநிர்த்த சருகெடுத்து மூச்சாமந்தான்
பாங்காக வருத்தெடுத்துப் பொடித்துநன்றூய்
செலுத்திடவே கள்ளியுட சருகைச்சுட்டுச்
சிறப்பாக நீர்விட்டுத் தெளிவைவாங்கே. (28)

தேரியே தெளிந்தநீர் வார்த்தரைத்துத்
திரட்டியே குக்குடத்திற் களிம்புநீங்கும்
நீரினிலே வெளுப்பாக மட்டும்போடு
நிகழ்த்தியதோ ரனுப்பானத் துடனேயிந்தால்
கூறியிடு மேகங்க ளிருபத்தொன்றுள்
குட்டங்கள் பதினெட்டுங் குன்மமெட்டும்
மாறியிடும் வாதமென்ற ரோகமெல்லாம்
மகிமைபெற உடலிறகி வாலியாமே. (29)

தாம்பூரப்பஸ்பம்.

சுத்தமுள்ள தாம்பூரந் தகடாய்த்தட்டிச்
சூடதனையும் பொடித்திட்டு கொச்சிச்சாற்றில்
பத்துதரங் காய்ச்சித்தோய் பிரண்டைச்சாற்றில்
பதினொன்றும் புளியரணைக் கிளங்குமோரில்
குத்தமறக் காய்ச்சித்தோய் கசடுநீங்கும்
கூட்டுவது கெந்தியது நாலத்தொன்று.
வைத்தரைவல் லாரைச்சார் தகட்டிற்பூசி
வாய்மூடிக் கண்ணுவொரு புடத்தைப்போடே. (30)

போட்டெடுக்கப் பற்பமதா முன்சாற்றுலே
புகட்டியரை புடந்தோறுங் கசடுதீங்கி
காட்டுவது நீலவர்ண மடங்கிற்றுஞல்
கனகமென்ற பற்பமிது அனுப்பானத்துள்
கூட்டியிடு ஈரேழு நூற்றியெட்டாய்க்
கூறுகின்ற வியாதியெல்லாங் குடிவிட்டோடும்
மீட்டிவிடுந் திரிகாடி நோய்களெல்லாம்
வீணர்கட்கும் வாழ்வுதரும் பதியுமாமே. (31)

சதுர்முகப்பஸ்பம்.

காரீயர் தாம்பூரம் ஈகம்வங்கம்
கசடறுத்துச் சமனுக்கிக் கனல்மேலிட்டு
பாரியதி லுருக்கிமனு ஸிலையுர்தூவிப்
பருங்காண்டி யிட்டதனை வருத்துக்கிண்டி
ஆரியபின் னெடுத்துகுழிக் கல்வத்திட்டு
அருக்கன்பால் விட்டரைத்துப் புடமாதிட்டு
வேரினிய வச்சிராங்கிப் பால்விட்டாட்டி
விரைந்துமே மூவேழு புடமும்போடே (32)

போட்டெடுத்துக் கல்வத்திற் பொடியாய்ச்செய்து
பொட்டிவெல்லத் தனுப்பானத் துடனேயீந்தால்
மூட்டியபின் னிருவினைகள் முன்னேவந்து
முடிந்ததென்று முன்னோர்கள் யெழுதிவைத்த
எட்டிலுள்ள அஷ்டகுன்ம முடனேநீங்கும்
எளிதாக யிம்மருந்தை பத்தியுண்ண
ஓட்டிவிக்குந் திருவுளமே யென்றுநோக்கி
உறுதிபெற வினையகலு முண்மையாமே. (33)

திரிவங்க கற்பம்

திரிவங்கம் பலமூன்று சுத்திசெய்து
திடமான அயக்காண்டி தன்னிலிட்டு
அரிவுடனே உருக்குமுகந் தன்னிலேதான்
அடவான பொற்றலையை யிடைநேரிட்டு
விரிவாகக் கிண்டிடவே பொரித்துதூளாம்
விதமாக யெடுத்துமே கல்வத்திட்டு
நெரிபெறவே பொற்றலையின் சாற்றுலாட்டி
நிலவரமாய் மூன்றுபுடம் போட்டிடாயே. (34)

போட்டிடவே செந்தூர மாகும்பாரு
போக்கோடே அனுப்பானத்துடனே கொள்ள
காட்டிலுள்ள வியாதியெல்லாங் காணுதோடும்
கபியுண்ட கற்பமிது கானுங்கொண்டேன்
கேட்டபேர்க் கெல்லாந்தான் சொல்லவேண்டாங்
கேலியாய் வைத்தியத்தைச் செய்யவேண்டாம்
பாட்டிலே ஆராய்ந்து பாகமாகப்
பதிவாகச் செய்தாக்காற் பலனுமாமே. (35)

உப்புக்கட்டு.

கல்லுப்புச் சோரனுவே சமமாய்ச்சேர்த்துக்
கல்லுரலி லிட்டிடித்துக் கலையத்திட்டு
சில்லிட்டு மூடியதைப் புடத்தைப்போடு
தீயாத்தி நீலகண்ட யிலைச்சாற்றிலே
மெல்லியதா யரைத்தருட்டி காயவைத்து
மென்றுதிண்ண மருந்துயிசை ஆறுகாள்தான்
சொல்லுகின்ற அஷ்டகுன்ம மெல்லாந்தீருஞ்
சோதினைபா யருந்துமுன்னில் சொல்லுமாமே. (36)

சுத்தித்த தாம்பூரந் தகடதாக்கிச்
சொல்லுகின்ற புரசுலர்த்திச் சுட்டசாம்பல்
மத்திக்கும் பிரண்டைச்சார் தகட்டிற்பூசி
வாய்குவித்த குகையிலிட்டுச் சில்லுமூடி
மெத்தித்துப் புடம்போடப் பற்பமாகும்
விசையற்று அனுப்பானத் துடனேயீய்
சத்தித்த வருங்குன்ம மெல்லாந்தீரும்
சத்தியமா யிம்மருந்தைச் சாற்றினேனே. (37)

மேகவெள்ளாக்கு லேகியம்

ஆகுவா கனன்மெச்சுஞ் சாறுதன்னில்
அந்திடைக்கு ஆவின் நெய்விட்டுநன்றாய்
வாகுபெறக் கற்கண்டு செட்டிப்பிட்டு
மத்திக்க வெண்ணெய்போல் வலுத்துநிற்கும்
மேகமே மூப்போதுண் மாங்காய்வீதம்
மேகமறும் வெட்டைநிற்கும் சுருக்கல்போகும்
ஏகுமே நிற்கண்ட பனிபோலாகும்
ஏடுலகத்தேன் யாகோபு யினியவாறே. (38)

சதுர்முகச்சூரணம்

தேத்தாவின் வேர்த்தோலும் ஐவிரலிவித்துஞ்
சிறுநாக விரையுடனே அருக்கன்வேர்ப்பட்டை
னத்தியே சமபாகந் தூளாய்ச்செய்து
இருநேரந் தேனில்வெரு சடியுமுண்ண
பக்தியுடன் மண்டலத்தில் அஷ்டகுன்மம்
பறந்துவிடும் யிம்மருந்தி னுண்மைகண்டு
சுத்தமதாய்ப் பொசிப்புமிக உண்ணச்செய்து
சுகமளிகும் பத்தியங்கள் பிடிக்கத்தானே (39)

குன்மத்திற்கு

கல்லுப்பும் புண்ணுக்கும் யிரும்பின்கிட்டங்
கருவாக வகைக்குச் சமனுய்ச்சேர்த்து
கல்லையெ மிச்சஞ்சாறு படிநாளுக்குள்
காலிலொன்று கத்தாளஞ் சாறுங்கூட்டி
மெல்லியதா யரைத்ததனை உலர்த்திக்கொண்டு
மேவியே அயர்தாம்பிரம் நாகங்கூட்டி
னல்லியதேன் அனுப்பானத் துடனேஉண்ண
துடந்தஅஷ்ட குமன்கன் தூளந்துபோமோ. (40)

மகோதரத்திற்கு

வரிக்கடுக்காய்த் தோல்குருணி யிரும்பின்கிட்டம்
வருகனெட்டுசாரம் வெடியுப்புரெட்டி
கரியபிள்ளை ஆட்டமூரி பதக்குவிட்டு
தத்தரித்துப் பச்சைபனை யோலைபோட்டு
இரவியிரு நாள்வைத்து வாலியேற்றி
இரக்கியே நிராவகத்தை யுண்டாரானுல்
பெருவயிறு விஷபாகம் மகோதரங்கள்
போந்தகலும் பத்தியங்கள் பிடிக்கத்தாலே. (41)

செம்பின் பற்பம்.

செம்பினுட அரபொடியும் பலமுமெட்டு
செலுத்தியடிப் பாண்டத்தினுள்ளே யிட்டு
கொம்புபாகல் இலைச்சாறிற் பதக்குவிட்டு
கொட்டி தீயெரிப்பாய் கமலம்போலே
கெம்பியே சாறுவத்திச் சாம்பலாகும்
கெண்டியரை கல்வத்திற் சாறுவிட்டு
தம்பமரை வில்லைதட்டிக் காயவைத்துத்
தனிஅகலி லிட்டுபுடம் பத்துலோடே. (42)

பத்தியுட னரைவிட்டுக் கல்வத்திட்டுப்
பண்டரைத்த சாற்றிலே அரைத்துவில்லை
பெத்தபெரும் புடம்போட சடுதீங்கும்
பேணியதை அனுப்பாவத தூடனேயீயச்
சத்திவலி வாதபித்த மயகத்தாலே
சார்ந்துவரும் அஷ்டகுன்மஞ் சூலிவாய்வு
சுத்தமாய் போகுவைக்கும் ஒளிவெங்காயஞ்
சுகப் படுத்தும்யார்க்கு மிதைத்திறந்திடாதே. (43)

விரைவாதத்திர்க்கு.

சருதூலில் சேரானின் பாலையூட்டிக்
கட்டுகொண்டை சதைகடுவே மறுநாள்தன்னில்
அரைநாளே தவிர்த்தவிழ்க்க ரணமும்ஆகும்
ஆவுநெய்யில் வேம்பின்தூள் அரைதத்துக்காச்சி
உருவாக கடுகளவு மெழுகுதானும்
ஊட்டியரை களிம்பாகும் உலரும்புண்கள்
விரைவாத மகலுமென்ற யாகோபுதானும்
விளம்பினே னென்பேரு விளங்கத்தானே. (44)

சுவாச காசத்திர்க்கு

புண்டரிகக் கொழுப்புதன்னே யுருக்கநெய்யாம்
போடதிலே கிராம்பு ரெண்டுபலமுள்ளாக்கி
கிண்டிவரச் சலியாமல் ரவியில்வைத்துக்
கிளரியே லவங்கமதி லிட்டுநெய்யை
உண்டபின்பு உலர்த்தியதைத் தினமோரெட்டு
உண்டிடவே கீழ்சுவாச ரோகமெல்லாம்
தொண்டனிட்டு ஓடுமடா பொய்யாதொன்றுஞ்
செப்பினேன் யாக்கோபு திறமைதானே. (45)

சேங் கோட்டை வல்லாதி

சோரின் கொட்டைபடி காலுவாங்கி
செம்மையாய் புகையிலைச் சார்தன்னிற்போட்டு
விரதுதா னடங்கவே அவித்துக்கொண்டு
விதமாகக் கல்லுரலி லிட்டுபின்பு
தாரெள்ளு தூருசுர பொடியெட்டிட்டுத்
தாக்கியே திரிகடுகு ஓமங்கூட்டி
பாராளுங் கொத்தமல்லி கெல்லிமுள்ளி
பதிவாக வகைக்கு அரைப்பலமும்போடே. (46)

போட்டுமே கல்லுரலிற் கடினமாகப்
பூராகத் தானரைத் துச்சனியிட்டு
நாட்டுமே நெய்விட்டுப் பானைதன்னில்
நலமாக அடைத்துமண் டலமேயுண்ண
காட்டில்களி மேகமுதல் விஷங்கள்போகும்
கனமான ஈரைதிரைகள் சூலைப்புண்கள்
கேட்டுமே போகும் யாகோபுசொன்னேன்
திருபையுள்ள அவிழ்தமிது செய்துபாரே. (47)

கிராணிக்குச்சூரணம்

நாறும்பூ பலமாறு விளங்கம்மூன்று
நாட்டுவாய் கொடிவேலிப் பட்டையொன்று
வேறுவினை தீராதிரி கடுகுஒன்று
வியன்படவே நிறுத்துவரு பொடியைத்தேனில்
தீரும்வினை தீரென்று உண்ணக்கிராணி
திரமான சில்விஷங்கள் தடிப்புமேகம்
ஆறுபொழுதுண்டிடவே சகல ரோகம்
அணுகாது யாகோபு அரைந்திட்டேனே. (48)

சுவாசகாசத்துக்கு

காரைவே ராதண்டை வேரும்ஈரோய்க்
கண்டித்த யிருதூக்கு கிஷாயமிட்டு
ரோதனை வடித்துப் பின்குழம்பதாக்கி
நிறுத்துமேகாம்பு ரெண்டு பலமுமிட்டு
ஊரியபின் குளம்புடனே அரைத்துஉண்டை
உருட்டியுண்ண வராகுன் மஞ்சுவாசகாசம்
தீருமென்று யாகோபு சொன்னே னித்தைச்
செகத்திலெந்தன் பேர்விளங்கச் செப்பினேனே. (49)

நீர்க்கட்டுக்கு

வெடியுப்புச் சோரையில் நாழிதண்ணீர்
விட்டுஒரு சட்டிதனிற் கரைத்துநீருள்
கடுவிலிடு பத்துமொந்தை தன்னில்தண்ணீர்
நாழி விட்டுச் சட்டிநீரதிற்சேராமல்
அடிபடவு மொந்தைதான் சுழற்றிநீருள்
அமுத்திவைத்துக் கடிகையைந்து மொந்தைநீரை
கொடுமிதனை நீர்க்கட்டுக் குணமாமென்று
சூறினர்யாகோபு குணமாய்த்தானே. (50)

வெடிப்புக்குஎண்ணெய்கழற்ற.

பொட்டிலுப்புப் படியொன்று சட்டிமீது
பின்புபோட்ட படிகாலு ஊற்றுபாணி
கட்டளையாய் அடுப்பேற்றிப் படியாய்க்காய்ச்சி
கனிந்தமே கண்ணடைந்த சீலைதன்னை
வட்டமிட்டு பதிகாலாய் மடித்திருக்க
வளமாக உப்பிலெண்ணெய் தணியில்நிற்கும்
பிட்டமுடன் உப்பதுவுங் கம்பியாகும்-
பினியஉப்பு யாகோபு யிதஞ்சொன்னரே. (51)

படைராஜன் உப்பதுவை சரக்கிலேடே
பாச்சிடவே சரக்கதுதான் கட்டிப்போகும்
விடையேரும் யீசனவர் சொன்னஉப்பை
மேதினியோர் காணுமல் முளிப்பார்பாரு
கடைபார்த்து வாங்கிவந்து சுண்ணம்பண்ணிக்
கட்டிடுவார் வேதையிதிற் காணுர்வாதி
இடையான பச்சையுப்பால் வேதையாமோ
பினிதாக யாகோபு யிதஞ்சொன்னரே. (52)

கருவங்கச்செந்தூரம்

கடினமாந் தகரியான வெடியுப்புத்தான்
கரண்டிதனில் வைத்துருக்கி யிறுதிரெட்டி
படியாகப் போட்டுருக்கப் பற்பமாகும்
பதிவாகக் கரண்டியிலுல் தேய்க்கச்சுண்ணம்
கொடிதனிலேயெடுத்துமே கல்வத்திட்டு
நான்முறையாய்த் தானரைத்து ரவியிற் காய்ந்து
படினமாய் மாளமட்டும் புடத்தைப்போடு
பண்பான செந்தூரமாகுந்தானே. (53)

தேனிலிடு நோயெல்லாந் தெரித்துப்போகும்
செயமாக ரவியிலிடு தங்கமாகும்
வானிலிடு வையகத்தில் பிழைத்துக்கொள்வார்
வடிவான வங்கசெந் தூரம்பண்ணு
ஞானிலத்தி லெனைப்போலார் விளங்கச்சொன்னர்
நாடியே யிந்தவங்கம் நிசமதாகும்
தானிலையாய் நின்றவிடம் யாகோபுசொன்னர்
தாஷ்டிகமாய் வங்கத்தைத் தழுவிப்பாரே. (54)

நாகக்கட்டு

சோரமது பலமொன்று கரண்டியிட்டுச்
சுடுதணலில் வைத்தருக்கிச் சொல்லக்கேளு
பாரமுடன் பொற்றலையைப் பாதியிட்டுப்
பதிவாகக் கிண்டிடவே கறுத்துப்போகும்
நேரமதா பெடுத்தரைத்து வில்லைதட்டி
நின்றநிரை வலையலுப்பைக் கவசங்கட்டி
வாரமதாய்ப் புடம்போடக் கட்டிப்போகும்
வகைசொன்னார் யாகோபு வளமைதானே (55)

புடம்போட்டுக் கவசத்தைத் தள்ளிப்போட்டு
பொருளாக வெட்டில்சென்டு சாரஞ்சேர்த்து
நடமாகச் சேர்த்தரைத்து உருக்கிப்பார்க்க
நாகமது முத்துப்போல் மணியுமாகும்
லடமான மணியிடைக்கு பேமங்கூட்டி
வகையான ரவிபத்தி லொன்றுதாக்கி
திடமான தங்கமாம் யாகோபுசொன்னார்
தீர்க்கமதைக் கண்டுகொள்ளத் திறமையாமே (56)

தருசுச் சுண்ணம்.

வங்கத்தைக் கரண்டிதனி லுருக்கிக்கொண்டு
வாகான பொற்றலையைப் பாதியிட்டு
இங்கிதமா யுருக்கிடவே ரெண்டுஞ்சேர்த்து
இதமாக வுருகும்பா ரதிலேலேன்
சங்கையறத் தோய்த்துயெடு சுண்ணம்வீரன்
தனியங்கி பரைத்து நீலனுக்குக்கட்டி
வெங்கனலிற் புடம்போடச் சுண்ணமாகும்
விபரமதா யாகோபு விளம்பினாரே. (57)

தருசுனிட சுண்ணத்தா லிரதங்கட்டித்
தடியான பாஷாண மெல்லாங்கட்டி
வரிசையாய் வேதைமுகத் தெரியப்பார்த்தேன்
வகையான வென்போர்யா கோபுவெண்ணூர்
பரிசனத்தை உங்களுக்குத் தெரியச்சொன்னேன்
பாரதயிது கண்டறிந்து பதிவாய்ச்செய்வாய்
உரிசையாய் யெழுநூறும் யென்னூல்தன்னில்
உற்றுமே பார்த்தாக்காற் கித்தியாமே. (58)

விந்துகட்ட.

கல்லாய்ந்த திலந்தானே புடியுமொன்று
கையடங்கத் தானெடுத்துப் பாணியோடே
நல்லாநீ மென்றுதின்பாய் படுக்கும்போது
நலமாய் மண்டலத்தில் மணியிறுகிக்கட்டும்
பொல்லாத சலரோகம் மேகம்போகும்
புகலாதே யெவர்க்குமிதைப் புலன்சொல்லாதே
செல்லாத் திடங்களிலே சென்றிடாதே
செப்பினர் யாகோபு திறமிதாமே. (59)

கைகூல்யெரிவுக்கு

பூனைபது வணங்கியிலை பலமோபத்து
புகல்கருத்த சீரகமவ்விடையே சேர்த்து
பானுவிலே காயவைத்துப் பொடியாய்ப்பண்ணிப்
பதிவான சக்கரையும் பாதிசேர்த்து
தேனையதி லுடனிட்டுப் பத்துவேழு
தினமுண்ண மெய்யினுட யெரிவும்நீங்கும்
ஞானமிகும் புத்தியுண்டு கன்மந்தீரும்
நலமான யாகோபு நவின்றார்தானே. (60)

தாதுண்டாக.

நீர்முள்ளி துட்டிடையாம் வித்துவாங்கி
நெருங்கிநின்ற கதலிபழம் பிதுக்கியொன்று
சேரதில்முன் விரைகூட்டிப் பனியில்வைத்துச்
சென்றெடுத்து யேழுநாள் தினமுமுண்ணு
நாரியரைச் சோதே புளியாகாது
நலந்தருகும் விந்திருகி மணியாய்க்கட்டும்
காரியமா யாகோபு சொன்னரிந்த
காசினியில் மானிடர்க்குக் கருத்துவைத்தே (61)

கெந்தித்தயிலம்

கசடறுத்த கெந்தகமும் பலமும்காலு
காசிகுப்பி தனிலெரிக்கக் கரிபோலேறும்
ஓசரயெடுத் தெருக்கிலையின் பழுப்புச்சாற்றை
ஊட்டியே வத்தவத்த ரவியில்வைத்து
பெசரிடவே நாற்பதுநாள் தைலமாகும்
பெலமாகும் அனுப்பானத் துடனேயிந்தால்
தசையில்வரு ரோகமெல்லாங் குணமாமென்று
சாற்றினர் யாகோபு தரமாய்த்தானே. (62)

ரசக்கெந்தித் தைலம்.

அரைசூதஞ் சத்தியுட நாதஞ்சேர்த்து
அரை அரைநீ சாமமொன்று வீரிப்பாலால்
அரைக்கவது கரிபோலே தூளாய்நிற்கும்
ஆண்மையா மெருக்கினுட பழுப்புங்கூட்டி
நிரையாகக் குழித்தயிலம் வாங்கிநேரே
நேர்மையா யனுப்பானத் தடனேகொள்ள
வரமான கோய்களெல்லா மகன்றுபோகும்
வண்மையாம் யாகோபு வளஞ்சொன்னாரே. (63)

பெருவாயன் பரலரைக்கால் தயிலஞ்சொட்டு
பிசரியதைக் காலமே கொண்டுபித்தம்
ஒருபொழுது ஏழுநாள் கொடுத்தாயாலை
உறைந்துநின்ற உட்காச்சல் சுத்தகாசம்
குறையான சயரோகம் சுவாசகாசம்
குணமாமிம் மருந்தைமுக் காலுங்கொள்ளு
பறையாதே பெருமைதனைக் காட்டாதேபார்
பாதையிது யாகோபு பகர்ந்திட்டாரே. (64)

மலஜலக் கட்டுக்கு

காட்டினுட ஆமணக்கு யெண்ணெய்வாங்கிக்
கசடகற்றி வச்சிரப்பால் விட்டுக்காச்சி
நீட்டுமுன்னே நீர்க்கட்டு மலக்கட்டோடும்
கோமது ரெம்பவுந்தான் பேதியாலை
மாட்டிவாய் ஆவின்பா லதனையுண்ண
வகைகுணமாம் பேதியது வளமாய்நிற்கும்
கூட்டிடவே மலக்கட்டுக் கிதுவேயாதி
குணமாகும் யாகோபு குறித்தார்பாரே. (65)

ஆராத புண்ணுக்கு.

சுரைவிரையின் பருப்புளுரு சேரைவாங்கிச்
சூடனுடன் பெருவாய்நீர் தெளித்தரைத்து
அரைத்ததனில் நீர்வார்க்க எண்ணெய்க்கும்
அத்தயிலஞ்சிஷாவி லடைத்துக் கொண்டு
புரைப்புண்ணில் தயிலமிட்டு குழித்துவந்தால்
பொய்யாது தும்மல்பீ னிசங்கள்தீரும்
சிரசிலுள்ள ரோகமெல்லாம் கடலேபுக்கும்
செப்பினார் யாகோபு திறமைதானே (66)

தலையிடிக்குத்தயிலம்

பேய்ச்சுரையின் காயைக்கல் லுரலிலிட்டுப்
பிசகாம லொருசேரு பிடித்துகன் றுய்
தாச்சிபடி யெண்ணெயிட் டெரித்துமூழ்கு
தப்பாது பீனிசங்கள் மண்டைகுத்து
நோய்ச்சடலம் நீர்பாய்ச்சல் போகும்போகும்
நுவலுமுன்னே சிரசிலுள்ள புண்கள் தீரும்
வாச்சபடி புளிதள்ளு பினிகள்நீங்கும்
வலுமையாம் யாகோபு வழுத்தினாரே. (67)

நிறாச்சுண்ணம்

நாலிக்கல் தனியெடுத்துத் தகடாய்த்தட்டி
நாறும்பூ தண்ணயரைத்து யெருக்கம்பாலால்
வாலிக்க யிதைமேலே கவசங்கட்டி
வகையாக ஒருபுடத்திற் கருப்பதாகும்
பாலிக்கப் பப்பாலிப் பாலிவிட்டு
பதராமல் அரைத்தமைபோல் காயவைத்து
நீலிக்கப் புடம்போடச் சுண்ணமாகும்
நிலையாக யாகோபு நிசஞ்சொன்னாரே. (68)

தாம்பூரப்பற்பம்

சுத்தித்த தாம்பூரந் தகடாய்த்தட்டிச்
சூட்சமுள்ள பெரியோர்க ளுண்ணுங்கற்பம்
சித்திக்கப் புடம்போடி கனக்கவெர்து
திருநீறுபோல் வெண்மை நிறமாமப்பால்
மத்தித்து அனுப்பானத் துடன்கொடுக்க
வாயுவென்ற சோகமொடு குன்மம்போகும்
சித்தத்தில்க் கருணைவைத்து உலகத்தோர்க்கு
செப்பினார் யாகோபு நிறமைதானே. (69)

பாஷாணபற்பம்

சொல்லடங்கா வெள்ளைப்பா ஷாணம்நாலு
சுண்ணம்பிற் சுத்திசெய்து கழுவிக்கட்டி
மூள்ளங்கிச் சாறுவிட்டு மூன்றுசாமம்
முறுகாம லெரித்தப்பின் கல்வத்திட்டு
அல்லியெவெள் ளுளிச்சாற்மூள் ளங்கிச்சாற்
தெளட்டுத்தரைத்து காலாளள் குப்பிக்கேற்றி
மெல்லீனமாய் வாலுகையி லெரித்துவாங்கி
பிளகளவாய்க் கொள்ளபல னிமாதிபோமே. (70)

வங்கச்செந்தூரம்

கன்னிகையை யருத்துயிடி கடுக்காய்த்தூளைக்
காட்டிடவே சமமாகுங் கருவங்கத்தை
சென்னீரி லரைத்துஐந்து புடமும்போடச்
செந்தூர மாப்வங்கம் நாலிலொன்று
வன்னிகெற்பம் வாழ்மடந்தை சேர்த்தமூன்றும்
வாயதபுட மிட்டுரவி நூற்றுக்கொன்று
உன்னிதமாய்க் கொடுத்தருக யேமமானும்
உறுதியா யாகோபு உரைசெய்தாரே. (71)

பாறையுப்பக்கட்டு

உத்தமெடு பாறைபுப்பு யிடையேபண்ணை
உண்மையாய் பழச்சாறு விட்டரைத்து
பத்துவிசை யிடத்திலிட்டு யெரிக்கவேனும்
பதிவாக மேற்படியுஞ் சேர்த்தரைத்து
சத்தபட வில்லைதட்டிக் காயவைத்துச்
சதுராக மேனியில அங்கிபூட்டி
தத்துவமாய்ப் புடமூன்று யிட்டுருக்கச்
சாதகமாய்ச் சரிக்குடியா உப்புமாமே. (72)

மெழுகுத்திராவகம்

வெண்மெழுகு கல்லுப்பு வகைச்சுச்சேரு
வெள்ளையென்ற டாஷாணம் பலங்காலாக
வண்மையுட னிடித்தரவாய்க் கிடத்திலேற்றி
வரலிபிட்டுத் தீயெரித்துத் புகைநீர்வாங்கித்
தன்மை தரும்வாதமென்ற ரோகமெல்லாந்
தோணவே குணமாகுஞ் சொரிசிரங்கு
வன்மையுருஞ் சிலையாரும் ரணங்களாரும்
மனமகிழ்ந்து பிபமுறையை மருவிப்பாரே. (73)

சேங்கொட்டைத் திராவகம்.

சேரிரண்டு சேங்கொட்டை யிடித்துச்சாலில்
செலப்பதக்கு விட்டதையும் கலந்தமூடி
ஊரியகாள் ரெண்டதன்பின் வாலைவைத்து
உற்பனமா யெரித்தலிடில் திராவகத்தை
சீராகவாங்கி யிதைக்குப்பியிட்டு
தினங்கொண்டால் வாதபித்த யெரிவுசோபம்
சீரிழிவு வயிற்றிரைச்சல் நீக்காத்தாகம்
நிறுத்துமென்று யாகோபு நிசஞ்சொன்னாரே. (74)

சந்தனத்திராவகம்.

சந்தனமும் வெட்டிவேர் யேலஞ்சோம்பு
சமனிடித்துப் பொடியாக்கி சாலிலிட்டு
சிந்திவிடும் நீர்பதக்கு யிருநாளூறில்
செலுத்திவிடு வாலுகையில திராவகத்தை
கந்தர்பச்சைக் கற்பூரம் பொடித்துப்போடு
காசிகுப்பி தனிலடைத்து உண்டாயானல்
விந்திருகிக் குளிர்ந்துவிடுந் தாபசோபம்
வெதுப்படங்கித் தன்னுடம்பு வலுக்குந்தானே. (75)

போதியனத் திராவகம்.

வாகுவைக்கல் தனில்வெல்லந் தெளித்துக்கட்டி
வந்தடையும் மீயுமொரு பச்சம்பின்பு
சிருகுழியில் மூடியிட்டு நீர்தெளித்து
திரிதினத்தில் மூளையெழும்பும் பொதினைவென்று
தருகியதைத் தெளித்துநீர்ப் பதக்குச்சாலில
தணலேற்றி வாலியிட்டுத் திராவகத்தைப்
பருகவுண்ட அன்னப்சீ ரணமதாகும்
பசியெடுக்கும் வாதமறும் பலிதமாமே. (76)

அமுரித்திராவகம்.

சடத்தினுட அமுரிபடி யெட்டிலாங்கிச்
சரியான கிடமிட்டு வாலைமூடி
திடத்துடனே யெரிக்கபுகை முரிந்துநீராம்
திறமான அமுரியது முரிந்துதானல்
விடத்தினுட பூநீரை யெண்ணெய்வாங்கும்
விதமான வாதமது யேவலாகும்
துடக்கறுத்துத் தருசுசுண்ண மாகும்பாரு
சுகமாக யாகோபு சொல்லினேனே. (77)

காவட்டம் புஸ்த்திராவகம்.

காவட்டம் புற்கதிரை யிடித்துத்தூளாய்
சனமான கிடத்தில்நீர் மிதக்கவிட்டு
ஆவட்டம் பதமாக ரவியிலிட்டு
ஆறுநாள் சென்றபின்பு வாலைமூட்டி
தீவட்டி மிரங்குகின்ற திராவகத்தில்
தினமந்தி சக்தியுண்ண வாதங்கிராணி
காவட்டஞ் செய்யாது சயமும்போகும்
கயந்தருமே தீபனமும் நாடிப்பாரே. (78)

ஓமத்திராவகம்

பொட்டலோயினி டைவோமம் சமமாய்ச் சீசர்த்துப்
பொடியாக்கிச் சாடியிட்டு தூணிதண்ணீர்
விட்டுதிரி நாளூரி வாலிவைத்து
விதமாக யெரிக்கவருந் திராவகத்தை
கொட்டமென்ற மேருவிட்டு கொண்டாயாலுல்
குன்மமுதல் வாதமய்யங் கிராணிநீங்கும்
உட்டினத்தால் வந்ததொரு சூலைபோகும்
உளம்பெருக உண்ணவைக்கு முண்மைதானே. (79)

மிளகுத்திராவகம்

கன்மிளகு அரைத்தூக்கு உடைத்துமுன்னீர்
கலந்திருநா ளூறியபின் காய்ச்சக்கேளு
இன்பமுடன் வாலியிட்டுப்புகை நீர்வாங்கு
இதையெடுத்து யிருகாசு யிடைநீகொண்டால்
குன்பமுதல் வாதபித்தம் சயமுன்நீரும்
தடர்பிணியும் வாராமல் சுகமதாக்கும்
மின்புவந்த ரோகமெல்லாம் நீங்கிப்போகும்
விதித்தபிணி யகற்றிவிடும் விளங்கும்பாரே. (80)

சுண்டை வத்தல் திராவகம்

சுண்டைவத்தல் மாம்பருப்பு கருவேப்பிலைகூட
சுக்கோமம் கெல்லிக்காய் வத்தல்தானும்
பண்டைவெந் தயமோடு வகைக்குச்சேறு
பாவகமாய் வார்த்தெருமைப் பாலாலாட்டிக்
கண்டதயிர் மெதக்கவிட்டுத் திரிநாளூறில்
கனமான வாலியிட்டுப் புகைநீர்வாங்கி
உண்டால்நீ கிராணியெல்லாங் கடலேபுக்கும்
உற்றுணர்ந்து யாகோபு உரைத்தார்தாமே. (81)

உள்ளித் திராவகம்.

உள்ளிபலம் பத்துமுக் கண்ணன்றன்னை
உடைத்துகிட மிட்டுநீர் பிடித்துச்சாலில்
தள்ளியிடு மூன்றரைகாள் கழித்தபின்பு
தனையெடுத்துக் கிடமிட்டு வாலிமூடித்
தள்ளிபுகை நீர்வாங்கி யுண்ணக்கிருணி
தடியான கழிச்சலது ரெத்தக்கிராணி
தள்ளிவிடு மலசலங்க ளெல்லாம்போகும்
தனைக்கண்டு யாகோபு சாற்றினாரே. (82)

பெருங்காயத் திராவகம்.

பெருங்காயஞ் சேரொன்று உரலிலிட்டுப்
பேரான கருப்புட்டி யிடைசேரிட்டு
தருங்காமல் பாணியது மிதக்கவிட்டுத்
தன்மையாய் ஆறரைநாள் ஊறவைத்துச்
சுருங்காமல் வாலியென்ற சட்டிமூடிச்
சுருக்கமாய்ப் புகைநீரை வாங்கிக்குப்பி
பருங்காம லடைத்துண்ணக் திராணியெல்லாம்
பாதைகடந் தேவிடும்பார்த்திடீரே (83)

திரிகடுகுத் திராவகம்.

திரிகடுகு யேலஞ்சி ரகமும்ஓமம்
சேரிரை வகைக்கொன்று அம்மியிட்டுச்
சூரிமடியப் பொடியாக்கிச் சாலிலிட்டுக்
குற்றமறப் பாணியது மிதக்கவிட்டுப்
பரிவாகத் திரிகாளில் வாலிமூடிப்
பக்குவமாய்ப் புகைநீரை வாங்கியும்
பிரியமுடன் கொண்டுவர உஷ்ணவாய்வு
பேசரிய சயமிருமல் போகுந்தானே. (84)

தென்னங்கள்ளுத் திராவகம்.

தென்னமரக் கள்பதக்குச் சாலிலிட்டுத்
திட்டமதா யாறுதின மானபின்பு
சன்னயமாய்ப் புகைநீரை வாங்கிக்கொண்டு
நலமான தாளகந்தான் கலஞ்சிபோட்டு
மூன்னதுபோற் புகைநீரை வாங்கியுண்ணு
மூன்றுகாள் புளிதள்ளி யுண்ணுஉண்ணு
சொன்னபடி சயங்களெட்டுந் தீருமென்று
சுருக்கமா யாகோபு உரைத்திட்டாரே. (85)

திரிபலாதி திராவகம்.

பெருகயெடு திரிபலையை வகைக்குச்சேரு
பேசரிய திரிகடுகு உரலிலிட்டு
வருகபிடி பாணியது மிதக்கவிட்டு
வண்மையாய் மூன்றுநாள் தானுமூறிப்
பருகஅடை வாலியிட்டுப் புகைநீர்வாங்கி
பக்குவமாய் நாளாறு கொண்டுபொரு
தருகவருஞ் சிலேட்டுமத்தின் காசம்போகும்
தாட்டிகமா யாகோபு தான்சொன்னாரே. (86)

கல்லுப்புத் திராவகம்.

கல்லுப்புச் சேரெடுத்து யிஞ்சிச்சாறு
கனக்கவிட்டுப் பாண்டத்திற் றிரிநாளூரிற்
மெல்லவே வாலையென்ற சட்டிமூடி
மெதுவாகத் தீயெரித்துப் புகைநீர்வாங்கிச்
செல்லரெண்டு நாளதுவுங் கொண்டாயானால்
சென்மமுள்ள குன்மமெட்டுங் கடலேபுக்கும்
நல்லபெரு வாழ்வுதரும் யாகோபுசொன்னார்
நாட்டிலே யென்வசனம் நன்மைதேரே. (87)

தேரவே சாரமொன்று யெட்டிலொன்று
சேர்த்திடுநீ சூசுமது படையோன்பத்து
காரமது ரெண்டுபதது ஐந்துஞ்சேர்த்து
கனக்கயிடி வாலைதனிற் புகைநீர்வாங்கி
கோரமதாய் செம்புருக்கி அதிலேசாய்க்க
குற்றமறுந் துட்டிடைதான் உண்டுதேரு
பாரமில்லை பித்தகுன்மம் வாய்வுபோகும்
பாக்கியவான் யாகோபு பலன்சொன்னாரே. (88)

சரக்குகள் கட்டத் திராவகம்.

படைராசன் பலம்பத்து வீளையம்நேராய்ப்
பார்த்துயிடி வாலைதனி லடைத்துநீரைக்
கடைநீரைப் பிடித்த தனில்சூதம்போடக்
கரைத்துபோம் முன்போலே புகைநீர்வாங்கு
விடையாகச் சரக்கெல்லாந் தோய்த்துத்தோய்த்து
விதமாக ரவியிலிட வெந்துநீறும்
சடையானுஞ் சொன்னதிந்தப் புதுமைதன்னைத்
தாட்டிகவான் யாகோபு தான்கண்டேனே. (89)

லிங்கப்பதங்கம்.

பதங்கலிங்கம் பலம்பத்து கல்வத்திட்டு
பார்த்துஅரை சூதத்தின் புகைநீராலே
விதமாக அரைத்துவில்லை ரவியில்வைத்து
வெற்றிபெறக் கடத்திலிட்டு யெரித்துக்கொள்ளு
நிதமாக அடியில்நிற்கும் பற்பத்தன்னை
நேராகக் கொண்டுவர அஷ்டகுன்மம்
அதமாகயேகிவிடும் நசையெல்லாம்போம்
ஆதியுரை யாகோபு அறைந்தார்தானே. (90)

அரிதார பற்பம்.

மடலினிய அரிதாரங் கல்வத்திட்டு
மயனமா யெருக்கல்பால் தன்னுலேழு
புடமினிய தினமரைத்துக் கதிரில்வைத்து
போட்டெடுநீ வில்லிபுடம் காடையாக
திடமினிய நீறுகும் பணமவ்வீதஞ்
செல்ல உண்ணச்சயகாசங் கடிகள்போகும்
படமினிய கடல்புக்கும் யாகோபுசொன்னார்
பார்த்திடவே தாரபற்பம் பலிதமாமே. (91)

சுவாச காசங்களுக்கு.

சாதுமறை யாய்ந்துணர்ந்த வல்லோர்சொன்ன
சாஸ்திரத்தில் மலாதுணர்ந்து புவியின்மீதில்
வாதுதவி கொண்டதொரு தேற்றுன்வித்து
வளமான ஆவின்பா லுடனரைத்து
மாதுதய காலமதி லுண்ணநித்தம்
வாதசயத் தாலெழுந்த சுவாசகாசஞ்
சீதமுள இருமலுமே செவியிற்கேட்டால்
தெண்டனிட்டுப் போமெனவே செப்பினாரே. (92)

செப்பியதோர் கடுகுவொரு சேருவாங்கித்
திரண்டிருக்குங் கற்கண்டு சேருசெண்டு
அப்பதனிற் பாகாக்கி அருள்முன்னாக
அரைத்துருண்டுரூய்க் கிண்டியதைத் தேனுமிட்டு
துப்புறவாய்க் கிண்டியுண்ண மந்தாரகாசம்
சுவாசத்தின் காசங்களோடிப்போகும்
ஒப்புறவாய்த் தீருமென்று யாகோபுசொன்னார்
உரைக்கொண்ணுக் கைகண்ட சூட்சந்தானே. (93)

நீர்கட்டுக்கு.

ஒலித்திட்ட ஒளிதனிலும் பூதத்தாலே
உடலெடுத்த வினையத்து லடர்ந்தரோகம்
வலித்திட்டு அடிவயிற்றிற் சலத்தைக்கட்டி
வாணவப்புச் சாரமிரு வகையுவாங்கி
பலித்திட்ட மருந்துரைப்பேன் பரையாதெங்கும்
பாணியுமே நாணுழி கருத்தப்பச்சை
கொலித்திட்டு காய்ச்சியிரு காரவுப்புக்
கூட்டியுண்ண நீர்க்கட்டுக் குணமதாமே. (94)

அயச்செந்தூரம்.

காடிதெளித் ததிபந்தோல் சாறுவாங்கிக்
கல்லாய்ந்தப் அரபொடியில் மிதக்கவிட்டு
சரடியே ரவியில்வைத்துச் சுவறமட்டும்
சாறுவிட்டு மூன்றுநா ளானபின்பு
கூடிநின்ற முன்சாற்றி லரைத்தரைத்து
குளத்துமுட்டை பெரும்புடமா யெட்டுத்தீர்த்து
போடந்தத் தண்ணீரா லரைத்துநீயும்
புடம்போட மாதுளம்பூ நிறம்போலாமே. (95)

ஆமிதனை அனுப்பானத் துடனேயிய
அரும்பிணிகள் வாதபித்தம் அய்பத்தாலே
நேமம்வரும் அனேகமகா ரோகமெல்லாம்
நீங்கிதிரி காடிகளு முறுக்குமேறும்
காமசலம் பெருகிவிந் திறுகிக்கட்டும்
கண்கள்சிவப் பேறியே வீரஞ்செய்யும்
தாமரைப்பூ மணக்கும்வெகு தீரமாகும்
சடலமுமே மாந்தளிர்போல் மின்னுத்தானே. (96)

வீக்கத்திற்கு, சூலைக்கட்டுக்குகுழம்பு.

பாதிரிவேர்ப் பட்டைதனைப் பாலிற்கொள்ளப்
பத்தியமாங் காய்பருப்புப் பத்துநாளும்
வாதமறுங் கெற்பத்தாற் கணுக்கள்வீங்கி
வருத்தமிகுஞ் சுரோணிதங்கள் மேகங்கொண்டு
சூதமுண்டு கைகால்கள் மூடக்குறுங்கச்
சுருக்கெனவே குத்துகின்ற சூலைநோய்கள்
தீதகலும் பத்தியமா யுண்டாயானால்
செயமாங்கை கண்டதிது செப்பினேனே. (97)

சகலமேகத்திற்குஞ் சூரணம்.

நற்பரங்கிப் பட்டையது சேருசெண்டு
நன்றுநப் பொடிபண்ணிச் செப்பிற்செம்மி
சிற்பரையைப் பூசிபதிற் பொடியைப்போட்டுத்
தீபெரித்து மதவுரெண்டு படிதானவார்த்து
உற்பனமா யகலிலிட்டுச் சீலைசெய்து
உறவதுவாய்ப் பூமிபுடமெட்டு நாள்தான்
கற்பமதைத் திறந்தெடுத்து வைத்தக்கொண்டு
காய்ந்துபிரு சேரமரைப் பலமேகொள்ளே. (98)

கொள்ளையிலே மேகங்கள் கைக்கருப்பு
குணமாகும் ரணங்கிரந்தி காலின்புத்து
விள்ளுமிந்த ரோகமெல்லாங் குணமதாகும்
மெய்யுடலைச் சுகப்படுத்தும் விசையதாக்கும்
அள்ளியுண்ட் ரசவேகங் கைக்கடுப்பு
ஆறுத ரணங்கிரந்தி அண்டப்புத்து
விள்ளுமிந்த வியாதியது சொஸ்தமாகும்
மேதாந்த யாகோபு விளம்பினேமீனே. (99)

அருநெல்லித்திராவகம்.

பச்சையரு நெல்லியிஞ்சித் தான்றியோடு
பாவகமா யிடித்ததனைப் பாண்டத்திட்டு
இச்சையுடன் ரெண்டுபடி தண்ணீர்விட்டு
இதமாகத் திரிகாள்தா னூறவைத்து
உச்சிதமாய் வாலியிட்டுப் புகைநீர்வாங்கி
உணர்வாகத் திரிகடுகிற் கொள்வீராகில்
நிச்சயமாய்ச் சயமீளைப்பு காசம்போகும்
நிர்ணயமாய் யாகோபு நிசஞ்சொன்னேரே. (100)

காமீரப் பற்பம்.

கசடறுத்த தாமிரத்தைத் தகடாய்த்தட்டிக்
கனிந்தயெலு மிச்சஞ்சார் கல்வத்திட்டு
வசமாக நாறும்பூ அரைத்துப்பூசி
வளமாகப் பெரும்புடத்தில் வெட்டையாகும்
பிசகாம லிந்தவெட்டைப் பலம்நிறுத்துப்
பின்புளடை நாகஞ்சேர் சூதந்தனனைத்
தசநாளில் முன்னீரால் அரைத்துக்கொள்ளத்
தாட்டிகமா யாகோபு பெழுதினேரே. (101)

கரியதனைத்தானெடுத்துக் கல்வந்தன்னிற்
கனமாகப் பொடியாக்கிச் சொல்லக்கேளு
பிரியாச முக்கடுகு அந்திசந்தி
போட்டரைத்துக் கழஞ்சுபற்பம் விரவியுண்ணச்
சரிபாதங் குன்மமெட்டும் சூலரோகம்
சுணத்திலே பாணைகண்ட பணிபோலாகும்
பெரியோர்கள் சொன்னதிந்த நேர்மைதானும்
பேசினேன் யாகோபு பெருமைதானே. (102)

சூலைசாசத்துக்குக்குழம்பு.

காயுருவி மூற்றினதாய் நறுக்கிமிக்க
நற்பசுவின் கோமயத்திற் போட்டுப்பாண்டம்
வாயிலிட்டுப் பூப்புடத்திற் றயிலம்வாங்கி
வைத்ததனை வெற்றிலையில் மென்றுதின்ன
நோயிற்பெரு மந்தார சுவாசகாசம்
நுணுக்கிருமல் யீளைகண்டத் தடிப்புநீங்கும்
காயமதைப் பலக்கவைக்குஞ் சித்தர்சொன்னூர்
கருணையிது தப்பாது கண்டுதேறே. (103)

மூலக்கிராணிக்குலேகியம்.

பெருமரத்தின் பட்டைபது தூக்குரெண்டு
பெலத்தவட்டத் திருப்பிவோ் அதனிற்பாதி
கருகருக்க வறுத்திடித்துக் கஷாயமிட்டுக்
காய்ச்சிவடி கட்டிவெல்லம் அதிற்கலந்து
நிரிகடுகு நடுநீக்கி யேலங்கிராம்பு
சீரகமுஞ் சங்கிலத்தோல் சிறுராகப்பூ
வரிமருவுங் குரோசானி விடையம்போடு
மணியபிணி பத்திரியுஞ் சாதிக்காயே. (104)

காயிதகள் வறுத்திடித்துப் பாகுதன்னிற்
கலந்துமே வெள்ளாட்டு நெய்சேர்போடு
தியெரித்துக் காசிடைதா னுண்ணவேதான்
சீமூலங் கிராணியுட கடுப்புமாறும்
நோயகலும் கோதில்லாக் கிராணியெல்லாம்
நுணுக்குமல முரங்குமின்னே ரத்தஞ்சாய்தல்
வாயுமித்த சிலேத்தமத்தின் பேதிநீக்கி
வைக்குமிதைப் புகலாதே சாற்றக்கேளே. (105)

சாற்றக்கே ளனுப்பானத் துடனேயியச்
சன்னிசுரம் அபஸ்மாரம் குன்மஞ்சூலை
மூத்திரத்தின் கிரிச்சனங்கள் மேகதாகம்
மூலமுதல் வாதமெண் பத்துநாலு
சேத்துமங்கள் காய்ச்சலுறல் வயிற்றில்நோகஞ்
சில்விஷங்கள் குஷ்டமகா ரோகமெல்லாம்
காத்தடிமூன் பஞ்சதபோல் பறக்கும்நோய்கள்
கைகண்ட பாகமிது கருதிப்பாரே. (106)

நாகச் செந்தூரம்.

சுத்திசெய்தநாகமது உருகும்போது
தளசியுட கொம்புகளைத் துணித்துயிட்டு
மத்திக்க யிருசாமம் பற்பமாகும்
வாங்கியதைக் கல்வமிட்டுக் குமரிச்சாற்றை
குத்தியரை புடமைந்து தாக்கிப்போடு
குறிப்பாய்ப்பின் னதனீச்சம் பழச்சாற்றுலே
பத்தெட்டுப் புடம்போடச் செந்தூரிக்கும்
பரிந்தெடுத்து அனுப்பானந் தன்னிலீயே. (107)

இய்யவே மண்டலத்திற் குன்மமெட்டும்
ஏகிவிடுங் கருநாகச் செந்தூரந்தான்
அய்யமொடு வாதபித்த மதனுல்வந்த
ஆயிரத்தெட் டாரம்பிணிக ளகலநீங்கும்
நய்யுமுடல் தாதுவிர்த்தி காயசித்தி
நவில்தேகம் வீரமிகச் செலுத்திவைக்கும்
மெய்யிதுதான் கட்டியிதைச் செந்தூரித்தால்
வேதைமிகத் தருங்குணத்தின் மேன்மைபாரே. (108)

செவ்வி நோய்க்கு வங்கராவகம்.

வடம்பத்து வளையமது நாலாறுகும்
வண்மைபெறக் கல்லுரலி லிட்டுத்தூளாய்
குடமடைத்து வாலியென்ற சட்டிமூடிக்
குப்பிவைத்துக் கடைநீரை வாங்கிக்கொண்டு
திடமினிய யிந்நீர்தூட் டிடையேதூக்கி
திறமான அபினிதான் கழஞ்சுகூட்டிச்
செடமான செவியிலீடு யிரண்டுநாளாஞ்
செப்பினுர் யாகோபு திறமையாமே. (109)

அடுத்துநின்ற காதுச்சீ பாய்ச்சலோடும்
அழிவான செவிடுசெவிக் குத்தல்போகும்
படுத்துவிடுங் கிருமியொடு நாற்றம்பாய்ச்சல்
பதிவான ரணமாறும் பாரிலோர்க்குக்
கொடுத்துவிடு காற்றுமுன்னே பஞ்சுபோலாம்
குணமாகுங் கதிர்கண்ட பனிபோலாகும்
எடுத்துவிடும் எரிச்சல்நிற்கும் இன்பமாகும்
எழுதினுர் முன்னோர்க ளிதமாய்த்தானே. (110)

கவுசைமகோதரத்துக்கு

ஆட்டமூரி சேரரைபாங் கடுக்காய்பத்து
அதையரைத்துத் திரிகாளு முண்டுபோரு
வாட்டுகின்ற மகோதரங்கள் ஆம்பற்கட்டி
வயிற்றுவலி பெருவயிறு குன்மச்சூலை
காட்டுமுன்னே பறந்தோடுங் கடலேபுக்கும்
கருத்துணந்தோ ரிதுகண்டு உண்டுகொள்வார்
ஏட்டதனில் மூன்னோர்க ளெழுதிவைத்த
இயல்பதனை யாகோபு யெழுதினாரே. (111)

தருசுச்செம்புவேதை.

கசடறுத்த சத்தியது பலமும்பத்து
கனிநிம்பச் சாற்றினுற் சாமமாட்டி
பிசகாமற் கண்டரவித் தகட்டிற்பூசிப்
புன்புஅதை சொறுங்க மட்டும் புடமூன்றிட்டு
வசமாகக் குகையிலிட்டு வண்டில் கூட்டி
வன்மைபெறச் சேர்த்தரைத்து உருக்கச்சத்தாம்
தசமாகுஞ் சத்தினுட பெருமைதன்னைத்
தாஷ்டிகமா யாகோபு சாற்றினாரே. (162)

சத்துநிறம் வெங்கலம்போற் றூனேதோணுஞ்
சத்துடைத்துச் சுடர்தன்னைப் பாதிசேர்த்து
வெத்திபெற முன்சாற்றல் சத்தையாட்டு
விரும்பியே வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நித்தியமாய்ச் சிவக்கமட்டும் புடத்தைப்போடு
நிணவாக மதியெட்டி லிரண்டுசேரு
வித்திடவே மாத்ததுவும் யெட்டுமாகும்
வேதாந்த யாகோபு விளக்கமாமே. (113)

அடித்துநின்ற தருசுக்குள் செம்பைக்கொண்டு
அடைவாகச் சத்தாக்கி உருக்கிக்கொள்ளு
படித்துநின்ற செம்பெடுத்து மதியினுள்ளே
பாய்ச்சிடவே ஏமமாம் பாரிலோர்க்கு
உடுத்துமே கண்டரது செம்புதானும்
உறுதியாய் மாளாட்டால் ஏமமில்லை
கொடுக்கத்தான் களிம்பாகும் குணமுமில்லை
கூறினார் யாகோபு துயரம்போமே. (114)

துயரந்தான் போவற்றகுச் சிரம்புளமம்
தூக்கியிடை யுருக்கியே தகடத்துடி
நயமாகச்சத்தியுடன் சீனஞ்சேர்த்து
நாடியரை முன்னீரா லரைத்து அப்பிப்
பயமாகப் புடம்போட்டு தொறுக்கிக்கொண்டு
பரிவாகப் பாதிசூர் சேர்ந்தரைத்துச்
செயமாகப் புடம்போடச் செந்தூரிக்கும்
செழுமைபெற யாகோபு செப்பினாரே. 115)

செப்பியதோர் செந்தூரங் கணியெடுத்துச்
செயமாக மதியெட்டில் ரெண்டுதாக்கு
ஒப்பாகுஞ் சாயமுள்ள பேமமாகும்
உற்றுணர்ந்தால் கருத்தோணும் உறுதியாகும்
தப்பில்லை பாகமதைக் கண்டுதேறில்
தாழ்ச்சியில்லை மெய்விளங்குந் தசனியோர்க்கு
மூப்பொழுதும் ஆகுமென்று யாகோபுசொன்னார்
முற்றுணர்ந்த பாகமுமா முறுதிதானே. (116)

விஷப்பாண்டுவீக்கத்திற்கு

இரும்பூ நாகப்பூச்சி உடைத்து ஆய்ந்து
இருக்கிறதைப் பார்த்தெடுத்துப் பழச்சார்விட்டு
அரைப்பது மைபோலே நீர்மேல்நிற்க
அதையெடுத்து அனுப்பானத் துடனேயிய
உரைப்பதுகேள் குன்மங்கா மாலைசோகை
உடல்வெளுப்பு மாறிமிக ஒழிந்துதானும்
நிரப்படுமே நாடி தசை யிறுகியேறும்
நிரிதோஷ வீனியகலுந் திடமாங்காணே. (117)

சாணுமிக் குணங்களினி யிதனைமுந்திக்
காடியிள நீர்தண்ணு லரைத்துமுட்டை
பேணியதிற் புடமாறு தீர்ந்தபின்பு
பின்னதனின் பாலதனு லரைத்துப்போடு
சேணிறமாய் சிவக்குமட்டுந் தோர்த்துபோடு
சிகப்பாகச் செந்தூர மாகும்பாரு
வேணபடி யனுப்பானத் துடனேயுண்டால்
விஷப்பாண்டு சோகைமுதல் விலகுந்தானே. (118)

காரீயச்செந்தூரம்.

காரீயம் பேரண்டத் தயிலம்வாங்கிக்
காட்டெருமைச் சாணத்தின் பாலிற்சேர்த்து
ஆரியபின் னுருக்கியெழு தாமுஞ்சாய்த்து
அடிகனத்த சட்டிதனி லுருக்கும்போது
கூரும்அம்மன் பச்சரிசி போட்டுக்கிண்டு
குங்குமத்தின்நிறமாகுஞ் சாமமூன்றில்
சேரிதற்குள் படிக்காரம் பலங்கால்போட்டுச்
செந்தூர மாகுமட்டுஞ் சாமமாட்டே. 119)

மாட்டியபின் ரவியிலிட்டுச் செந்தூரத்தை
வகையாகக் கல்வத்தில் அகதநிச்சாற்றூல்
ஆட்டியபின் நீர்விட்டு மெதக்கத்தேத்தி
அகத்திநீர் மூன்றுதர மானபின்பு
காட்டிரவி காந்திதனிற் காயவைத்துக்
கருதியே அனுப்பானத் துடனேயீய
நாட்டிலே மானிடர்க்குச் சலரோகங்கள்
நன்மையுடன் தீர்ந்துவிடும் நம்பிச்செய்யே. (120)

அயச்செந்தூரம்

அரபொடியைக் காந்தத்தா லாய்ந்துகொண்டு
ஐயிரண்டு பலமதற்குச் சாரமொன்று
இரட்டிப்பாய்த் தயிர்கலந்து காடிதானும்
இட்டுசட்டி மேல்மூடிச் சீலைசெய்து
உரியிலிட்டு மண்டலஞ்சென் றெடுத்துப்பாரு
உறைந்திருக்குஞ் செந்தூரம் நீரின்மேலே
பரவாட்டால் முன்தயிரிற் பாதிகூட்டிப்
பத்துரெண்டு நாள்நிறுத்திப் பண்பாய்வாங்கே. (121)

வாங்கியதைப் பொடித்துநன்றூய்க் கல்வத்தன்னில்
வைத்திறுத்திக் கொண்டதனை வாட்டக்கேளு
மூங்கிவித்து ஆவாரை வித்துச்சூர்ணம்
மூன்றுபங்கி லொருபங்கு செந்தூரமிட்டு
தீங்கருந்தேன் நெய்வெண்ணெய் தன்னிற்கொள்ளத்
திருவுளத்தி னுதவியினல் சகலரோகம்
நீங்கிவிடும் மெய்யெரிவு சலரோகங்கள்
நேர்மையுடன் யாகோபு நிகழ்த்தப்பாரே. (122)

உப்புச்செந்தூரம்

பாருப்பு தனையறிந்து வாங்கிக்கல்வம்
பாய்ச்சியரை மேனிச்சார் புடமூன்றிட்டால்
சேருப்பு சிவப்பாகச் செந்தூரிக்கும்
சிவப்பான சாதிலிங்கஞ் சமனுப்சேர்த்துச்
சாருவிட்டு உமிபுடதிற் போட்டு வாங்கிச்
சமமாகப் பணவிடையே தேனிற்கொள்ளத்
தீருமது மூலமதிற் சீதக்கிராணி
திடமாக யாகோபு செப்பினாரே. (123)

தாம்பூசகாந்தச்செந்தூரம்.

தாம்பூரங் காந்தம்ரெண்டும் பொடியதாக்கிச்
சமன்சேர்த்து வாய்குவிந்த கலயத்தேத்தி
நீம்பநிம்பப் பழச்சாறு மிதக்கவிட்டு
நீங்காமற் சில்லிட்டுச் சீலைசெய்து
மேம்பாடாய் நெற்குழியில் நடுவேவைத்து
மெத்திட்டுச் சரக்கதனை நிழலிலிட்டுப்
போம்படியே மண்டலஞ்சென் றெடுத்துப்பார்க்கப்
புட்டிப்போற் செந்தூர மாகுந்தானே. (124)

ஆமிதனைப் பொடித்துநன்றாய்ப் பதனஞ்செய்து
அனுப்பான விதத்திலீ யீய்ந்தாயானால்
போம்வினையந் திரவாய்வு வாதசூல
பொல்லாத குன்மமெட்டும் மேகவாய்வும்
தீமையுறும் பீஜமண்ட வாதவீக்கஞ்
சேருகட்டுங் குடல்வாத மெல்லாம்போகும்
மாமுனிவ ரெடுத்துரைத்த செந்தூரத்தை
வழுத்தினார் யாகோபு மகிமைபாரே. (125)

அன்னபேதிச் செந்தூரம்.

வடதிசையிற் பிறந்துவந்த அன்னபேதி
வாங்கிலொரு சேருதன்னைப் பழச்சார்விட்டுக்
குடக்கல்லி லரைத்துவட்டுக் காயவைத்துக்
குருக ஒருபுடம்போடச் செந்தூரிக்கும்
உடலறிந்து அனுப்பானந் தன்னிலீய
உதிரத்திற் பிறந்தமகா குன்மமெட்டும்
விடைபெற்றுக் கொண்டுசெல்லும் மற்றரோகம்
விரைவாக விதுசெலுத்தும் விசையதாமே. (126)

கரியுப்புக் கட்டு.

உருசைதரும் பூவதனைக் கல்வத்திட்டு
உத்தரைமே னிச்சாறு தன்னுற்சாமம்
வருசையாய் வில்லைதட்டிக் கதிரில்வைத்து
வண்மைபெறமூன்றுபுடம் போடக்கட்டும்
துரிதமுடன் பலமொன்று சத்தியொன்று
சூழமுன் னிடைபதங்க ரசமுஞ்சேர்த்துப்
பிரியமுட னிருசாமம் மேனிச்சாற்றல்
பேசாதே யரையென்றார் பெரியோர்தானே. (127)

கண்டர்சத்து.

அரைத்தகுன்றி போலளவு நிழலுலர்த்தி
அதையெடுத்துப் புறம்பாக வைத்துக்கொண்டு
புரைத்தகண்டர் செம்பெடுத்து அனலிற்காய்ச்சிப்
புதக்குகையி லிட்டுருக்கிப் பின்புகேளு
சூரைத்தமே லவ்வொன்றுக் கிரசமிட்டால்
கூட்டியுண்ணுஞ் சத்தாகும் சத்திற்றானும்
பரைத்தவண்டிற் கல்வத்தி லரைத்தருத்தப்
பரிவான வெள்ளையாம் பாரிலோர்க்கே. (128)

வெள்ளையென்ற சத்தில்நின்ற யெண்ணெய்வாங்க
விளம்புகிறே னதிற்கழஞ்சி பாதியிட்டு
உள்ளபடி கல்வமிட்டு முன்சார்விட்டு
உத்தரைத்து வில்லைதட்டிக் கதிரில்வைத்தே
துள்ளமுன்போல் பெரியபுடம் போட்டெடுக்கத்
துப்பறவாஞ் செந்தூரம்முருக்கம்பூவாம்
கொள்ளையதில் வாதமென்று யாகோபுசொன்னார்
கூர்ந்துரைத்தே னென்பேரு விளங்கத்தானே. (129)

விளங்கவே மதிபத்தி லொன்றுதாக்க
மேலான தங்கமாம் பாரிலோர்க்கு
பழங்கதைபோற் பேசாதே செய்துகொண்டு
பாரிலே உண்டுபத்தி ஞானம்பாரு
களங்கமறச் சொல்லிவிட்டேன் கருத்தாய்ப்பாரு
கண்டதை நீயாருவருக்குங் காட்டொண்ணாது
உளங்குளிர்ந்து யாகோபு சொன்னநீதி
உறுதியது சத்தியமா யுற்றுப்பாரே. (130)

உற்றுமே உப்பதிலே கண்டால்யேமம்
உறுதியாம் வேதைமுகங் கலங்காமற்பார்
சித்திகளும் மெத்தவுண்டு கர்மிக்காகா
செகமதனிற் பாரமில்லே தோய்ந்துபாரு
முத்திபெரும் முந்நூறில் களங்களுஞ்சொன்னேன்
முடியளவுஞ் சோதித்து சிதிபெற்று
சத்துகளைப் பார்த்துணர்ந்து யாகோபுசொன்னேன்
சகலசித்துங் கைவசமாய்த் தாக்கிப்பாரே. (131)

செம்பிற்கிராசம்.

பதங்கராசம் பலமொன்று அடியில்நின்ற
பதிந்தஉப்பு முன்னிடையாந் தேவியொன்று
இதம்படவே மேனிச்சார் தன்னலாட்டி
எத்திசையும் புகழ்கடலைப் பிரமாணந்தான்
அதம்படவே அரைத்தரவி காயவைத்து
அதையெடுத்து ரவியுருக்கி இடைக்கிரெட்டி
பதம்படவே கிராசமிடச் சத்தாய்நிற்கும்
பூரினிலே யாகோபு பகர்ந்திட்டாரே. (132)

மதித்தசத்தை உடைத்திடுநீ வெட்டைவெள்ளை
மதிமயக்கம் வெண்ணெய்தனை வாங்கக்கேளு
விதித்தவிதி படிதிட்டஞ் சத்துநின்றுல்
விதமான ஆலாத்தி தன்னைவாங்கி
உதித்தபடி பாதியிட்டு மூன்னீராலாட்டி
உத்தெடுத்துப் புடமிடவே பவளம்போலாம்
மதித்தபடி பொன்னுகும் மயங்கவேண்டாம்
மகிதலத்தில் யாகோபு வசனித்தாரே. (133)

பண்டுமதி யிருபத்து உருக்கிக்கொண்டு
பக்தியுடன் திருவுளத்தை நோக்கிப்பின்பு
கண்டுகொடு செந்தூரம் ரெண்டதாகும்
கலங்காம லதைவாங்கிற் பழுக்குங்கண்டீர்
தொண்டுபடு மிதைவித்தச் செலவுசெய்து
தொக்கவே உண்டுடுத்தித் தொழிலைப்பாரு
கண்டுநில முழுதுபயி ரிட்டாப்போலாம்
கருணையுடன் யாகோபு காட்டினாரே. (134)

சுத்தமுள்ள வாள்மடந்தை கல்வத்திட்டு
சூட்சமுள்ள பதங்கரசக் குருவும்நேரம்
பத்தவிழும் நிம்பச்சார் சாமம்நாலு
பகரும்போ தரைத்த உண்டை கடலைபோலாம்
வித்தகமாய்க் கதிரில்வைத்து பெடுத்துக்கொள்ளு
வீதமிடை கண்டர்ரவி யுருக்கித்தாக்கு
சித்தமுள்ள சத்தாகுமென்று தானுஞ்
செப்பினர் யாகோபு திரமைதானே. (135)

திரமையாய் வண்டிலது காலுங்கூட்டிச்
சேர்த்தரைத்து உருக்கியெடு துய்யான்போலாம்
வரமருளு மிச்சத்தி லீயம்போக்க
வலுவான செம்பாகும் வழுத்தக்கேளு
திரமருளும் சித்தருட ரூபிபாதி
சீரபெறவே கன்னியர்பால் தன்னுலாட்டி
உரம்படவே வில்லைதட்டிப் புடத்தைப்போட
உத்தசிவப் பாகுமென்று உரைத்திட்டாரே. (136)

சொன்னபடி மதிபத்துக் கொன்றேயிட்டால்
சோதியுள்ள யேமமாம் நேர்மைமெத்த
முன்னமே சொன்னதுபோற் காயசித்தி
முடிவாக உண்டுவிட நோயெல்லாம்போம்
கன்னலரி தாரம்பொன் ஞணியுண்டோ
கனகமய மாய்ச்சொரியுங் காட்டொணாது
இன்னிலத்தி லிருக்கமட்டு முண்ணலாகும்
இக்குணந்தான் யாகோபு வெழுதினாரே. (137)

அயச்செந்தூரம்.

காந்தமதயிடித்தபொடி பலமும்பத்து
கல்வமிட்டு நிம்பகனிச் சாந்நுலாட்டிச்
சார்ந்தபடி மூன்றுநா ளரைத்துவாங்கிச்
சனகனமகள் தாள்போற்றிப் புடத்தில்வைக்க
மாந்தகுண மதிற்பிறந்து வெந்துசூரும்
மறுபடியு முன்போலே அரைத்துக்கொண்டு
சேர்ந்தரவி புடத்தில்வைக்கச் சிவப்பதாகும்
சிறந்தசெந் தூரமிதைச் செலுத்தக்கேளே. (138)

செலுத்துமிதை அனுப்பானந் தேகங்கண்டு
தேனிலரைக் காசிடையுந் தின்றுயானால்
பெலத்தமகா ரோகமஷ்ட குன்மமெல்லாம்
பேதலித்து விடைகேட்டுப் பின்கொண்டோடும்
வலுத்தபெல முண்டாகு மிறுகுந்தேகம்
வாதபித்த சிலேட்டுமங்கள் வழங்குமன்மை
பலமான செந்தூர மிதுதானப்பா
பகரரிது தருகும்வெகு பலனைத்தானே. (139)

கல்நார்பற்பம்

வெற்பதனி லுற்பவித்த கல்நார்தன்னை
வெள்ளைபா யெடுத்துவந்து பலமும்நாலு
உற்பனமா யுவர்மண்ணு சுண்ணம்நேரே
உடன்கரைத்துப் பாணிபடி யிட்டுக்காய்ச்சிக்
கற்பனையாய்க் குளம்புபத மிரக்கிவைத்துக்
கல்நார்விட்டரைத்துவில்லை காயவைத்து
சொற்படியே புடத்திலிடு சுண்ணமாகும்
சொல்லரிது யாகோபு சொன்னார்தானே. (140)

மூட்டோடே குலைந்தபல் தன்னிலேதான்
முக்கியமா யதைத்தேய்த்துப் பார்க்குமுன்னே
நாட்டிலே பல்லிருகித் தந்தவாய்வு
நலமான பற்குத்து அரணையெல்லாம்
காட்டிலிடு கதிர்கண்ட பனிபோலேகும்
காரணமாய்த் தந்தவலி கடலேபுக்கும்
தாட்டிகமாய் யாகோபு சொன்னசொல்லைத்
தன்மையாய் நம்பியிடச் சாந்தமாமே. (141)

சித்தண்டச்சுண்ணம்

வாரணத்தின் முட்டைதனைப் பத்தெடுத்து
வடிவாக வுவர்மண்ணு சுண்ணம்நேரே
காரணமாய்ப் பாணிபடி ரெண்டுவிட்டுக்
கருதியதைக் காய்ச்சிடவே கட்டிப்போகும்
தோரணமா யதையலம்பி மஞ்சள்தள்ளித்
துடியாக அரைத்தரவி காயவைத்துப்
பாரணமா யிதையூதப் பரிவாஞ்சுண்ணம்
பதிவாக யாகோபு பகர்ந்தார்தாமே. (142)

அண்டமதைக் கடுஞ்சுண்ண மாக்கிக்கொண்டு
அடைவான துருசுதனை நிம்பச்சாற்றூற்
கண்டுநன்று பசைத்துருட்டிக் காயவைத்துக்
கணக்காகச் சுண்ணமதைக் கவசங்கட்டிப்
பண்டெனவே புடமிட்டு யெடுத்துக்கொண்டு
பண்புள்ள செம்பதனை வெட்டைபண்ணி
விண்டதொரு சுண்ணத்தை கொடுப்பீராகில்
வினையகலும் ஏமவித்தை சித்தியாமே. (143)

ஆவரே வேதார்த்த சித்தரெல்லாம்
அவனியதில் விளங்கிடவே அருமையாகச்
சீவனுள்ள ஒளிமிகுந்த கனகமென்று
செம்புரவி மதியளவு மாகச்சேர்த்துப்
பூவுகில் மானிடர்கள் பலருங்கொள்ளப்
போகாத வினைகளெல்லாம் போகும்போகும்
ஆவலுட னிந்தவகை யறிந்துநன்றாய்
அறிந்திடவே யாகோபு அறிவித்தாரே. (144)

அயச்செம்பு.

கருவான அயங்கழஞ்சி நாலெடுத்துக்
காரமது பொரிநிறுத்து நாலுபத்து
உருவாகப் பழச்சாற்றை விட்டு ஆட்டி
உண்டபின்பு காயவைத்துப் புடத்தைப்போடத்
திருவாக மைபோலாம் உருக்கியூதத்
திடமான ரவியாகும் அயத்தின்செம்பு
பெருவாழ்வு மிகவுண்டாம் மதியிற்பத்து
பெலமாயொன் றீய்ந்திடவும் யேமமாமே. (145)

ஷேகளங்குச் செந்தூரம்

செம்பெடுத்து நாலிலொன்று யேமம்நாகம்
சேர்த்திடவே களங்காகுங் களங்கம்தேரே
வம்புசெய்யும் யிரதம்சேர்த் தரைத்துநன்றாய்
வகைமேரு வினிலெரிசெந் தூரமாகும்
அம்புவியில் ரவிதனிலே நூற்றிருன்றிட்டால்
அடைவான தசமாற்றும் அறிந்துபாரு
தெம்புடைய யாகோபு சொன்னரிந்தத்
திடமான செந்தூரஞ் செய்துபாரே. (146)

வங்கச்செந்தூரம்.

வங்கமது உருகையிலே கொத்தமல்லி
வலுவம்மன் பச்சரிசி விஷ்ணுகாந்தி
பங்கமது சாமம்ரெண்டு வருக்கத்தூளாம்
பற்பமதைக் கதலிதண்டுச் சாற்றூலாட்டி
அங்கிபதிற் புடமாறு தீர்ந்தபின்பு
அதைக்குமரி அனனமிட்டு அரைத்தூகான்கு
வெங்கனலிற் புடம்போடத் தோஷநீங்கும்
வேண்டியதோ ரனுப்பான வித்தத்திலீயே. (147)

சேர்க்கையதின் குணங்கேளீர் பத்தோர்மேகம்
சீரியதோர் கவிசைவலி லிங்கப்புத்து
நீர்க்கடுப்பு மணிகரைதல் தாதுஷ்டம்
நீரழிவு யெலும்புருக்கி அஸ்திமேகம்
மூர்க்கபிர வாதவலி யையத்தாலே
முடியவந்த பிணியகற்றிச் சுகமுண்டாக்கும்
பார்க்கஉடல் தங்கநிற மாகும்மேனி
பத்திவந்த நீரழிவு பாழதாமே. (148)

வங்கபற்பம்.

வங்கமது சேரூருக்கி யெருக்கம்பாலில்
வார்த்தேழு தாஞ்சாய்த்துத் தகடதாக்கி
அங்கதனைக் கத்தரித்து அரசம்பட்டை
அடையில்வைத்துப் புடம்போடு அடவாய்ப்பத்துச்
சங்குநிற மாயிருக்கும் அனுப்பானத்திற்
ரூனுண்ண மண்டலத்தில் மேகமெல்லாம்
திங்களத்தைக்கங்குல்கண்ட விதம்போலாக்கும்
திடமான சடலமிது தங்கமாமே. (149)

கருவங்கப்பற்பம்.

காரியிடை அப்பிரகஞ் சமமாய்ச்சேர்த்துக்
கண்டித்துக் கல்வத்தி லிட்டுநீயும்
பாரியல்பாய் எருக்கம்பால் விட்டுச்சாமம்
பத்தாட்டிப் புடப்போடப் பற்பமாகும்
வீரியமாம் பற்பத்தை யனுப்பானத்தில்
மிகவருந்த நீரழிவு மேகமெல்லாம்
வாரிதான் வருகின்ற துவாரமெல்லாம்
வளமையா யடைக்குமது வண்மைதானே. (150)

நாகபற்பம்.

கள்ளமது போக்கியே நாகந்தன்னைக்
கரண்டிதனில் வைத்துருக்கி அயத்தாற்கிண்டு
உள்ளபடி நீறுமந்த நீறுதன்னை
உற்றெடுத்துக் கல்வமிட்டுக் குமரிச்சாற்றூல்
மெள்ளவதை அரைத்துவில்லை கதிரில்வைத்து
மேதினியில் அரசனுட பட்டைமூடி
தள்ளாமற் புடம்போடச் சங்குபோலாம்
தாட்டிகமாய் யாகோபு சாற்றினாரே. (151)

உண்டிடவே பணவிடையா மதுவிலிட்டால்
உறுதிபெற்ற மேகமெல்லா மோடிப்போகும்
பண்டிதர்கள் பிழைக்கவிந்தப் பற்பமாகும்
பரனுரைத்த பாகமதை யானுங்கண்டேன்
கண்டபடி எழுநூற்றில் முறைபதாகக்
காட்டினேன் சகலருக்குங் கன்மந்தீர
தொண்டர் செய்யும் பாகமதாய்ச் செய்துகொள்ளு
தொல்லுலகில் யாகோபு சொன்னவாறே. (152)

வாதசூலைக்கு எண்ணெய்.

கொட்டைபெண்ணெய் படியொன்று சட்டியிட்டுக்
குற்றமற்ற ரசபற்பங் கழஞ்சுநாலு
விட்டதிலே வச்சிராங்கிப் பாலிவிட்டு
விதமாகக் கொதிக்கவைத்துக் கடுகைநீக்கிப்
மூட்டுகோ சிடையுண்ண வாதரோகம்
முனிந்தோடும் சூலையறும் பித்தம்போகும்
திட்டமதா யாகோபு சொல்லிவைத்த
தீரமதைப் பண்டிதர்கள் தெரிந்துதேரே. (153)

அரிதார பற்பம்.

திரைதாரம் பலம்நிறுத்துக் கற்சுண்ணத்துள்
திட்டமாய் தாக்கிரட்டி பாணியூற்றி
வரையதனை யெரித்தெடுத்துக் கசடுநீக்கி
வாதைபடக் கல்வமிட்டுத் தில்லைப்பாலால்
அரைத்ததனை யிருசாமம் வில்லைதட்டி
அடைவாகக் காயவைத்துப் புடமுமிட்டால்
நரைபோலே வெளுத்தமது நீறிப்போகும்
நாடறிய யாகோபு நலஞ்சொன்னாரே. (154)

தேனிலிரு பணவிடையுந் தானேகொள்ளத்
தெளிந்திடுங்காண் சயகாச மிருமலீளை
வானிலது பறந்தோடுங் கடிகள்குட்டம்
வன்மைதருஞ் சதையடைப்பு சூலையெல்லாம்
பானுதனிற் காற்றடிக்குங் கொள்கைபோலும்
பகலவனைக் கண்டபிருள் போலாம்நோய்கள்
கூனிநின்ற வாதமது நிமிர்ந்துபோகும்
கூறினர் யாகோபு குணமிதாமே. (155)

சொன்னதொரு லேகியங்கள் கிருதம்எண்ணெய்
சொன்னவய பற்பமூப்பூ வுஞ்சொன்னேன்
கன்னயமா யுலகிலுள்ள பேர்கள்யாரும்
கல்கியதோர் பிணியகல ஞாலமீது
உன்னவரும் பரப்பிர்மந் தன்னைப்போற்றி
உண்டிடவே பிணிகளெல்லா மற்றுப்போகும்
தன்னகரில் லாதபடி சூட்சங்கண்டு
சாரதிசெய் பாகமதைச் சாற்றுவேனே. (156)

சுக்கான் தருசுச் சுண்ணம்

சாரதியைத் தானெடுத்துச் சுண்ணச்சீலை
தாக்கியிடு கதிரில்வைத்துப் பின்புரீயும்
பாரதிலே வங்கத்தைச் சட்டியிட்டு
பக்குவமா யுருக்கியிட்டு மூழ்கச்சாமம்
நீரதிலே யெடுத்துப்பின் பார்க்கும்போது
நிஷ்களா னந்தமது கசடுநீங்கும்
வேரதிலே கொக்குநிற மாகுங்கண்டீர்
வேதாந்த யாகோபு விளம்பினரே. (157)

தருசுக் கட்டு

விளக்கமறச் சுக்காணை உலையிலிட்டு
வீதமுட னூதிடவே வெந்துநீறும்
தளக்கமதாய்க் காரமிட்டு அரைத்துப்பின்பு
சுத்தித்த கங்காளன் மேலேகட்டு
பளக்கமறப் புடம்போடு கண்டர்கட்டும்
பணவிடைதானெடுத்தீய விராலிதன்னிற்
களக்கமற யிடித்திடவே வரும்நீரென்று
கருணைபெற யாகோபு காட்டினரே. (158)

சூதகக் களங்கு.

சூதமது காண்டிதனிற் சேருயிட்டு
சுடுதணலில் வைத்துவிடு விராலிச்சாறு
பேதமற விட்டெரிக்கி லெண்ணெய்போலாம்
பின்புருட்டிச் சுத்தசலந் தன்னிலிட்டும்
பூதியமாய்ப் புடம்தூறிற் கட்டிநின்று
புகழாகக் கரியிலநின்று மணிபோலாடும்
வாதமிகு விந்திறுகும் கவனமாக
வகையான யாகோபு வழுத்தினாரே. (159)

அரசனவன் கரியில்கின் றுருகும்போது
அதிலிடுநீ நாலுக்கு ஒன்றுவமம்
விரசாக யேமமிடை நாகம்போடி
விரைவிரண்டு மொன்றுகக் களங்கமாகும்
உரவாக நவலோகம்தூற்றுக்கொன்று
உகந்துஇடு வமமாம் ஒளிவோமெத்த
பரவசமாய்க் கருத்தூவைத்து உலகத்தோர்க்கு
பாக்கியமாய் யாகோபு பாவித்தாரே. (160)

களங்குதனை யுடைத்துபண வீடையின்வீதம்
கனிந்தாறும் பழத்தில் வைத்துஉண்ணமேனி
உளங்குளிரச் செவ்வலரி பேரலாக்ஷதசம்
உறுதிபெற்ற மலிபேரலா முண்மையாகும்
சளனமறும் விந்திறுகும் முறுக்குமேறுஞ்
சரியாக வெப்போதும் பாலன்போலாம்
உளங்குளிர யாகோபு சொல்லிவைத்தார்
உண்மையிது யாவருக்கு முரைத்தாரானே. (161)

நாக வங்கப் பற்பம்.

நாகமோடு வங்கமதைச் சமனதாக்கி
நலமாக உருகையிலே ஆடாதோடை
சாகவே யிட்டுருக்கிக் கிண்டிப்பற்பம்
சரியாக அஞ்சுபுடங் தாழஞ்சாற்றில்
பாகமா யரைத்துருட்டிக காயவைத்துப்
பத்திரண்டு புடம்போடப் பதம்பார்வெண்மை
ஆகமட்டும் புடம்போடக் களங்கம்நீங்கும்
அதைவெடுத்து அனுப்பானத்துடன்தீஷ்ணமே (162)

கூட்டதனைப் பணவிடைதா னுண்ணச்சொல்லு
குணமான மண்டலத்திற் றூதுவிர்த்தி
வாட்டமது கொள்ளாமற் போகுந்தானும்
மணியிறுகுந் தாதுவிர்த்தி வளரும்போகம்
சூட்டுமலர்க் குழலாரும் பிரியாள்கூடிற்
சுகமறிந்து புருஷனென்றே தொழுவாள்நித்தம்
பாட்டிலினிப் பயன்பிரிக்க அறியாமற்றான்
பகர்ந்தனிப் பண்டிதரே பயன்கொள்வீரே. (163)

சூதம் நாகப்பற்பம்.

சுத்தித்த நாகமது கழஞ்சிரண்டு
சூதமிரு கழஞ்சிரண்டு சிறக்கவேரே
பத்தித்த நாகமது உருகும்போது
பாய்ச்சதிலே யிருவகையும் பொடியாய்ச்செய்து
மத்தித்து வருக்கம்மன் பச்சரிசியோடு
மாண்டதுவும் பற்பமாம் பணமெடுத்து
நித்தித்த ரஸ்தாளிப் பழத்திலீயத்
திடமாக ஜலரோகந் தீருந்தானே. (164)

கருவங்கப்பற்பம்

பதங்கரச மிரண்டுவங்கம் ரண்டுங்கூட்டி
பாய்ச்சியதை யுருக்கியே கல்வத்திட்டு
ஓதுங்கியே கருமத்தன் குமரிச்சாற்றில்
உகந்தரைத்துக் காய்ந்தபின்புக் குப்பிக்கேற்றி
கதங்கிடமாய் வாலுகையி லேற்றிமேலே
சவிழ்த்துசட்டி மண்செய்து அனல்மேலிட்டுத்
ததுங்கிளரி யிருபதுநா ழிகையிற்றானும்
தணலாறி யெடுத்துப்பார் தவளமாமே. (165)

தவளமாம் பற்பமதை அனுப்பானத்தில்
தந்திடவும் வாதமுதல் மேகம்போகும்
பவளப்பூ பூத்தமலர் போலதாகும்
பவுத்திரங்க ளாறுத ரணங்களாறும்
குவடுபுயத் தருகில்நின்ற கண்டமாலை
குணமாகும் யிம்மருந்து கொண்டபோக்கு
தவறிலக்கக் குருபதத்தைத் தியானஞ்செய்து
தானீய்வாய் யாகோபு சாற்றினாரே. (166)

அரிதாரபற்பம்

மடலினிய அரிதாரஞ் சேரிரண்டு
வளமாகச் சீலையிலே தளரக்கட்டி
விடமறவே சுண்ணமிட்டு வெந்நீர்வாரு
வெந்துநின்ற தைதெடுத்து தகுழியவிழ்த்துப்
படவதிலே பதினைந்து தரமும்நீற்றிப்
பதையாமற் புரசுபட்டை பூவின்சாறுறிற்
சுடவதிலே அரைத்துதனை வில்லையாக்கிச்
சுட்டபுளிச் சாம்பலுள்ளே சொருகிவைபே. (167)

வைத்தெரிக்கக் கமலாக்கினி சாமம்நாலு
வார்த்தெடுத்து முன்சாற்றி லொருநாளாட்டி
உத்தமனே மெழுகதுபோல் நன்றுபாட்டி
உலர்த்தி முன்போற் புடமதனைப்போட்டெடுத்து
ஆத்தியே குமரியன்னஞ் சாமம்நாலு
அரைத்துருட்டிக் காயவைத்து அதைமுன்சாம்பல்
மெத்தியிட்டுக் கிழ்மேலு மோடுமூடி
வேகவினிக் கசபுடமா யேத்திப்போடே (168)

போட்டதனை வேகாட்டால் தனப்பாலாலே
புகட்டியரை புடம் போடு பூப்போல்நீறும்
காட்டிதனைப் பணவிடைதா னனுப்பானத்திற்
கலந்துண்ணத் தீருகிற வியாதிகேளு
கூட்டமதாய் ஆயிரத்து எட்டுரோகம்
குணமாகும் புகைச்சலொடு வெளுத்ததேகங்
கேட்டவுடன் நில்லாது சயரோகந்தான்
கீர்த்திபெறச் சித்தர்சொன்ன முறையீதாமே. (169)

நாகப்பற்பம்

ரசமுமொரு பலமிடைதான் நாகங்கூட்டி
நன்மையாய் முசுமுசுக்கைச் சாறுவிட்டு
இசையாறு சாமமரைத் தகலிலிட்டு
இதமாகக் கோழிமயில் புடமும்போடு
மசியுமதை யனுப்பானத் துடனேயீய
வடிவான மேகமொடு வாதந்தீரும்
தசையில்பெரு வாதமையத் தாலேவந்த
சகல்பிணி மிரண்டோடுஞ் சாப்பிட்டோர்க்கே. (170)

ரசகெந்திமெழுகு.

ரசம்நாலு கெந்தியெட்டு முள்ளங்கிச்சாற்றில்
நாலுநா ளரைத்துருப்பிக் கேற்றிமூடி
பசுஞ்சாணிக் குப்பைக்குள் ஆறுமாதம்
பதித்தெடுக்க மெழுகினனுப் பானத்தூண்டால்
தசைவாத பித்தமயத் தாலேவந்த
சடத்திலுறும்வியாதியெல்லா மாளுங்கண்டாய்
பிசகாது பிக்குணங்கள் சித்தியாகும்
பெண்கள்மதந் தணியிறக்கும் நிந்துதானே (171)

சகலவலிப்புக்குஞ் சுடர்த்தைலம்.

அரிதாரங் கெந்திசிலை காவிகாயம்
அரையரையாம் பலம்வசம்பு பூண்டு நேரே
பருதியின்பால் விட்டரைத்துத் துணியிலூட்டிப்
பஞ்செண்ணெய் குத்திசுடர்த் தைலம்வாங்கி
குருவிதைப் பத்தியமாய்க் கொண்டாயானால்
குடல்வாயுவு தனுர்வலியுஞ் சன்னிசீதம்
பெருவினைகள் வலிப்புகளும் பச்சைவாதம்
பேர்கெட்டா லோடிப்போம் புகழ்ந்துஉண்ணே.(172)

உண்மையிந்த மருந்தோடே வாளமெட்டு
உதையவண்பால் விட்டரைத்து வுறிநிம்ப
எண்ணெயபடி யிரண்டதனில் விட்டுக்காய்ச்சி
இதமாக வடித்திட்டுப் பலனைக்கேளு
ஒன்பதுகாட் கொள்ளவுமே சன்னிசீதம்
ஓடிப்போம்இசிவுகளும் விட்டேவுகும்
தண்மையினு லுண்மையிது சொல்லடங்காத்
தாக்கிப்பார் செகந்தனிலே சரியிதாமே. (173)

வாதத்திற்குபச்சைவெட்டு

கெந்தியொன்று தாரம்ரெண்டு சூதம்பத்து
கேள்நிம்பச் சாற்றைவிட் டரைத்துருட்டி
தந்திடவே அனுப்பானந் தேனிலுண்ண
தனுர்வாதம் அற்புதத்தின் வாதந்தீரும்
பிந்திசுப கால்கரங்கள் குஷ்டரோகம்
பிடிப்புகளுந் திமிர்வாதம் குதிவாதங்கள்
கந்திருளை விலக்குகின்ற கதிரோன்போலக்
கணையாறுஞ் சுகப்படுத்திக் காக்குந்தானே. (174)

குஷ்டத்திற்குத் தைலம்.

அரிதாரஞ் சேரொன்று இளிஞ்சிச்சுண்ணம்
ஆக்கியதைக் கற்றுழஞ் சாறுநிம்பங்
கரிசாலை சாணைச்சார் புரசம்பட்டைக்
கதிரவன் பால்அரசம்பால் எலியாலம்பால்
மறவாம லிரண்டுகா ளைரைத்தொவ்வொன்றில்
வைத்தெடுத்துப் பூப்புடத்திற் றைலம்வாங்கி
பறையாம லனுப்பானத்துடனே கொண்டால்
பதினெட்டுக் குட்டமது பறந்துபோமே. (175)

சகல ரோகங்களுக்கும் யெண்ணெய்

மூத்தெண்ணெய் கணக்களந்து படியுமொன்று
முப்பிரண்டைச் சாறு விட்டொருநாள்மூடி
வைத்தபின் னெடுத்துமே கொதிக்கவைத்து
வடிவாக வாசுகியை அதனிலிட்டுப்
பத்தியெண்ணெய் விட்டிருநாள் கதிரில்வைத்துப்
பதமாக அதையருந்து கடுகைநீக்கி
அத்தனுடமலையெடுத்தோன் நகர்தீயிட்டோன்
அவன்தந்தை சினந்தீரும் அறிவீர்தானே (176)

சூலைக்கு.

வெங்காயங் கழஞ்சுயிடை எட்டேயாகும்
விளக்கெண்ணெய் ஒருபடியி லிட்டுக்கொண்டு
சிங்காரத் தந்திவிதை பலமுமொன்று
சிவிக்து கற்பூரம் பலமரைக்கால்
பங்கமில்லா தேயரைத்துக் காய்ச்சியுண்டால்
பக்கமுள்ள சூலவகை யாறுவாதந்
தங்காது குடல்புரட்டல் வாய்வுகுன்மம்
சத்திமகோ தரம்நாலும் தரியாதென்னே. (177)

தரியாது சுரம்வழலை குஷ்டரோகம்
சகலகுன்மம் யோனிகுத்தல் வாதசூலை
ஒருபீஜம் அண்டத்தி னிருவீகங்கள்
உள்ளதண்டு சூலைசிறு நீர்க்கடுப்பு
கிரிசனங்கள் சேத்துமங்கள் விஷபாகங்கள்
கெதிகெட்டு ஓடுமடா மேகவாய்வு
விரிவாகுங் கலிநீங்கும் அறிவாயிர்த
விளக்கெண்ணெய்உண்டவர்க்குவிசையுமாமே. (178)

அண்டவாதத்திற்குத் தைலம்.

இரையுமெலி யாலின்வேர் பலமூமூன்று
இடித்தவசம் புள்ளியுங் கஸ்தூரிமஞ்சள்
அரையாகும் பலமுமெண்ணெய் நாழிகூட்டி
அடுப்பேற்றிப் பதமாக வடித்துக்கொண்டு
மறையாமல் தலைக்கிட்டுமூழ்கிவந்தால்
மார்புவலி குன்மமுத லண்டவாதம்
அறியாமல் வந்தோமென் சடலம்விட்டு
அகலுமித்தத் தைலத்தி னுண்மைதானே. (179)

கெந்திசுடார்த் தைலம்

கெந்திபலம் நாலுரசுந் தாரஞ்சூடன்
கிளர்வீரம் சிலவகைக்குப் பலமொன்றுகப்
பத்தமாம் பொட்டிலுப்பு மூன்றுபலம்கூட்டி
பசுவின்நெய் விட்டரைத்துத் தூணியிற்பூசி
சித்திடவே சுடார்த்தைலம் வாங்கிநித்தம்
சேர்ந்தவனுப் பானத்தி னுண்டாயானால்
எந்தவித வாய்வுகளுங் கடிகள்குஷ்டம்
இருந்தவிடந் தெரியாம லேகுங்தானே. (180)

வாதசூலைக்குச் சுடார்த்தைலம்.

கெந்திபலம் அஞ்சுவெடி யுப்புமொன்று
கிளர்சாரம் வீரமொரு பலமுங்காலாய்
நந்திபண்ணி யுப்புடனே நாலுங்கூட்டி
கல்லெண்ணெய் விட்டரைத்துத் தூணியிலூட்டி
முந்தநெய்யிற் குத்திசுடார்த் தைலம்வாங்கி
முறைக்குமனுப் பானஞ்சர்க் கரையினேடே
தந்துவிடும் புகைபுளியுப் வழக்கமான
சமையல்புலால் கூட்டிநிதந் தானுண்பாயே. (181)

சாப்பிடவே மண்டலத்தில் வாதசூலை
தமரகமு முறுசூலை மேகவாய்வு
காய்ப்புடனே புண்கிரந்தி கிரிச்சனங்கள்
கடல்புக்கும் ரோழிவு நீர்க்கட்டோடும்
நாப்பான முடவாதந் தடித்தகுஷ்டம்
கவிலுமையந் தொந்தமகா ரோகமீங்கும்
மூப்பகன்று எவ்வனந் தானுவிர்த்தி
மூட்டிவிக்கும் சித்தர்சொன்ன மொழியிதாமே. (182)

ஜலக்கோர்வைக்குத் தைலம்.

கொல்லன்கோ வைக்கிழங்கின் சாறுநாழி
குறித்தகருத் தாட்டுப்பால் எண்ணெய்நாழி
கல்லுள்ளி வசம்புகஸ் தூரிமஞ்சள்
கண்மிளகு வகைக்குப்பலம் நிறுத்துப்போட்டு
சொல்லடுப்பி லெரித்தெடுத்து மூழ்கத்தண்ணீர்
சுடரென்ற பீனிசங்கள் தும்மல்தீரும்
பொல்லாத மந்தார சுவாசகாசம்
போகுமிரு தலைவலிகண் ணெரிவும்போமே. (183)

சூலை பதினெட்டுக்குத் தைலம்,

எள்ளெண்ணெய் படியொன்று பழச்சாறொன்று
இதற்குமேர் தழுதாளை ஆடாதோடை
கள்ளிப்பா லெருக்கன்பால் படியரைக்கால்
கவனித்தொன் றுப்பச்சேர்த்து எரித்துவாங்கி
அள்ளிசிறு கரண்டியெண்ணெய் கொண்டாயானால்
அப்பனே சூலைவகை யெல்லாம்நீங்கிப்
பிள்ளைகளே கதிர்கண்ட பனிபோலாகும்
பெருமைபெற்ற யாகோபு பேசினாரே, (184)

கெற்பசூலைக்கு முன்னைத்தைலம்.

முன்னையிலை வெங்காயம் விளக்கிணெண்ணெய்
முதிராமற் காய்ச்சிவடி கட்டியுண்ண
கன்னிகெற்பச் சூலைவெட்டை மலமும்நீங்கும்
கண்ணெரிவு நீர்ச்சுருக்கு கைகால்குத்தல்
பின்னுமலத் துவாரவழி கடுப்புவீக்கம்
பிரிந்தோடும் நீர்க்குழியின் இரணம்போகும்
பொன்னுருகுங் காரமதைப் பொரித்தக்கூட்ட
போக்கிவைக்கும் நீரடைப்பு புகழ்ந்துகேளே. (185)

கெந்தித் தைலம்.

அண்டமதைப் பொத்தினுட் கருவைப்போக்கி
அரைப்பலமாங் கெந்தகத்தைப் பொடித்துவைத்துக்
கொண்டுகேள் கவுதும்பை யிலைச்சார்கொஞ்சங்
குத்தியே கீழ்த்தோலும் புறமூழ்மூடி
கண்டமுள்ள துணியாலே கட்டித்தூக்கிக்
கலயத்தெண் ணெய்யிற்றொளாந் திரமுங்கட்டி
நிண்டபீ பாக்கினியா லெரித்தெடுக்க
நிகழ்த்துவேன் தைலத்தில் நிற்குந்தானே. (186)

தானென்ற தைலமதை நாகவல்லித்
தழையிலிட்டு நாற்பதுநா ளுண்டாயானால்
கோனென்ற வாதபித்த ஐயத்தாலே
குடிகின்ற குணத்தாலுந் தொந்தம்நீங்கும்
வானென்ற உடலில்வந்த வியாதியெல்லாம்
வடிவாக ஓடிவிடுங் களங்கமற்று
மானென்ற தருங்குணத்தைக் குறித்துச்சொன்னேன்
வசனிக்கக் கூடாது உலகத்தோர்க்கே. (187)

வட்டக்கிலுகிலுப்பைத் தைலம்.

வட்டகிலு கிலுப்பைச்சார் படியோரெண்டு
வசம்புவெள்ளை வெங்காயம் பலமுங்காலாம்
பட்டைபல மிரண்டுமுத் தெண்ணெய்நாழிப்
பதமாகக் காய்ச்சிவடித் துண்ணவேதான்
தூட்டவிஷ பாகமது வற்றிவாடி
துலையுமூப்பு புளிதள்ளி யுண்டுபின்னும்
திட்டமதாய் மறுபத்தியம் பிடித்தால்நன்றாய்த்
தீர்ந்துவிடும் உண்மையிது திட்டந்தானே. (188)

எலிகடிக்குமருந்து.

விளக்கெண்ணெய் பருத்திச்சார் வகைக்குநாழி
விட்டுசது ரக்கள்ளிப் பாலுழக்கு
குளிக்குமஞ்சள் திப்பிலியும் பூனைக்கட்டாங்
கூட்டுமிது பலமொன்று குறையாமற்றான்
இளக்கமது யில்லாமற் பதத்தில்வாங்கி
இப்படிக்கு வடித்தொரு சுரண்டியிற்றால்
உளக்குவலி கடிகள்பதி னெட்டுந்தீரும்
உண்மையிது பத்தியமா யுண்ணத்தானே. (189)

கிரிச்சினவெட்டைக்கு.

மணிப்புங்கின் பட்டையின்மேற் பரணிநீக்கி
மாங்காயி னளவதாய்ப் பலம்வெங்காயம்
துணிவுவிளக் கெண்ணெயரைப் படியுமிட்டுத்
தனிதமா யதைக்காய்ச்சி வடித்துக்கொண்டு
குணிக்கவரும் மூத்திரந் கிரீச்சிவெள்ளைக்
குட்டம்விட்டு முக்கலுடன் கடுப்புந்தீரும்
தனித்திருந்து பத்தியமாய்க் கொண்டாயானால்
தப்பாது குணமாகுந் தன்மைதானே. (190)

காசத்திற்குச் சூரணம்.

வெள்ளெருக்கின் காயினுட வீரையைவாங்கி
வேதித்துக் கல்லுப்பை யிட்டுப்பின்பு
பள்ளமூருங் கப்பயத்தி லிட்டுமூடிப்
படுகுமன்னங் கொதிக்கையில்வைத் தெடுத்துலர்த்திக்
கொள்ளுநிரி கடுகாரத்தை அக்கிராகாரம்
கோஷ்டமொடு கடுக்காயும் பலமிடித்து
தெள்ளியதேர் சூரணத்தைத தேனிற்கொள்ளச்
சிதறிவிடுங் காசமெல்லாஞ் செப்பினேமே. (191)

மந்தாரகாசத்துக்குக் குழம்பு

இரும்புரசம் ஈயிகெந்தி சிலிலெங்காரம்
இக்குலிங்க மப்பிரகம் தாரம்வாளம்
திரிகடுகு திரிபலையுஞ் சமனதாகச்
சேர்த்தகழற் கொடிமூருங்கை இலையின்சாற்றூல்
அரைத்துஅதை மூன்றுநாள் திரட்டிகொண்டு
அனுப்பானந் தேனுடனே அருந்தத்தீரும்
கரியமந் தாரகாச ரோகந்தீரும்
கைகண்ட பாகமிது கருதிப்பாரே. (192)

குஷ்டம் 18க்கும் சூரணம்

முத்தினதோர் விடத்தலையின் பட்டைதன்னை
மூழுதுமேற் பாணியைச்சூ ரணமதாக்கி
மெத்தினமாய்ப் பலம்நாலு சூதம்நாலு
விட்டசைந் குலாமலலிச சாற்றூற்சாமம்
மத்தினமாய்ப் பினனுலர்த்திப் பொடியாய்ப்பண்ணி
மண்டலந்தான தேனதனிற் கொண்டாயானுல்
குத்தமறத் தீர்த்திடும்பத் தெட்டுக்குட்டங்
குடியோடிப் போகுமென்று கூறினேரே (193)

மலட்டுவலிக்கு.

அன்னமிடு முன்னிடும்பு அழுக்கைப்போக்கி
அப்புதனிற் கரைத்திறுத்துத் தெளிவைவாங்கி
மின்னிடையாள் ருதுகாலம் வயிற்றுநோவு
மீறிடுமபோ தினையறிந்து மூன்றுநாளும்
பின்னுமொரு தாங்குடிக்க வயிற்றுப்பூச்சி
பேதலித்து யிருந்தவிடந் தெரியாமற்றூன்
சொன்னமில்லா வாறையொத்த வேகிபோலத்
தூலயுமிது கைகண்ட தொழிலீதாமே. (194)

மலசலகட்டுச்சூலைக்கு.

ஆளிவிரை தட்டிடையாங் கல்லீயாய்ந்து
அரைப்படிநீர் விட்டதனைக் அரைத்துக்காய்ச்சிக்
கேளுமிதிற் புட்டிவெல்லம் பலங்கால்போட்டுக்
கிளறியதைக் கொடுத்துநீ பொழுதுமூன்று
நாளதனிற் றீராத சூலைவாய்வு
நன்றுக மலசலமும் கழன்றுவிம்மல்
காளியா யேர்டிவிடும் பொழுதுதானுங்
கண்டபனிப் போலோடும் குணமீதாமே. (195)

பச்சைவாதத்துக்கு.

விதிபிறந்த மதியதனைச் சுத்திசெய்து
மிளகுசமன் கூட்டிநீர் விட்டுஆட்டி
உதிமிளக தாகவே உண்டைசெய்து
உற்றவனுப் பானமதை வுரைக்கக்கேளு
நதியுறையா மன்னத்தில் உரைத்துக்கொண்டு
நற்சடத்திற் பெருவாதம் பச்சைவாதம்
பதிகரங்கள் நரம்புகளும் முறுக்குமேறிப்
பண்டதுபோல் நடைகொடுக்கும் பரீட்சைபாரே. ()

இசிவுவலிகுன்மத்துக்கு.

ரசமரைக்கால் இந்துப்புக் காலதாகும்
நல்லஅர பொடியுமரை கெந்தியொன்று
பசுங்குமரி அன்னமிட்டு அரைத்துநையப்
பழுத்துலர்ந்த தேங்காயினோட்டுள்வைத்து
திசைவிளங்கு மணற்புடத்தில் வைத்துவாங்கித்
தினங்குன்றி வெற்றிலையிற் றின்பாயானல்
இசிவுவலி குன்மமகா ரோகமெல்லாம்
இருந்தவிடந் தெரியாம லேகுந்தானே. (197)

குன்மத்துக்கு நசியம்.

திரிகடுகு நாலியெவச் சாரந்தாரம்
சிவன்கிழங்கு பாவட்டை சித்ரமூலம்
விரைசமுத்தி ராயிலுப்பை வேப்பம்வித்து
வேரும்பட்டை அழிஞ்சியிவை சமமாய்த்தூக்கி
அரியயிஞ்சி நொச்சிபுளி யெருக்கம்வேர்ச்சார்
அரைத்துமே உண்டைசெய்து அதையுட்கொள்ள
விருமைகொண்ட போதுகண்ட ரோகமெல்லாம்
விஞ்சுந்தவெகு நோயெல்லாம் விட்டுப்போமே. (198)

காட்டெருமைப் பால்கறந்து கன்றின்சாம்பல்
கணைகளவு ரெண்டுமொன்றுய் விரவிச்சேர்த்து
போட்டுரவி சூடுபடக் காய்ந்தபின்பு
புனல்தோஷ மகன்றிடவே நசியம்போடு
கேட்டுடனே சிரசிலுள்ள நீரின்கோர்வை
கேடுவிட்டு நாடுவிட்டுக் கிரகம்பேர்ந்து
பேட்டிதர மிருளற்ற கதிரோன்போலே
பேருமென்று யாகோபு பேசினாரே. (199)

உஷ்ணவாய்வுக்கு.

தூணிமோர் கடுக்காய்த்தூள் இந்துப்பிரண்டு
சுயமான சுக்குஞ்சு பலமுங்கூட்டி
பேணிமிள காமந்திப் பிலித்தூளொன்று
பேரான சீரகமோர் பலமுஞ்சேர்த்து
வேணிரவி நெய்வெண்ணெய் போலரைத்து
விதமாக நித்தியமு மிருகால்கொண்டால்
ஊணிருதஞ் செரியாத உஷ்ணவாய்வு
ஊதுமந்தங் குணமாகும் உண்மைதானே. (200)

சயங்காசம் கட்டிகளுக்குத் தைலம்.

அப்பிரகத் தகடதனைக் கரியில்வைத்து
அடைவாக வூதியபின் உள்ளிதன்னை
ஒப்பாக நறுக்கிஅரி தாரங்கொஞ்சம்
உறுதிபெற வைத்துமுன் தகட்டில்வைத்துத்
தப்பாம லூதிவிடு தைலம்வீழும்
சாப்பிடவே சயகாசங் கடிகள்போகும்
மூப்பொழுது உண்டுவிடு மேனிதங்கம்
முத்திபெற யாகோபு மொழிந்ததாமே. (201)

வாய்வுக்கு.

கிரிகடுகு கொடிவேலி ஓமங்காயம்
சீரகம்நல் லெண்ணெயுள்ளி கடுகுந்துப்பு
கருவேம்பி னிலைபிரண்டை சேமன்தண்டு
கந்தமுடன் புண்ணைக்கு வகைநேரிட்டு
நெரியாக வலுமிச்சம் பழச்சாற்றுலே
நேகவரைத் தாவின்நெய் விட்டுக்காய்ச்சி
பிரியமுடன் அன்னத்திற் சேர்த்துநீயும்
பிடித்துண்ண வாயுவலி பூட்டல்போமே (202)

உதட்டுப் புழுவுக்கு.

அதரமது பருத்துநொந்து வெளுத்துதாளல்
ஆட்டுசங்க முள்ளாலே பிடித்துக்குத்தி
உதிரமதைத் துடைத்தாலம் பாலிப்பூசி
உகந்தரஸ் தாளிப்பழம் பிளந்துகட்டி
கதிரவனுன் நிறுதிவைத்து மூன்றுசாமம்
சுட்டவிழ்த்துப் பார்க்கவதிற் கழன்றுபூச்சி
விதமறிந்து மூன்றுநா ளின்னுங்கட்ட
விஷயமிது யாகோபு விளம்பினேனே. (203)

சூதமுறிவுக்கு.

கோட்டுகரி முகத்தோனைப் பெற்றோன்விந்தைக்
குடித்ததனுல் பதங்காங்கள் முடக்கிவீங்கி
வீட்டில்கெருப் பதைபிடித்துச் சாலிலூட்டி
விடுமதில்நீர் திருதூணி மூன்றிலொன்று
மூட்டியதின் மேலிறுத்துச் சேருவாங்கி
முன்மருந்தின் செந்தூர முணர்ந்துகொள்ள
போட்டிபெரு நோய்கள்ரசக கட்டுவிட்டுப்
போக்கிவிக்கு முண்மையிது புகலக்கேளே. (204)

மூலக்கிராணிக்கு பாஷாணக்கட்டு.

தூய்யவெள்ளைப் பாஷாணம் பலமோரெண்டு
தணித்ததனை மொந்தையில்விட் டெருக்கம்பாலும்
பெய்யுமதை மொந்தைமேல மொந்தைமூடிப்
பிலக்கமண் சீலைசெய்து அடுப்பிலிட்டு
நையளரி சிலுசிலுப்பு அடங்கிவிட்டால்
நலமாக யிரக்கியே ஆறவைப்பாய்
பையபண விடைகொள்ள மூலக்கிராணி
பறக்குமே சுரமெல்லாம் பதிலாய்த்தானே. (205)

சூலவாதத்துக்கு மாத்திரை

காயமூடன் கெந்தியுப்பு கழற்சிசுக்கு
கடுகுரோ கணியஞ்சுஞ் சமனுய்க்கூட்டி
வாயில்பெரு முருங்கையினீரால சாற்றிலூட்டி
வ ம்பெறவே காசிடைதா னெடுத்துநீயும்
நோய்களுக்கு அனுப்பான வித்தத்திலிய
நொடியில்சிர சோகமுதல் மூலவாய்வு
தாயமுள்ள வேசிமையல் கொண்டீடான்பாலில்
தனம்போல வாதமய்யஞ் சரியுந்தானே. (206)

மதுவின் குணம்.

சுடுநீரில் நீரைவிட்டால் நஞ்சதாகும்
சுருதியொக்குங் கள்ளுதனில் நீரைவிட்டால்
படுவான மிகப்போதை யாகும்பாரு
பாலுறைந்த பாவனைபோல் மானிடர்க்கு
இடுகாதே காடியுண்டு பாலையுண்ண
இன்பரச வாதமாம் பத்திஞானம்
நடுவாகத் தோணுமது சுழியிலேறும்
நாதாந்த யாகோபு நலஞ்சொன்னாரே. (207)

கிராணிக்கு அபின் மருந்து.

உள்ளியது ஓருபூண்டு உடைத்ததற்குள்
உற்றஅபி னிலந்தைவிதைப் பிரமாணந்தான்
தள்ளிவிட்டு மூடியபின் நெருப்பிலிட்டுத்
தன்மையாய்ப் பார்த்திருந்து பதத்திலேதான்
சள்ளையில்லா தேயெடுத்துத் திரிநாளுண்ணச்
சண்டாளக் கிராணியெல்லாங் கடலேபுக்கும்
கொள்ளுமிதில் அதிசாரம் வாயுநீங்கும்
குருவைநினைந் தண்டிடவே குடிலம்போமே. (208)

பஷாணக் கட்டு.

எலிகொல்லி தேவிமிரு தாரசிங்கி
இயல்பான கெவுரியுடன் துத்தமஞ்சும்
வலியவெடி சீனச்சுண் ணும்புதன்னீ
வலுக்கவரை கவசமிட்டுக் கதிரில்வைத்து
இலிதமறச் சட்டிவிடு அதனிற்பாதி
இளிஞ்சிநீர் விட்டுஅதின் மேலேஉண்டை
பொலியுடனே வைத்துப்பின் சுண்ணமூடிப்
பொங்கமூட னிருசாம மெரித்துக்கொள்ளே. (209)

எரித்தவிடு கட்டாகுங் கட்டுதன்னீ
இயல்பான குழிக்கல்லி லிட்டுநன்றாய்
அருத்தமதாய்ச் சுண்ணமதின் நீர்விட்டாட்டி
அதன்பிறகு புகைநீர்விட் டரைத்துக்காய்ந்து
திருத்தமதாய் முன்போல எரிக்கவந்து
தெளிவான சுண்ணமாஞ் செகத்தின்மீதிற்
பொருத்தமாய்ப் பலநோய்க்குக் கொடுக்கத்தீரும்
புகழான யாகோபு பயின்மூர்த்தானே. (210)

சுண்ணமதாம் பாஷாணம் ஏடைபோகாது
சூட்சமுட னெடுத்துப்பொன் பணமவ்வீதம்
நன்னயமாய்க் கொடுத்திடுகாளெட்டில் நன்றாய்
நன்மைபெற மெய்யில்நின்ற நசலும்போகும்
குன்மமெட்டும வாதபித்தங் கடலேபுக்கும்
குஷ்டநோய் சிலேற்பனங்கள் குணமதாகும்
சொன்னபடி காலமட்டும் நசல்வராது
சுகம்பெறவே யாகோபு சொன்னர்தாமே. (211)

சாக்குக் கட்டத் திராவகம்.

காச்சலஞ்சாம் பொட்டலையும் பலமீரைந்து
கண்டுஎடு படிக்காரம் அய்யஞ்சாகும்
மாச்சலரைப் பொடியாக்கிக் கடத்திலிட்டு
மருகவதின் மேல்வாலே கவிழ்த்திச்சீலே
வாச்சபடி செய்தடுப்பில் வைத்துப்பின்பு
வகையாக யெரியிடவே முந்நீர்வெள்ளே
ஓச்சதுவைத் தள்ளியெடு நடுநீர்வாங்கு
உறுதிபெறப் பிடித்தபின்பு கடைநீர்வாங்கே. (212)

வெடியுப்புத் திராவகம்.

கடுமையுள்ள நீர்பிடிக்கப் பசப்புநீராம்
கண்டுஒரு சேரிறுத்துக் கரிப்பிங்கானில்
அடுமைபட விட்டுரசம் நாலிலொன்று
அனல்கிளம்பும் புகையெழும்பும் மேலேபிங்கான்
கடுவுடனே கவிழ்த்துநீ அகல்ப்பிங்கானில்
கன்மைபெற வைத்திடநீர் தானேவீழும்
படுமுன்னே சரக்கெல்லாம் வெந்துநீறும்
பரிவான யாகோபு பயின்றவாறே. (213)

திருசுச் சுண்ணம்.

நீலனெரு பலமெடுத்து முன்னீர்தோய்த்து
நிழலில்லாக் கதிர்முன்னே அதனைவைத்துக்
காலமதி லெட்டுநாள் வைத்துப்பாரு
கடுமையாய்ப் பொங்கியது நீறுமாகும்
வேலையிதிற் கிளிஞ்சிநீர் நாலிலொன்று
வீரமது சேர்த்தரைத்துத் திருசின்மேலே
கோலமிக அங்கியிட்டுப் புடத்தைப்போடு
கொடுஞ்சுருக்குத் திருசுமது நீறுமாமே. (214)

நல்லாக நீறினது பணமவ்வீதம்
நாடியெடு விராலியிலை தன்னிலிட்டு
மெல்லாகப் பிழிந்துவிடு நீர்தான்வீழும்
மேன்மையாய் அயக்கரண்டி தன்னிலிட்டு
வெல்லவே அரன்பீச மிட்டுக்காய்ச்ச
மேன்மைபெறக் கட்டியது மணிபோலாடும்
செல்லவொரு சாரணைதான் தீர்ந்தாயானால்
திடமாகும் செவுனவழி யோடலாமே. (215)

திரிவங்கச்செந்தூரம்.

உருக்கினதோர் சூதமது நாலிலொன்று
உருக்கிமெள்ளக் குகையிலிட்டுத் தங்கத்தாயைப்
பருக்கவே கூடவிட்டு உருகும்போது
பாய்ச்சிடுநீ யேமமிடை நாகந்தன்னை
அருமையா யுருக்கியெடு கல்வமிட்டு
அன்னச்சார் விட்டரைத்துப் புடமூன்று
கருகவே போட்டெடுக்க முருக்கம்பூவாம்
காட்டவே நவலோகம் ஏமமாமே. (216)

தாளகநீர்.

சிவந்ததொரு செந்தூரம் அகலிலிட்டுச்
சிறக்கமெள்ளக் கரியில்வைத்து நாளத்தாலே
நவம்படவே ஊதியெடு சுண்ணம்போலே
நல்லதிரு வாள்மடந்தை கல்வத்திட்டுத்
தவம்பெறவே அரைத்தன்னஞ் சாமம்நாலு
தக்கதிர் காயவைத்துப் புடமூன்றிட்டுப்
பவம்படவே எடுகொக்கு நிறமேயாகும்
பரிவான யாகோபு பகர்ந்தார்தாமே. (217)

அடித்தளடு பணவீதந் தேனிற்கொள்ள
அருள்பெருகுங் காசசய மேகமெல்லாங்
தொடித்துவிடும் வலிவாய்வு குன்மமேகும்
தன்பமில்லை சிலேத்துமங்கள் தொண்ணூற்றும்
படித்துவிடும் வாய்வெல்லாங் கடலேபுக்கும்
பருதிகண்ட பனிபோலே பறந்துபோகும்
கொடித்துவைத்த திருவாம்யா கோபுநன்றாய்க்
கூறினா ரிதன்பெருமை கூறெண்ணூற்றே. (218)

மண்டூரச் செந்தூரம்.

மண்டூரந் தனையரைத்துக் கலையத்திட்டு
வாகுபெற மூடியதை மண்ணுஞ்செய்து
தொண்டுபடக் குழிப்புடமாய்ப் புதைத்துப்போடு
துன்பமற வொருமாத மானுல்நன்று
கண்டுலகு மானிடர்க்குக் கொடுத்துப்பாரு
கருதியதோர் நசலெல்லாங் கடலேபுக்கும்
பண்டுபட வுடனரைத்து உண்டாயானுற்
பலனுகும் யாகோபு பயின்றவாறே. (219)

உண்ணுமார்க்கம்.

கடுஞ்சுண்ண மூதியதைப் பீங்கானிட்டு
கதிர்பனியில் நானேந்து வைத்தெடுக்கப்
படுவேகந் தணிந்துவிடும் பெடித்துஉண்ணப்
பதிவான நசலெல்லாம் பறந்தேயோடும்
கொடுமையா யூதியுடன் கொடுத்தாயானுல்
கொடுஞ்சூருக்கு நாவுதடு வெந்துபோகும்
கடுமைபடக் கொடுக்காதே யென்றுசொன்னுர்
கருத்துறவே யாகோபு கருத்தாய்த்தானே. (220)

ரசப்பதங்கம்.

ரசபதங்கந் தனையெடுத்து உடனேயுண்டால்
ரவின்றுருடல் வெந்துவிடும் நசல்போகாது
நிசமாக ரசபதங்க மதையெடுத்து
நிலையான கல்வமிட்டு மூலைப்பாலாலே
வசமாக அரைத்துகதிர் ஒருநாளிட்டு
வாகாக உண்டிடவே நசலுந்தீரும்
பிசகாது இம்மொழிகள் பொய்போகாது
பிரபலமா யாகோபு பேசினுரே. (221)

லிங்கப் பற்பம்.

வன்னிபந்தம் தனையெடுத்து யெட்டிலொன்று
வண்மைபெறப் புகைநீரை விட்டரைத்து
நன்மைபெற உபயநாள் வைத்துஉண்ண
நலமாகும் நசலெல்லாங் கடலேபுக்கும்
சொன்னபடி பேதிநிற்கும் ஐயந்தன்னைத்
தூலத்துவிடு மிப்பொருளும் நிசமதாகும்
கன்னலறு மேகங்கள் வாய்வுபோகும்
கனிந்துரைத்தார் யாகோபு கருணைதானே. (222)

அப்பிரேகச்செந்தூரம்.

அப்பிரகம் பலமிடைசேர் வீரந்தன்னை
அரைத்துவிடு செயநீரா லொருசாமந்தான்
செப்பியிடு பெரும்புடமாய்ப் போட்டபின்பு
சிறக்கஎடு மறுபடியு மரைத்துப்போடு
மூப்புரத்தை யெரித்தாப்போல் நீறுமாகும்
மூனேர்த்துஎடு அரிதாரம் நாலிலொன்று
இப்படிக்குச் சேர்த்தரைத்துப் புடம்நாலிட்டால்
இதுமுருக்கம் பூப்போற்செந் தூரமாமே. (223)

முருக்கம்பூ நிறமாஞ்செந் தூரந்தன்னை
மூதலாகப் பணவிடைதான் தேனிலுண்ண
அருக்கனிறம் போலாகும் மேனிதேரனும்
அழிந்துபோம் நீரிழிவு மேகந்தானும்
பருக்களறுஞ் சிலோத்துமங்கள் பதறியோடும்
பகலோனைக் கண்டபனி போலவாகும்
திருக்கைவேல் கைப்பாணம் போலாமிந்தத்
திடமான அவிழ்தமிது செய்துபாரே. (224)

பரிவங்கச்சுண்ணம்

நல்லதங்க மோரிடையாங் காரிதோராம்
நாகமது காரியிடை குகையிலிட்டு
மெல்லவதை யுருக்கியுடை கல்வத்திட்டு
மேதினியில் கற்றுழஞ் சோற்றுலாட்டி
சொல்லரிய வில்லைபண்ணிக் கதிரில்வைத்துச்
சூடுமமாய் மாளமட்டும் புடமுமிட்டு
வல்லமையா பெடுத்துப்பார் வெண்மைபோலாம்
வண்மையுள்ள யாகோபு வசனித்தாரே. (225)

தாளகச் செந்தூரம்

உறிக்குமட லரிதாரம் ஓட்டிலிட்டு
உறுதிபெற அசமநீராற் சுருக்குச்சாமம்
குறித்துநீ யெடுத்துநிறு நாலிலொன்று
கூட்டிடுவாய் மூன்சுண்ணங் கல்வத்திட்டு
மூறிக்கவருங் கத்தாளை நீர்விட்டாட்டி
முடிவுபெற ரவிபதனிற் காயவைத்து
மறுத்துமிதைப் பெரியபுடம் மூன்றுபோட
வளமான செந்தூர மாகுந்தானே. (226)

போட்டெடுக்கச் செந்தூரம் பவளம்போலாம்
புகழான ரவிநூற்றி லொன்றுதாக்க
நீட்டுமுனே ஏமமாம் பணமவ்வீதம்
மீரான மண்டலமே யுண்ணநீயும்
வாட்டுகின்ற நோயெல்லாந் தவிடுபோலாம்
வகையான நரைதிரைக ளற்றுப்போகும்
கேட்டபிணி தெண்டனிடும் யாகோபுசொன்னார்
கிருபையுள்ள செந்தூரஞ் செய்துவுண்ணே. (227)

இந்தநூ லெழுநூறும் யிதைகுறுக்கி
இனியசுணணம் மூன்நூறு இயம்பினேம்யாம்
மூன்தச்செந் தூரம்மூன் நூறுசொன்னேன்
மூதன்மையாம வைதியமூன் நூறுசொன்னேன்
சிந்தைதனி லுணர்ந்துநசல் தீரவேண்டிச்
செப்பினேன் வாதசூத திரம்நானூறு
எந்தனுட நூல்பார்த்து வைத்தியஞ்செய்தால்
இதமான நசலெல்லாந் தீருநதானே. (228)

லிங்கப்பதங்கச் செந்தூரம்.

ஜாதிலிங்கம் பலமெடுத்துக் கலசத்திட்டு
சத்தெடுத்து யதில்நோரங் காரிநாகம்
ஊதியா யுருக்கியிடை வன்னியிட்டு
உற்றஅன்னத் தாலரைத்து வில்லைசெய்து
சோதகதிர் காயவைத்துக் கடத்திலிட்டுச்
சுருக்காக மூடிமண் சீலைசெய்து
ஓதியெரி கமலம்போல் மூன்றுசாமம்
உற்றுணர்ந்து யாம்காபு உரைசெய்தாரே. (229)

எரிக்காசம் மேலேறுஞ் சுரண்டிவாங்கி
இனிதான அடியில்நின்ற வில்லையோடே
செரிக்கஅரை முன்நீரா லொருநாளாட்டிச்
சித்திபெற முன்போலே யெரித்துவாங்கி
முரிக்கவிந்தப் படியைந்து தரமெரிக்க
மூவுலக மெய்க்கவது சிவந்துபோகும்
அரிக்குங்க ராகுமது கைபாகந்தான்
அடைவாக யாகோபு அறைந்தவாறே. (230)

குருசுச்செம்பு வேதை.

தூய்யானேழ் குருசுனுட செம்புமூன்று
தூக்கிலரணமும் உருகையிலை குருவொன்பீய
மெய்யாகக கருப்பாகும் மயமஞ்சாதது
மிகவுது மாணடிடைதாலை தங்கமாகும்
கையார வுதுமே செலவுசெய்து
கந்திரிதான் செய்துண்ணு அன்னந்தன்னே
பொய்யலல பாகமிது கண்டாயானால்
பொருள்வருகும் யாகோபு புகன்றிட்டாரே. (231)

மந்தாரகாசத்திற்கு.

சிருகின்ற மந்தார காசத்துக்குச்
சிறப்பான மருந்தொன்று சொல்லக்கேளு
காருகினற வசம்பதனை வாங்கிவந்து
நல்லதந்தி தோல்போகவி வருத்ததொன்று
பாருலகிற் பழச்சாறு விட்டரைத்துப்
பதியசுணடைக் காயளவு உணணவாந்தி
மூருகினற வயிறுதான் பேதியாகும்
மோர்ச்சாத முண்டிடவே நீருந்தானே. (232)

பூரமாத்திரை.

முத்திரச கற்பூரம் பலமும்ஈரு
முன்பாகப் புறம்வைத்து யிரதமொன்று
சத்தியது பலமொனறு கலவத்திட்டுத்
தாக்கியரை ரெணடுமொனறுய்க் கரியதாகும்
நித்தியமாய் முன்பூரஞ் சேர்த்தும்மனி
நிலவரமாய்ப பால்விட்டு அரைத்துக்காய்ந்து
சித்தியாய்ப் பணவிடைதான் அந்திசந்தி
தின்றிடவே மணடலததிற் சாந்தங்கேளே. (233)

கடிவிஷங்கள் குஷ்டமொடு கடலேபுக்கும்
கனிந்தசுரஞ் சண்ணிகுன்மங் காணுதோடும்
துடியுள்ள வாதபித்தஞ் சிலேற்பணங்கள்
துலைந்துவிடும மகோதரமும் வழலைதாகம்
படியுமிது சோகைகர மாலையாவும்
பருதிகண்ட பனிபோலாம் புளிப்புவிட்டு
இடிவிழுந்த பாவனைபோல் வியாதிதீரும்
இதமாக யாகோபு யியம்பினாரே. (234)

நசலான பேர்களுக்கு மூன்பூரத்தை
நாடியே அனுதினமு முண்ணச்சொல்லு
பிசகாத நசல்பிரியும் வன்னிபற்பம்
பேணியே மூன்றுதினஞ் சாப்பிட்டேதான்
வசமான பிற்பாடு ஸ்நானம்பண்ணி
வண்மைபெற லேகியங்கள் தயிலம்மூழ்கு
இசைவாகச் செய்தாக்காற் சுகமதாகி
இனிதான நசலெல்லாம் நீங்குந்தானே. (235)

நீங்குமே மண்டலத்தி லந்திசந்தி
நேராகப் பணிடைதான் தேனிற்கொண்டால்
பாங்குபெற மலக்சுட்டுஞ் சலக்கட்டுந்தான்
பரிவான பித்தவெட்டை பாரிலேகும்
ஓங்கியே புளிதள்ளி யுண்டுதேறு
உறுதிமிக மாப்பண்டந் தள்ளியுண்ணு
தாங்கிநிற்குங் கால்வாதந் தன்மைபாகும்
தாஷ்டிகமான் யாகோபு சாற்றுமவாறே. (236)

நீர்க்கட்டுக்கு.

தந்திவிரை தட்டியொரு சேர்தானென்று
தனித்தகிறு சட்டியிட்டுப் பாணிரெட்டி
மொந்தைவிடு எட்டொன்றுப்க் காய்ச்சிறுத்து
முப்பங்கி லொருபங்கு பொரிகாரத்தைச்
சந்ததமாய்ப் பொரித்திட்டே உண்டபேர்க்கு
சல்தியிலே நீரடைப்பு நீரெரிப்பு
எந்தவித மூந்நீரு மென்றுசொன்னார்
எரிகதிர்தான் கண்டபனி யியல்பதாமே. (237)

சயகாசத்திற்கு.

சாகரத்தின் மலந்தன்னைக் கல்வத்திட்டுத்
தாக்கியரைத் தூதிடவே சுண்ணமாகும்
வேகமறச் சோகிதனை முன்போலூதி
விதமாக ரெண்டுசுண்ண மிடையேசேர்த்துப்
பாகமா யுரைத்தன்னந் தன்னலாட்டிப்
பதியெடு கதிரில்வைத்துப் புடமுமூன்று
ஆகமதா யிட்டுத்துட் டிடையேகொள்ள
அருள்பெருகுஞ் சயகாச மேகுந்தானே. (238)

காமாலைக்கு.

சிறுநெல்லி தனைப்பிடுங்கி யுரலிலிட்டுச்
சிறுகயிடித் துப்பிழிந்து ஆவின்பாலைப்
பெருகவிடு படிகாரம் கொஞ்சமிட்டுப்
பேருலகி லுண்டுவர ஆறுகாளில்
உருகசப்பு உப்புடனே புளியுமாகா
உடலிற்கா மாலையெல்லாம் ஓடிப்போகும்
பருகியிட நீர்கசப்பு வெண்ணெய்யாகும்
பாருலகில் யாகோபு பயின்றவாறே. (239)

இருமலுக்குக் கசாயம்.

அருநெல்லி தான்றிக்கா யிஞ்சிசேராம்
அதையிடித்துச் சட்டியிட்டு யெட்டொன்றுக்கித்
திரிகடுகு பொடியிலிட்டுத் திரிகாட்கொள்ளத்
தீராத உஷ்ணமொடு கபமிளைப்பும்
விரிவாக யிருமலொடு கோழையெல்லாம்
வேகமறு முறுதியிந்தக் கியாழம்சேர்த்தி
பெரியவர்கள் சொன்னமுறை யிதுதப்பாது
பிரித்துயிதைச் செப்பினர்யா கோபுதானே. (240)

சீனக்காரச் சுண்ணம்.

மங்காத வெண்சீனம் பலந்தான்பத்து
வாங்கியதைப் பொரித்துமே கல்வத்திட்டு
தங்காத யெருக்கம்பால் தன்னிலேதான்
தக்கதொரு அண்டவெண் கருவும்சேராய்
சிங்கார மாகவிட்டுத் திரிநாள்வைத்துச்
சித்திபெற மூன்பொரித்த பொரியிலிட்டுப்
பங்காக அரைத்துவில்லை கதிரில்வைத்துப்
பத்தைந்து யெருவிலிடச் சுண்ணமாமே. (241)

தாளகச்சுண்ணம்.

கிடமினிய சுண்ணமதாஞ் சீனந்தானும்
சிறக்கயெடு எருக்கம்பால் விட்டுஆட்டி
மடலினிய அரிதாரம் மேலேகட்டி
மயமாகத் தானுமே கதிரில்வைத்துக்
கிடமிட்டுக் கிளிஞ்சிநீர் படியும்ரெண்டு
சேர்த்திபெற உள்வைத்துக் கிளிஞ்சிநீற்றை
படிரெண்டு யிட்டமுக்கி வைத்துத்தீயைப்
பார்த்தெரிக்கத் தாளகமும் நீறுந்தானே. (242)

பொய்யாது மென்வசனந் தாரம்நீற்றைப்
புகலரிய பணவிடைதான் மதுவிலுண்ண
மெய்யாகச் சயகாசம் இருமல்கோழை
மேனிகுரு வலையடைப்பு மூச்சுசோபம்
வையகத்தில் எலிகடிகள் ருத்திரவாய்வு
வரையிலே யெழுந்தகதிர் பனிபோலாகும்
செய்யஅரன் தானறிந்த பாகமாகுஞ்
செப்பினர் யாகோபு திறமைதானே. (243)

காந்தச்செந்தூரம்.

அங்குசமும் பலம்பத்து அயமும்நோய்
அதையரைத்து உலர்த்திநாற் புடமுமிட்டால்
இங்கிதமாய்ச் சிவந்துவிடும் சத்திசூதம்
இதமாக முன்கண்ட யிடைக்குப்பாதி
தங்காம லரைத்துமுன்னீர் தன்னைவிட்டுத்
தக்கதொரு கிடத்திலிட்டு மேலேமூடி
பங்கம்வரா தெரித்தெடுக்கச் சிவந்துபோகும்
பதிவான யாகோபு பலன்சொன்னரே. (244)

தந்திவிரை தட்டியெடு பலமுமெட்டு
தக்கதொரு மிளகுரெண்டு சோம்புரெண்டு
முந்தியெடு கடுக்காயும் பலமும்பெட்டு
முனிந்தநெல்லி முள்ளிமுன் னிடையேகூட்டிப்
பந்தமுடன் செந்தூரத் தாதிநீராற்
பதியவரை மையதுபோற் கதிரில்வைத்துச்
சுந்தரமாய்ப் பொடியாக்கி வைத்துக்கொள்ளச்
சுருதிதனே யாகோபு சொன்னர்தானே. (245)

மூவிரற்றாள் யெடுத்துவைத்து முன்செந்தூரம்
முத்தினதோர் இலந்தைவிரை யளவுவைத்து
தேவமுத மாகியதேன் குழைத்துநீயுஞ்
செப்பாமற் றின்றுவிடு ஆறுநாளில்
பாலினமுத் தெண்ணெய்யிட்டு முழுகச்சொல்லு
பாங்காகப் புளிதள்ளி மோர்ச்சோறுண்டால்
காலிவரும் நசலெல்லாந் தானேபோகும்
தாட்டிகவான் யாகோபு தன்மைதானே. (246)

பித்தவெட்டை பாண்டுமகோ தரமூர்தீரும்
பின்புதான் சொரிசிரங்கு மேகவாய்வு
குத்தலிட்ட சூலைமுதல் வெட்டைபோகும்
கூறியது யிதின்குணங்கள் கொள்கைமெத்த
நித்தம்நித்த மயக்குகின்ற பித்தந்தானும்
நீங்குமென்று யாகோபு சொன்னநீதி
புத்தியுள்ள ரபிமார்கள் சொல்லக்கேட்டுப்
புவியதனிலிந்நூலை புகன்றிட்டேனே. (247)

கண்டர்சத்து.

கண்டரவி பலமொன்று தகடுதட்டிக்
கனிந்துயிடை தேவிதன்னைக் கல்வத்திட்டு
பண்டுஅரை பாணியினுற் சாமமாட்டிப்
புக்குவமாய் மேற்பூசிக் கதிரில்வைத்துத்
தொண்டுபடப் புடமுமிட்டு வலுவதாகத்
தொக்கயெடு சத்தாக யிருக்கும்பாரு
வண்டிலது கால்சேர்த்து அரைத்தூருக்க
வகையாக வெள்ளிபொன்போ லாடுந்தானே. (248)

அயச்செம்பு.

அடுத்துமே சத்துகின்ற யிடைக்குத்தானும்
அரபொடியைக் கல்வத்தி லிட்டுக்கொண்டு
தொடுத்தரைத்துக் குகையிலிட்டு உருக்கச்சத்தாம்
தொல்லுலகி லயச்செம்பாம் செம்பெடுக்க
விடுத்தபெரி யோர்கள்தான் மயங்குவார்கள்
வேதாந்த முடிவாகும் ரூபிதன்னைத்
தடுத்துயெடு பாதியிட்டு அரைஅன்னத்தால்
தாக்கியே யிருசாமங் கதிரில்வையே. (249)

பானுவினில் வைத்தெடுத்துப் புடமூன்றிட்டுப்
பத்தியெடு சிவப்பாகுஞ் சிகப்புக்காணில்
வானுலகிற் பறந்தோடா வண்டில்சேர்த்து
வகையாக அரைத்துகுகை தன்னிலிட்டுத்
தானுலவ உருக்கிடவே செம்புகாணும்
தனிவான செம்பினுட நிறத்தையானும்
தேனுலவுங் கண்ணினுற் பார்க்கப்போகா
திடமாக யாகோபு செப்பினாரே. (250)

பஞ்சமித்திரம்.

அயச்செம்பு தனையெடுத்துக் குகையிலிட்டு
ஆற்றுநீர் போலுருக்கு நெய்தேன்நேராய்
நயம்படவே நல்லெண்ணெய் யிலுப்பநெய்யும்
நாடியெடு தேங்காய்நெய் சரிகேர்பாகம்
மயம்படவே சேர்த்தஞ்ஞன்ரூய் வைத்துக்கொண்டு
மகிமைபெற்ற செம்புருக்கித் தரமும்பத்து
செயம்படவே உருக்கியதை சாய்க்கவென்று
செப்பினர் யாகோபு விளங்கத்தானே. (251)

அயச்செம்புச் செந்தூரம்.

கோடிகதிர் போலாகுஞ் செம்புதன்னைக்
கூறியெடு மதியெட்டுக் கிரண்டுதாக்க
பாடியே பொன்னுகும் பொன்னினுமே
பாய்ச்சிவிடு யேமமொன்று பரிந்துருக்கி
ஆடியெடு யேமமாம் பொன்னைத்தானும்
அடவாகக் கடையில்வித்துச் செலவுசெய்து
தேடியே நபிமாரைத் துதித்துக்கொண்டு
திறமைபெற யாகோபு சொன்னவாறே. (252)

பறந்த அயச்செம்பெடுத்து யிடையேதங்கம்
பார்த்துருக்கித் தகடடித்துத் தேவிவிந்து
குறந்தபடி பாதிசித்த ரூபிசேர்த்துத்
தோய்ந்தரைக்கச் செந்தூரத் தாதிவிட்டுக்
கறந்தரைத்து வழித்துஅந்தத் தகட்டிற்பூசிக்
காயவைத்து யெடுக்கயிது சுருக்கம்பாரு
அறந்தழைக்க மூன்றுபுடம் போடச்செம்பாம்
ஆதிமதி யிருபதுக்கு ஒன்றுதாக்கே. (253)

தாக்கியெடு மாத்தெட்டு ஆணிக்கொக்கும்
தாண்டவமாம் நபிமார்கள் சொன்னநீதி
பாக்கியது அயச்செம்பு யிருந்துதானுற்
பாதையிதில் பிரிவுமெத்தப் பலனைக்காண்பாய்
வாக்கினிய யாகோபு சொன்னநீதி
வையகத்தில் சுத்தரச வாதிகாண்பான்
போக்கில்லா வாதிகள்தான் காணுனென்று
புகட்டினர் பிவியிலுள்ளோர் பிழைக்கத்தானே. (254)

வெட்டைக்கு மருந்து.

சிந்திருணி யிலையதனை யுரலிலிட்டுத்
திறமாக யிடித்துச்சார் பிழிந்துகொண்டு
வந்திடுஞ்சா றெள்ளெண்ணெய் யிடையேயிட்டு
வண்மைபெறக் கைசேரை கொண்டுநன்றாய்
முந்தநா ளாறுதனில் புளிப்புக்கைப்பு
மூனிவாகத் தள்ளிவிடு வெகுநாள்வெட்டை
சந்தமாய்த் தீர்ந்துநீர் சுருக்குப்போகும்
சாற்றினார் யாகோபு தனமைதானே. (255)

சூதகவலி குன்மத்திற்கு.

வச்சிரமூ மோதகமும் புரசங்கொட்டை
வகைக்கெடுநீ பலம்நாலு நிம்பயீர்க்கு
பச்சையா மிடித்துபுதச் சட்டியிட்டு
பாணிபடி யிட்டுமெட் டொன்றுய்க்காய்ச்சி
உச்சிதமாய்ப் பூநீர்துட் டிடைபோட்டுண்ண
உதரத்தில் வலிகுன்மம கிருமிவாந்தி
நிச்சயமாய்ப் பருதிகண்ட பனிபோலாகும்
நேர்மையுள்ள யாகோபு நிசஞ்சொன்னேரே. (256)

அப்பரகப்பதங்கம்.

வச்சிரத்தின் அப்பிரகம் பலமும்நாலு
வைத்திடுநீ கல்வமிட்டு வீரங்காலாம்
உச்சிதமாய்ப் பாணிவிட் டரைக்கவெண்ணெய்
உறுதிபெற முச்சாமஞ் சென்றபின்பு
முச்சிமடக் கதிரில்வைத்து மூடிநன்றாய்
மூனையவிட்டு இடத்திலிட்டு மேலேமூடு
தச்செயலாய் சீலைமண்தான் மூன்றுசெய்து
தாக்கிமீய அடுப்பினில்வைத் தெரித்துவாங்கே. (257)

அடுப்பில்வைத்து யெரிசாமஞ் சென்றபின்பு
அதையெடுத்துப் பிரித்துப்பார் பதங்கமாகும்
எடுத்துவழி பணவீதம் வெல்லந்தன்னில்
இட்டிடவே திரிகாளில் பேதிசோகை
அடுத்துவருங் காமாலை பாண்டுகுன்மம்
அழிமபான மகோதரமும் சூலரோகம்
எடுத்துவிடுஞ் சூதகத்தின் வாய்வுமந்தம்
இதமாகும யாகோபு இயம்பினாரே. (258)

உதரத்திற் கட்டிநின்ற உதிரந்தன்னை
உறுதியா யுடைப்பிக்கும் ஆம்பல்கட்டி
நிதமுண்ணும் அன்னத்தைச் செரிக்கப்பண்ணும்
நிலையில்லா தோடிவிடும் ருத்ரவாப்வு
பதகரத்தின் நரம்பிறுகும் முறுக்குமேறும்
பசுமைதரு முடல்வலுக்கும் சயமும்போகும்
சதமும்இதை அந்திசந்தி உண்ணச்சொன்னர்
தவறுமல் யாகோபு சாற்றினாரே. (259)

அப்பிரகச் செந்தூரம்.

பதங்கத்தைச் செந்தூரம் பண்ணிஉண்ண
பதிவாகும் நசலெல்லாங் கடலேபுக்கும்
நிதமுண்ணக் காயசித்தி நிலைக்கும்பாரு
நிச்சயமாய் நரைதிரைக ளற்றுப்போகும்
மதம்பிறக்கும் வலியில்நின் றுழலவேண்டாம்
மாயையது சுழற்றினால் வலுத்துக்கொல்லும்
விதங்களினி வீரச்செந் தூரஞ்சொல்ல
வீற்றிருந்து யாகோபு விரும்பினாரே- (260)

அயவீரச் செந்தூரம்.

புகைநீரை அரைபொடியி லூற்றிநன்றாய்
பொங்கியே புகையுமதைக் கல்வத்திட்டு
துகையாக வீரங்கால் விட்டரைத்துத்
தூக்கியெடு வில்லைகதிர் காயவைத்து
அகமிழ ஓட்டிலிட்டுப் புடமுமிட்டால்
ஆகுமது செந்தூர முருக்கம்பூப்போல்
பகையில்லா மூன்பதங்கந்தனை நேர்கூட்டி
பாய்ச்சியிதைக் கல்வத்தில் பண்பாயாட்டே. (261)

ஆட்டுகையான் பாணியினற் சாமந்தானும்
அதைக்கதிரிற் காயவைத்துக் குடிக்கையிட்டு
கூட்டுபண விடைவீரஞ் செந்தூரத்தைக்
கொடுக்கவே கிராணிதனுர் வாதபித்தம்
மூட்டியதோர் சோகைமுதல் அண்டவாதம்
மூர்க்கமுள்ள வெட்டையொடு குறைநோய்குட்டம்
தாட்டிகமாய் மூலமுதற் போகுமென்று
தவறுமல் யாகோபு சாற்றினாரே. (262)

சூதகவாய்வுக்கு எண்ணெய்.

அப்பாகற் பூரவல்லி வெங்காயச்சா
றறுநாழி முத்தெண்ணெய் படிதானென்று
செப்பமுடன் சீரகங்காற் பலமும்போட்டுச்
சேர்த்துயெண்ணெய் தனிலிட்டுக் காய்ச்சிநன்றாய்
ஒப்பாக யெட்டுநா ளுண்டாயானால்
உள்மூல வலிகடுப்புச் சீதரெத்தம்
தப்பாமல் நிற்குமிதற் கரண்டிகொண்டால்
சாந்தமாம் சூதகத்தின் தவரும்போமே. (263)

ரணங்களுக்குச் சீந்திவெண்ணெய்

சீந்திவேர் பலம்பத்து சருணைகொண்டு
சிறந்தபழச் சாற்றிலரை யெண்ணெய்காழி
காந்திபட யிதைத்தானும் வைக்கும்போது
காசுகட்டிப் பலமொன்று பொடித்துத்தூவி
பாந்தமுடன் கரண்டியெண்ணெய் பத்துகாட்கொள்
பறக்குமே இரத்திப்புண் உப்பாகாது
வந்திடவே ஆறுத ரணங்கள்தானும்
இருந்தயிடந் தெரியாம லேகுந்தானே. (264)

வாதத்திற்குகருங்கோழித்தயிலம்

குக்குடந்தான் மூட்டையிட்ட கோழியொன்று
குணமாகச் சிகைபிடுங்கிப் குடலேப்போக்கி
இக்கிடவே உரலிலிட்டுக் காயஞ்சுக்கு
இதமான பரங்கியுட பட்டையுள்ளி
தக்கிடவே வகையொன்று பலங்காலாகத்
தாட்டிகம தாயிடித்து மூடாவிலிட்டுச்
சிக்கெனவே பாணிபடி பத்துவிட்டுச்
செயம்பெறவே யெட்டொன்றுக் காச்சிடாயே. ()

காச்சியதில் நிம்பயெண்ணெய் இடையேயிட்டுக்
கனமாக நீர்சுண்ட யெரித்துயெண்ணெய்
தாச்சியில்லா தொருகரண்டி யெட்டுநாளுந்
தானருந்த வாதமெல்லாங் கடலேபுக்கும்
பாச்சிடவே சூலைபதி னெட்டும் போகும்
பகல்கண்ட பனிபோலே பறந்துபோகும்
வாச்சிட்டுச் சொல்லாதே வயித்தியத்தை
வடிவாகச் செய்திடவே வாழ்வுமாமே. (266)

மேகத்துக்கு குமரி யெண்ணெய்.

கத்தாழஞ் சாறுபடி ரெண்டினேடே
கனியா குமரிகெந்தி பலமுமெட்டு
சித்தாம ணக்கினெண்ணெய் ரெட்டிகூட்டித்
திரண்டபத மாய்வடித்துக் கொள்வீராகில்
பத்தோடு பதினெண்ரு மேகமெல்லாம்
பானுவைதான் கண்டபனி யதுபோலேகும்
இத்தலத்தில் அரிகிரந்தி மேகமெல்லாம்
இடம்விட்டுக் குடிபோமென் றியம்பினாரே. 267)

பித்தவெட்டை நீரிழிவுக்குகிருதம்.

கனியான ரல்தாளி யிருபதாகும்
காராவின் நெய்மீதன் சக்கரையுஞ்சேரு
இனிதான சீரகமும் பலமுமெட்டு
இடித்திட்ட சூரணமுங் கலந்தேதகாச்சி
தினங்கரண்டி யிருநேரங் கொண்டாயானால்
தீர்க்கமுடன் நீரழிவு பித்தவெட்டை
கனமான பயித்தியத்தின் விகாரம்போகும்
கைபாகங் கண்டறிந்து கழறினேமே. (268)

வாழை. மா. பலாச்சூரணம்.

மூப்பழத்தின் புறத்தோலும் பலமும்நாலு
முதுசம்பா நெற்பொரியும் பலமும்நாலு
ஒப்பறவாய்க காயவிட்டு யிடித்துவாங்கி
உண்மையாய் வடிகட்டிச் சூரணத்தைச்
செப்பமாயனுப்பானத் தூடனேகொள்ளத்
தீரிருமல் வாந்திபித்தங் கபங்கள்வாய்நீர்
கொப்பெனவே குணமாகும் மீதகம்புஷ்டி
குணமாகும் இதையெவர்க்குங் கூறேண்ணுதே. (269)

வாதசூலைக்கு மாத்திரை.

காயமொடு தந்திதிரி கடுகுரோணி
கனமாக வகைக்குஒரு நிறையதாக
வாயில்பெரு முருங்கையின்தோல் சாற்றுலரட்டி
வளம்பெறவே காசிடைதா னுண்ணச்சொல்லு
நோயகலு மனுப்பானந் தன்னிலீய
தூலமேக ரோகமுதல் சூலைவாய்வு
தாயமுள்ள வேசிமையல் கொண்டோன்பாலில்
தனம்போல வாதமையஞ் சரியுந்தானே. (270)

கலிமான்கொம்புப்பற்பம்.

கலங்கொம்பைக் காணியிலை கவசங்கட்டிக்
கனபுடமா யிட்டெடுத்துக் கனிந்துட்கொள்ள
ஜலம்பெருகு மேகமுதல் செத்தபித்தஞ்
சத்திவலி குன்மம்நெஞ் செரிவுகாந்தல்
உலர்ந்துடல் கருகும்அக் கினியின்மந்தம்
உட்காய்ச்சல் நீரெரிப்பு விக்கில்செத்தம்
தலங்குபச்சைக் கற்பூரஞ் சேர்த்தேஉண்ணச்
சகலவினை தானகன்று போகுந்தானே. (271)

வெண்குந்தரிக்கபற்பம்

வெண்குந்திச் சுண்ணம்பு வடிதான்கட்டி
வெளிறுமந்த நீரிலிட்டுக் குழம்பதாக்கி
வண்ணனுக் கிட்டதுனி பதனிற்றேய்த்து
மயங்காமற் காய்ந்தபின் புகலில்மூடி
கண்ணைப் புடம்போட்டு மெடுத்துக்கொண்டு
காலிபசு நெய்யுடனே கலந்துட்கொண்டால்
புண்ணைகும் சிறுநீரு நீருகட்டல்
போக்கிவிக்கு மேகமினிப் போகுந்தானே. (272)

கள்ளிப்புக் கிரந்திக்கு.

கள்ளிப்புக் கிரந்திமெய்யில் வந்துதானுல்
கதிரவன்பேர் கொண்டயிலை தனைப்பிடுங்கிக்
கிள்ளித்தான் நாகவல்லி யிலையுஞ்சேர்த்து
கிருபையுடன் மண்டலந்தான் கொண்டீரானுல்
உள்ளிபுழுப் போலிருந்த கிரந்திநீங்கி
உதையாதி சூரியன்போ லொளிருந்தேகம்
விள்ளத்தான் போகாது யெவர்க்குமித்தை
மெய்யான உபதேசம் விளம்பினேமே. (273)

பித்தளிவுக்குச் சூரணம்.

சீரகமும் பலம்நாலு பரங்கிப்பட்டை
சோரையாம் மூசுமூசுக்கை வேரின்சூர்ணம்
நேரிதுவாஞ் சக்கரையாம் சமமாய்ச்சேர்த்து
நெய்தேனில் மண்டலமே கொண்டாயானுல்
மாரெரிவு கபவாதம் பித்தசந்தாகம்
மயக்கமொடு குடல்பிரட்டல் வாந்திமூர்ச்சை
ஆரமூட லெரிவுசூன்ம மனேகரோகம்
ஐயமிந்தக் குணங்களெல்லா மகலுந்தானே. (274)

கண்வியாதிக்கு.

குக்குடத்தின் அண்டமதை அவித்தோட்டைக்
கொட்டிதட்டிப் பிளந்ததற்குள் கருவைவாங்கி
புக்கியதில் கற்கண்டு பொடித்துக்கூட்டிப்
புனலிரங்கும் குறடதனில் பிடித்துவாட்டக்
கக்கியிடும் யிந்நீரைப் பதனஞ்செய்து
கண்ணிலிடநோய் தொண்ணூற் றுனும்நீங்கும்
பக்குவமாஞ் சித்தியிது யாகோப்சொன்ன
பண்டிதமா மிந்நீரு பலிதமாமே. (275)

கிருமிக்குக்கிஷாயம்.

முத்தினதோர் புரசம்விரை பேய்ப்பீர்க்குந்தான்
மூப்பிரண்டை யோமமிது சமனதாகக்
குத்தியே யிருநாழி தண்ணீர்விட்டுக்
கூரெட்டி லொன்றுகக் காய்ச்சிஉண்ண
பத்தினின்ற கிருமியெல்லாங் கூடிகூடாய்ப்
பரிந்துவிழு மாம்பருப்புத் திண்ணநீங்கும்
சுத்தமாய் முன்னோர்க ளுரைத்தவார்த்தை
சொன்னதிது கைகண்ட தொழிலுமாமே. (276)

பெரும்பாடு யெலும்புருக்கிநோய்க்கு.

சக்கரையும் பலம்பத்து பாகதாக்கிச்
சமைத்ததிலே அஞ்சுபலம் பரங்கிப்பட்டை
மிக்கவிதைச் சூரணித்துத் தூவிக்கிண்டி
மெழுகுபத மாயெடுத்து உண்டாயானால்
தக்கபெரும் பாடுவெட்டை யெலும்புருக்கித்
தங்காது பத்தியமோ உப்பில்லாமல்
குக்குடத்தி னண்டமள வேழுநாளுங்
கொள்ளநல முண்மையிது கூறினாரே. (277)

மலட்டுக்கு பச்சைவெட்டுமாத்திரை

சூதமொடு கெந்தம்வெண் காரம்நேரே
தூக்கியரை தேள்கொடுக்கு குமரிப்பாலும்
வீதமதை வொவ்வொருநாளரைத்துக்கூட்டி
வியாதியறிந் தனுப்பான வித்தத்திலீய
வாதமுதல் கனல்ரோகம் ருத்ரவாய்வு
மார்புவலி குன்மவலி சூலையாறும்
சீதமதைக் கொண்டமந் தாரகாசம்
செல்லுமது யிம்மருந்தால் தீருந்தானே. (278)

கெற்பத்திற்கு யெண்ணெய்.

தட்டியெடு கொம்மட்டி வித்தெடுத்துத்
தாஷ்டிகமாய்த் தந்திவிரை யிடையேசேர்த்து
முட்டிதனி லடைத்துநின்று தூரிற்பொத்து
முக்கியமாய்க் குழித்தைலம் வாங்கிக்கொண்டு
சட்டமாய்ப்பே திக்குக்கா சிடையேவிட்டுச்
சரியிடையாய் மஞ்சளது கலந்துகொண்டு
வட்டவளை மாதவிடாய் தன்னிலுண்ண
வையகத்திற் பாலனது உண்டாம்பாரே. (279)

அரிதாரத்தைலம்.

உரிக்குமட லரிதாரஞ் சுண்ணம்புக்குள்
ஒருமூன்று சாமமதை நீத்திவாங்கி
முருக்கிலையுங் கரிசாலைப் பழச்சார்விட்டு
மூன்மெழுகு போலரைத்துத் தணியிலூட்டி
அருக்கனதிற் காய்ந்துசுடர்த் தைலம்வாங்கி
அதையெடுத்துச் சீசாவி லடைத்துக்கொண்டு
சுருக்கஅரைப் பணவீதந் கொடுக்கவேதான்
சுவாசமொடு மந்தார காசம்போமே. (280)

உஷ்ணவாய்வுக்கு மருந்து.

சிறுகீரை வேர்தூக்குப் பதக்குப்பாலுஞ்
சேர்த்தரைத்துப் படியாவின் நெய்யைவிட்டு
அரைத்தூக்குச் சர்க்கரையு மிளகுஞ்சேரு
அடுப்பினிலே வைத்ததோப் பதமாய்க்காய்ச்சி
மறக்காம லரைப்பலமாய் ஒருபோதுண்ண
மகாவுஷ்ண பயித்தியத்தின் வாதம்நீங்கிச்
சுருக்குடனே வாதநீ ரிறங்கிமேகம்
சுகமாகுங் கைகண்ட தொழிலுமாமே. (281)

இசிவுக்கு.

உள்ளியுடன் மிளகுசுக்குக் கல்லுப்போடு
ஒருநூறு வெற்றிலையின் காம்புங்கூட்டி
கள்ளியின்சார் விட்டரைத்துக் காய்ந்துவேப்பங்
காயளவு யிருகோரம் அஞ்சுநாளும்
கொள்ளுமிதை யிருபுறமு மிழுத்துக்கொண்டு
குத்திலிட்டு அடிவயிறு அண்டம்வீங்கில்
உள்ளங்கால் வலிவீக்கம் வாங்குமென்று
உண்ணவர்கள் சொல்வார்கள் உண்மைதானே. (282)

அண்டவாய்வுக்கு மெழுகு.

அதிமதுரம் செண்பகப்பூ கழற்சிவேரும்
அதின்கொழுந்து பதின்பருப்பு கோஷ்டம்ஏலம்
பதிலவங்கம் முடக்கொத்தான் கொழுந்தும்பட்டை
படிமீதி லிவையெல்லாந் தேங்காய்ப்பாலில்
மெதுவுபட அரைத்ததனைக் குழம்பதாக்கி
மெதுவாகத் தின்றுயிரு நேரந்தானும்
விதனம்விடும் மண்டலத்தில் வாதம்போகும்
மெய்யிதுண்மை முன்னோர்சொல் வீண்போகாதே.

அந்தரவாய்வுக்கு.

கல்லுப்பு யிந்துப்பு மிளகுசுக்கு
கமுகுசவுக் காரம்வெங் காரங்காயம்
கல்லஅரை பொடிகடுகு ரோகணீயும்
கவிலுவேன் பலமாகும் கர்லத்தொன்று
சொல்லுமினி மாவுலிங்கம் பட்டைகூட்டிச்
சூரணித்து நாரத்தங் காய்க்குள்ளிட்டு
கல்லினிய பாண்டத்திற் சதுரக்கள்ளி
நருக்கியிட்டு வெள்ளாட்டின் நீரைவாரே. (284)

ஜலமதிலே வார்த்திட்டு முன்னேசொன்ன
சரக்கிட்டுக் காயவைத்துச் சட்டிமூடி
கலமெதுவா யிருசாம மெரித்துவாங்கி
நாரத்தங் காய்க்குள்வைத்த சரக்கிற்பாதி
பலமதுவா யுலரவைத்து அரைத்தொன்றுக்கிப்
பக்குவம தாகவொரு நேரங்கொள்ள
உலகதனி லுள்ள அண்ட வாதமெல்லாம்
ஓடிவிடும் அந்திரவட்ட முண்மைதானே. (285)

அண்டவாதத்திற்கு.

அஞ்செண்ணெய் படிநாழி மணத்தக்காளி
அதின்சாறு படிகலந்து அனல்மேலிட்டு
இஞ்சியதில் மரமஞ்சள் கரப்பன்பட்டை
ஈரரையாம் பலமிடித்துத் தூவிக்காய்ச்சி
கஞ்சுதோ லகற்றியுள்ளி படியுமிட்டு
நன்றுகச் சிவந்தபத மிறக்கியுண்ண
மிஞ்சுமிரு பீஜஅண்ட வாதஞ்சூலை
மெய்யைவிட்டு அசலுமென விளம்புவாயே. (286

குடல்வாதம் அண்டவாதத்திற்கு.

விளக்கெண்ணெய் படியொன்று சாரணையின்சாறு
விட்டதிலே படிரெண்டு கலந்துகாய்ச்சி
இளக்கமிலாப் பெருங்காயம் பலமோரெண்டு
இந்துப்புப் பலம்ரெண்டு பொடித்துத்தூவி
தளக்கமிலாப் பதம்பார்த்து வடித்துக்கொண்டு
சண்டிஅந்திர அண்டத்தின் வாதசூலை
உளத்தியிடுங் குடல்வாதம் வலியுந்தீரும்
உண்மையென்று முன்னோர்கள் மொழிந்ததாமே. ()

அண்டவீக்கத்திற்கு.

முடக்கத்தான் வேருபட்டை மிளகுபூண்டு
மூன்துவிளாங் கெண்ணெய்தனிற் காய்ச்சியுண்ண
இடக்கத்தான் விரைவாத மகலுமின்னம்
இபம்பக்கேள் நுணைவின்மேவர் காயவைத்து
மடக்கத்தான் சூரணித்து வைத்துக்கொண்டு
வளர்கையாந் தகரைசெருப் படியின்சாற்றில்
கொடுக்கத்தான் இருகழஞ்சிச் சூரணத்தைக்
கொள்சூலை விரைவாதங் குணமதாமே. (288)

அண்டவாதத்திற்குப்புகை.

புங்கம்விரைக் கழற்பருப்பு யீச்சங்கொட்டை
பொடிசெய்து புளிமரத்தின் பிராணிகட்டு
அங்கிதனைச் சட்டியிலே யெடுத்துக்கொஞ்சம்
அதிலிடுமுன் சூரணத்தைப் புகையைவீசத்
தங்குகின்ற அண்டத்தில் பிடித்தாயாஞல்
தளர்ந்திடுமே அண்டத்தின் வீக்கம்வாடி
தொங்குகின்ற வலிநீங்கும் மூன்றாளில்
தூலந்துவிடும் விரைவாதஞ் சூட்டிப்பாரே. (289)

அண்டவீக்கத்திற்கு கட்டு.

சேராதின் கொட்டைபலம் மஞ்சள்கூட்டிச்
செழிப்புடனே யிடித்துதமதன் மெழுகுசேரே
வாராகக் கூட்டியிடி மெழுகுபோலாம்
வலமிடமாய் காலிற்கட் டிடவேவாய்வு
வீரமுள்ள கட்டின்காற் பிடிப்புநீங்கும்
விதமான வீக்கமுடன் முழங்காற்கட்டி
பாரமுள்ள திரிநாளில் தீர்ந்துபோகும்
புருஷசண்ட பனிபோலே பறக்குந்தானே. (290)

மலசலம் அடைப்புக்கு.

சுன்னமிட்டுப் பூவழுக்கு வாங்கக்கேளு
சுத்தமுடன் பாணியிட்டுக் கரைதிருத்து
நன்னயமாய்த் தெளிவிருத்திக் காய்ச்சவுப்பாம்
காரியர்க்கு மாதவிடாய் கண்டபோது
இன்னிலத்தில் நீர்க்கட்டு மலபேதங்கள்
இருந்திடுகி லிதைநெய்யி லுண்ணத்தீரும்
கன்னல்மொழி யுமையாள்தான் சொன்னகர்மை
காகினியில் வயித்தியத்தைக் கண்டுபாரே. (291)

பச்சைவெட்டுக் காந்தச்செந்தூரம்.

தாம்புரமுங் காந்தமதைப் பொடியதாக்கிச்
சமன்சேர்த்து வாய்குவிந்த கலயத்தேத்தி
நீம்பநிம்பப் பழச்சாறு மிதக்கவிட்டு
நீக்கமில்லாச் சில்லிட்டுச் சீலைசெய்து
மேம்படவெல் லிருகலத்தில் நடுவேயிட்டு
மெத்திட்டுச் சாலுக்குள் நிழலில்வைத்துப்
போம்படியே மண்டலம்பின னெடுத்துப்பார்க்கப்
பூட்டுப்போற் செந்தூரம் பூப்போலாமே. (292)

ஆமிதனைப் பொடித்துநன்றாய்ப் பதனஞ்செய்து
அனுப்பான விதத்தினிலே யீப்நாயாலல்
போம்வினைக ளற்றுவிடும் வாதசூல
பொல்லாத குன்மமெட்டும் வயிற்றுநோயும்
தீமையற பீஷமண்ட வாதவீக்கஞ்
சேருகுடல் வாதமெல்லாங்கடந்துபோகும்
மாழுனிவ ரெடுத்துரைத்த செந்தூரத்தை
வழுத்தினேன் யாகோபு வைத்துப்பாரே. (293)

அண்டவாய்வுக்கு.

கொடுவேலி மூருங்கப்பட்டை முதியார்கூந்தல்
கூறுபலங் கழற்பருப்பு புங்கின்வித்து
இடுகருங்கொள் ளெட்டிப்பலந் தினைபைத்தானும்
இருகாழி சூரணித்து வெண்பசுகாக்கி
முடியான பனமுபமோர் நாழிதன்னில்
தூரிதமொரு பங்குபிட்டுக் கூழாய்க்காய்ச்சி
அடுத்தடுத்து எட்டுதினங் கொண்டாயாலல்
அண்டத்தின் வாய்வுவலி நீங்கிப்போமே. (294)

அண்டவீக்கத்திற்குப்பத்து.

போமிதற்கு வீக்கம்மேற் பூச்சுக்கேளு
புகழ்நிம்பப் பழச்சாற்றில் சுக்கையாட்டி
காமிரின் கீழ் அண்டத்திற் பூசியேதான்
சமைல்லா அனல்காட்டு ரெண்டுசாமம்
திமையிலா வலிவீக்கம் வத்திவாடி
திறப்படுமே முன்பதுபோல் திரும்பிவாட்டு
நாமிதுவே கண்டபடி சொன்னேனுண்மை
நாட்டிலே யெவர்க்குமிதை நவிலொண்ணாதே. (295)

சேங்கொட்டைத் தைலம்.

முத்தினதோர் பால்நிறைந்த சேராங்கொட்டை
மூன்றியதற்றி தூக்குரெண்டு நொருக்கிச்சாலில்
எத்தியநீர் கலப்விட்டு நாலிலொன்றாய்
இரக்கிட்டுக் காய்ச்சியதை வடித்துக்கொண்டு
வத்தவே முன்போலே காய்ச்சிப்பின்பு
வடியதனைப் பாண்டத்தி லெடுத்திநின்ற
சுத்தியதோர் தைலமெல்லாங் கரண்டியாலே
சுரண்டிடுமுன் கிஷாயமதிற் கலக்கிச்சேரே. (296)

மேககுஷ்டத்திற்கு சேங்கொட்டை லேகியம்.

பாக்கதுபோற் பழுத்தகெல்லிக் காயின்சாறு
படியெட்டுக் கூவிளத்தின் வேர்தோல்தாமும்
தூக்கிரெண்டு நறுக்கியிரு மரக்கால்கியாழம்
சுகமாக ஆம்போது வெல்லந்தானும்
நோக்கமுடன் தூறுபலம் கரைத்துக்கூட்டி
நுணுக்கமாய்ப் பாகுசெய்து காட்டுச்சீரம்
காக்கவே கார்போகம் வாளுழுவை
கருஞ்சீர மோமங்குரோ சாணிதானே. (297)

தானியுடன் திரிகடுகு திரிபலையும்முன்று
தாணியடா துய்யுமந்தக் கிழங்குதானும்
கானகத்தில் புங்கம்பூ வீழிப்பட்டை
காய்ந்தவகை பலமேழிற் பாதிகூட்டி
ஆனதினிப் பரங்கிப்பட்டை தூக்குஒன்று
அன்பாகச் சூரணத்துப் பாகிற்றாவி
ஊனமிலா ஆவின்நெய் படிதான்ரெண்டு
கருக்கியிட்டுக் கிளரியதைக் கலிபத்தேதே. (298)

ஏத்தியிதை நல்லதொரு சுபதினத்தில்
இருநேரம் மண்டலந்தான் புளிநல்லெண்ணெய்
மாத்திவிடு ஆறுக இரணம்போகம்
வாதமொடு கிரந்திசொரி சிரங்குபுண்ணும்
ஆத்திவிடுங் சடிவிஷங்கள் குட்டமொடு
ஆறுக கைக்குத்தல் மேகவுறல்
பூத்துடலீன கடித்ததிமிர் வெடித்தபுத்தை
போக்கிவிக்குந் தளிர்போல்மெய் யாகும்பாரே. (299)

உண்ணலரு மண்டத்திற் கடிகள் தீரும்
ஊறல்பெரு மேகவித வூண்கள்புத்து
புண்ணதுகள் மண்டலமோ ரெண்டில்நீங்கும்
பொய்யாது குட்டங்கள் ரெண்டிலப்பா
திண்ணவீதில் லோகமொடு நாகங்கூட்டித்
தீர்ந்தவிடுஞ் சக்கரமாய்த் தாரஞ்சூதம்
நண்ணுதழாய் பற்பமே கூடிற்றூளல்
நசவுடம்பு தங்கம்போல் நன்மையாமே (300)

மூத்திரவெரிவுக்கு லேகியம்.

கார்ப்பாசிக் கொட்டையின்பால் குருணிகொண்டு
கன்னலெனுஞ் சக்கரையுஞ் சேருகூட்டி
நேர்ப்பாக அனலிலிட்டுப் பாகதாக்கி
நெய்காழி நல்லெண்ணெய் காழிரெண்டும்
சேர்ப்பாக மெழுகுபத மாக்கிக்கொண்டு
தினங்கரண்டி கடுகெண்ணெய் தின்றுயானல்
நேர்ப்பாகும் வெகுமூத்திரம் யெரிவுதாகம்
நிற்குமென முன்னோர்கள் நிகழ்த்தினாரே. (301)

நீரழிவுக்குக் கதலிலேகியம்.

ரஸ்தாளிப் பழமூவேழ் தோலுபோக்கி
நாட்டினிய சக்கரைசேர் நெய்யும்காழி
மஸ்தான கசகசா பலமோபத்து
மையாக அரைத்தொன்றாய் மெழுகதாக்கிச்
சித்தாகக் கருவங்கச் செந்தூரங்கூட்டித்
திண்ணலரு மண்டலந்தான் சலரோகங்கள்
வித்தாரத் தாகமொடு யெரிவுதீரும்
மெய்யாக வேயுரைத்தேன் மேதினிக்கே. (302)

ஜலரோகத்திற்கு.

எருமையிடுஞ் சாணியினபால் சட்டிதன்னில்
இட்டிடுவாய் வேடுகட்டித் தளிர்ஆவாரை
தரித்தகின்மே லிட்டுவதை வேகவைத்துத்
தளிர்தனை யரைத்தருட்டிக் காயவைத்து
உரியிலிடும் நல்லெண்ணெய் கொஞ்சமிட்டு
உண்மைசெப்பு நெருஞ்சிபாக் களவுசேர்த்து
இருவகையுந் தயிருடனே அரைத்துக்கொள்ள
இனியமகா சலரோக மேகுந்தானே. (303)

புத்தான்சோர்க் கியாழம்.

புத்திலுள்ள சோறெடுத்துக் காயப்போட்டுப்
புரசம்பூ சுக்குசமன் பொடியாய்ச்செய்து
நித்தமிரு வேளையுந்தேன் வெண்ணெய்நெய்யில்
நிகழ்த்தவே அமுதப்பா லந்திசந்தி
ஒத்தநிலே அனுப்பானக் குடனேயிரண்டால்
உடலுக்குள் சலரோக நீர்கள்போகும்
வத்தவைக்கு மேகசுரம் விலகிப்போகும்
வழங்கியதோர் நல்மருந்து வழுத்தினேனே. (304)

நீரழிவுக்கு.

வன்னியிலை யுடனேதா னத்திப்பிஞ்சும்
வகையாக நிழலுலர்த்திச் சூரணித்து
நன்னயமா யெருமைப்பால் தன்னிற்போட
நலமான பாலதுவுந் தோய்ந்துபோகும்
சொன்னதிதை நல்லெண்ணெய் தன்னிற்சேர்த்து
சுகமாக மூவிரண்டு நாள்தான்கொள்ள
முன்னுரைத்த நீரழிவு சலரோகங்கள்
முழுதுமே போகுமென்று மொழிந்தவாறே. (305)

கோவைகந்தம் பாலுடனே கொண்டாயானால்
குடிபோகுஞ் சலரோகம் நிம்பச்சாற்றில்
பூவில்பெரும் நல்லெண்ணெய் கலந்துகொள்ளில்
போக்கிவைக்கும் நீரழிவைப் புகலக்கேளு
ஆவினுட பால்குருணி யிடையிற்காசு
அபினிட்டுக் குளம்பாக்கி யவ்வீராளி
பாவினுசெய் தளந்தழக்குத் தின்றுயானால்
பறக்குமகா சலரோகம் பண்பதாமே. (306)

நீரழிவுக்கு இடிமருந்து.

சுத்தித்த காரீயம் பலமும்ரெண்டு
துய்பதிரு நீர்படியு மதின்மேலிட்டு
மத்தித்த சிறகீரை வேரைக்கொண்டு
வருத்திடவே காரீயம் பற்பமாகும்
ஒத்திட்ட கடல்ராஞ்சி ஆவாரம்பட்டை
உலர்த்திடித்து மூன்றுவகை சமனுய்க்கொண்டு
சித்தித்த தயிர்பதக்கு பாண்டத்திட்டு
சீலைகொண்டு வேடுகட்டிச் செப்பக்கேளே. (307)

செப்பக்கேள் ஆவாரைத் தழ்ரிரைத்தானும்
செம்மிட்டு மேற்பரப்பி மருந்தைவைத்து
அப்பதின்மேற் சீலையிட்டுச் சட்டிமூடி
அனலிலிட்டு யிருசாம மெரித்துவாங்கி
ஒப்பதமா மருந்திலையு மரைத்துஉண்டை
உலர்த்தியதைத் தயிரிலிட மதுமேகங்கள்
கொப்பெனவே நீரெரிவு வாதந்தீரும்
குணமாகும் நீரழிவு கொடுத்துப்பாரே. (308)

சூதமதைக் காரியத்தோ டுறவதாக்கிச்
சுதாகமத்து முள்ளுலகு கருவேல்வேம்பு
ஓதியம் பிசின்கிராம்பு குரோசாணியோடு
ஓமமல்லி சாதிக்காய் சிறுநாகப்பூ
சாதியிலை கசகசா யேலத்தோடு
சடமாஞ்சி மரமஞ்சள் கடல்ராஞ்சியும்
சீதமலர் கேசகமு மிவைகள்வாங்கித்
திரிபலையும் வகைக்குஅரைப் பலமும்கூட்டே. (309)

கூட்டுசம னுவாரை வித்தின்சூர்ணம்
குறைத்துஅத்தி மரத்தின்வேர் நீரைவாங்கி
ஆட்டியதைக் கழற்சிக்காய ளவுவுண்டை
அனுப்பானந் தயிர்தேனி லுண்டாயானுல்
நாட்டுகின்ற நீரழிவு அங்கதாகம்
நாவறட்சி நாகமொடு மதுமேகங்கள்
ஓட்டிவிடும் இம்மருந்தை யெடுக்கும்போதே
உண்டவுடன் சுகமாக யிருக்குந்தானே. (310)

நெருஞ்சகத்தி ஈயுருவி வெல்வேலாத்தி
நீர்முள்ளி ஆவாரை வாகையோடு
கருங்காலி விரைவகைக்கு பலமும்காலு
கடலளிஞ்சி கருவேலும் காவற்பட்டை
திரிபலையும் முள்ளுலகும் பிசின்ஆலத்தி
சேர்ந்தமா தளம்பிஞ்சு மூன்றுமாகும்
கருத்தறிலப் பணைக்கிழங்கு தேத்தாங்கொட்டை
கருமத்தங் காயின்விதை பலமும்கான்கே. (311)

காங்காகுஞ் சரக்குகளை வருத்துக்கூட்டி
நய்யயிடி சூரணமும் படியாம்செண்டில்
பாங்கான முன்தைலம் படியுமொன்று
பச்சைத்தண் ணீர்படியுங் கலந்துகொண்டு
நீங்காமற் சூரணத்திற் கிளறிவிட்டு
நிகழாமற் பிசரியே மெழுகதாக்கு
வாங்காமல் தோண்டிதனில் மருந்தையிட்டு
வாய்க்குநல்ல சீலைகட்டி வழுத்தக்கேளே. (312)

வழுத்தக்கேள் வாயகண்ட சட்டிதன்னில்
வாருயிரு படிநீரை யதிலேவிட்டு
அழுத்தியந்த மருந்திட்டுத் தோண்டிதன்னை
அப்புதனிற் படாமல்குப் புத்துமூடி
குழுத்தியிடு சீலைசெய்தா வாரைதன்னைக்
கொண்டுவந்து பச்சையா யெரித்துப்பாரு
உழுத்தியநீர் வத்தியபின் னெடுத்துஆத்தி
உற்பனமா யனுப்பானத் துடனேயீயே. (313)

மேகரோகி தாசத்திற்கு.

சயவே குணமாகுஞ் சலரோகந்தான்
எடுக்குமின்ற தாகங்கள் தீரவேண்டி
செயஅதி மதுரேலம் வில்வம்வெட்டிச்
சிரகமும் சிறுகீரை குருந்தினோடு
தாயமுள்ள கதலிவெல்லம் நல்லதாகத்
சந்தனத்தூள் பணைவெல்லம் புளிவெங்காயம்
நேயமா யிடித்ததனைச் சூனியிற்கட்டி
நேராகக் கிசாயமிட்டு அதைதீஉண்ணே. (314)

நன்றினிது ஆவாரை காய்ந்தவித்து
லமாகச் சூரணித்து யெடுத்துவைத்து
குன்றுநிரி பலிச்சாத்தி லரைப்பலத்தைக்
குழித்தைலம் மாயிரக்கி வஸிக்காந்தம்
ஒன்றுபலந் தான்சேர்த்துச் சூரணித்து
ஒருகவசந் தனிலிட்டுப் பிசைந்துகொண்டு
அன்றுமே மூன்றுபிடி நீரைவிட்டு
அடைவாகக் கவசமது செய்துகேளே. (315)

ஆக்கவே கலசவாய் நீப்படாமல்
னந்திரத்தின் மேற்சட்டி கவிழ்த்துமூடி
வாக்கினிய சீலமண் நாலுசெய்து
வைத்துநீர் சுவாவற்ற யெரித்துவாங்கி
பாக்களவு தயிரிலிடச் சலரோகங்கள்
பறக்கும் நாவரச்சிக்கு நெற்பொரியும்
தாக்கதிலே வாழைப்பழம் பிரட்டியுண்ண
தாகமுடன் வரச்சிபோந் தன்மைதானே. (316)

பஞ்சலோக மாத்திரை.

வங்கம்அயம் அப்ரேகம் காந்தம்நாகம்
வகைக்குஒரு பலமாகும் செந்தூராஞ்செய்
இங்கைத்துகோ தாவரையின் வித்தம்சேர்த்து
இருங்கதலீ சந்தனநீர் இதில்விட்டாட்டி
புங்குவிதை போலுருட்டி அனுப்பானத்தில்
புகட்டிடவே சலரோகம் மேகவாய்வு
தங்கியிடா தகலுமென முன்னோர்சொன்ன
சாஸ்திரத்தின் படியுரைத்தேன் சார்ந்துபாரே. (317)

திரிலவங்க மாத்திரை.

காந்தமொன்று வங்கம்ரெண்டு அப்ரேகமூன்று
கல்சத்துகாலு நிம்பப் பிசினேடைந்து
சாந்துபட நிம்பயிலைச் சாற்றுலாட்டித்
தகுமிலந்தை விரையளவு திரட்டிக்கொண்டு
சேர்ந்தவகை அனுப்பானத் துடனேயிய
தீர்ந்துவிடும் கிரிச்சனங்கள் மூவேழ்மேகம்
சோர்ந்துவிடும் பொய்யாது மெய்யாமுண்மை
சொல்லினர் யாகோபு நிறமைதானே. (318)

சுக்குல்மேகத்திற்கு

செக்கிலிட்ட தேங்காய்நெய் படிதானெட்டில்
சிறுகீரை நெருஞ்சிகள்ளி மூசுக்கைவேரும்
தக்கிடையாம் வகைக்குரெண்டு பலமேதூக்கி
சந்தனம்போ லரைத்தெண்ணெய் கலந்துபூயும்
பக்குவத்தி லெரித்திரக்கி வைத்துக்கொண்டு
பருகவொரு மண்டலத்தில் மூவேழ்மேகம்
சுக்குலந்தான் வத்தியுற்ற மேகப்பா
சுகமாகும் யாகோபு சொன்னவாரே. (319)

மந்தார காசத்துக்கு.

தொந்தமிந்த மந்தார காசத்துக்கு
சூச்சமாய் மருந்வொன்று சொல்லக்கேளு
அந்திகொடா வசமபுகா சிடையுமூன்று
அரைத்தபொடிக் கதலியுட பழத்திலூட்டி
முத்திதொடு தண்டபின்பு மோரைக்கூட்டு
மோசமில்லை வாந்திபண்ணும் மூடுக்கும்அய்யம்
சிந்தியபின் பத்தியமோ மோருஞ்சோறும்
செலுத்திடு மூன்றேநாளில்த் தீறுந்தானே. (320)

கடைச்சரக்குத்திராவகம்

வணமிருந்த மூலிகையுங் கடைச்சரக்கும்
வாதபித்தம் அய்யமதிற் சேர்க்கையான
இனமறிந்து கூட்டியிதை யிடித்துவரலே
இட்டுநீர் விட்டுமிதை ரவியில்வைக்க
அனல்பிறந்து கொதிப்பெடுத்துப் பொங்கிநிற்கும்
அதுபதமென் றறிந்துமே வாலியிட்டு
தனலெறித்துப் பொங்காமல் மெதுவாய்த்தீயை
தானெரிக்க திராகமும் வருகும்பாரே (321)

மலசலக்கட்டுக்கு.

தண்ணீர்மிட்டான் கிழங்கும் பழத்தின்சாறுந்
தனித்தனியே உழகுஅதி மதுரம்பேலம்
எண்ணையிரு காசியிடையுங் கரைத்துக்கொண்டு
இதற்குநேர் சர்க்கரையுங் கலந்துஒன்றாய்
புண்ணியஞ்சேர் பரப்பிரம்மந் தன்னைப்போற்றிப்
போதரவாய்ப் போதகத்தை மனதிருத்தி
உண்ணிடவே மலசலமும் நீங்கிவாதம்
ஓடுமென்றே யாகோபு உரைத்திட்டாரே (322)

சுரத்திற்கு.

கடுவிடத்தைக் கல்வமிட்டு உலாவிநின்ற
காலாறுபாவையது சதம்பிடித்துப்
படருகின்ற யிம்பூரல் கூடவிட்டும்
பாங்குபெறக் கல்வத்தி லரைத்துநன்முய்
உடலிலுள்ள நடுக்கல்சுர மூரையிட்டானும்
ஓடியொழித் தொளிக்துவிடு மென்றுமுன்னோர்
திடமுடனே யிம்மொழியை யாகோபுசொன்னார்
திறமதனைத் தெளிவதனுற் றேர்ந்துகொள்ளே. (323)

அரையாப்புக் கட்டிக்கு

வீரகெந்தி சமனிறுத்துப் பொடியதாக்கி
மெதுவனலி லுருக்கியதை ஆரவாங்கி
நீரமுடன் சுண்ணும்பு நீர்விட்டாட்டி
திரண்டுவருங் கட்டிதன்னில் யிருகோரந்தான்
சேரயிதைப் பூசியிடு வருத்தம்நீங்கி
செனித்தயிடம் தெரியாமல் கரைந்துபோகும்
பாரிலுள்ள கட்டியதற் கெல்லாமாகும்
பரிட்சசபார் நிசமாகப் பலிக்குந்தானே (324)

பதினெட்டுக் குட்டத்திற்கு.

எருகின்ற அளிஞ்சிவிரை தோடுபோக்கி
இந்திடைக்குப் பூரமதை யியல்பாய்ச்சேர்த்து
ஊருசுத்திப் பாலிச்சேர்த் தரைத்துக்கொண்டு
உறுதிபெற அனலில்மெள்ள வருத்துபின்பு
கூரியதை இலவம்விரைப் பிரமாணந்தான்
கொண்டிடவு நல்லெண்ணெய் யாகாதென்று
பாரிலே குஷ்டமது பதினெட்டுந்தான்
பதியைவிட்டு ஓடுமென்று பகர்ந்தார்பாரே. (325)

இரங்களிஞ்சி வேர்த்தோலைப் பொடியாய்ச்சீவி
இனிதான கதிரவன்மூன் காயவைத்து
நிரமதுகுன் றுமலேமான் கொம்புதன்னை
நிறையாகச் சேர்த்தரைக்கா சிடையவ்வீதம்
உறம்படவே வெண்ணீறிற் கரைத்துக்கொண்டால்
ஓதரிய நிமிர்குட்டம் முதலாய்த்தீரும்
பரங்கொடுக்கு மதின்தயில மாகாதோய்தானும்
பாமாகத் தீருமென்று வழுத்தினாரே. (326)

தாளகச் செந்தூரம்.

ஆணைக்கால் மூடிகையை யரைத்துத்தாரம் நிலகடம்பை
அதின்மேலே கட்டியிடு அடுத்துக்கேளு
கோனமாய்த் தேங்காயை உடைத்துள்ளே
குணமாகச் சுரண்டியிட்டு அதற்குள்வைத்து
வானதுவும் மூடிரெண்டும் பொருந்தப்பார்த்து
வடிவான புடம்லெகுவாம் அரிதாரந்தான்
தானதுஞ் செந்தூர மாகும்பாரு
தாணருந்தச் சுரகாச சயமும்போமே. (327)

தாளக பற்பம்:

மடந்தைதனைச் சுத்திசெய்து சீனம்ரெட்டி
மதிபோலே பூதியெடு சுண்ணமாகும்
குடங்கையினு லதைக்கருவி லரைத்துக்கொண்டு
கோதையந்த வாழ்மடந்தை மேலேமூடி
திடம்படவே வெய்யோனிற் காயவைத்துச்
சிறுபுடமாய்ப் போட்டெடுக்கப் பற்பமாகும்
உடம்படவே உண்டுவிடு பணமதாக
உற்றுநின்ற காசசய மோடிப்போமே. (329)

நீரழிவுக்கு.

காரீய மேயிருக்க ரெகுராமன்தான்
கமலதிரு ஜானகியைக் கண்டுகொள்ள
வாருதியை யடைக்கமிகு வருத்தஞ்செய்து
வழுத்தியபின் னறியபொருள் வால்மீகத்தில்
சோருதனைக் கலக்தெடுத்துத் தூவநீறுஞ்
சுவரிவற்றித் தென்கடலுந் தூர்வதாகும்
நீரழிவுக் கிதையிடவும் நிமைக்குமுன்னே
நிருத்தமென்று முன்னோர்கள் நிசஞ்சொன்னாரே ()

தேகபுஷ்டி லேகியம்.

மேனியிலே பூக்கொன்றை கையான்பாதிரி
மிக்கயெடு கால்சரக்கு மிடையேசேர்த்து
வானிலுயர் கதிரவன்மூன் காயவைத்து
வடியிடித்துச் சர்க்கரைநெய் சேர்த்துக்கிண்டி
தேன்தனில் மண்டலமூ விரலின்வீதஞ்
செலுத்திடவும் நாள்தோறும் புத்தியுண்டாம்
நானிலத்தில் தேகமது பொன்போலாகும்
நலமான தேகமயம் காடுந்தானே. (330)

அயச்செந்தூரம்.

உல்லாச மாயிரும்பை யெய்யத்தட்டி
உறுதியுட னதைமடக்கிக் குகையிலிட்டு
சல்லாப மானவுலை தன்னில்வைத்துத்
தணல்சிவக்க வூதிநிறந் தன்னைப்பார்த்து
மெல்லாக நாறும்பூ மிடையேதாக்கு
மிதமான மயில்நிறமா யுருகும்பாரு
கல்லாக வதையெடுத்துக் கல்வமிட்டு
காடியே யாகோபு நலஞ்சொன்னாரே. (331)

காடியே பொற்றலியின் சாற்றினாலே
நலம்பெறவே அரைத்துகதிர் காயவைத்து
மூடிபுட மாறிடச்செந் தூரமாகும்
முறுதிபெறப் பணவிடைமண் டலமேகொள்ள
கூடியே நரம்பிறுகும் விர்த்திகட்டும்
குணமாக ரோகமெல்லாங் குடிவிட்டோடும்
தேடியே சூரியன்முன் னிருவேளைப்போலே
தீர்த்துவிட யாகோபு திறஞ்சொன்னாரே. (332)

கெந்தி சுத்தி.

நாறும்பூ தனையெடுத்துக் கல்வத்திட்டு
காடியரை யெலுமிச்சம் பழச்சாற்றாலே
கூறுபட அரைத்துலர்த்திக் கரண்டியிட்டுக்
குணமாகக் கரிகொளிப்பி லுருக்கிப்பாலில்
வேறுபடச் சாய்த்திடவே நாலுசெண்டு
விதமாக அரைத்துருக்கிச் சாய்க்கவெண்ணெய்
ஊறவிட்டுக் குடிபோகு மென்றுசொன்னர்
ஊக்கமா யாகோபு உலகிற்றானே. (333)

வெள்ளிசுத்தி.

தய்யானுங் களஞ்சிரெண்டு காரிரெண்டு
தப்பரவா யுருக்கியே ஊதநன்றும்
மெய்யாகச் சிறலற்றுத் தய்யானுகும்
மேன்மைபெறத் தகட்டித்த யிடையேபூவை
வையவே அன்னமிட்டு அரைத்துப்பூசி
நலமாக அந்திடைக்குப் புடதைதப்போடு
வைகத்தி லிப்படியே புடமைந்தானால்
வகையாகக் கரியாரும் வளியைக்கேளே. (334)

மாற்றரவெள்ளி

கரியெடுத்துக் காரிலை நிடையாய்க்கூட்டிக்
கணக்காக வுருக்கூது ரசிதமாகும்
பரிபோலே ஓட்டிவிட்டுப் பழுக்கச்சுட்டால்
பாகமாய்ப் பொன்போலே பழுக்கும்நேர்மை
விரிவான யிந்தவெள்ளி நலமதாகும்
வேதைக்கும் புடத்துக்கும் நிலைக்குமென்று
சரியாக யாகோபு தானுஞ்சொன்னார்
சத்தியமா யிந்தமுறை தாக்கிப்பாரே. (335)

ரசமெழுகு.

அருகுருனி நீர்விட்டு நிம்பமூலி
அரிந்துமே பாண்டத்தி லிட்டுநீரை
இருபடியாய்க் காய்ச்சியதை யிருத்துக்கொண்டு
இன்பமாய் அரன்பீசம் பலமுமிட்டு
குருகயெரி விளக்குப்போல் குளம்பதாக்கி
கொட்டியே கல்வமிட்டுச் சாமமாட்டி
பருகயெடு மெழுகாகும் பணமேயிட்டால்
பறக்குமே ரோகமெல்லாம் பண்பாய்த்தானே. (336)

ரசம்உண்ட வீரடங்க.

புங்கவேர் தென்னம்பூம் பாலைக்குள்ளே
பூவுருவி யுடன்மிள காறுங்கூட்டி
முங்கபடி பாணியிட்டு யெட்டொன்றுய்க்கி
மூசுபசு வெண்ணெய்யிலே யருந்துமூன்று
சங்கரன்றன் விந்துரச வீரடங்கும்
சரீரசுக முண்டாகும் யெரிவுபோகும்
பங்கமுள்ள நீர்க்கட்டும் ஓடிப்போகும்
பதிவான யாகோபு பாலித்தாரே. (337)

இளம்பிள்ளை வாதத்திற்கு எண்ணெய்.

குமரகுரு பரனேறும் பட்சிதனைக்
கொண்டுவந்து சிகைபிடுங்கிக் குடலைப்போக்கி
அமரவே உலிலிட்டுப் பரங்கிப்பட்டை
அடைவான சேரரைக்கால் உள்ளிசேரே
சிமரயிடு காயமது களஞ்சிகாலு
சேர்த்திடித்துப் பாண்டமதி லிட்டுப்பாணி
சமரயிடு யெட்டொன்றுய்க் காய்ச்சிகொண்டு
நலமாக வடிகட்டிச் சட்டியூத்தே. (338)

ஊத்தியே நிம்பெண்ணெய் படிதான்வாரு
உறுதிபெறத் தீபதனை விளக்குப்போலே
பாத்துமே யெரித்திடுமே திரியைத்தோய்த்துப்
பதமாகக் கொளுத்திடவே பற்றிற்றுனல்
காத்திசையு மெண்ணெய்பதமாகும்பாரு
நலமாகு மெண்ணெய்யைத்தான்கரண்டிவீதம்
சேர்த்துஉண்ண யிளம்பிள்ளைவாதந்தன்னைச்
சிதைத்துவிடும் மூடச்குவா தங்கள்போமே. (339)

சுரசன்னிக்கு

குமரனுடமணிவிய்யத்தான் மூலம்வாங்கிக்
குணமாக அந்திடைக்குச் சித்திரமூலம்
நமரவே சேர்த்திடித்துப் பிட்டுவைத்து
நலமாக உண்டிடவே யெட்டுநாளில்
தமரகமும் பெருமூச்சு காசம்நீங்கும்
தக்கவே சுரவாய்வு தன்மையாகும்
நமாசன்னி தாகமொடு நாடாதோடும்
நாட்டோர்க்கு யாகோபு நலஞ்சொன்னாரே. (340)

வெட்டைக்குத்தைலம்

தவளநிற எலுமிச்சம் பழத்தைவாங்கித்
தாக்காக சாறுதா னெடுத்துக்கொண்டு
கவனமா யொருகரண்டி யெடுத்துமேதான்
காண்டியிடை நல்லெண்ணெய் கலந்துசேர்த்துப்
பவளமா யிதைக்குடிக்க ஆறுநாளும்
பதிவான நீர்ச்சுருக்கு வெள்ளைவீழ்தல்
குவளநிறப் பிரமேகம் போகுமென்று
கூறினார் யாகோபு குணமிதாமே. (341)

சன்னிவாய்வுக்கு

கரைகண்டன் கருப்பியது யிடையேசேர்த்து
கனிந்துருக்கிக் கல்வத்தி லுடைத்துநன்றாய்
நரைகொண்ட நாத்தமது முக்காலிட்டு
நாடியேபண்ணியரை வீரம்காலாம்
திரைகண்டு பாணியையும் விட்டேதானும்
திறமாகப் பத்தெருவிற் புடத்தைப்போட்டு
துரைகண்டு பணவிடைதா னுள்ளேகொள்ளு
சுகசன்னி வாயுவொடு நோய்கள்போமே. (342)

சிவனுர் வேம்புத்தைலம்.

தக்கசிவன் மூலிபிடை பரங்கிப்பட்டை
தாக்கியிது கேர்படவா லுளுவைகூட்டி
மிக்கயிதை ரவியிலிட்டு உலரவைத்து
விதமான கலசத்தி லடைத்துமூடி
பக்கமுடன் குளித்தைலம் வாங்கிதன்னுய்
பாகமுடன் கரண்டியள வாகவுண்ண
கக்குவிஷ கடிகளுட குஷ்டம்போகும்
நலமாகும் வண்டுகடி தீருந்தானே. (343)

துருசுச் சுண்ணம்.

உல்லாச மாய்க்கண்டர் பலமெடுத்து
உறுதிபடச் சட்டிதனிற் கிளிஞ்சிற்சுண்ணம்
நல்லாகப் படிரெண்டு யிட்டமுக்கி
நலமாகக் கண்டரைத்தா னடுவில்வைத்து
சொல்லாக வதின்மேலே கிளிஞ்சிற்றைச்
சுகமாகக கொட்டியே அடுப்பில்வைத்து
நல்லாகச் சாமம்ரெண்டு யெரித்துப்பாரு
நலமாகச் சுண்ணமிது நாட்டுள்ளோரே. (344)

வங்கச் செந்தூரம்.

எரித்துயெடு துரிசதுதான் சுண்ணமாகும்
இதமான காரியம் பலமும்காணு
கருத்தநிர அயக்கரண்டி தன்னிலிட்டுக்
கருணைபெறக் கரிகெருப்பி லுருக்கிமேலே
வருத்துவிடு வெடியுப்புப் பலமும்ரெண்டு
வண்மைபெற அதின்மேலே போட்டுக்கிண்டு
பெருத்ததொரு குங்குமத்தின் நிறமேயாகும்
பேசரிய வங்கத்தின் பெருமைகேளே. (345)

தாரக்களங்கு.

பெருமையாய்ப் பலம்காணு கல்வத்திட்டு
பிலமாக அன்னமிட்டு வில்லைதன்னை
அருமையாய்க் கதிரவன்முன் காயவைத்து
அருள்பெருகும் முன்றுபுடம் போடச்செம்பாம்
கருநீல கண்டாது யிடைவேசேர்த்து
கருவான அன்னமிட்டு அரைத்தெடுத்து
அருமைபெற தாரத்திற் கங்கியிட்டு
அடைவாக ரவியில்வைத்துக் காயவையே. (346)

கல்லுப்புப் பலம்நிறுத்துக் கல்வத்திட்டு
காரணமாய்க் கிளிஞ்சிசெண்ண மிடையேபோட்டு
நல்லுளவாய் அரைத்திடுநீ மேனிநீரால்
நலம்பெறவே முன்னுண்டை மேலேகட்டி
செல்லொத்த கதிரவன்மூன் காயவைத்து
செழிப்பாகப் பிரித்திவையுங் கவசங்கட்டி
சொல்லொத்த புடம்போட்டு மண்ணீக்கு
சுயமாக உள்மருந்து களங்கமாமே. (347)

கல்லாக யிப்படிக்குப் புடமும்மூன்று
காடியெடு ரவியுருக்கி யிடையேதாக்கு
சொல்லுப்போற் பொடியாக்கி மயனம்போலாம்
சொகுசாக யெடுத்துநிறு காலிலொன்று
கொல்லுமதை உருக்கியெடு கருப்பிகூட்டிக்
கோதையர்பால் விட்டரைத்துப் புடமூன்றிட்டு
வெல்லுமது குருவாகும் யெடுத்துப்பூச
விரும்பியதை யாகோபு விளம்பினாரே. (348)

அடுத்துநின்ற மதிகாலு யிட்டுருக்கி
அகமகிழக் குருரெண்டு கரியில்வைத்து
கடுத்தரத்தி லுருக்கியெடு கருப்பதாகும்
நலமிதுதா னதையூத ஏமம்போலாம்
தடுகளவு யேமமதை விட்டுருக்கக்
கனகமதை அடித்துபுட மூன்றில்தங்கம்
படுத்திடமா யிரங்கிரெண் டிடைதானிற்கும்
பாலித்தார் யாகோபு பழக்கத்தாலே. (349)

உறவடைய வாதிக்கு இப்பாகத்தை
உண்மைசொல்லி நூல்கொடுத்து உறுதிகாட்டு
திறமுடைய சிஷ்யனாய் நேசமாகும்
சிலரிடத்திற் பேசார்கள் ஞானந்தன்னை
குறவனைப்போல் பார்த்துமே செய்கைபாரு
குடிலமது செய்யாமல் குருவைச்சொல்லு
திறமில்லா வாதிக்குக் குரு சொல்லாதே
செப்பினார் யாகோபு திறமிதாமே (350)

அயச்செம்பு

இரும்பையிட்டுச் செம்பையெடு மதியிற்றுக்கு
இனிதாகப புடமிறங்கும் யேங்கமாட்டார்
கருப்பிலுள்ள யெண்ணெய்தன்னே வாங்கச்செம்பு
கனமாகப் பழுத்துவிடும் கனகமாகும்
அரும்புலிடத் தூணுகும் தொந்தமாகும்
துயர்ந்துமே வாதங்கள் துலங்கிநிற்கும்
குரங்கையொத்த மனக்குரங்கை யிருத்திக்கும்பி
குணமுடனே யாகோபுகூறினாரே (351)

கெடியோனின் விந்துசத்தி திரிபலாதி
நோகாகத் தந்திவிரை திரிகேரிட்டு,
படியாகப் பாணிபடி அரைநாளொன்று
பயறளவு செய்துயிஞ்சிச் சாறிலுண்ணை
குடிபோகும் வியாதியுடன் வாதபித்தம்
குணமாகுந் தூளிதன்னில் சுரமெல்லாம்போம்
முடியதனில் கங்கையைத்தான் தரித்தயீசன்
மூவர்துயென்மே லாசைகொண்டு மொழிந்தவாறே.

காரீயஞ்சுத்தி

கிராவணமும் பலம்நாலு கரண்டியிட்டுக் காரீயம்
கேள்குமரிச் சோறுதன்னைப் பிழியத்தண்ணீர்
கிரவணமா யுருக்கியெட்டுத் தரமுமூத்து
சீரடங்கிக் கசடற்றுத் திடமேயாகும்
முரவரியத் தருத்திரெண்டு உலையிலிட்டு
முடிவுபெறக் கடியஅனல் தண்ணிலிட்டு
தரவளமா யுருக்கியே விடவுஞ்சொன்னார்
சுத்தியாம் யாகோபு சொன்னவாறே (353)

சுத்தித்த காரீயம் நய்யத்தட்டி
சுழற்றியரை அன்னத்திற் சாமம்நாலு
புத்தியாய் வெய்யோனிற் காயவைத்துப்
போட்டிடுநீ கசபுடத்தில் முருக்கம்பூவாம்
நித்திபமாய் மதவிலிடு கடலையாக
நேரான பிரமேகம் வெட்டைகுஷ்டம்
சித்திபா யேகுமென்று யாகோபுசொன்னார்
சீர்பெறவே பண்டிதத்தின் செயலிதாமே. (354)

அழுக்ககற்றுங் கற்சுண்ணம் நோயிட்டு
அதையளந்து சட்டியிட்டு பாணிசெட்டி
விழுக்கருத்த ஞானிசினே பத்துமேதான்
விட்டுநீ கொதிக்கவைக்க பெண்ணெய்சுக்கும்
நழுக்கையெடு கல்வமிட்டு அரைத்தளுத
நல்லசுண்ண மாகுமதை வங்கம்நேரே
இழுத்தரைத்து வில்லேதட்டிக் காயவைத்து
இதைபூதக் கடுஞ்சுண்ண மெனச்சொன்னாரே. (355)

தாளகச் செந்தூரம்.

சுண்ணமிடை மடலரியைச் சேர்த்துக்கல்வம்
சுயமான அன்னமிட்டு அரைத்துமூன்று
சொன்னபடி புடமிடுநீ சிகப்புமாகும்
சுகமாம்நெய் தேனிலிடு சாசமேகும்
மின்னலுட காசம்போம் மேகம்போகும்
மிகுவெட்டை சலமேகம் விடுபட்டேகும்
தன்னிகரிற் போகுமென்று யாகோப்சொன்னார்
சரியான பாகமிது கண்டுகொள்ளே. (356)

சுர மாத்திரை.

நாத்தமொடு நாரியிடு யிரதங்காரம்
நல்மிளகு வகைக்கொன்று கல்வமிட்டு
போத்தியரை நாரியர்பால் மணிபோற்செய்து
புகலரிய யிஞ்சிபிழிந் துண்டைபொன்று
ஏத்தியிடு சாங்களெல்லாங் குடிவிட்டோடும்
இதங்கெட்ட பிணியகலு குடிலமில்லே
நாற்றிசையில் கெருடன்கண்ட சர்ப்பம்போல
நாடாம லோடுமென்று நவின்றிட்டாரே. (357)

சத்திகுன்மத்திற்கு.

புலிச்சாணி மேதகமூ மூன்றுதூக்கு
புகட்டியேமூன் புகைநீரை விட்டிடித்து
வலியவிடு வாலியிட்டுப் புகைநீர்வாங்கி
வடிகாரண்டி நெய்யிலிட்டு அத்திசுத்தி
கெலியாகும் வயிற்றுவலி செரியாமாந்தம்
கேள்பொருமல் சத்திகுன்மம் குடிவிட்டோடும்
மெலியாகும் மிரவிகண்ட பிநுலேப்போலே
மேகுமென்று யாகோபு பலன்சொன்னாரே.. (358)

பாண்டு காமலைக்கு.

ஓரிலைத்தா மரைவேரு சுதிரிலிட்டு
உலர்த்தியே யிடித்துபொடி யாக்கிவைத்து
சாரியிதை மூளிரற்று ளெடுத்தக்கொண்டு
சரியிடையா ஆவினெய்யில் குழைத்துஉண்ண
பாரிலிரு மண்டலமே கொண்டாயாலல்
பகர்ந்தபித்தப் பாண்டுகா மாலைசோகை
ஊரிலில்லா தோடுமென்று யாகோப்சொன்னார்
உண்மையாய் மானிடர்க ளறியத்தானே. (359)

பெருவயிறுக்கு.

கிழவியென்ற மூருங்கைத்தோல் பொடியதர்க்கிக்
கிரகித்துக் காயமெட்டி லொன்றுசேர்த்து
பழயபடி பொடித்தூவி காயவைத்து
பதிவான வெருகடிதூள் கொண்டுபாரு
வளமான வாதம்பெரு வயிறுசோகை
வதைக்கின்ற சூலைபிணி மாண்டுபோகும்
இளவயதில் வந்தபிணி தீருமென்று
இருந்துரைத்தார் யாகோபு யிதமாய்த்தானே. (360)

வேதைச்குரு.

கருவையெடு வெடியிடைசேர் தரண்டியிட்டு
கணக்காக அனல்தனிலே உருகிக்கட்டு
திருவளரும் வங்கமதிற் சேர்த்துபோகும்
திடமூடனே நாகமது கட்டிப்போகும்
பருகவே தருசதுவுஞ் சுண்ணமாகும்
படிமுன்னே சரக்கெல்லாங் கட்டிப்போகும்
முருகவிழுங் குழலாள்தன் பாலைக்கூட்டு
முடியுமது வேதைக்குக் குருசொன்னாரே. (361)

சவுக்காரம் எண்ணெய்கழற்ற.

திங்கள்தனி லுற்பவித்த உப்புநீரை
செயமாக முரிக்கவது பாணியாகும்
உங்களுட லாலைதனில் வைத்துமூடி
உறுதியா யெரித்திட்டே நல்லதண்ணீர்
பங்கமது வாராமல் சவுக்காரத்தைப்
பாய்ச்சியே யிந்நீரை விட்டுக்காய்ச்சு
மங்களமாம் எண்ணெய்யதும் நீங்கும்நேர்மை
மதிப்பாக யாகோபு வகைசொன்னாரே. (362)

தருசுகுரு.

பொட்டனையும் பலம்காலு கரண்டியிட்டுப்
புதுமைபட எரியிடுநீ உருகிநிற்கும்
இட்டமுடன் தருசுகாற் பலமிறுத்து
இதையழுத்திச் சாமமொன்று மெதுவாகத்தான்
கட்டளையாய்ச் சிறுகயெரி தருசுதன்னைக்
கருதியெடு நீறியது சுண்ணம்போலாம்
தட்டரிடம் பேசாதே யாகோர்சொன்னார்
தடியான பாதையிது தோய்ந்துபாரே. (363)

கல்சுண்ணம் படிரெண்டு அழுந்துவிட்டுக்
கருதரிய பூநீரு படியுமாகும்
சொல்ப்படிக்குக் கலந்துபுதுச் சட்டியிட்டு
சுட்டதொரு நீலனைத்தா னதற்குள்வைத்து
கல்ப்பொடியை யமுழ்த்தியெரி சாமமொன்று
கலமாக பிரக்கியெடு காரமேறும்
சொல்தவரு தெடுத்துசிவ பூசைசெய்து
சுகமாகக் கேளென்று துரைசொன்னாரே. (364)

அடுத்துகுரு யிடைசேரு சூதந்தன்னை
அருள்பெருகப் புகைநீரா லரைத்துச்சாமம்
கொடுத்தபின்பு சவ்வீர மரைக்கால்போட்டு
குரிபச்சைக் கற்பூர மவ்விடையேபோடு
தடுத்துநீ புகைநீரை விட்டரைத்துத்
தனையெடுத்து வில்லைகட்டிக் காயப்போடு
கடுத்துயிதை அஞ்சுதரம் புடத்தைப்போட
கருத்தாக யாகோபு உரைத்திட்டாரே. (365)

போட்டதனை எடுத்துக்கல்வத் தன்னிலிட்டுப்
புலன்படவே கன்னிதனப் பாலேயிட்டு
நீட்டதனை யரைத்துவில்லை கதிரில்வைத்து
நேராகக் காய்ந்தபின்பு நினைவாய்த்தானே
வாட்டமுடன் எருவடிக்கி புடத்தைப்போட்டு
வகையுடனே ரவியுருச்கி வளமாம்நேரே
போட்டதைநீ கொடுத்துவிடு கொருங்குமென்று
புகழாக யாகோபு புகன்றிட்டாரே. (366)

கல்லாக உடைத்துசெர்பு கல்வத்திட்டு
காடியே குப்பியிடு காலத்தொன்று
மல்லாக அன்னமிட்டு அரைத்துவில்லை
மதிபெருகக் கெஜபுடத்தில் யிறுகும்பாரு
வெல்லவே மதிகாலில் சென்டுதாக்கு
விதியாக ஊதியெடு பொன்போலாகும்
சொல்லாதே யித்தொழிலை யென்றுசொன்னர்
சுருதிமுரை யாகோபு சுழுவாய்த்தானே. (367)

பொன்னை மட்டமாம் பொன்னையிட்டு
போகாமல் தானுருக்கிப் புடத்தைப்போடு
என்னளு மிரங்குமது பொய்போகாது
இருப்பிடத்தி லிருந்துகொண்டு செலவுசெய்ய
சொன்னபடி யித்தொழிலைத் தொடர்ந்துபாரு
சுருதிதனை யாராய்ந்து திட்டமாக
உன்னிதமாய் பாகமதை யாகோப்சொன்னர்
உறுதிதனை யாராய்ந்தா லுண்மையாமே. (368)

செம்புசுத்தி.

செம்புருக்கிக் கெந்திரச மிடையேதாக்குச்
சீர்பெறவே சத்தாகும் பழச்சார்தன்னில்
நம்பியே அரைத்தரைத்துப் புடமூன்று
காடியிடு யெடுத்ததனைக் கல்வதிட்டு
தம்பமற வாய்வுதனைக் காலையிட்டு
தடவியரைப் பழச்சாற்றுல் சாமமாட்டு
உம்பர்கோன் ரவியிலிட்டுக் காயப்போடு
உறுதியா யாகோபு உரைத்திட்டாரே. (369)

சூரியன்முன் காய்ந்ததைநீ புடமுமிட்டுச்
சுருதிபெற வெண்காரப் பொரியுமிட்டு
வாரிகுகை தன்னிலிட்டு உருக்கிப்பார்க்க
வகையான செம்பாகு மதியிற்பத்து
பாரிலிதை யொன்றிடவே மாத்து ஆறு
பதிவான் குருமுனிதான் சொன்னநேர்மை
காரியுமை பாகனுர் அருளாற் சொன்னர்
நான்கண்டு யாகோபு நவின்றிட்டேனே. (370)

சரக்குக்கட்டதிராவகம்

வடியுப்புபடைகாரத்தும் ராசனது பத்துயிட்டு
பதியயீர் பத்தஞ்சு சீனமிட்டு
குடமடைத்து வாலிதனை மூடிச்சீலை
குணமுடனே செய்துயெரி மூன்னீர்தள்ளி
நடைபெறுகும் சீசாவி லடைத்துநீரை
நலமான சரக்குகளில் சுருக்குப்போட
விடைதனைப்போற் கட்டுமென்று யாகோப்சொன்னார்
விரும்பியிதைக் கண்டவுடன் வேதையாமே. (371)

மூலமுலைக்கு

சிவன்வித்து தானரையாங் கெந்திநேராம்
சிறக்கஅரை காட்டெருமைப் பாலிலிட்டு
தவமான சாமமரை துணியிலூட்டித்
தக்கசுடர்த் தைலமதை வாங்கிநேராய்
பலமான நெய்விட்டுத் தடவமூலம்
பதிவானமூலமுலை உதிருமென்று
கவராக யாகோபு சொன்னநேர்மை
கைகண்ட பாகமிதைக் கருதிப்பாரே. (372)

தந்திவிரைசுத்தி

தந்திவிரை தட்டியிட்டுத் தோலைப்போக்கித்
தடைபடவே சாணமிட்டுக் கரைத்தநீரை
முந்திவிடு பானையரை மேலேசீலை
முடிந்துவிடு தந்திவிரை பரப்பிமூடி
சிந்தனையாய்த் தெரித்துயெடு யெண்ணெய்க்கும்
சீர்பெருகும் நல்லசுத்தி திறமாய்க்காணும்
வந்தவினை தீர்க்கயிதை மருந்தோடிய
வரும்பிணிகள் தீருமென்று வகைசொன்னாரே. (373)

சூதமதி னிடைசுத்தி நாதஞ்சேர்த்துச்
சுகமாக யெட்டிலொன்று தந்திசேர்த்து
காதமரப் பொடியாக்கிப் பணமவ்வீதங்
காட்டிமண்ட லத்தில்திரி கடுகுத்தூளில்
பேதமுடன் படர்சுற்றிப் பிரகாசங்கள்
பெருமையிலா வாய்வுசரம் பேசாதோடும்
நாதமுண்ட கண்டர்போ லாகுமேனி
நயமாக யாகோபு நலஞ்சொன்னாரே. (374)

வங்கச்செந்தூரம்

எருக்கரண்டி தன்னிலிட்டுக் காரிதன்னை
எழுதர முருக்கிச்சாய் சோறுதன்னில்
பகுக்கமுன் னிடைவெடிசேர் பாணிவிட்டுப்
பதறிதிரு வாழ்மடந்தை வெடிநேர்விட்டு
அகிலமது லடிப்பிலிட்டுக் குளம்பாய்க்கி
அதைஉருட்டிக் காரியிடை உருக்கித்தாக்கி
விதமுட னிருங்கியது உருகும்பாரு
வீடுபெற யாகோபு விளம்பினாரே. (375)

அயச்செந்தூரவேதை

ஆய்ந்தெடுத்த அரபொடியைக் கல்வத்திட்டு
அதனிடைக்கு சோரனிட்டு ஆட்டிவில்லை வெடியுப்பு
காய்ந்தபின்பு மூன்றுபுடம் போட்டெடுக்கக்
கருதரிய செந்தூரமாகும்பாரு
பாய்ந்துமே ரவிநூற்றுக் கொன்றுமீய்ந்து
பதராம லெடுத்துப்பார் மாத்துப்பத்தாம்
தேய்ந்திடுமண்டலமுண்டால் வாதபித்தம்
தீருமென்று யாபோபு செப்பினாரே. (376)

ஞானம்.

வேதத்துக் காகாது கள்ளுசஞ்சா
விரும்பியே சாராயம் அபினியோடு
நீதத்திற் கொலைகளவு பொய்மாச்சுங்கள்
நீயுமதை யனுசரித்தா லெல்லாம்பாழாம்
வீதமிதிற் றவறுசெய்தால் நரகில்வீழ்வாய்
வேதத்தில் சொன்னதுதா னிந்தமார்க்கம்
காதந்த ஊசியுந்தான் வாராதென்று
கடைத்தேற யாகோபு உரைத்திட்டாரே. (377)

சத்சிவ ஞானம்.

கடைத்தேறப் பொருள்வேணும் வாதம்வேணும்
கண்டிருந்தும் யாகமதைச் செய்யவேணும்
படைத்தன்னிற் சித்திரத்தைப் பார்த்துக்கண்டால்
பதிவாக உன்முகமும் தெரியுமாப்போல்
விடைமீயறு மீசனையும் அறிசர்த்தி
மிக்கதன்தை தாய்பதத்தை மறக்கவேண்டாம்
முடவனைப்போல் சாஸ்திரத்தைப் பார்த்தால்நீயும்
முத்தியில்லை யாகோபு மொழிந்தவாரே. (378

காந்தக் கிண்ணம்.

காந்தமது பலமொன்று கொள்ளுக்கியாழும்
கனமாக வேழுகரம் காய்ச்சிதேய்த்து
பாந்தமாய் முன்சாற்றிற் காரியிட்டுப்
பதிந்தரைத்துப் புடமூன்று தானுமிட்டுச்
சாந்தமாய்ச்சாரமிட்டு உருக்கயீயம்
சவுடுதிரை யில்லாமல் மணிபோலாகும்
வேந்தனு மெழுகுகட்டிக் கிண்ணிவாரு
வெகுவிதங்க ளாகுமென்று விளம்பினாரே. (379)

அயக்காந்தச் செந்தூரம்

கல்லிரும்பு ஓரிடையாய்க் காந்தம்நேரே
நரட்டியிதை உருக்கியே கல்வத்திட்டு
சொல்லினிய பொற்றலையை உரலிலிட்டுத்
துவைக்கவருஞ் சாறுவிட்டுச் சாமமூன்று
மெல்லியதாய் வில்லைதட்டி ரவியில்வைத்து
மேன்மைபுடம் நாலுயிடு மூருக்கம்பூவாம்
சொல்லுமென்ற புளிகண்ட ஆடுபோலாம்
சூட்சமிது யாகோபு சொன்னர்தாமே. (380)

லிங்கச் செந்தூரம்.

சித்தியுடன் வன்னிகெற்பம் நாலிலொன்று
செந்தூரம் பலமொன்று முன்சார்விட்டு
பத்தியரை புடங்கனமா யிட்டுக்கொண்டு
பணவிடைதான் திரிகடுகி லுண்டுபாரு
சத்திபெருஞ் சோகைகா மாலைபாண்டு
சரியான மூலமுதல் விஷபாகங்கள்
நித்தியமு மிருளகற்றுங் கதிரைப்போலே
நிர்ணயமா யாகோபு நிசஞ்சொன்னாரே. (381)

விஷபேதிக்குப் புகைநீர்.

பத்தாயிச் சாராயம் படியும்நாலு
பாங்காக அளந்துவிட்டுச் சாடிதன்னில்
முத்தினதோர் மிளகாயைப் பொடித்துபோட்டு
மூடிவைத்து மூன்றுநாள் கழிந்தபின்பு
சித்தாகச் சூடனரை அபினிவன்னி
திறமாகப் பொடிகலக்கி ப்புகைநீர்வாங்கு
கத்தாவின் செயலதினுற் கண்டபேதி
காண்டிகொள்ள நமர்சன்னி காணப்போமே. (382)

சேங்கொட்டைத் திராவகம்.

வேகவைக்குஞ் சோரனின் கொட்டைதூக்கு
வீதமிடை அன்னமிட்டுக் கருப்புக்கட்டி
ஆகமதிற் பாணியிடு மிடைதான்ரெட்டி
அதைக்குளப்பி புளிக்கவைத்துப் புகைநீர்வாங்கு
தாகமா யுண்டிடவே சூலரோகம்
தனிர்வாதம் வாய்வுகுன்மம் ரணங்கள்போகும்
யூகமதா யாகோபு சொன்னநீதி
உலகுதனில் வயித்தியங்க ளுண்மைதானே. (383)

சுரத்திற்கு குளிகை.

எலிகொல்லி சுத்திசெய்து வன்னிரெண்டு
ஏகமது மேனிப்பால் சாமமாட்டி
வலியஅதை மணிப்பயறு உண்டைசெய்து
மதுவிலிடு வலியசுர மெல்லாம்போகும்
பெலமுள்ள சுரங்களறு பத்தும்போகும்
பின்னுவின் பாற்கஞ்சி உண்டுதேறு
பெலிகொடுக்கும் ராமருட பாணம்போலாம்
பேதமில்லை யாகோபு பேசினாரே. (384)

தாளகபற்பம்.

சொந்தமதா யிரதாரம் வெருக்கம்பாலில்
தோய்த்தெடுத்து நாளெட்டு வெய்யோனிட்டு
முந்தயிடு பால்குடிக்குஞ் சீனம்மது
முடிந்துசுண்ண மாகிவிடும் மேலேகட்டு
சிந்தனையாய்க் குக்குடத்தில நீறிப்போகும்
திடமான குட்டமுதல் மேகமெல்லாம்
எந்தவித பழவினையுந் தீருமென்றார்
இருளறுக்குஞ் சூரியனென் றியம்பலாமே. (385)

இரும்பு சுத்தி.

இருளகற்று மிலையிடித்துச் சாறுவாங்கி எருக்கனில
இந்தடைக்கு நாத்தமதை அரைத்துசாமம்
அருள்பெருகும் நல்லிரும்பை நய்யத்தட்டி
அரைத்துமெள்ளப் பிசரிக்குகை விட்டேருக்கி
சிருகவே கிராசமிடு உருக்கும்போது
செப்பாமல் சாமிடை அரைத்தருக்கு
பருகஅது சவுடுதிரை அற்றுவிற்கும்
பாலித்தார் யாகோபு நேர்த்திதானே. (386)

சுகபேதிக்கு யெண்ணெய்.

சட்டியிட்டுத் தந்திவிரை நாலுடைத்து
சரியாகத் தோல்போக்கி நருக்கிமெள்ள
கொட்டியிடு விளக்கெண்ணெய் கரண்டிருத்தி
குணமாக மத்தித்துக் கொள்வாயானால்
முட்டிருமல் மலசலங்கள் கழிந்துபோகும்
மூழுவருத்த மில்லாத நெஞ்சுரோகர
அட்டியிலாச் சுகபேதியாகுமிக்க
அவனிதனில் யாகோபு சொன்னவாறே. (387)

நாகச்செந்தூரம்

பொட்டியிட்டுச்சீறுகின்ற நாகந்தன்னைப்
புகழ்பலத்தைக் காண்டியிட்டு உருக்கிக்கொண்டு
தட்டியிடு சாரமதைப் பனியில்வைத்து
தான்பார்க்கத் தெளிவாகும் தெளிவைநீயும்
கொட்டியிட்டு யிடைசுமனைக் கல்வத்திட்டுக்
கூட்டியரை புகைநீராற் சாமம்நாலு
விட்டுஅரை மேருவினில் வைத்தெரிக்க
விதமான செந்தூர மாகும்பாரே. (388)

அடுத்துயெடு பனவிடைதான் தேனிலுண்ணை
அறுகாளில் மேகமுதல்சூலைபோகும்
தொடுத்தநிதம் உண்டுவர வாதசோகை
தொலையாத அக்கினியா மந்தம்போகும்
படுத்தசடம் நடந்திடுமாம் நவலோகத்திற்
பாச்சிடவே பொன்மாத்து பாதிகோர்மை
கொடுத்துவர நரைதிரைகள் போகுமென்று
கூறினர் யாகோபு குணமிதாமே. (389)

நாகஅயச்செம்பு.

சீருகின்ற நாகமிடை அயம்நேரிட்டுச்
சிறக்கஅரை வில்லிதட்டி பழச்சாற்றுலே
கோருவதை க்ஷாய்ந்துபுடம் வரரகழிட்டுக்
கூட்டியெடு ரவிபதத்தி லொன்றுயிட்டு
தேருமதை மதியெட்டில் ரெண்டுசேருத்
திறமாக ஊதியெடு யேமமாகும்
கூருகின்ற மதியுகி யாகோப்சொன்னார்
குணமான செம்பிதுவைக் கூறுண்ணுமே. (390)

யானைக்காலுக்குத் தைலம்.

தலைகுனிந்து தொங்குகின்ற பட்சிதன்னைச்
சதம்பிடித்துக் குடல்போகக் உரலிலிட்டு
விலைகொடுத்து வெள்ளுள்ளி தூக்குகாலாம்
வீதமாய்ப் பரங்கிபட்டை தூக்குகாலாம்
அலைவிலாக் காயமது களஞ்சியிட்டு
அடைவாகப் பாண்டத்திற் பாணியிட்டு
தூலமான தூள்மருந்தைக் கலக்கிப்போடு
தூகையெரி யெட்டொன்று யிரக்கிக்கொள்ளே. (391)

கசப்பெண்ணெய் படியளந்து விட்டுக்காய்ச்சிக்
கருத்துன்னிக் கரண்டிதனிற் கலந்துஉண்ண
நசமான யானைக்கால் அண்டவாதம்
நாடிசடம் ஓதமுடன் வாதமெல்லாம்
பிசகாது யானைகண்ட சிங்கம்போலாம்
பேசரிது யிந்தயெண்ணெய் ஆட்டம்மெத்த
உசத்திபார் யென்று யாகோபுசொன்னார்
உண்மையிது நிசமாகும் உறுதியாம்மே. (392)

சூதகங்கட்டக் கிண்ணம்.

காந்தமது சேரரையில் நாழிகாடி
கணக்கிட்டுச் சாரம்சே ரிட்டரைத்து
பாந்தமுடன் மூன்றுபுட மிட்டுநீயும்
பதிவாக உருக்கியெடு மணியுமாகும்
சாந்தமுடன் பாத்திரங்கள் சமைத்துச்சூதம்
சரியாக அதிலிட்டுக் காய்ச்சக்கட்டும
கேந்தபடி சொல்லிவிட்டேன் பாகம்பாரு
நிலையான யாகோபு நிசஞ்சொன்னாரே. (393)

பாஷாணங்கள்சுத்தி.

சொல்லிவிட்ட பாஷாண வர்க்கந்தன்னைச்
சுருக்காகத் தொளாந்திரமாய் விட்டம்போட்டு
நெல்லுதனில் மூழ்கவைத்து அவித்துக்கொள்ளு
நிலைத்தசுத்தி யாகுமிது நிசமாய்த்தானே
வெல்லவே பணவிடைதான் கொண்டால்நல்ல
விருப்பமாய்ச் சகலநோ யெல்லாம்போகும்
புல்லறிவாயப் பண்டிதற்குப் புத்திசொன்னேன்
புகலரிய யாகோபு புலன்சொன்னாரே. (394)

சிலமுள்ள தவத்தோர்க்கும் உண்மைகண்டு
சிறந்திருக்கும் பெரியோர்க்கும் பொய்சொல்லார்க்கும்
ஞாலமதி லெடுத்தகா ரியங்கைகூடும்
நலமான ஏமவித்தை சித்தியாகும்
நாலதுவும் விட்டவர்க்குக் கட்சாராயம்
நாட்டமுடன் அபின்கஞ்சா சித்தியாகும்
கோலமில்லா துர்நடத்தை வித்தியாகும்
குவலயத்திற் கொடுப்பார்கை பூர்ப்பான்பாரே. ()

உலகுறுதி யாசாரந் தன்னைவிட்டு
உண்மையுள அறிவுதவ மில்லாமற்றான்
கலமில்லாப் பெண்ணைசை கொண்டலைந்தோன்
நன்மையே யினனதென்று அறியாமூடன்
தலமிகுந்த ஞானமில்லான் வியாதியாளன்
சண்டாளன் கொடும்பாவி இவர்களுந்தான்
பலமான சாஸ்திரத்தைப் படித்துத்தேர்ந்து
பாகமது செய்தாலும் பலித்திடாதே. (396)

கருநாகக்களங்கு.

சுத்தமுள்ள கருநாகங் காண்டியிட்டுச்
சுடுதணலி லுருக்கிட்டு வெடியைமாட்டு
பத்திடவே வருத்திட்டுச் சாமமூன்றில்
பரிதிநிற மாம்அன்ன மீதிலாட்டி
குத்தமறப் புடமூன்றில் சிகப்புமாகும்
கூட்டுநேர் வாழ்மடந்தைச் சோற்றிலாட்டி
சித்துசிறு புடமிடவே களங்குமாகும்
செல்வம்வரும் யாகோபு சொன்னவாறே. (397)

போட்டுவரக் களங்கத்தை ரவியில்ரெண்டு
புளவே கொடுத்திருக்கி லொன்றுதாக்கு
காட்டியே மதிநாலி லொன்றுதாக்கு
நாடிமிகக் கருப்பாகும் யிதனிற்றங்கம்
கூட்டியதைச் சேர்த்திருக்கி லுதிப்போடு
குடிலமரும் புடமிரங்கும் வர்ணமாகும்
தேட்டமிக வந்திடுங்காண் யாகோப்சொன்னர்
திடமான களங்கமிது தெளிந்துபாரே. (398)

நாகச் செந்தூரம்

சிருகின்ற நாகத்தைக் காண்டியிட்டுச்
சிறுதணலில் வைத்துருக்கி வெடியைத்தாக்க
வீரதுதா னடங்கிவிடும் நாற்சாமத்தில்
வெற்றிபெறக் குழியம்மி தன்னிலேதான்
பாரையுப்புப் பலம்ரெண்டு சீனம்நேரே
பாய்ச்சிடுநீ பழச்சாறு விட்டுநீயும்
கோரியதை யரைத்துருக்க மஞ்சளாகும்
கூறினர் யாகோபு குணமிதாமே. (399)

வரிக்கடுக்காய் நீர்தெளித்த சலமிருத்து
வாகனெட்டு வருத்திட்ட சோரனெட்டு
பரியவே உப்பு முன்னிடையேகூட்டிப்
பகையான சாறதனி லரைத்துக்கொண்டு
பிரியமாய் சிவக்கமட்டும் புடத்தைப்போடு
பெருமைவர ரவியிலிடு யேமமாகும்
விரிவான மேகபிணி வெட்டையோடும்
விதமாகும் யாகோபு வித்தைதானே. (400)

வெடியுப்புச்சீனம் ஓமத்திராவகம்.

சத்துருவைச் செயம்பண்ணும் உப்புபத்து
சரியிடைசேர் சீனமது பதினேந்தாகும்
மித்துருவா யிடித்துஅதை வாலியிட்டு
விட்டபின்பு முன்னீரைத் தள்ளிப்போடு
சித்திபெற நடுநீரை வாங்கிஓமம்
சீர்பெறவே பாதியிட்டுத் திரிகாள்வைத்து
நத்தியே வாலுதனை மூடுமென்று
நயமான யாகோபு நலஞ்சொன்னாரே. (401)

மூடிவரும் புகைநீரை வடித்துக்கொண்டு
மூனையிரு காசிடைதான் கொள்ளச்சொல்லு
தேடியமுன் வினைகளெல்லாந் தெரித்துப்போகும்
திரிகடுகில் சூலையெல்லாம் சினத்தில்போகும்
கூடியசோ ருண்ணபசி தீபனந்தான்
கொள்ளவே அய்யமெல்லா மகன்றுபோகும்
வாடியதோர் தேகமது வலுக்கும்பாரு
மகத்தான யாகோபு வகைசொன்னாரே. (402)

மிளகுத்திராவகம்.

வடிந்துநின்ற புகைநீரில் மிளகுபாதி
வலுவாகச் சேர்த்திடித்துத் திரிகாள்வைத்து
கடிந்துஅனல வரலைவைத்து பிரசுகிக்கொண்டு
காதிடைதா னுண்டிடவே வாதவாய்வு
படிந்துமிக் ஓடிவிடும் பதியுங்கெட்டு
பருதிகண்ட பனிபோலாம் படியும்நோவு
முடிந்தவுடன் பத்தியங்க ளுப்புத்தன்ளு
முடித்தமலர் வாசனைபோல புணமையாமே. (403)

இஞ்சித்திராவகம்.

நல்லயிஞ்சி தனைபெடித்துத் தூக்குலொன்று
நாடியிடு புகைநீரு அதனில்செட்டி
சொல்லியதை காள்மூன்று புளிக்கவைத்து
சூட்டியதை வாலியிட்டுப் புகைநீர்வாங்கு
மெல்லவதை பிருகாசு பிடையேகொள்ள
மேதினியில் மானிடாக்கு உழலைதாகம்
கொல்லவந்த உப்பிசமுஞ் சுரங்கள்போகும்
கூறினார் யாகோபு குணமிதாமே. (404)

திப்பிலித் திராவகம்.

ஒளிந்துநின்ற திப்பிலியைச் சேரிடித்து
ஓட்டிசெட்டிப் புகைநீரை விட்டுச்சாலில்
களிதிரிகா ளூறியதை வாலிபிட்டுக்
கருத்துடனே நீர்பிடித்துக் காசுவீதம்
தெளிந்துயிடு திரிதோசம் நாசமாகும்
திறமுடைய வாய்வுகளும் சுரமும்போகும்
அழிவான யிருமலறும் மென்றேசொன்னார்
அவனிதனில் நோய்போக அரைத்திட்டாரே. (405)

ஆனைத்திப்பிலி திராவகம்.

பேராணை திப்பிலியை உரலிலிட்டு
பிலமாகத் தூவைத்தெடித்துப் புகைநீர்செட்டி
சீராகச் சாடியிட்டு புளிக்கவைத்துச்
செழுமைபெறப் புகைநீரை வாங்கிக்காசு
நேராக ஆறுபொழு தண்ணவாதம்
நிலைகெட்ட மயக்கமது தேர்ந்துபோகும்
பாரான மானிடர்க்குப் பிணிகள்தீரப்
பாலித்தார் யாகோபு பரிசுதானே. (406)

கடைச் சரக்குத்திராவகம்.

ஆக்கிவைத்த கடைச்சரக்கு யெல்லாம்வாங்கி
அறுபத்துநாலுமொரு யிடையேசேர்த்து
போக்கதிலே புகைநீரை விட்டிடித்துப்
புலன்படவே தளரவிட்டுப் புளிக்கவைத்து
தாக்கியிடு வாலியிட்டு நீரைவாங்கித்
தவறுமல் தூட்டிடைதான் உண்ணச்சொல்லு
பாக்கியுள்ள நோயெல்லாம் கடலேபுக்கும்
பதிவாக யாகோபு பகர்ந்திட்டாரே. (407)

பூண்டுத்திராவகம்

பிரசவமே யானபெண்ணு ஞரித்துஉண்ணும்
பெலமான பூடதனை யிடைநிறுத்து
அரையாழல் உரலிலிட்டு யிடித்துவைத்து
அதுநிறையப் புகைநீரை விட்டுச்சாடி
திரமாகப் புளிக்கவைத்துப் புகைநீர்வாங்கித்
தெரிந்திடுநீ சன்னிசுர மூலவாய்வு
உரமான அதிசாரம் போகுமென்று
உறுதிபெற யாகோபு ஓதினாரே. (408)

திருசுச்செம்பு

ஊரல்பறி தனியெடுத்துச் செம்பதாக்கி
உகந்துநின்ற நாற்றமதை யிடையேபூசி
தேரயிடு புடந்தனிலே கரிபோலாகும்
திட்டமதாய் மிருதாரு யிடையரைத்து
பாரயிடு புடந்தனிலே செம்புமாகும்
பதியெடு மதியெட்டில் செண்டுசேரு
நாரியிடை பாகர்போல் மேனியாகும்
நாடியெடு யாகோபு நலஞ்சொன்னாரே. (409)

பூரீரெண்ணெய்களட்ட

சித்திரையின் நிலத்தனிலே பூத்திருந்த
செயலான பூவெடுத்துச் சாடியிட்டு
முத்திபெறப் பாணியிடு காலதாக
முதன்மையெடு கற்சுண்ணம் டொன்றுதாக்கி
பத்தியுட னனைத்தக்கலக்கிச் சாடியிட்டுப்
பரிந்திடவே கடற்குருவி படிதானொன்று
நித்தியமா யதைக்காய்ச்ச உப்பதாகும்
நிர்ணயமா யாகோபுநிசஞ்சொன்னாரே. (410)

சோதிபெறக் காய்ச்சியெடி விளாங்காய்போலே
தூய்யரவி தன்னிலிட்டு அஞ்சுசுண்ணம்
பாதிகுகை தன்னிலிட்டுப் புடமும்போடப்
பகரரிய வழலேயென்ற சுண்ணமாகும்
நீதிபெற யிமமருந்தா லெல்லாம்நீறும்
நிலைத்துநின்ற ரசவாதம் யெளிதிலாகும்
பாதிமதி சடையணிந்த பரமனருளும்
பாலித்தார் யாகோபு பதமாய்த்தானே. (411)

அப்பிரகச் சுண்ணம்.

தாயதனைக் கொன்றவனை உரலிலிட்டு
தடியிட்டுத் தானிடிக்கத் தண்ணீராகும்
மாயவே அப்பிரகம் கல்வத்திட்டு
மடியவரை மூவாறுபுடத்திற் சுண்ணம்
நாயன்மார் சொன்னபடி மேகமெல்லாங்
நடுங்கிவிடுஞ் சலரோகம் நாடாதோடும்
மாயாமல் நிலைத்துநின்ற யாகோசொன்னார்
மயங்கினு லெல்லாந்தான் வாயாதாமே. (412)

நாகவேதை.

வெண்ணாகங் காண்டியிட்டு உருக்கிப்பின்பு
வெடியையிடு யிடைசமமாங் காண்டியாலே
நண்ணாகக் கிண்டிவரச் சுண்ணமாகும்
நாடியெடு கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
பண்ணன யிரதமதை யிடையேசேர்த்து
பத்தியதை வெண்கருவா லரைத்துவில்லை
பிண்ணாகப் புடம்போடச் சுண்ணமாகும்
பேருலகில் யாகோபு பாலித்தாரே: (413)

கருசுச் சுண்ணம்.

சுன்னமாம் வங்கமென்ற ராஜாதன்னை
சூட்டுயிதில் நாலிலொன்று வீரங்கூட்டி
நன்னயமாய் மூன்னீரால் அரைத்துக்கண்டர்
நலமாக மேலிட்டுக் கதிரின்முன்னே
சொன்னபடி காயவைத்துப் புடமும்போடு
சுருக்காகச் சுண்ணமாங் கண்டர்நீற்றை
இன்னிலத்தில் ரசங்கட்டும் தங்கம்நீறும்
இன்பமா யாகோபு பிதஞ்சொன்னாரே. (414)

அயத்துருசுச் செம்பு

கூத்தனது பலம்ரெண்டு பண்ணிபாதி
குணமான வீரனுமே காலதாகும்
காத்தமுதல் யிருமூக்கால் அயமுமொன்று
நலமாகச் சரக்கைகந்துங் கல்வத்திட்டு
ஏத்திடுவாய் பழச்சாறு விட்டுஆட்டி
இனிதாகப் பெரியபுடம் போட்டெடுத்து
காத்தெனவே கல்வத்தி லிட்டுமுன்சார்
கருத்தாக விட்டரைத்து பெடுத்துவையே. (415)

விட்டரைத்துப் புடம்பத்து போட்டெடுத்து
வீசமிடை வெக்கார மிடையேசேர்த்து
மூட்டயிதைக் குகையிலிட்டு உருக்கச்செம்பாம்
முதன்மையிது புடமிரங்குஞ் செம்புமாகும்
சுட்டமதி இருபதுக்கு ரெண்டுதாக்கு
சுயமான பொன்னுகுஞ் சூட்டிப்பாரு
கட்டியபொன் னிடைசேர்க்க லாபங்காணும்
கருதினின்று யாகோபு கழறினாரே. (416)

வங்கசுத்தி.

போற்களத்திற் சண்டைசெய்யும் உப்புநீரே
புகலரிய அன்னமிடு புளியும்சொட்டி
பாற்குமரித் தண்ணீரிற் கரைத்துவைத்து
பதியகரு நாகத்தை யுருக்கிமூவேழ்
ஏர்க்கவே யிதினுருக்கிச் சாய்க்கசுத்தி
இதமான செந்தூர மினத்துக்கெல்லாம்
பார்க்கவே யிச்சுத்தி நல்லதாகும்
பதித்துவைத்தார் யாகோபு பண்பாய்த்தானே. (417)

பூமீர்சுத்தி.

பொட்டசோயி னிடைசெட்டிப் பாணியிட்டுப்
பொடியாக்கித் தனிலிலிட்டுக் காடியிட்டு
இட்டமுடன் காறும்பூ பலமீரெட்டு
இழுத்துபழச் சாறுவிட்டரைத்துச் சாமம்
நெட்டடங்க அரைத்தாவி காயவைத்து
நிலையான கரண்டியிட்டு உருக்கிமூவேழ்
திட்டமுடன் சாய்த்திடவே யெண்ணெய்க்கும்
செயசுத்தி யாகோபு செப்பினாரே. (418)

தருசுச்செம்புசுத்தி.

நீலனைத்தால் பழச்சாறு விட்டரைத்து
நேருருக்கு ரவியாகுந் தகடுதட்டி
ஞாலமதில் பெருவாயின் நீரில்கல்ல
நாட்டமுடன் சீனம்வெடி யுப்புக்குன்றி
காலமதில் காரமிடு மாலைநேரம்
கரைத்திடுநீ ரவிதனிலே பழுக்கக்காய்ச்சி
ஏலவேமூவேழு தரந்தான் தோய்த்து
யெடுக்கவே யாகோபு இயம்பினாரே. (419)

அரிதாரசுத்தி.

மடலினிய அரிதாரம் பலமும்நேராய்
மட்டிநீ ரிடைசமமாய்க் காரிசேர்த்து
திடமினிய கல்வமிட்டு அரைக்கநீராம்
திங்கினிய சந்திரன்மூன் வைக்கரெம்பும்
படமினிய அரிதார மோட்டிலிட்டு
பதிபெறவஞ் சுருக்கிடவே கசடுகக்கும்
விடமான சத்தியிது தாரம்நந்த
விடத்திலிதைச் சேரென்று விதஞ்சொன்னாரே.(420)

நாகசுத்தி.

புத்தாவு நாகத்தைக் கரண்டியிட்டுப்
புகலிலுப்பை நெய்யதனிற் சாரம்போட்டு
நித்தியமா யுருக்கியெடு பத்துவெட்டு
நிலையாகச் சாய்த்திடவே சுத்தியாகும்
பத்தவது அடங்கிநிற்கும் கசடுநீங்கும்
பதமுடையநிர்நாகம் பார்வைமெத்த
குத்தமது வாராது வாதந்தோணும்
குறைவில்லை யாகோபு கூறினாரே. (421)

எச்சரக்குஞ் சுத்திசெய்தா லெண்ணெய்க்கும்
இதமாகும் பதமாகும் யெழும்பியோடும்
பொய்ச்சரக்கைச் சுத்திசெய்ய மாயமாட்டா
புவியோர்கள் செய்தலன்று மில்லையென்பார்
மெய்ச்சரக்கு சொன்னதுபோற் செய்வீராகில்
மேதினியில் ரசவாதம் மேன்மையுண்டாம்
கைச்சரக்கைக் கைபாக மாகச்செய்தால்
கவலைவிடும் யாகோபு சருதினாரே. (422)

சிங்கிச் செந்தூரம்.

கல்லசிங்கி பலம்நாலு கல்வத்திட்டு
நாடியரை அன்னமென்ற நீரினாலே
மெல்லஅதைத் திரிகாளில் வில்லைதட்டி
மிக்கஅதைப் புடம்போட்டு மூன்போலாட்டி
செல்லபுடம் மூன்றிடச் செந்தூரமாகும்
சிறுகயிடி பணவிடைதான் நெய்யிற்கொள்ள
கொல்லவந்த வியாதிகளுங் கடலேபுக்கும்
கூறினார் பாகோபு குணமாய்த்தானே. (423)

சிங்கிவேதை.

செல்லவே பெரியோர்கள் சொன்னசிங்கி
செந்தூரம் ரவியுருக்கி நூற்றொன்றிட்டால்
எல்லாமும் யேமமாந் தின்றிட்டாக்கால்
இருந்துவிடுந் தேகமது யுகாந்தகாலம்
வெல்லவந்த கூற்றுவனு மஞ்சிப்போவான்
விதமான சூலபதி னெட்டுந்தீரும்
கல்லான வாதம்யென் பத்துநாலுங்
கடல்புக்கு மென்றுயாகோ சொன்னாரே. (424)

நீலகண்டர் நாத்தமது கூடச்சேர்த்து
நிர்ணயமாய்ச் சத்தானல் சொல்லக்கேளு
ஆலகண்டர் பழச்சாற்றி லுருக்கிச்சாய்க்க
அதிலுள்ள கல்மிசங்க ளகன்றுபோகும்
கோலமுள்ள ரவிபழுக்கும் உறுதியாகும்
குணமாகும் வாதங்கள் குடிலமில்லை
ஞாலமுள்ள சத்துக்கு உறுதியாகும்
நானறிந்த படிசொன்னேன் யாகோதானே. (425)

வடிவுகொண்ட சூரனுட கனியைத்தட்டி
வகைபருப்பு பலமெடுத்து உரலிலிட்டு
முடிவான மோதகமும் நெல்லிமுள்ளி
முதன்மையுரு பழத்தோலும் வெந்தையங்கள்
கடிதுபெரு சுண்டைவத்தல் நிம்பபத்திரம்
கணக்கிடையாய் வகையேழு மிடித்துக்காய
இடிவுபெற்று யிதனில்வெரு கடியாயுண்ண
இதமான சலக்கிராணி பெல்லாம்போமே. (426)

எலிகடிக்கு

வச்சிரத்தின் மூலிவேர் தொக்கச்சிவி
வடிவான அம்மியிட்டு மிளகுஉள்ளி
நிச்சயமாய்க் கண்டதிப் பிலிநேரிட்டு
நிலையாக அரைத்துயிடை கழற்சிஉண்ண
தச்செயலாய் நாலாறு உண்டுஉப்பு
தனைத்தள்ள வயிறுபோம் பாற்சோர்கூட்டு
துச்சயெலி கடிநீங்கும் ஈபமும்நீங்கும்
துடியாக யாகோபு சொன்னவாறே. (427)

சிவன்வேம்புத்தைலம்

தக்கனைத் தரித்தவன்பேர் மூலிவாங்கித்
தாட்டிகமா யிடைதானும் நாலுதூக்கு
மிக்ககதிர் வெய்யோனில் உலரவைத்து
மிக்ககல சத்திடுவாய் பொருந்தமூடி
தக்கபுடம் பொட்டுகுழித் தைலம்வாங்கித்
சாடியிட்டு நாறும்பூப் பொடியாய்ப்பண்ணி
மிக்கதயி லம்நாலி லொன்றுதூவ
மேன்மையென்று யாகோபு விளம்பினாரே. (428)

இரசபற்பம்.

வீரமுடன் பதங்கபற்பம் பலமும்நாலு
வீதமிடை மிளகுசுக்குத் தன்திகூட
பாரமூள்ள நெல்லிமுள்ளிக கடுக்காய்நேராய்
பார்த்தஅரை புகைநீரால் சாமம்மொண்டு
கோரமதா யுலர்த்தி யளவாகவுண்டை
கொடுத்திடும கோதரங்கள் முப்பத்தொன்றும்
நேரமது நில்லாம லோடிப்போகும்
நிட்சயமா யாகோபு நிசஞ்சொன்னாரே. (429)

நாகச்செயநீர்.

நாகத்தைக் காண்டியிட்டு உருக்கிக்கொண்டு
நலமாகப் பாதியிடை சூதமிட்டு
பாகமா யிலுப்பநெய் நிறையஊத்தி
பத்தியது யெரிந்திடுங்காண் ரசமுமோட
யூகமா யெரிந்தபின்பு சுத்தியாச்சு
உபாயமாய்க் கல்வமிட்டு நய்யத்தட்டி
சோகமா யிடைகாலாம் வீரமிட்டுத்
திப்பரவா யரைத்திடவே தண்ணீராமே. (430)

அரைத்துயிரு பீங்கானி லடவாகத்தான்
அதன்பின்பு துருசுதனைச் செம்புபண்ணி
கரைத்துத வடடித்துயிதைக்கரிமோட்டிற்றான்
கனமாகப் பழுக்கவைத்து நீரிற்றேய்க்க
உரைத்துவிடும் மதியெட்டில் ரெண்டுசேர்த்து
உறுக்கியிதை வளரபின் யேமஞ்சேர்த்து
தரைக்குளிதை உருக்கிடவே பொன்னுமென்று
தாஷ்டிகமா யாகோபு தான்சொன்னாரே. (431)

உப்புச் செந்தூரம்.

கல்லுப்புச் சீனமும்நே ரிடையேசேர்த்துக்
கனபழத்தின் சாற்றினலரைத்துக்கொண்டு
கல்லொத்த சாடியிட்டு உருக்குமஞ்சள்
கல்லநிற மாயிருக்கும் யெடுத்துநேரே
மல்லொத்த மடலினிய அரிதாரத்தை
மாட்டிவிட்டு முன்சாற்று லரைத்துவில்லை
தெல்லுப்போல் வில்லைபண்ணிப் புடமூன்றிட்டால்
திறமான செந்தூர மாகுங்காணே. (432)

கரைகாணுச் செந்தூரந் துருசுச்செம்பில்
காட்டிடுவாய் பத்துக்கு ஒன்றுதானும்
முரைகாண உருக்கிடவே யேமமாகும்
முடியவே பணவிடைதான் தேனிலுண்ண
கரையில்லை வாதசயம் நவின்றுபோகும்
காடியதோர் லிலேற்பனமும் காடாதோடும்
முரையோடே மேனியது கற்றாணுகும்
முதன்மையா யாகோபு மொழிந்தவாரே. (433)

நாகரசப்பதங்கம்.

சீருகின்ற நாகத்தைச் சுத்திபண்ணித்
திட்டமாய்க் கிண்ணியொன்று அயத்திற்பண்ணி
தேருகின்ற கல்லுப்பு சீனம்நேரே
திறமாக யிடித்துஅயக் கிண்ணிரெம்ப
பாருமே யிட்டமூழ்த்தி கடுவிற்பள்ளம்
பண்ணியே சூதமொரு பலமும்வாரு
நேருமே மேல்நாகக் கிண்ணிமூடிப்
நிச்சயமா யாகோபு பலன்சொன்னாரே. (434)

மூடியே தணியேழு பிலக்கசெய்து
மூடியதை அடிப்பில்வைத்து யெரிக்கயேறும்
நாடியே யிதைவழித்துச் செம்புபத்தில்
நலமாக வன்றிடவே யேமமாகும்
தேடியே பதங்கமதைத் தேனிலுண்ண
திடமான சூலபதினெட்டும்போகும்
ஓடிப்போம் சகலரோய் பறந்துபோகும்
உண்மையா யாகோபு உரைத்திட்டாரே. (435)

வெடியுப்புசுத்தி.

இணங்கன துபடிரெண்டு பாணியெட்டு
இதைக்கடத்தி லிட்டுமேல் வாலிலூடி
சினம்படவே சீலைசெய்து அடுப்பிலேற்றித்
திரமாக யெரித்துவிடு முக்கால்நீர்தான்
சுணங்கியது வடிந்திடுங்கான் சாடியிட்டுத்
துப்பரலா யெரித்துதண்ணீர் கொஞ்சஞ்சுண்டும்
தூணையோலை தொட்டுநீ ருகத்திற்குத்து
துவஞ்சயது பருப்புப்போ லுரையுந்தானே. (436)

துவரைவித்துப் போலுரைந்தால் பதமதாகும்
துடிபெறவே மூடிவைக்க மூன்றுநாளில்
கவரது போல் விழுந்து விடுங் கம்பிதானும்
கனமென்ற கம்பிதண லுருகாதப்பா
பவருரெம்ப கெருப்பிட்டால் பத்தமாட்டார்
பதமான யிந்தஉப்பைச் சுண்ணஞ்செய்தால்
நவமாக யெட்டெட்டு சரக்குங்கட்டும்
நன்மையா யாகோபு நலஞ்சொன்னாரே. (437)

வெடியுப்பு ஜெயநீர்குரு

சுத்தித்த வெடியுப்புப் பலமும்பத்து
சுருதிபெற்ற சீனமது ரெண்டதாகும்
மூத்திபெற்ற சாரமது ரெண்டதாகும்
மூடிவான கல்வத்தி லிட்டுத்தானே
நத்திபெரும் பழச்சாறு விட்டரைத்து
நலமாகச் சட்டியிட்டு அடுப்புதன்னில்
பத்தியே யெரித்திடவே சுண்ணமாகும்
பகரரிது சுண்ணத்தின் பண்புகேளே. (438)

சந்திரனிற் பீங்கானிற் சாரமிட்டுச்
சலம்பெருக வைத்திடவே செயநீராகும்
மூத்தனவே வீரமிட்டுப் பூரமிட்டு
மூடியதை வைத்திடவே சிவப்புமாகும்
சிந்தூரங்கள் வாராது சரக்குதன்னில்
சீர்பெறத்தோய்த் ததைவாட்டக் கட்டிப்போகும்
பந்தமது கரியில்நின்று ஆடும்வேதை
பகரிது யாகோபு குருச்சொன்னரே. (439)

தருசுதனைத் தோய்த்தெடுக்கச் சுண்ணமாகும்
துடியான கல்லுப்புக் கட்டிப்போகும்
வரிசையாய்க் காரமிடக் கட்டிநின்று
வகையாகக் கரியில்நின்று ஆடும்கோர்மை
பிரியமுட னின்றநிலை சொல்லிப்போட்டேன்
புத்தியுள்ள வாதியவன் கண்டுகொள்வான்
பரிசனத்துக் கிடமாகுஞ் சொன்னேனப்பா
பகரிது வெடியுப்பின் பலனைத்தானே. (440)

அரிதாரப்பற்பம்.

வைப்பிருந்த சுடர்க்கொடியோன் கட்டுத்தாரம்
வகைசமனாய்ப் பொடித்துகடம் அடியிலிட்டு
தப்புசவாய் மேல்மூடி சீலைசெய்து
துடியாகக் கனலெரிக்க உயரவேறும்
தப்பிதமில் லாதெடுத்துக் கல்வத்திட்டுத்
தணப்பாலே விட்டரைத்து வில்லைபண்ணி
இப்படிக்குப் புடம்போடப் பற்பமாகும்
இனிமையா யாகோபு சொன்னவாறே. (441)

மதுவிலிடு கபவாத சன்னிதீரும்
மயக்கமறும் அடிவயிறு வாந்திபோகும்
அதிசயங்கள் நீர்முறியும் தோஷம்போகும்
அடுத்திசிவு குடல்புரட்டும் கசலும்போகும்
கிதிபெறவே காசமுதற் சொல்லாதோடும்
நிலைத்துநின்ற பெருவயிறு நீங்கிப்போகும்
கதிபெறவே கதிர்கண்ட பனிபோலாகும்
கண்டபடி சொன்னதிந்த க்காட்சிதானே. (442)

பாஷாணபற்பம்.

எலிகொல்லி பலம்ரெண்டு சூதம்நேரே
இதையரைப்பாய் உமிழ்நீரிற் சாமம்நாலு
பலியிடுக முன்கடத்தி லிட்டுமூடிப்
பதமாகச் சீலைசெய்து அடுப்பிலேற்றிக்
கலிநீங்க வெரித்தடு மேலேயேறும்
கல்வமிட்டு மூன்படிக்கு அரைத்தெடுத்து
கலியவே ஐந்துதர மெரித்தெடுக்க
நாதாந்த பற்பமிது நாடிப்பாரே. (443)

வீரரசப்பதங்கம்.

அடுத்தடு வீரமது பலமுமொன்று
அதில்சேர்க்க உருக்குத்தூள் பலமுமொன்று
தொடுத்துயிடு பொடியாக்கி அரைக்கச்சூதம்
சூட்சமுடன் கக்குமதைப் பிங்கானிட்டு
நடுத்தகல் லுப்புபடி நாலெடுத்து
தனிவருத்த செங்கற்றூள் பொடியுமொன்று
விடுத்ததனி யிடித்தரசட்டி நிரையப்போட்டு
விருப்பமுடன் தூள்நடுவில் குழியைப்பண்ணே.(444)

சூதமிடு குழிநடுவே சட்டிமூடித்
தடியான மண்செய்து அடுப்பிலேற்றி
வீதமுட னெரித்திடவே சாரமூன்று
விடுபடவே எறியது பற்பமாகும்
காதலுடன் வழித்தெடுத்துப் பதங்கந்தன்னைக்
கலரஅடை சுப்பியிட்டு வெரிநால்சாமம்
நாதலுடன் மூக்கணனைப் போலேயேறும்
எடுத்துவைத்து யாகோபு யிதஞ்சொன்னாரே. (445)

நெல்லினிடை யனுப்பானந் தன்னிலேதான்
நிர்ணயமாய்க் கொண்டிடவே மேகசூலை
சொல்லுமுன்னே பறந்தோடும் வாதந்தானும்
தொடுத்துவந்த புற்றுகள்தான் சுணங்கிவாடும்
நல்லறிவு வந்துவிடும் மூட்க்குத்தீரும்
நவிலுமுன்னே சயரோகம் போகுங்கண்டீர்
புல்லறிவு சன்னிமூத லோடுமென்று
பூதலத்தில் யாகோபு புகன்ற வாறே. (446)

கால்கைநடுக்கலுக்கு

எக்கியத்திற் பலிகொடுக்குங் கொழுப்பிலேடி
இந்திடைக்குத் திரிகடுகு பரங்கிப்பட்டை
ஒக்கவெடு உள்ளியுடன் சேர்த்திடித்து
ஒருபானை தன்னிலிட்டுப் பாணியெட்டு
தக்கயெரி யெட்டொன்றுய் வற்றக்காய்ச்சித்
தனியாக நல்லெண்ணெய் எடையேசேர்த்து
பக்குவமா யெரித்துசிறு கரண்டிகொள்ள
பாக்கியவான் யாகோபு பலன்சொன்னாரே. (447)

சொல்லடங்கா வின்குகட்டுந் திறமுமாகும்
சோர்வையுள்ள கைநடுக்கம் நசலும்போகும்
நல்லறிவு போலவே தேகமாகும்
நானுண்ட எண்ணெய்யிது நாட்டிற்சொன்னேன்
வெல்லரிது தாதுவுங் கெட்டிப்போகா
வீதமிகும் நரம்பிறுகிப் பலமுண்டாகும்
புல்லறிவு யில்லையிந்த எண்ணெய்நேர்மை
போக்கோடே யாகோபு புலன்சொன்னாரே. (448)

விரைவாதத்திற்கு.

மூக்கணுடைத் தேசுரண்டிச் சட்டியிட்டு
மூன்னீரை விட்டுஅதைப் பிழிந்துகொண்டு
திக்கினிய வெங்காயம் கழஞ்சுளட்டு
சிறந்திருந்த தந்திவிரை பலமுங்கால்தான்
நக்கலுண்ட ரசகற்பூ ரம்ப லங்கால்
நாட்டியெரி யெண்ணெய்வடி நாட்டுளோர்க்கு
மிக்கசிறு கரண்டிநிறை எண்ணெய்உண்ண
மிகயெளிதில் விரைவாதம் போகுந்தானே. (449)

போகுமே கழல்வாதம் அண்டவாதம்
புறமடைத்தல் நெஞ்சிரிவு நீங்கிப்போகும்
ஏகுமே யிடுப்புவலி அந்திரவாய்வு
இதமான மகோதரங்கள் யிளைபோகும்
பாகுமே பத்தியந்தான் புளியாகாது
பதிவான நோயதும் பறந்துபோகும்
யூகமதாய் நீரடைப்பும் பலதுமேகும்
நீணிலத்தில் யாகோபு சொன்னவாறே. (450)

விக்கலுக்கு

கணபதிமுன் தூபமதைக் கல்வத்திட்டுக்
கரும்புரச மிடைசேர்த்து அரைத்துக்கொண்டு
பணவிடைதான் தினகாவில் தடவிப்பாரு
பஞ்சிலிட்ட தீப்போலே விக்கல்நாலும்
சென்மதிலே ஒடிவிடும் ஓடாவிட்டால்
திரும்பதினி னாட்கொள்ளச் சணத்திற்புக்குங்
குணமதனை யறிந்துகொள்ளு மென்றுசொல்லிக்
குற்றமில்லா யாகோபு கூறினாரே. (451)

வயிற்றுவலிக்கு

மூக்கணுடை பெலிகொடுக்கும் மூத்தோன்கையில்
மூனிவாகப்பிடித்த கொம்பை பொடியாய்ப்பண்ணி
மிக்கயிடை வெடிசேர்த்து அரைத்துப்பாணி
வில்லேதட்டிப் புடம்போடச் சுண்ணமாகும்
பக்குவமாய்த் திரிகடுகி லிருநாள்கொள்ளப்
பறக்குமடா வயிற்றுவலி பித்தமெல்லாம்
தக்கபெரி யோர்சொன்ன நீதிதன்னைச்
சாற்றினே னிந்நூலிற் சார்பாய்த்தானே. (452)

வங்கச்செயநீர்.

பலதோஷம் போக்குகின்ற வங்கந்தன்னைப்
பலமொன்று கரண்டிதனி லுருக்கும்போது
தலைமையொடு வெடிரெட்டி உருகும்பெண்டும்
தனித்தேய்ப்பாய்க் கரண்டியிலுற் சாமம்ரெண்டு
பிலமாகக் குங்குமத்தின் நிறமதாகும்
பேசரிய சுண்ணமாம் பலிக்கும்வேதை
நலமாகச் சாமிட்டுப் பனியில்வைக்க
நாடறியச் செயநீராம் நாட்டுளோர்க்கே. (453)

உண்டான செயநீரில் வீரமிட்டு
உறுதிபெறப் பிங்கானில் வைத்துக்கொண்டு
பண்டான தருசுதனிற் செம்பெடுத்துப்
பதியஅடி தகடாகக் கரியிலிட்டுத்
தண்டான ஊதிவிடு செயநீர்தன்னில்
தோய்த்தஎடு அதைபெட்டுத் தாமுந்தானும்
கண்டருட செம்பதுவுங் கட்டிப்போகும்
கருத்தறிந்து யாகோபு காட்டினாரே. (454)

கட்டினதோர் செம்பெடுத்து நய்யத்தட்டி
கணக்காக உடைத்திட்டு மதிதானெட்டில்
ஓட்டியே ரெண்டுமிடப் பொன்போலாகும்
ஓங்கிளடை பாதியிடி தங்கந்தானும்
கொட்டியதோர் தேள்போலே யெட்டுமாகும்
கூடுமிதில் வேதைவருங் கூர்ந்துபாரு
செட்டிகையில் விற்றுடனே செலவுசெய்யத்
திறமாக யாகோபு செப்பினாரே. (455)

நாகச்சுண்ணம்

சோருகின்ற நாகமதை ஊதநீறும்
சுயமாக பணவிடைதா னனுப்பானத்தில்
வேறும் ஆடாதோடைத் தளிரைவாங்கி
விதமாக பிட்டவித்து அதைப்பிழிந்து
காருமே அதிலிடவே காலைநேரம்
கனிந்துமே கொண்டிடவே யிருமல்போகும்
சாருகின்ற குத்திருமல் காசம்போகும்
சரியாக யாகோபு சாற்றினாரே. (456)

பொன்னுங் கன்னித் தைலம்.

தோணுமலி ராவணன் சிறையெடுத்த
தோகைபொன்னுங் கன்னிதனைப் பிடுங்கிவந்து
நாணுதே கல்லுரலி லிட்டுநய்ய
நலம்பெறவே திலகமுன் னெடையும்செட்டி
வாணுமல் வாங்கியிடி பாணிரெட்டி
வகையாக எரித்துமூடா ஊற்றிக்காய்ச்சி
காணுத தைலங்கள் முழுகச்சேரு
கண்களுக்கு அருந்ததியுங் காணுந்தானே. (457

வெள்ளெழுத்து மாறுவதற்கு.

மயிர்களேந்து தைலமது முழுகும்போது
மறுபாசிப் பயருஞ்சி யக்காய்சேர்த்து
ஓயிலாகத் தானரைத்து முழுகிப்பாரு
உறுதிபெறுஞ் சிரகினுக்குக் குளிர்ச்சியாகும்
பயிலான கண்பார்வை ஒளிவுதோணும்
பரிவான வெள்ளெழுத்தும் மாறிப்போகும்
தைலமிந்த விதமுழுக உலகத்தோர்க்கு
தாட்டிகவான் யாகோபு சாற்றினாரே. (458)

கண்டமாலைக்குத் தைலம்.

சிரியநங்கை யிலைதூக்கு உரலிலிட்டுச்
சிறக்கயிடி சாறுவரும் படியுமாகாலு
சரியிடைசேர் கோசலத்தின் பாலும்நேராய்
சட்டியிட் டுபம்யெரிக்க நெய்யதாகும்
பிரியமுட னெடுத்தமயிர் களைந்துமூழ்க
பித்தமுதல் பொடுவுகளும் கண்டமாலை
துரிதமதா யேகிவிடுங் குளிர்ச்சியாகும்
சுகமாக யாகோபு சொன்னதாமே. (459)

காமாலைக்கு.

சிருநெல்லி தானிலையை உரலிலிட்டுச்
சிறக்கயிடி சாறுவருங் கால்ச்சேரிட்டு
பெருகனடை கோசலம்பால் எடைகலக்கி
பேசரிய காலையிலே நாள்மூன்றுண்ண
மருகிவிடும் உப்பதனைத் தள்ளிப்போடு
வகையான காமாலை தீர்ந்துபோகும்
உருகுகின்ற உடலதவும் வலுக்குமென்று
உறுதிபெற யாகோபு சொன்னார்தாமே. (460)

வெடியுப்புத் திராவகம்.

பொட்டலையும் பலமாறு இந்துப்புமூன்று
புகலரிய சாரம்ரெண்டு பேதிஒன்று
கட்டலையாய்ப் படிகாரம் பதினேந்தாகும்
கருதுமொரு பூரீரு பொரியுமொன்று
திட்டமுட னிடிகடத்தி லரையுமிட்டுச்
சீர்பெறவே வாலையிட்டு அடுப்பிலேற்றி
சட்டமுட னெரித்திடவே புகைரீராகும்
சரியான பாகமிது சார்ந்துபாரே. (461)

திரிகடுகு வகைக்கொன்று தூக்குமிட்டு
திட்டமாய்க் கல்லுரலி லிடித்துநய்ய
வரிசையுடன் பொட்டலையின் திராவகத்தை
வண்மைபெற செட்டிப்பு யிட்டுமூன்று
உரிசைபெற நாள்வைத்துக் கலையத்திட்டு
உகந்ததொரு வாலையிட்டு தீனீர்வாங்க
பரிசைபெற பிரக்கியே சீசாதன்னில்
பரிவுடனே தானடைக்கச் சொன்னர்பாரே. (462)

அடித்துநின்ற திரிகடுகு பொடித்துநன்றாய்
அதைச்சேர்த்து யிட்டுமெள்ள உண்ணச்சொல்லு
தொடுத்துநின்ற குன்மமெல்லாங் கடலேபுக்கும்
துடியான மகோதரத்துக் கொருசொட்டிட்டுப்
படுத்துவரும் கதிரோனைக் கண்டுநீங்கும்
பனியதுதான் விலகுமது போலேயாகும்
உடுத்துநின்ற வாயுவெல்லாங் கதறியோடும்
உற்றதொரு யாகோபு உரைத்தவாறே. (463)

கம்புக்கஞ்சித் திராவகம்.

கள்ளமிலா கம்பஞ்சோர் காடிதானும்
கணக்காக நாலுபடி கடத்திலிட்டு
உள்ளபடி சீனம்ரெண்டு தானும்போட்டு
ஊறவைத்து வாலியென்ற சட்டிமூடி
தள்ளாதே புகைநீரை வாங்கிக்கொண்டு
தனித்துமே ஒருகமண்டி கொள்வீராகில்
துள்ளவே நீர்ச்சுருக்கு செரியாமாந்தம்
திறமான மலக்கட்டுந் தீர்ந்துபோமே. (464)

காடித் திராவகம்.

அன்னத்தி னீர்காடி படியும்நாலு
அளந்துவிட்டு யெட்டிலொன்று சீனஞ்சேர்த்து
சன்னயமாய் வாலியிட்டுப் புகைநீர்வாங்கு
நன்றுகக் கரண்டிகொள்ளப் புளிக்கும்பல்லு
சொன்னபடி காந்தியுமாஞ் சன்னிதீரும்
துயரறுமே வாயுவெல்லாஞ் சொல்லாதோடும்
முன்னோர்கள் சொன்னபடி யானுஞ்செய்தேன்
முக்கியமாய் யாகோபு மொழிந்தவாறே. (465)

துருசுச் செம்புசுத்தி

நீலஞ்சுத்தான் பழச்சாற்றி லூறவைத்து
நீயாட்டிக் காயவைத்து உண்டைபண்ணி
காலமொரு புடமிடவே கரியுமாகும்
நணக்காகக் கால்க்காசு மிட்டுருக்கு
ஞாலமதில் செம்பாகு மெடுத்துக்கொண்டு
நலமாகப் பழுக்கவே காய்ச்சிமுன்சார்
சாலமாய்த் தோய்த்தெடுக்கச் சுத்தியாகும்
சரிவாரவே யாகோபு சொன்னார்தாமே. (466)

இஞ்சித் திராவகம்.

நல்லிஞ்சி தூக்கொன்று யிடித்துச்சாறு
நலமாகப் படியெட்டு கடத்திலிட்டு
மெல்லவே ஒமமிடு நீரில்கோரை
விதமாக வாலியிட்டு வடித்துஉண்ணக்
கொல்லவந்த குன்மமெல்லா மோடிப்போகும்
கொடுமையுள்ள வாயுமுதல் வெப்பும்போகும்
மெல்லவே பிணியெல்லா மகன்றுபோகும்
மேதினியில் யாகோபு விளம்பினாரே. (467)

வகார வங்கச் செந்தூரம்

பாரேநீ காரீயம் பலமும்பத்து
பதக்குத்தா னுட்டமூரி உருக்கிச்சாய்க்க
காரேநீ கசடகலு மன்னமிட்டுக்
கருணைபெற அரைத்தரைத்துப் புடமூன்று
சரேநீ போட்டுஎடு மஞ்சள்போலாஞ்
சரியாக யின்னுமொரு புடமும்போடு
பேரேநீ யெடுத்துவைத்துப் பின்புகேளு
பிரீதியா யாகோபு பேசினாரே. (468)

பேசினதோ ரரிதாரம் பலமும்பத்து
பின்னெடுத்து முன்னமூரி தன்னிற்றாக்கித்
தூசதனிற் கிளிபோலத் தொங்கவிட்டுத்
துணிசரமா யொருசாம மெரித்துவாங்கு
பாசியறும் ஓட்டிலிட்டு அமூரிதன்னைப்
பதமாகச் சுருக்கிட்டுப் பகர்ந்தெடுத்து
வாசனையாய் மூன்வங்கச் செந்தூரத்தில்
வகையோடே பாதியிட மதிசொன்னாரே. (469)

சொன்னதொரு கன்னியுட பாலிவிட்டுச்
சுகமாக அரைத்துமுன்போற் புடத்தைப்போடு
நன்னயமாய் மூன்றுபுடம் போட்டெடுத்து
நலமாகப் பாருநீ பற்பமாகும்
இன்னிலத்தில் பற்பத்தில் நாலிலொன்று
இதமான வெண்காரங் கூடச்சேர்த்து
சின்னமதா யரைத்துருட்டிக் குகையிலிட்டுத்
திடமாக வுருக்கிமெள்ளச் சாய்த்துப்பாரே. (470)

சாய்த்தருக்கு கரண்டியிலே யிளகும்போது
சலுதியா யெட்டிலொன்று விந்தைச்சேர்த்து
மாய்த்துயெடு குழிக்கல்வந் தன்னிலிட்டுச்
மடியரை அன்னத்தால் வில்லைதட்டி
பாத்திபனுங் கதிரவன்முன் காய்த்தெடுத்து
பத்திதருங் கல்லுப்பும் சுண்ணம்நேரே
போத்தியரை மேலங்கி போட்டுச்சேவற்
புடம்போட்டுக் கல்வத்தி லிட்டுக்கேளே. (471)

கல்வமிட்டு அரைத்தமுன்போற் கலசங்கட்டி
காரணமாய்ப் புடம்போட்டு யெடுத்தகல்ல
மல்கயிடு தாரமதை நாலிலொன்று
மயமாக சேர்த்தரைத்துக் குகையிலிட்டுக்
நல்கவதை யுருக்கவது கசடுதீரும்
நலமான தங்கத்தை யிடையேசேர்த்து
செல்கயிதை உருக்கியெடு பென்றுதானுந்
திறமாக யாகோபு சொன்னர்தாமே. 472)

உருக்கியெடு இரண்டுமொன்றுப்க் கல்வத்திட்டு
உரியெடைதான் சூதமிட்டுத் தாரம்நேரே
பெருக்கியரை அன்னத்தி னீரிலுலே
பெலம்பார்த்துக் கதிரினிலே காயவைத்து
மெருக்கியெடு மூன்னங்கி கட்டிக்கொள்ளு
நிர்ணயமாய் புடமூன்றில் செந்தூரிக்கும்
மூருக்கியிடு ரவிநூற்றில் ஒன்றுதாக்க
முக்கியமா யாகோபு மொழிந்திட்டாரே. (473)

மொழிகேளு ரவிநூறும் பழுக்கும்பாரு
முதன்மைபெறப் புடமிறங்கும் தங்கந்தானும்
வழியோடே பணவிடைதானுண்ணச்சொல்லு
வலதுள்ள ராவணனே டனுமார்போலாம்
பொழியுமது விந்துகளும் பெலனுமாகும்
பொற்பிரபை மேனியுமாம் சாவேயில்லை
கழிபோல நாவுதடுஞ் சிவந்துகாணும்
கருத்தகந்த யாகோபு கீர்த்திதானே. (474)

என்றுவங்கந் தனிலுழைத்தாற் றங்கமாகும்
இருந்திடத்தி லிருக்கலா முத்தியாகும்
அன்றுமனம் புத்தித்த மாங்காரந்தான்
அடுத்துமெள்ள யிருத்தியங்கம் பார்த்துத்தேறு
கன்றுபோல் மேனியது போலேயாகக்
கற்பத்தில் முதற்கற்ப மிதுதானுகும்
என்றாழி காலமெல்லாம் மிருப்பாரென்று
இருந்துரைத்தார் யாகோபு யிதமாய்த்தானே. (475)

காரீயச் செந்தூரம்.

கார்ரியதைச் சுத்திபண்ணிக் குகையிலிட்டுக்
கனமாக வுருக்கியெடை நறும்புவிட்டு
வீரியமாய்ப் பார்த்திடவே கரித்தூள்போலாம்
மிகநலமாம் அன்னத்தி னீராலாட்டி
ஆரியபின் விஸ்ணுவின் மனவிகூட்டி
அரைத்துவில்லை கதிரவன்முன் காயவைத்து
ஊரிலுப்பு சுண்ணமும்நேரிடித்துக்கூட்டி
உறவாகப் புடமிட்டு யெடுத்துவாங்கே. (476)

வாங்கியபின் நின்றமேற் கவசந்தள்ளி
மருகநின்ற கவசமதை உடைத்துப்பார்த்தால்
தேங்கியது கூடாகக் கவசத்துள்ளே
திறமாக நின்றிடும்பார் கல்வத்திட்டு
தாங்கியே பழச்சாறு விட்டுஆட்டித்
தன்மையுடன் கதிரவன்முன் காயவைத்து
ஓங்கவே மூன்றுபுடம் போட்டெடுக்க
ஒழுங்கான செந்தூர மாகும்பாரே. (477)

சித்தியாய்ச் செந்தூர முருக்கம்பூப்போல்
சிறிதெடுத்து ரவிநூற்றி லொன்றுதாக்க
முத்தியா மோகூமாம் யேமமாகும்
முதிர்ந்தநரை பணவிடைதா னுண்ணப்போகும்
வெத்தியாய் மண்டலத்திற் கற்றாணுகும்
விளம்பினேனி மிந்நூலிற் பொய்போகாது
நத்தியே செய்திடுவீ ரென்றுமேலாம்
நலமாக யாகோபு நவின்றிட்டாரே. (478)

வங்கச் சுத்தி.

அப்புதனைக் கரண்டியிட் டுருக்கிநல்ல
அதில்ரெட்டி உப்புதனைப் போட்டுக்கிண்டு
செப்பினதோ நிருசாமன் கிண்டிக்கொண்டு
செயலான அண்ணமிட்டுக் கல்வத்தாட்டி
ஒப்பிடவே வில்லைதட்டி வெய்யோன்தன்னில்
யுலரவைத்துப் புடமொன்றில் மஞ்சளாகும்
தப்பிதங்கள் வாராது யெடுத்துப்பாரு
தாட்டிகமா யாகோபு அருள்செய்தாரே. (479)

புடமிட்ட வில்லைக்கு யெட்டிலொன்று
பொருந்தவே வெங்காரஞ் சேர்த்தரைத்து
நடமிட்ட குகையிலிட்டு உருக்கித்தீரு
நலமாக உருகியது சுத்தியாகும்
திடமூற்றுக் கரண்டிதனில் வைத்திருக்கி
சீர்பெறவே விஷ்ணுவின் பெண்டீர்தன்னை
இடமிட்டு நேராகத் தாக்கிக்கல்வம்
இழுத்தரைத்து வில்லைகதிர் காயவையே. (480)

வங்கச்செந்தூரம்.

கதிரவன்மூன் காயவைத்துப் புடமூஞ்து
கடிதாக உருக்கிமெள்ள விந்துநேரே
பதிவாகச் சேர்ந்துருக்க உடைந்துதூளாம்
பாகமதாய்க் கல்வத்திற் கொட்டிநல்ல
முதிராத சோறுதனை விட்டரைத்து
மூனேந்தூவி காயவைத்துப் புடமூன்றிட்டால்
சதிராகப் பவழநிற மாகுமென்று
சமத்காக யாகோபு சாற்றினாரே. (481)

செம்புருக்கி நூற்றுக்கு ஒன்றுயிட்டுக்
சிறக்கலதை யெடுத்துமெள்ளப் பார்க்கும்போது
நம்புதலே யேமமது சித்தமாகும்
நானிலத்திற் புடமிறங்கும் நாட்டுளோர்க்கு
தெம்புடைய வாதமது சித்தியாகும்
சீர்பெருகும் வாழ்வுகளுஞ் செல்வமுண்டாம்
தும்பமற்ற வாதமிது அனுப்பானத்தில்
கூட்டியே பணவிடைதான் கொண்டுபாரே. (482)

கொண்டிடவே வாதங்கள் குட்டம்போகும்
கூறினர் யாகோபு குணங்களாகக்
கண்டிடவே மகோதரங்கள் சயங்கள்போகும்
காரணத்தின் சூலைபதி னெட்டும்போகும்
விண்டிடவே பித்தங்க ளெல்லாம்போகும்
விதமான மாந்தவிர்போல் மேனியாகும்
குண்டிடவே காயசித்தி யோகசித்தி
குணமாக யாகோபு கூறினரே. (483)

இளநீர்க் கிருதம்.

மூக்கனுட யிளையோனை வெட்டிநீரை
முழுச்சட்டி தன்னிலிட்டு உள்ளிப்பூண்டை
சிக்கெனவே உரித்துயிடு சேரைதானும்
சீர்பெறவே அவித்தெடுத்து முன்னீர்தன்னில்
கைக்கடுப்புக் கிதையுண்ணத் திரிநேரந்தான்
கால்வீக்கம் வயிர்போதல் மூலவாய்வு
மிக்கெனவே யோடிவிடும் புளியாகாது
மீதுரைத்தார் யாகோபு மேன்மைதானே. (484)

கெந்தித்தயிலம்.

மூத்தமகன் பெலியேற்கு மிளையோன்றன்னை
மூணீவிப் போத்துசட்டி தன்னிலிட்டு,
பாத்துவெள்ளை பூடுரித்துஒரு சேரிட்டுப்
பதமாகஅவித் தெடுத்து நீக்கிநீரை
சேத்துவெடு சிவந்திறம் நாற்றங்காலாம்
சேர்பொடித்து சட்டிதனி லிட்டுமூடி
காத்துயிதை கலசமிட்டுத் தைலம்வாங்கு
கருணைபெருங் கெந்தகத்தின் தைலமாமே. (485)

தைலமதைத் தட்டெடையுங் கொள்ளச்சொல்லு
தாதுவெல்லா மிறுகிவிடும் வாதந்தானும்
ஓயிலாக ஓடிவிடுங் குஷ்டம்போகும்
உற்றுநின்ற கடிவிஷங்கள் ஒழிந்துபோகும்
வெயில்கண்ட பனிபோலே வியாதிதீரும்
வேதையில்தில் லெம்பவுண்டு விரிக்கப்போகா
குயில்போலே அங்கம்வரும் மூலம்நீங்கும்
கூறினர் யாகோபு குணமிதாமே. (486)

அ ய ம ணி.

ஆய்ந்தெடுத்து அரைபொடியும் நாலில்ரெண்டு
ஆதிமகர் விஷ்ணுவின் மனையாள்தன்னைத்
தோய்ந்தபொடி சேர்த்தரைத்துக் குகையிலிட்டுத்
தணிவாக உருக்கிடவே உருகுஞ்சத்தாய்
ஈந்தெடுத்த பொரிகாரம் பாதிசேர்த்து
இதையரைத்து உருக்கிடவே நிரைசத்தாகும்
வாய்ந்தபடி சவுடுதிரை யற்றுநல்ல
மணியாகும் யாகோபு வகைசொன்னாரே. (487)

அ ய க் க ள ங் கு.

கல்லஅய மூருகையிலே நாலிலொன்று
நலமான தங்கஞ்சேர் தங்கம்நேராம்
வெல்லரிய நாகமிடு களங்குமாகும்
விடுபட்டு அகையெடுத்து ரவியில்பத்து
சொல்லரிய ஒன்றிடவே யேமமாகும்
சூக்ஷமிது காலறிந்து துயர்ந்துபாரு
புல்லறிவைப் போக்கிநூல் விபரம்பார்க்கப்
போக்குடனே யாகோபு புலன்சொன்னாரே. (488)

அயக்களங்குச் செந்தூரம்.

கல்லிரும்புக் களங்கத்தைக் கல்வத்திட்டு
காற்றமதை யிடைசமனுய் சூதஞ்சேர்த்து
கொல்லவதைப் பொற்றலியின் சாற்றைவிட்டுக்
குணமாக அரைத்துடனே குப்பியிட்டு
வெல்லவதை அடுப்பிலிட்டு மூச்சாமந்தான்
வீதமெரி செந்தூர மாகும்பாரு
சொல்லிவாய் மூடுமுன்னே ரவிபழுக்கும்
சூட்சமா யாகோபு சொன்னவாறே. (489)

பணவிடைதான் செந்தூரங் கொண்டாயானல்
பாலனு யெந்நாளு மிருக்கலாகும்
குணமில்லா நோயெல்லா மேவல்கேட்கும்
குடிலமுறு சூலையெல்லாங் கெட்டேயோடி
தினமுடனே கடலதனி லொளிக்கும்பாரு
நிறப்பாகும் அயக்களங்குச் செந்தூரந்தான்
உணவதனில் உப்போடு புளியுந்தள்ளு
உத்தமமாம் யாகோபு ஓதினாரே. (490)

அப்ரேகநவநீதம்.

அப்பிரேசந் தனையெடுத்து கல்வத்திட்டு
அரனுடைய விந்துபெண்டீர் பெடையேசேர்த்து
ஒப்பிஅரை ஒருசாமம் அதைவழித்து
உள்ளடைத்துக் குகைதனிலே பாதியிட்டு
தப்பிதமாய்ப் போகாம லுருக்கித்தீரு
தகர்ந்துமே அதுஉருகி மணிபோலாடும்
செப்பினே னிப்படிநீ யெடுத்துக்கொள்ளு
செந்தமிழால் யாகோபு சொன்னார்தானே. (491)

கல்க்காந்தம் பலம்காலு நிறுத்துக்கொண்டு
கனகவெள்ளைப் பாஷாண மிடையேசேர்த்து
கல்லாக அரைத்துமேலொரு சாமந்தான்
களினமூடன் அன்னமதா லரைத்துக்கொண்டு
கல்க்காந்தங் குகையிலிட்டு உருக்கிப்பார்த்து
கதித்துஒரு மணியாக வாங்கிக்கொண்டு
மெல்லயிதைச் செந்தூர மாக்கக்கேளு
விளம்பினர் யிந்நூலில் விளங்கதாதானே. (492)

நல்லிரும்பு காந்தம்அப்பி ரேகம்நோய்
நலமாக உருக்கினதை யுடைத்துக்கல்வம்
செல்லவிட்டு அரைத்துகையா னீரிலுலே
சீராகப் புடம்போட்டு யெடுத்துக்கல்வம்
நல்கயிடு வன்னிதனைப் பலங்காலாக
நாட்டியிடு முன்னீரா லரைத்துக்கொண்டு
மல்கயிடு பின்னும்வன்னி பலங்காலாக
மாட்டியரை யாகோபு மதிசொன்னாரே. (493)

சொன்னபடி வில்லைதட்டிக் காயப்போடு
சுகமாகக் காடையென்ற புடத்தில்நீறும்
நன்னயமாய்ப் பணவிடைதான் கொள்ளச்சொல்லு
நலமான வாதபித்த சிலேற்பனத்தால்
சின்னமென்ற ரோகமெல்லாம் ஒழிச்சுங்கண்டாய்
செயமான சலரோக மேகச்சூலை
உன்னியே கடலதுதான் புக்குமென்று
உறுதிசொன்னர் யாகோபு உண்மைதானே. (494)

வங்கச்செந்தூரம்

கருவாக மோரிடையாங் சரண்டியிட்டுக்
கனிந்தமது உருகையிலே வெடிதான்பாதி
வருவாக மதைப்பிரட்டி வருத்துக்கொள்ளு
வடிவாகும் மஞ்சள்நிறங் கல்வத்திட்டு
திருவாக அரைத்து அதை கைய்யத்தட்டித்
திட்டமாய்ப் புடமுன்று போட்டெடுத்து
உருவாக அதையெடுத்து வைத்துபின்னு
லுமைக்கு மருந்திற்சேர்க்கும் உண்மைபாரே. (495)

சினமடா யிருபத்து. அஞ்சிற்பாதி
சிறந்திருந்த பொட்டலையும் உரலிலிட்டு
ஊனத்தா னதையிடித்துக் கடத்திலிட்டு
ஒழுங்காக வாலையிட்டு முன்னீர்தள்ளி
ஞானமதாய்ப் பின்னீரைப் பிடித்துச்சாடி
நலமாக ஊத்தியதை நவிலக்கேளு
தானந்த சரக்கதனை த்தோய்த்துவாட்ட
தனிக்கட்டா மாகுமிதன் தன்மைபாரே. (496)

அரன்பீசம் பலம்நாலு கல்வத்திட்டு
அடுத்துமுன் புகைநீரை விட்டுவெய்போன்
கரம்படவே தேய்க்கவது பூக்குங்கண்டீர்
கனிந்ததொரு பூவெடுத்துப் பீங்கானிட்டு
ஊம்படவே முன்வங்க மிடையேசேர்த்து
உரத்துஅரை புகைநீரால் உலரவைத்து
சிரம்படவே கடமிட்டு மேலேமூடிச்
சிறக்கயெரி மேலேறஞ் செய்கைதானே. (497)

மேலேறும் ரசபதங்கந் தனையெடுத்து
மிக்ககல்வந் தன்னில்வைத்து அரைமுன்னீரால்
சேலாக உமியில்வைத்துக் கடத்திலிட்டுத்
திரும்பஅதை வருத்துயிடி கடத்திற்ரூனே
பாலாக யெரித்திட்டு வழித்துவாங்கு
பாங்காக யேறமட்டு மெரித்துவாங்கு
நாலாக யிப்படியே பாகஞ்செய்தால்
நல்லதொரு செந்தூர மாகுந்தானே. (498)

செகப்பான செந்தூரந் தருசுச்செம்பில்
சேர்த்திடவே நூற்றுக்கு ஒன்றுதானும்
உகப்பான ஆணிக்குப் பத்துக்காணும்
உவமையது சொல்லவென்ரு லொப்போயில்லை
துகப்பான மண்டலத்திற் காயசித்தி
துடியான மேனியது அலரிபோலாம்
வகுப்பான புத்தியா யுண்டுதேற
வழியாக யாகோபு வகைசொன்னாரே. (499)

முஞ்சள் தைலம்.

பசப்புமஞ்சள் தூக்கியிடி பாணியிட்டுப்
பற்றியதில்த் துவாரமிட்டுத் தலைகீழாக்கி
ஓசத்தியந்தக் குழிருடுவே சட்டியிட்டு
உள்வரையை யடைத்துநீ மண்தானிட்டு
நிசப்படவே பெருவடுக்கி மேலேதானும்
நிலவரமாய்த் தீப்போடு தைலம்வீழும்
வசப்படவே தானெடுத்து வைத்தபின்பு
வரும்விபரம் யாகோபு வகைசொன்னாரே. (500)

விளங்கக்கேள் மூன்றைலம் நாலுக்கொன்று
வீதமிடை கெந்தகத்தைப் பொடித்துத்தூவி
உளங்குளிரச் சீசாவி லடைத்துமூடி
உண்மையுடன் நெல்லாவி லடுவில்வைத்து
வளமாக மூடினதை நெல்லவித்தால்
வசமான தைலமா மெடுத்துப்பாரு
இளங்கன்று போல்வளருந் தைலமுண்டால்
இதமாக யாகோபு வியம்பினாரே. (501)

கெந்தித்தைலம்.

கெந்தகத்தின் தைலத்தை உண்ணவீதம்
கிருபையதாய்த் துட்டிடையுங் கொள்வீராகில்
வந்தவினை மண்டலத்தில் மேகங்குஷ்டம்
வகையில்லா வாதமகோ தரங்கள்தீரும்
முந்தவினைப் பெருவயிறு குன்மஞ்சோகை
முனிந்துவந்த வினையெல்லா மோடிப்போகும்
சிந்தனைகள் வாராது யாகோப்சொன்னார்
சிறப்பான தைலமிது சீராய்ப்பாரே. (502)

சேருகின்ற நாகமதைச் சுத்திபண்ணிச்
சேர்த்துநீ உருக்கையிலே சூதம்பாதி
வாருகினு மதியிரட்டி வெடியுங்கூட்டி
வலுக்கஅரை பழச்சாற்றூல் வில்லைதட்டி
நீருகின்ற வெய்யோனி லுலரவைத்து
நிலவரமாய்க் காடையென்ற புடத்தில்நீறும்
பாருலுகில் ரசவாதி பிழைக்கவென்ற
பழம்பொருளா யாகோபு பாவித்தாரே. (503)

பாவித்து நீற்றினத்தை யெடுத்துமுன்சார்
பாய்ச்சியரை மாயோனின் பெண்மூர்மேலே
கோவித்து யெடைசமனுய்க் கட்டிக்காய
கொள்கைவைத்துச் சுண்ணும்பு அங்கியிட்டு
தாவித்துப் புடமிட்டு யெடுத்துப்பார்த்துத்
தள்ளிடுநீ மேற்கவசம் உள்ளிருக்கும்
பூவொத்த கவசத்தைத் தூளாய்ப்பண்ணிப்
புகலிய செம்புதனிற் பாய்ச்சிக்கொள்ளே (504)

பாய்ச்சிடவே தருசினுட செம்புதன்னில்
பதியயிடு ரெண்டுக்கு ஒன்றுதானும்
காய்ச்சிடவே அதையெடுத்து வெள்ளியேழுங்
கணக்காகக் குருசெம்பு மூன்றுமாகும்
மூச்சிடவே குருவொன்றிட் டுருக்கிப்போட
முனிந்துயிதில் யேழுயெட்டு மாத்துப்பொன்னும்
பாச்சியிதிற் தாய்சேர்க்க மாத்தெட்டாகும்
பஞ்சமித்திரம் முந்நூறும் பார்த்துத்தேரே. (505)

ரோமத்தைலம் ஏமவித்தை

இளவயசு கேசரந்தான் பலமும்நாரு
இதைதருக்கிச் சீமக்காய் தண்ணயரைத்து
குளகுளப்பாய்ப் பாணியிட்டுக் கொதிக்கவைத்து
குணமாகக் கழுவியே காயவைக்க
வளவளப்பு யேகிவிடும் அயத்தின்சட்டி
வடிவுபெற வைத்தடுப்பில் திலகமிட்டு
தளதளப்பு கேசரத்தை யதிலேபோட்டுத்
தயிலம்வரும் பொழுதுஅர பொடியைப்போடே.

போட்டபொடி கேசரத்தின் தயிலத்தன்னில்
பொருந்தஅதைப் பிரட்டிவரக் கரிபோலாகும்
நாட்டியெடு கல்வமிட்டு நீலன்ரெண்டு
நலமாகப் அதிலெட்டு நாறும்பூத்தான்
கேட்டுயெடு அதிலேந்தாங் சாரம்ரெண்டு
இரகணித்த திலகமிட்டுக் கொதிதானிட்டு
வாட்டியதைப் புதுக்குகையில் வைத்திருக்கு
வரிசைபெற வெள்ளிபொன் போலாடுந்தானே. (507)

ஆடுகின்ற வெள்ளிவெங் கலம்போற்றேணும்
அதையெடுத்து நிறுத்துநீ வீரங்காலம்
பாடுபட்டு விட்டரைத்துத் தாரம்பாதி
பதிவான செவ்வல்லிப் பூச்சார்விட்டு
நாடியிதை யரைத்துவில்லை சதிரில்வைத்து
நலமாகப் பத்தெருவிற் புடமுமிட்டால்
ஈடுடனே குருவாகும் மதியிலெட்டு
இதைரெண்டு சேர்த்துப்பார் யேமமாமே. (508)

அருசுஅயச்செம்பு.

பார்த்துயெடு நீலனது பலமூம்பத்து
பகரிய நாறும்பூ முக்காலிட்டு
சேத்துஅரை கொடியோனு மூதலிற்பாதி
செயமுள்ள வீரனது முதலிற்காலாம்
நேத்தியாய் பழச்சாறு விட்டரைத்து
நேர்மையெட்டு நாள்ரவியிற் காயவைத்து
சோத்துஉப்பு சுண்ணமூடன் கவசங்கட்டிக்
சுகமாகப் புடம்போடக் கருப்புமாமே. (509)

கருப்பெடுத்துக் கல்வமிட்டுத் தாரம்பாதி
கனிந்துவிட்டு முன்பழச்சார் கனியஆட்டி
உருப்பாக வில்லைகட்டிப் புடமுமிட்டு
உறுதிபெற யெடுத்துவைத்து உண்மைகேளு
நெருப்பாகப் புடம்போட்ட மருந்திற்பாதி
நேர்மையுடன் அரபொடியிற் பழச்சார்விட்டு
விருப்பாகத் திரிநாள்தான் சுழுவிப்பின்பு
வெற்றிபெற முன்சொன்ன மருந்திற்சேரே. (510)

அயச்செம்பு

போட்டுநூதைப் பிசரிவைத்துக் குகையிலிட்டுப்
புகலரிய உருக்குமுகங் காரங்கூட்டி
நாட்டுநீ வைத்துருக்கு செம்புமாகும்
நல்லதங்கச் செம்பதுவை மதிதானெட்டில்
காட்டுமுன்னே ரெண்டுகொடுத் துருக்கிப்பாரு
கணக்கான தங்கமுமாங் கருத்துள்ளோர்க்கு
தேட்டுவரும் யாகோபு சொன்னநீதி
செகத்திலே அயச்செம்பு செய்துபாரே: (511)

கசடறுத்த தாளகமும் சேருமெட்டுக்
கரைகண்டன் பலமெட்டுக் காரமூன்று
பிசகாமல் வெடியொன்று வீரனொன்று
பேசரிய யெருக்கினுடை பாலாற்சாமம்
நிசமாக வில்லைதட்டிப் பதங்கமிட்டு
நிலைத்தபின்பு தங்கமிட்டுத் தரமுமைந்து
வசமாகச் செவ்வல்லிப் பூச்சாறாட்டி
வகையாக வில்லைதட்டிக் கதிரில்வையே. (512)

வில்லைதனைச் சுண்ணஉப்பு கவசங்கூட்டி
வெற்றிபெறப் புடமிட்டு பெடுத்துருக்க
சொல்லரிய சத்தாகும் சத்திற்பாதி
சுடர்க்கொடியோ னிட்டுமுன்போலாட்டிக் காய்ந்து
நல்லாகப் புடமிட்டுக் கருப்பிபாதி
நலமாகச் சேர்த்துருக்க ரவியுமாகும்
மெல்லவதை மதிதனிலே யெட்டுரெண்டு
விதமாகச் சேர்த்துருக்கத் தங்கமாமே. (513)

நேரான சத்ததனிற் செம்புதானும்
நேர்மையுடன் வாராம லிருந்ததானுற்
பாராளும் படைராஜன் பலமும்பதது
படிகார மிருபதது ஐந்தங்கூட்டி
தாராள மாய்ப்பொடித்துக் கலபத்திட்டுத்
தன்மையுள்ள வாலதனை மூடிச்சீலை
ஏராள மாய்ச்செய்து யெரிக்கநீராம்
இதமாக மூன்றள்ளி பின்னீர்வாங்கே. (514)

வாங்கியே பீங்கானி லடக்கம்பண்ணி
வாதிகளே சத்துருக்குஞ் சத்துதன்னில்
பாங்கியே செம்புதான் வாராப்போலுல்
பதிவாகப் புகைநீரை விட்டரைத்து
தாங்கிதிரி நாள்வைத்துக் கொடியோன்பாதி
சாக்கியிடு அரைத்துவில்லே கதிரில்வைத்து
ஏங்காதே புடம்போடு கருப்பிசேர்த்து
இதமாக உருக்கிடவே செம்புமாமே. (515)

செம்புதனைத் தானெடுத்துக் காரங்கூட்டிச்
செழிக்கவதை உருக்கிநீ தகடடித்து
நம்புமதி யெட்டிரண்டுஞ் சேர்த்துருக்கி
நலமாக யெடைசமமா யேமஞ்சேரு
வம்புசெய்யாத் தகடடித்துப் புடமும்போட
வடிவான புடமிறங்குந் தங்கமாகும்
தெம்புடனே அதைவிற்று உண்டுதேறு
செயமாக யாகோபு சொன்னுர்தாமே. (516)

சத்தெடுத்தால் நிறமதனைச் சொல்லக்கேளு
சரியான வெங்கலம்போல் நிறமதாகும்
முத்தான வெங்காரஞ் சத்திற்சேர்த்து
மூன்றுதர முருக்கிப்பார் சத்துதன்றும்
வித்தான நிலைதைலம் முக்கண்பாலும்
வீரியமா யிலுப்பெண்ணெய் தேன்புங்கெண்ணெய்
நத்தாசை யாகசரி யெடையாய்ச்சேர்த்து
நன்றுக மத்தித்து நடக்கைகேளே. (517)

நல்லாக மத்தித்துச் சத்துவெல்லாம்
நாடறியக் காரமிட்டு உருக்கிநீயும்
பொல்லாமை யில்லாமற் தரமுமூன்று
போக்கதிலே சாய்த்துவரக் கல்மிசங்கள்
நில்லாம லோடிவிடுங் கடலேபுக்கும்
நேர்மையுள்ள செம்பாகுஞ் செம்புதன்னை
வல்லமையாய் மதிபெட்டில் ரெண்டுசேர்க்க
வகைதெரிய களங்குமூன் றூறும்பாரே (518)

செம்புதனை யெடுத்துமே பஞ்சமித்திரம்
செயமாக மூன்றுதரங் காரங்கூட்டி
கும்பியதில் மூன்றுதர முருக்கிச்சாய்க்க
நலமாக அருணனைப்போல் நிறமதாகும்
தெம்புடனே யெடுத்துமதி யெட்டுரெண்டு
சேர்த்தெடுத்துப் பார்க்கையிலே பொன்போலாகும்
தம்பிரான் செயலென்று யாகோப்சொன்ன
தக்கநல்ல கைபாகந் தகைமையாமே. (519)

நீலனெடு பலம்பத்து யெடுத்துக்கொண்டு
நேராக நாறும்பூ பலமும்பத்து
காலனெரு கொடியோனும் பலமுமைந்து
கலந்ததொரு அரிதாரம் பலமுமைந்து
சேலான வீரனெடு பலமும்ரெண்டு
செயமாகக் கல்வமிட்டுப் பழச்சாற்றாலே
காலமது பிருசாம மரைத்துநீயும்
கனிவாக நாளேழு அரைத்திடாமே. (520)

நல்லாக அரைத்துவில்லை கதிரில்வைத்து
நலமாக உப்புநேர் சுண்ணமிட்டு
பொல்லாமை வில்லைமற் புடத்தைப்போடு
புகலரிய கரிபோலே நிறமதாகும்
சல்லாப மாய்க்கொஞ்சங் கரியிலிட்டு
சாதகமா யுருக்கிப்பார் ஓடிப்போகும்
அல்லாவி னதுமேலே ஊனையிட்டேன்
அடைவாக யிப்பாகம் நிசமாங்காணே. (521)

ஓடினதோர் செம்பெல்லாம் பிடிக்கக்கேளு
ஓதரிய கேசரமும் பலமும்நூறு
நீடியதைச் சீயக்காய் வேகவைத்து
நீருதன்னில்ச் சுத்திசெய்து பின்புநீயும்
தேடியே அயச்சட்டி தன்னிலிட்டுத்
திறமான திலதைப்பால் கொஞ்சமிட்டு
கூடியபின் னடுப்பேற்றி யெரிக்கும்போது
குணமாகத் தைலமதா யுருகும்பாரே. (522)

உத்துநின்று உருகையிலே புடமூன்போட்டு
உறுதிபெற்ற மருந்தனைப் பொடியாய்ப்பண்ணி
பத்திநின்று உருகையிலே மேலேபோட்டு
பதிவரக ரோமமிட்டு உருகும்போது
சித்திபெறக் கிண்டிவிட்டு யெடுத்துக்கொள்ளு
சீர்பெறவே சேர்த்துசெம்பை யிழுத்துக்கொள்ளும்
நத்தியே கரியோடே யெடுத்துநீயும்
நலமாகச் சொல்லுகிற பாகங்கேளே. (523)

ஆய்ந்தெடுத்த அரபொடியும் பலமுமைந்து
அதிலிடுவாய் பழச்சாறு படிதானழி
தோய்ந்தபின்பு ஊரவைத்துத் தெளிவிருத்து
துப்புரவாய்த் தெளிவைத்தா லெட்டக்காய்ச்சி
பாய்ந்துமே வருத்தஅதை யெடுத்துநீயும்
பதிவான ரோமத்தின் கரியினோடே
வாய்த்தபடி சேர்த்துமே பிசரிநீயும்
வடிவான வண்டிலது கூட்டிக்கொள்ளே. (524)

கூட்டியே குகையிலிட்டு உருக்கிப்பாரு
குணமான சூரியன்போற் செம்புமாகும்
நாட்டியே யிப்படிக்குக் காரங்கூட்டி
நலமாக மூன்றுதர மூருக்கநீயும்
மூட்டுபஞ்ச மித்திரத்திற் தாமுமூன்று
முடிவாக உருக்கிச்சாய் கல்மசம்போம்
கூட்டியதை யெடுத்துநீ மதியில்மூன்று
குணமாக வொன்றிட்டு உருக்கிடாயே. (525)

உருக்கியபின் னெடுத்துப்பார் மாற்றுஆறு
உறுதிபெறத் தங்கமது யிடையேசேரு
மருக்கியபின் மாற்றெட்டு மாகும்பாரு
மதியான யாகோபு'கண்டனேர்மை
வருக்கமுட னுலகத்தில் யேழைவாதி
வன்மையுள்ள பேர்களுக்கு உறுதிசொன்னேன்
நெருக்கமுட னல்லாவின் பேரிலானே
நிலையாகு மிப்பாகந் நிசமதாமே. (526)

பச்சைமண் தோண்டிதன்னிற் பாணிதன்னைப்
பதிலாக மொண்டுவரிற் கரைந்தேபோகும்
இச்சையுடன் சுட்டதோர் மண்பாண்டத்தில்
இங்கிதமாய்த் தண்ணிமொள்ளக் கரையாதப்பா
நிச்சயமா யிதுபோலே செத்தசெம்பு
நிலமையாய் நின்றுஉப்புக் காவிக்கேறும்
பச்சையது செம்பிருந்தாற் கழன்றுபோகும்
பக்குவமா யாகோபு சொன்னதாமே. (527)

தாளகக் கட்டு வெடியுப்புத் திராவகம்.

ஈரஞ்சு பொட்டளையா மிதினில்செட்டி
இயல்பான அய்யஞ்சு படியுமாகும்
பாரஞ்சு மூலிலிட்டுப் பொடியதாக்கி
பக்குவமாய் வாலியிட்டுப் புகைநீர்வாங்கு
கோரஞ்சு முன்னீரைத் தள்ளிப்போட்டு
நினைவோடே பின்னீரை வாங்கித்தாரம்
பேரஞ்சு நாழிகையுஞ் சுருக்குத்தாக்கு
பேர்பெறவே தாளகமுங் கட்டிப்போமே. (528)

காரீயம் பலம்பத்துக் காண்டியிட்டுக்
கனிந்துருகும் போதுவெடி ஐந்தாங்காய்ச்சல்
பாருசரி யிடைக்கெடைதான் போட்டுநன்றாய்
பண்பான சிறுகரண்டி தன்னாற்கிண்டு
வாரியாய்ச் சாமமது சென்றபின்பு
வகையாக மஞ்சள்போற் றாளாய்நிற்கும்
ஊரியபின் னெடுத்துமே கல்வத்திட்டு
உறுதிபெறத் தீநீராற் சாமமாட்டே. (529)

நல்லாக ஆட்டிமூன் தாளகத்தில்
நாடியே மேற்கலசங் கட்டக்கேளு
வெல்லவே தாளகத்தின் மேலேநன்றாய்
விதமூன்று பங்குபண்ணிக் காயவைத்து
பொல்லாமை யில்லாமற் காடையாகப்
போக்கோடே வைத்துகல்வ மீதிலிட்டு
கல்லறிவாய்க் தீநீரை விட்டுஆட்டி
நலமாகத் தாளகத்திற் கவசம்போடே. (530)

போட்டுமே கதிரவன்முன் காயவைத்துப்
பொருந்தவே நபிமாரைத் தொழுது போற்றி
காட்டெருவில் முன்போலே புடத்தைப்போடு
கனியவெடு கல்வமிட்டுப் புகைநீர்சேர்த்து
நாட்டுக்குள் சாமமரை வழித்துத்தாரம்
நலமாக மேற்கட்டிப் புடமுமிட்டு
நீட்டியெடு கடுஞ்சிகப்பாய்க் குருவுமாகும்
நேர்மையா யாகோபு நிசஞ்சொன்னாரே. (531)

துருசுச் செம்பு.

பழச்சாறு பிங்கானில் நெம்பவிட்டு
பதிவான நீலனதைப் பொடித்துத்தூவு
தழல்தன்னில் வைத்துமே காயவைத்து
தாட்டிகமாய்க் குகையிலிட்டு உருக்கச்செம்பாம்
உழவாக யிச்செம்பு யிடைதான்ரெண்டு
உறுதிபெற முன்சொன்ன மருந்தைத்தாக்க
நழமாக நொருங்கியது தூளாய்ப்போகும்
நாடியே யாகோபு நலஞ்சொன்னாரே. (532)

நல்லாக நொருங்கினதோர் தூளுதன்னை
நலமாகக் கல்வமிட்டு வீரங்காலாய்
மெல்லவே புகைநீரா லரைத்துவில்லை
விதியாகக் கட்டியதைக் காயவைத்து
சொல்லவொரு புடம்போட்டு யெடுத்துக்கொண்டு
சுத்திபெற வெள்ளிதனில் தானுரெண்டு
வல்லமையாய்ச் சேர்த்தூதத் தங்கமொன்று
வகையாகச் சேர்த்துருக்க தங்கமாமே. (533)

தங்கமாந் தங்கமது சிவப்புமாகும்
தாட்டிகமாய்க் காவிக்கு நிலைத்துநிற்கும்
பங்கம்வரா தென்றுரைத்தார் யாகோப்தானும்
பத்திசரும் நபிமார்க ளெனக்குச்சொன்னார்
வங்கவித்தை உலகத்தில் வாதிமார்க்கு
வகைகாணப் பொன்னுகும் வடிவுமெத்த
சிங்கம்போ லாகுமிது முன்னோர்தானுஞ்
செய்திட்ட பாகமதுதான் கண்டேனே. (534)

விடத்தலைக்கற்பம்.

வாருகேள் விடத்தலையின் பட்டைவாங்கி
மகிழ்வாகக் காயவைத்துப் பலமூம்நாலு
தேருகேள் வன்னியதின் பதங்கந்தன்னைச்
செயமாக யிடைசமமாய்ச் சேர்த்துமல்லி
சாருவிட்டு கடிகையைந்து அரைத்துக்காய்ந்து
சமமாகக் கருந்தேன்வார்த் துண்டைசெய்து
பேருகேள் சிமிழ்வைத்து காலைமாலை
பேணியிதை யுண்டுவரப் பெருமைகேளே (535)

உண்டிடவே மண்டலந்தா னந்திசந்தி
உறுதிபெறச் சடமிறுகித் தங்கம்போலாம்
கண்டவுடன் விந்துருகி மணிபோலாகும்
கடல்புக்கும் பித்தமறும் கபத்தைப்போக்கும்
பண்டுபோல் நீபிருக்கக் கற்பமாகும்
பத்திவரு மூத்திதரு பளிக்குஞ்சித்தி
கொண்டுவர அண்டரென மதிப்பாருன்னை
கொடியவினை களைப்போக்குங் கூறினேமே. (536)

சஞ்சீவி மூலிதனைக் கிழித்துநீரும்
சாற்றுறியக் கதிரில்வைத்து இடித்துத்தூளாய்
மிஞ்சாமல் வன்னிபற்ப மிடையேசேர்த்து
மீறுமி லிருசாமந் தேனுலாட்டி.
வஞ்சமில்லா மண்டலந்தான் கொண்டுவந்தால்
வகையான மேகமறும் வெட்டைநீங்கும்
பஞ்சிலிட்ட தீப்போலாம் பாலனுவான்
பார்த்துஉண்மை யாகோபு பாலித்தாரே. (537)

அருசுச்சுண்ணம்.

பணிவாகத் தருசுசெண்டும் அதின்மேற்சினம்
பண்பாயோர் பலம்நிறுத்துக் கவசங்கட்டி.
துணிவாகச் சட்டிதனிற் பூநீர்தன்னைத்
தூளாக்கி ரெண்டுபடி தானுமிட்டு
அணிவாக நீலினையும் நடுவில்வைத்து
அதின்மேலும் ரெண்டுபடி தூளால்மூழ்த்தி
தணல்பாக்கச் சாமமொன்று தீயைமூட்டித்
தானெடுக்கக் கண்டதது நீறுந்தானே (538)

கல்லாக நீறினதோர் தருசுகேரே
நாட்டியிடு புகைநீரி லெடுத்துச்சூதம்
வெல்லவே ரெண்டெடையுங் கல்வமிட்டு
விதமாகப் புகைநீரா லரைத்துப்பின்பு
கொல்லுமதை யிருசாமங் கடந்துநீயும்
குணமான சவ்வீர மரைக்காலிட்டு
பல்லவமாய்ப் பச்சைக்கற் பூரந்தானும்
பதியவிடு அரைக்கால்தான் பண்புபாரே. (539)

பண்பாகக் கதிரில்வைத்துக் காய்ந்தபின்பு
பதியவே அயமுடன் வெங்காரம்நேரே
தண்பாக அரைத்துமே கவசங்கட்டி
தாட்டிகமாய்க் காடையென்ற புடத்தில்வைத்து
உண்பாக மேற்கவசம் பிரித்துத்தள்ளி
உறுதிபெற உள்மருந்தைக் கல்வத்திட்டு
நண்பாகப் புகைநீராற் சாமமாட்டி
நலமாக உண்டைபண்ணி நாட்டக்கேளே. (540)

நாட்டவே தருசனுட செம்பெடுத்து
நலமாகப் பலங்காலே உருக்கிநீயும்
பூட்டவே உண்டையெல்லாங் கிராசமிட்டால்
பொடியாக நொருங்கிடுமே வெள்ளிநாளில்
கூட்டியிதில் ஒன்றுகொடுத் தூதிப்போடு
குணமாக மாற்றேழு யிடைதான்சேர்த்து
தாட்டிகமாய்க் காவிதனிற் புடத்தைப்போடு
தவறுமல் ரெண்டிடையுந் தங்கமாமே. (541)

சிவன்வேம்புந்தைலம்.

சித்திபெறச் சிவனுடைய சேம்புதூக்கு
செக்கயிடி உரலிலிட்டுப் பொடியதாக்கி
நித்தியமாய்க் கதிரில்வைத்து உலர்ந்தபின்பு
நேராக வாலுளுவை வித்துங்கூட்டி
புத்தியதாய்ச் சிவகரந்தைச் சாறுவிட்டு
புகட்டியரை நாள்ரெண்டு கதிரில்வைத்து
பத்தியதா யுலர்த்தியதைப் பொடியாய்ப்பண்ணி
பகரிய பூமிபுடம் வைக்கக்கேளே. (542)

காசிகுப்பி தனையெடுத்து மருந்தையிட்டு
கருத்தறவே சீசாவாய் சதம்பைமூடி
தூசிபடாப் புதுச்சட்டித் தூரைப்பொத்து
தொடுத்தகுப்பிக் கவிழ்த்துமே உள்ளேகாட்டு
வாசிபெறச் சலங்கைமணல் மேலேமூடி
வகையாக அதின்மேலே புடத்தைப்போடு
மோசம்வரா தடுப்பேத்தி அடுப்புக்குள்ளே
முதன்மையுள்ள பிங்காணி வைத்துப்பாரே. (543)

உண்டான தைலமெல்லாம் வீழ்ந்தபின்பு
உறவாக வெடுத்துமுக் களஞ்சிஊத்தி
தொண்டர்செய்யும் ரசபதங்கம் பணமவ்வீதம்
தொக்கஅந்தி சந்திமண் டலமேகொள்ளு
கண்டவுடன் திமிர்குஷ்டம் பத்துயெட்டுங்
கடல்புக்கும் ஈரைதிரையுங் காணுதோடும்
பண்டுபோல் காயமது பிறங்கிப்போகும்
பகலவன்போ லொளியாகும் பண்புதானே. (544)

மாத்தேர ரோமத்தயிலம்

கேசரந்தான் ஈரையின்றி பலமும்நூறு
கிருபையுடன் சீயக்காய் பாணியிட்டு
வாசமற அரைத்தபின்பு குழம்பதாக்கி
வைத்தசட்டி தன்னிலேதான் ரோமம்போட்டு
மாசகலக் கொதிக்கவைத்து வெடுத்துப்பின்பு
மயமாகக் கத்தரித்துத் திலகந்தன்னை
வாசமற ஓட்டிரெட்டி யிட்டுநீயும்
வண்மைபெறக் கொதிப்பித்து பிறக்கிவையே. (545)

கரிச்சட்டி தனிற்கோணி ஊசிகுத்தி
கனமாகச் சல்லடைபோல் துவாரம்போட்டு
சரியாகப் பொத்துஅதி லீர்க்குத்தன்னை
சரிநுனியை விட்டுபிழு துவாரமெல்லாம்
குரியாக அடைத்துவிடும் சுற்றிரோமக்
குழம்பதனை யூத்திவிட்டு மேலேதானும்
விரிவான கரிச்சட்டி மல்லாத்திமூடி
வீரியமாய்ச் சுற்றிலுமே சீலைசெய்யே. (546)

கல்லாகச் சீலைசெய்து அடுப்பிலேற்றி
நாடியே மேற்சட்டி அகண்டவாயில்
மல்லாத்திக் கனத்தயெரு வடக்கித்தீயை
மருவவே புடம்போட்டு அடுப்புக்குள்ளே
செல்லவொரு பீங்கானை வைத்துநீயும்
செயமாகத் தீப்பற்றி யெரியும்போது
கல்லலடை குச்சியெல்லாம் பிடுங்கிப்போடு
கதித்துமே தயிலமது பிறங்குந்தானே. (547)

வந்ததொரு தயிலமெல்லாம் வழித்துக்கொள்ளு
வருகாட்டால் முன்போலே புடத்தைப்போடு
சிந்தனையாய் வற்றிவிழுந் தயிலந்தன்னைச்
சிறப்பாகச் சேரெட்டு யெடுத்துநீயும்
கெந்தகமுஞ் சேரொன்று தூருசேரு
இளர்ந்தஅரி தாரமொடு சேருஐந்து
மூந்தியெடு வீரமது சேருகாலாம்
மூனிந்துகல்வ மிட்டுஅதில் தயிலம்விட்டே. (548)

விட்டுஅரை கொஞ்சமதாய்ச் சாமம்பத்து
விதமாக வழித்துபதம் பார்த்துக்கொள்ளு
மூட்டுகொஞ்சந் தயிலம்விட்டுக் குழம்பதாக
முன்தயில மிறக்கினதோர் சட்டியிட்டு
செட்டுடனே முன்போற்பா வனையேசெய்து
சீர்பெறவே தயிலமதை யிறக்கிக்கொள்ளு
கட்டுமது லோகமெல்லாம் செம்புமாகும்
கனகமிதில் மாத்தேருங் கண்டுபோரே. (549)

கண்டுயெடு அரைபொடியுங் காலதாக
கனிகிம்பச் சாற்றினிலே திரிநாளூற
பண்டுவதைப் பாணியிட்டு அலம்பிச்சட்டி
பதியயிட்டு அடுப்பேற்றித் தீயைமூட்டி
முண்டுபடா தெரித்துவர் சிவக்கமட்டும்
முடிந்திருந்தத் தயிலமதைத் தானெடுத்து
மண்டுகின்ற தயிலமதைக் குத்திக்குத்தி
மகிமைபெறக் காண்டியினற் பிரட்டுவாயே. (550)

பிரட்டியெடு தயிலமெல்லாஞ் சுவரிப்போகும்
பின்புநீ கல்வமிட்டுப் பொடியதாக்கி
துரட்டில்லா வெங்காரங் காலுமிட்டுத்
தூக்கியிதைப் பொடிசெய்து குகையிலிட்டு
பரட்டியதை உருக்கியுடை பின்புகாரம்
பதியவிட்டு யிப்படிக்குத் தரமுமைந்து
திரட்டியதை யுருக்கிடவே செம்புமாகும்
சீரான அயச்செம்பு சேர்ந்துபாரே. (551)

மதியெடுத்து ஊதிவிட்டு யேழும்மூன்று
வண்மைபெறச் சேர்த்துருக்கி யெடுத்துப்பார்க்க
விதிப்படிக்குத் தங்கம்போ லுரையுமாகும்
வெற்றிபெறத் தங்கமிடை சேர்த்துருக்கி
பதிவாகத் தகடடித்துப் புடமும்நாலு
பதியவே உப்புசெங்கற் பொடியுஞ்சேர்த்து
சதிபெறவே தகட்டைபுளி யதனிற்றேய்த்துச்
சாரியாய்ப் புடம்போட யிறங்கும்பாரே. (552)

இரங்கினதோர் தங்கத்தை விற்றுநீயும்
இனியதொரு கந்திரிக்குச் சோறுமாக்கி
கிரந்திவந்த அதிதிகட்கு பிச்சையிட்டு
இளர்ந்த குமர்கறையேறப் பணங்களீப்ந்து
திரங்காணக் கணவனுக்கு கட்டிவைத்து
தீன்முகம் மதுவைந்தம் தொழுதுபோற்றி
வரங்காண இப்பாக முடித்துக்கொண்டால்
வல்லசித்தி பெற்றுலகில் வாழலாமே. (553)

சித்திபெற அஞ்சாறு ஏழுமாற்று
சீர்பெருகும் பொன்னதனை வாங்கிவந்து
பத்தியுடன் தகடடித்துத் தயிலம்பூசிப்
பதியபுடம் போட்டெடுத்துக் காரங்கூட்டி
நித்தநித்த முருக்கியதைப் புடமூன்றிட்டால்
நிலையுள்ள தங்கமாய் மாத்துயேறும்
சத்தியுமா யிந்தவித்தை நபிமார்சொன்னார்
சரிவரவே கண்டோன் சொன்னவாரே. (554)

தங்கமதைத் தகடடித்துத் தயிலந்தன்னைத்
தடையறவே பூசியதை புடமூன்றிட்டு
துங்கமதா யெடுத்துபார் கருத்துநிற்கும்
துடியான காரமதைக் கூட்டிநீயும்
சங்கமதா யுருக்கிடவே ரவியுமாகும்
சரிவரவே யெடுத்துவெள்ளி யெட்டில்ரெண்டு
பங்கம்வரா தெடுத்துருக்கி முகத்தைப்பாரு
பாருலகிற் றங்கமாம் பாரிலோர்க்கே. (555)

பாரிலே யித்தயிலஞ் செய்துநீயும்
பதிவவே வாதங்கள் மிகவுஞ்செய்து
ஊரிலே யிருந்துவிடு நபிமார்போலே
உலகத்தி லிப்பாகஞ் சொல்லவேண்டாம்
வேரிலே நீரிருந்தால் மரந்தளிர்க்கும்
விதம்போல கருவுகளின் விபரந்தன்னை
கூரிலு லொன்றுமில்லை தயிலபாகங்
குணமாகச் செய்திடவே சித்தியாமே. (556)

சித்தியாய் முன்னோர்கள் தயிலந்தன்னைச்
செய்யவில்லை யென்றுமே பாகமாக
பத்தியாய் நான்கண்டு பாகம்பார்த்துப்
பதிவாக அனுசரித்து சித்தமாட
முத்துகளே ஒருகயிற்றிற் கோர்த்தாப்போலே
முழுப்பாகங் களங்குமுன் னூருசொன்னேன்
சத்தியா யிதைக்கண்டு தேறித்தேறி
சஞ்சலத்தை விட்டுமே தங்கஞ்செய்யே: (557)

குப்பிவைப்பு அயச்செந்தூரம்

அச்சமில்லான் பலம்பத்து அதற்குநேரே
ஆண்மையுள்ள கெந்தகமுங் கொடியோனேந்து
நச்சரவாம் வீரமது பலமுங்கால்தான்
நலமாகக் கல்வமிட்டுப் பழச்சாற்றாலே
நிச்சயமா யரைத்திடுநீ சாமம்நாலு
நேராக வில்லைசெய்து கதிரில்வைத்து
இச்சையுடன் சுண்ணும்பு உப்புநேரே
இதமாக அரைத்துமே கவசங்கட்டே. (558)

கவசமிட்டுப் பத்தெருவிற் புடமூமிட்டுக்
கனிவாக மேற்கவசந் தள்ளிநீயும்
தவமாகக் கல்வமிட்டு அயமுங்காலாம்
தாக்கியிடு ரசபதங்கம் மூக்காலிட்டு
பவமாகப் புகைநீரா லரைத்துச்சாமம்
பதியெடு பீங்கானி லிட்டுநீயும்
உவமாகக் கரியோட்டில் நெருப்பையிட்டு
உறுதிபெற வருத்திடென்று உரைசெய்தாரே. (559)

வருத்தபின்பு காசியென்ற மேருக்கிட்டு
வடிவாக நால்சாமங் கடுமையாக
பெருத்துமே தீயெரித்துக் கல்வமிட்டு
பேறுபெறப் புகைநீரை விட்டுச்சாமம்
பருத்துமே அரைத்துமுன்போல் வருத்துநீயும்
பதியஅதை காசியென்ற மேருக்கிட்டு
சிறுத்துமே யெரியிடுநீ நாலுசாமம்
செயமாகச் சிவக்கமட்டு மெரித்திடாயே. (560)

எரித்துமே அல்லாவைத் தொழுதுபோற்றி
இதமாக யிதையெடுத்துப் பதமாகத்தான்
பிரித்துமே செந்தூரம் ரவியிற்றூனும்
பேராகப் பத்துக்கு ஒன்றுதாக்கு
விரித்துமே உருக்கியெடுத் தொடித்துவொன்று
விதமாக வெள்ளியெட்டில் ரெண்டுசேர்க்க
மருத்துமே தங்கம்ரெண்டு சேர்த்துஊத
வடிவான தங்கமாம் வண்மைபாரே. (561)

வண்மைபெறத் தகடடித்து உப்புநாலு
வகையாகச் செங்கத்தூள் மூன்றுதாக்க
உண்ணுமது புளியிட்டு மத்தித்தேதான்
உரவாக அதில்வைத்துப் புடமுங்கொஞ்சம்
நண்ணவே புடமூன்று யிட்டெடுக்க
நலமாக அருகுகட்டிப் புடமிரங்கும்
கண்ணலாய் நினையாதே உருக்கிப்பார்க்க
கனகமது பீக்கம்பூ வர்ணமாமே. (562)

தங்கமதை யெடுத்துவிற்றுச் செலவுகேளு
தன்மைபெறக் கந்திரிகள் மிகவுஞ்செய்து
உங்கவே மிசுக்கையற்கு அண்ணமீய்ந்து
உயர்வான சுண்ணவகை யெல்லாம்பார்த்து
பங்கமாய்ப் போகாமற் சவுக்காரத்தைப்
பதையாமற் செய்தபின்பு தூருசைநீற்று
சங்கவரை சூதத்தைக் கட்டியாடு
சதாகோடி காலம்வரை யிருப்பார்சொல்லே (563)

சொல்லிவிட்டேன் கைபாக வரிசைகண்டு
சுயமாக நிறைபாகங் கருவைக்கண்டு
நல்லிட்ட புடபாக மெரிப்பின்பாகம்
நலமாக யிப்பாகம் வரிசைகண்டு
வில்லிட்ட அம்புபோற் செய்துபாரு
வேதாந்த மெய்ப்பொருளும் விளங்குநன்றாய்
மூல்லைமலர் போலவே சுண்ணஞ்செய்ப
முக்கியமா யறுநூறும் மொழிந்தேன்பாரே. (564)

மொழிகேட்டு நபிமார்க ளெல்லோருந்தான்
முயற்சியா யென்னேத்தான் வரவழைத்து
அழிவில்லா மெய்ப்பொருளும் வாதமார்க்கம்
அடங்கலையுங் காட்டியே பின்புதானும்
கழியவே சுண்ணச்செந் தூரத்தோடு
கனகமது பிறக்குகின்ற கருத்தைக்காட்டி
பழியில்லா தண்டக்கம் நூற்றிபத்தில்
பதிவாகக் குருமுடிக்க வகைசொன்னாரே. (565)

சூடத் திராவகம்.

கற்பூரத் திராவகத்தைக் கருதிச்செய்யில்
காசினியில் நோய்களெல்லாங் காணுதோடும்
சொற்படிக்குப் பாஷாண மெல்லாங்கட்டச்
சுளிவான கம்பியுப்பு பலமோபத்து
சற்பனையாஞ் சீனமது யிருபத்தைந்து
தாக்கிசெண்டும் பொடித்ததனைக் கலயத்திட்டு
உற்பணமாய் வாலியென்ற சட்டிமூடி
உளுந்தாலே சீலைசெய்து அடுப்பிலேற்றே. (566)

ஏற்றியே தீயெரிக்க வெள்ளோநீராம்
இதமாக வந்துவிழு மூன்நீர்தள்ளி
நாற்றிசையு மெய்க்கவே பின்னீர்தன்னே
நாட்டமுடன் குப்பிதனி லடைத்துப்பின்பு
பார்த்திபனர் கொடியோனும் பலமும்பத்து
பதிவான வீரமது பலமுங்கால்தான்
சேர்த்துமே புகைநீரா லரைசாமம்
செம்மையுடன் கரைத்துஅதைக் குளம்பாயாக்கே. ()

ஆக்கிவைத்த குளம்பதனே வழித்தெடுத்து
ஆண்மைபெறக் கலயமிட்டு வாலைமூடி
நோக்கியபின் உளுந்தாலே சீலைசெய்து
நாண்மைபெற அடுப்புதனி லேற்றிப்பின்பு
பாக்கியமாய்ச் சிறுகயெரி நீர்தான்வந்து
பதிவாக யிறங்கிவிடும் புகைபடாமல்
தாக்கியபின் நின்றுயெடு நிராவசத்தைச்
சகலசித்து மாடுமென்று தான்சொன்னாரே. (568)

கல்லாக யிறங்கினதோர் புகைநீர்தன்னே
நம்பியடை அரக்கென்ற குப்பியிட்டு
மெல்லவொரு சொட்டுதிரி கடுகிலுண்ண
வேகமது கண்டவுட நோய்களெல்லாம்
சொல்லாம லோடுமது தெண்டனிட்டுச்
சுகமான புகைநீரா மிந்தநீரு
எல்லாமுஞ் சுண்ணமய மாக்கச்சொன்னார்
இதன்விபாஞ் சுண்ணமுந்நூ றெழுதினேனே (569)

கசடற்ற அரிதாரங் கல்வத்திட்டுக்
கடுமையுள்ள புகைநீரை விட்டரைத்து
நிசமாக யிருசாம மரைத்துகன்றுய்
நேர்மைபட வில்லைதட்டிக் கதிரில்வைத்து
வசமாகக் காய்ந்தபின்பு வர்ட்டிநீயும்
வளப்பமுடன் கல்வத்தி லிட்டுப்பின்பு
பசமாக மூன்போலே நெருப்பில்வாட்டு
பத்தியுட னூன்நூதரம் வாட்டிப்பாரே. (570)

வாட்டிடவே புகையதுவுங் கட்டிநிற்கும்
வகையாக மேற்கலசம் வழுத்தக்கேளு
தாட்டிகமாய்ச் சினமது பலமும்பத்து
தக்கபுகை நீரைவிட்டுக் கல்வத்தாட்டி
மூட்டியெடு யிருசாமஞ் சென்றபின்பு
முதன்மையாய் வில்லைதட்டிக் கதிரில்வைத்து
ஓட்டிலே ஊதிவிடு கடுமையாக
உண்மையாய்க் கடுஞ்சுண்ண மாகுந்தானே. (571)

சுண்ணமிதைத் தாளகத்தின் மேலேகட்டிச்
சுடுதனலின் வாட்டிசிறு புடத்தைப்போடு
சொன்னபடி தாளகமும் நீறிப்போகும்
சுருதிமுறை தாளகநீர் தருசுக்கிட்டால்
சின்னமது வில்லாமல் நீறுங்கண்டாய்
சிறப்பாக மூன்றொந்த மேற்றிக்கொள்ளு
நன்னயமா யிதுபோலே யெலிப்பாஷாணம்
நலமான மிருதார சிங்கிக்காமே. (572)

சாக்கெல்லா மிப்படியே கட்டிநீற்று
சலுதிபடத் தொந்தமது வேறதத்தங்கம்
பாக்கவே செய்யாமற் பெருமையாக
பத்தியுடன் செய்தாக்காற் பலனுமாகும்
உசக்கவே சுண்ணமென்ற அறுநூற்றண்ணில்
உறுதிமிகச் சொல்லிவிட்டே னுற்றுப்பார்த்து
சுருக்கமா யிடைபாகங் கண்டுசெய்தால்
சுகப்படுத்துஞ் சுண்ணமதின் தொழிலுமாமே. (573)

சூதப்பதங்கம்.

அன்னமிடு முன்னிடும்பூ தூக்குஒன்று
அந்திடைக்குப் பண்ணியிட்டு அதிதமாக
சொன்னபடி யிடித்துபுதுச் சட்டியிட்டு
துகையாக அமுக்கிடுப் பள்ளம்பண்ணி
நன்னயமா யரன்பீசம் பலமும்தானு
நாடியிடு பள்ளத்திற் சட்டிமூடி
முன்னேழு சீலைசெய்து அடுப்பில்வைத்து
முனிவாக யாகோபு முறைசொன்னாரே. (574)

கல்லாகக் கனலிட்டு விறகுபாச்சி
நாடியெரி மூவருந்தான் மேலேயேறி
சல்லாப மாயிருக்கும் சாமத்துள்ளே
சரிவரவே கனளாற்றிப் பிரித்தெடுத்து
மல்லாத்தி பதங்கத்தை வழித்தெடுத்து
மகிமையுள்ள கல்வத்தி லிட்டுகல்ல
மெல்லிகல்லாள் தனப்பாலே விட்டுஆட்ட
மேதினியில் யாகோபு விளம்பினாரே. (575)

விசமதிற் பணமெடுத்து நோய்கள்போகும்
விதமான திரிகடுகில் மூன்றுகோரம்
பாசமுடன் சொன்னபடி உண்டுபாரு
பறக்குமே வாதபித்த மையமெல்லாம்
காசமுடன் பதினெட்டுச் சூலைபுண்கள்
கடிவிஷங்கள் பாண்டுகுஷ்ட மேகமெல்லாம்
போசனைகள் பண்ணுமல்க் கடலேபுக்கும்
ஓதினார் யாகோபு உறுதிதானே. (576)

ஓதினதோர் பெருவயிற்கா மாலையீளை
உண்ணஒரு மண்டலத்திற் கண்ணப்புற்று
நீதியாய் மகோதரமுன் துடையின்வாலை
நிமைகொட்டி முழிக்குமுன்னே நெட்டிட்டோடும்
வாதியாம் உப்பாகா புளியுமாகா
வடிவமெல்லாம் நோகாது வாய்வேகாது
சோதிதான் முன்னோர்கள் சொன்னநீதி
சொல்தவரா திதனையுண்டு சுகத்தைப்பாரே. (577)

இருகுரங்கி னிலைபிடுங்கி உலிலிட்டு
இடித்தெடுத்துப் பிழிந்துவிடு பீங்கானிட்டு
திருமடந்தை கல்வமிட்டுச் சாமமாட்டித்
திட்டமா யரைத்தாவி காயவைத்து
பருகச் சுங்கானில்வெரு கடிதானிட்டு
பகற்பொழுது மூன்றுதான் புகையுட்கொள்ள
தருகாது சயகாசம் குடிவிட்டோடுஞ்
சாற்றக்கேள் பத்தியந்தான் புளியாகாதே. (578)

இருவங்கப் பற்பம்.

இருவங்கம் சமனெடுத்துக் கரண்டியிட்டு
இதமாக ஊதிடவே உருகும்பாரு
மருகவதைக் கிண்டிடவே மஞ்சளாகும்
வடிவான கல்வமிட்டு அரையன்னத்தால்
பருகவே வில்லைதட்டி வெடியுப்பங்கி
பதமாகச் செய்துபுட மிட்டெடுத்து
உருகவே குகையிலிட்டுச் சாமமூது
உற்பனமாய்ச் சுத்திவங்க மெனச்சொன்னாரே. (579)

சொன்னதொரு வங்கத்தைக் கரண்டியிட்டுச்
சுகமாக உருக்கையிலே வெடியும்பாதி
நன்னயமாய்ப் போட்டுவறு மஞ்சளாகும்
காடியே மாளமட்டும் புடமுமிட்டு
இன்னிலத்தி லெடுத்துப்பார் செகப்புமாகும்
இடுகவசம் வாள்மடந்தை மேலேகட்டு
முன்னமே சொல்லிவிட்டேன் புடத்தைப்போடு
முக்கியமா யெடுகரியா யிருக்கும்பாரே. (580)

கரியெடுத்துத் தருசுனுட செம்புதன்னில்
கருத்துறவே ரெண்டுக்கு ஒன்றுசேர்த்து
சரியாய்ப்பொன் சேர்த்துருக்கி ஊதிப்போட
சலனமற்று சென்டிடையும் யேமமாகும்
குரியாகச் சொல்லிவிட்டேன் களங்கமற்று
குறிப்புடனே சுண்ணச் சூத்திரமுந்நூறும்
பரிபோலே நூற்றியைம் பத்தைந்துஞ்சொன்னேன்
பார்க்கயிதில் வாதவித்தை பலிதமாமே. (581)

அப்பிரேகச் செந்தூரம்.

அப்பிரேகம் பலம்நாலு கல்வத்திட்டு
அந்திடைக்குக் காரியது கூட்டிநன்றாய்
மூப்பான அன்னத்தின் னீரினாலே
மூன்றுபுடம் போட்டெடுக்கக் கசடுநீங்கும்
தப்பாமல் தாளகமும் பாதியிட்டுத்
தாக்கியரை மூன்னரைத்த நீரில்வில்லை
செப்பினேன் அங்கியிட்டு யெடுத்துப்பாரு
செந்தூர மாகுமிந்தச் சேதிதானே. (582)

செம்புருக்கி நூற்றிலொன்று கொடுக்கநல்ல
செயமூள்ள தங்கமாஞ் சொல்லப்போகா
நம்பியொரு பணவிடைதான் கொண்டாயானால்
நாடாது சலரோகம் மேகவெட்டை
வெம்பினதோ ருடல்வெதுப்புக் குஷ்டமேகம்
வீணையமுள்ள வாதங்கள் பிதத்தம்போகும்
வம்பில்லாச் செந்தூரமுந்நூற் றன்னில்
வழுத்தினே னிதன்விவர வளமாய்த்தானே. (583)

ஓமத்திராவகம்

இணங்கனது பலம்நாலு ஓமந்தூக்கு
இதமான பாணியது ரெட்டிப்பிட்டு
சுணங்கவதை திரிகாள்வை கலசத்திட்டுச்
சூட்சமாய் வாலிகொண்டு மூடிநன்றாய்
கணங்களரி தீபமிடும் புகைநீர்வீழும்
கதமையா யதையெடுத்து வைத்துக்கொண்டு
வணங்கியே கடவுள்தனைப் பணிந்துகொண்டு
வாய்த்துவந்த நீரிடைக்கு ஓமம்போடே. (584)

போட்டுதிரி நான்வைத்துக் கலையத்திட்டு
புத்தியுட னதையெடுத்து வாலியிட்டு
வாட்டமிலா திப்படியே மரந்திமாற்றி
வாலிதனில் அஞ்சுதரம் வடிநீர்தன்னை
நாட்டுவாய் பேதியுட மாந்தம்போகும்
நலமான குன்மவலி மூலவாய்வு
கேட்டவுடன் தெண்டனிட்டு வியாதியோடும்
கிருபையுடன் யாகோபு கூறினாரே. (585)

இரத்தமூலக் கடுப்புக்கு.

கருங்குருவை சேரையொன்று பாணியிட்டுக்
கருத்தறவே ஊரவைத்து யெடுத்து அம்மி
நெருங்கயிட்டு நற்பிரண்டை யிடையேசேர்த்து
நிலைபெறவே அரைத்துஅடை பண்ணிப்பின்பு
உருகவதை முத்தெண்ணெய் சட்டியிட்டு
உறுதிபெற முன்னடையை வேகவைத்துத்
திரும்பதிரி நாட்கொள்ள ஆணிமூலஞ்
சீரில்லா மூலமெல்லாந் தீருந்தானே. (586)

நற்புளவாப் பட்டையுடன் பிரண்டைசேர்த்து
நலமாக யிடித்துமோர் குருணியிட்டு
வற்புடனே அதைநீயும் புளிப்புமேற
வகைபெறவே திரிகாள்வை வாலியிட்டுத்
தற்பிடவே புகைநீரைப் பிடித்துச்சாடி
தனிலிட்டு முன்பிரண்டை நறுக்கிப்போட்டு
அற்புதமாய் நீரைவிட்டுக் கல்லுப்பிட்டு
அடைவாக உலரவைத்துக் குறிப்பைக்கேளே. (587)

அங்கியிட்டு உலரவைத்து யிடித்துத்தூளாய்
அதுதனையே வடிகட்டித் தசகாட்கொள்ள
எங்குமுள்ள செரியாமை பித்தவாய்வு
இனிதான வலிகுன்மம் மூலவாய்வு
தங்கினின்ற புளித்தேப்பம் உப்பிசங்கள்
சாடிவிடுங் கனலுண்டாய் இருகுமேனி
இங்கிதமாய்ப் புளிதள்ளி உண்ணச்சொல்லு
இருந்துரைத்தார் யாகோபு யிதமாய்த்தானே. (588)

விளக்கெண்ணெய்'சுத்தி

புள்ளோமக னிகோயோனை முகத்தைச்சீவிப்
பொத்துமே சட்டிதனிற் பதக்குரை
உள்ளபடி ஊத்தியதில் வெடிமுத்திட்டு
ஊரியதை யவித்தெடுத்து லுலர்த்திக்கொண்டு
துள்ளயிடி மூன்னீரிற் கரைத்துக்காய்ச்சு
துடிபெறவே யெண்ணெய்க்கும் யிருத்துக்கொள்ளு
கள்ளமற யெண்ணெய்தான் சுத்தியாச்சு
கருத்தகந்து யாகோபு சொன்னார்தாமே. (589)

மனோரஞ்சித யெண்ணெய்.

சுத்தியுள்ள எண்ணெய்படி ரெண்டுவிட்டுத்
துடியான வல்லாரை சிவதையோடு
பத்திபுனி யாரைநில வாகையோடு
பதிவான சூரத்தா வரையுங்கூட்டி
நித்தியமாய்க் கையானும் வகைக்கிரண்டு
நேராக யிடித்துயிடு பாண்டத்துள்ளே
நத்தியெடு கடுக்காயுந் தான்றிக்காயும்
நலமான சீகமுங் கிராம்புகூட்டே. (590)

கூட்டியே கற்கடக சிங்கிதானும்
குணமாகத் திரிகடுகும் வகைக்குக்காலாய்
மாட்டியே அடுப்பில்வைத்துக் காய்ச்சிவத்த
வளமாக யெண்ணெய்பதம் பார்த்தெடுத்து
காட்டிடுவா யுலகத்தில் மானிடர்க்கு
நலமாக யெண்ணிறைந்த நோவுதன்னை
ஓட்டிவைக்குங் கதிர்கண்ட பனிபோலாகும்
ஓகிஞர் யாகோபு சொன்னதாமே (591)

எண்ணெய்தனைக் கரண்டியள வாகக்கொள்ள
இருமல்சயம் வெட்டையொடு அரிப்புநீர்கள்
உண்ணவுட னேடிவிடுங் கால்கைதானும்
உற்றுமே கனலெரிவு உப்பிசங்கள்
சண்ணுமடா யிந்தயெண்ணெய் குளிர்ச்சிதானும்
சரியான கபாலத்தின் சூடுபோகும்
மின்னுடலங் குளிர்ந்துவிடும் யாகோபுசொன்னர்
வேதமனே ராஞ்சிதமாம் யெண்ணெய்தானே. (592)

வங்கச்செந்தூரம்.

அரியுமரன் பீசமிடை கல்வத்திட்டு
ஆட்டிடுநீ மூச்சாமம் மேனிச்சாரால்
உரியகுண்டு கல்லுப்போ லுண்டைசெய்து
உலர்த்தியதை வைத்துப்பின் உறுதிகேளு
பெரியகரு நாகத்தைக் கரண்டியிட்டுப்
பெலமாக உருக்குமுகம் உண்டைதாக்கு
கரியாகும் யெடைக்கெடைநீ கொடுக்கவென்று
காரணமா யாகோபு சொன்னர்தாமே. (593)

கருவான வெட்டைவங்கங் கல்வத்திடுக்
கணக்கவதைச் சோறுதன்னுற் கனிவாயாட்டி
மருகபுட மூன்றிடவே சிவந்துபோகும்
மதிரவியிற் பாய்ச்சிடவே தங்கமாகும்
உருவாகப் பணவிடைதா னுண்டாயாலே
உறுதிபெரும் நோயெல்லா மோடிப்போகும்
சிறுவயது போலாகும் மேனிதானும்
சித்திபெற யாகோபு சொன்னவாறே. (594)

சிரநோய்க்குத் தயிலம்.

செம்பையிலே தூக்கியெடுத் தூரலிலிட்டு
சிதரபிடி நீர்வாரு அந்நீர்தன்னில்
நம்பியிடு கிச்சிலியின் கிழங்குதன்னை
நாடியரைத் ததிற்போடு யெண்ணெய்வாரு
தும்பிமாங் கனிபிளிந்து கலக்கிச்சேர்த்து
சுண்டபெறி தயிலமெடு தேய்த்துமூழ்கு
கொம்புமத கரிகண்ட சிங்கம்போலக்
குடியோடுஞ் சிரநோய்கள் குணமதாமே. (595)

வியாதி யெண்ணெய்.

வனத்தில்நிற்கு மாவாரை படிதூள்ஒன்று
வளமையாய் பாணிபடி யெட்டுவிட்டு
இனத்துலொரு படியாக வற்றக்காய்ச்சி
எடுத்தபின்பு கொட்டைமுத்து பதக்குவாங்கி
கனத்துடனே காடிதனில் அவித்தெடுத்து
காயவைத்து உடைத்திடித்து பாணியிட்டு
நினைத்திடி முன்முத்தவித்தக் காடிவார்த்து
நேராக யெறித்துவடித் தெண்ணெய்வாங்கே. (596)

எண்ணெய்தனிற் கலக்குதற்கு மருந்தைக்கேளு
இயல்பரங்கிப் பட்டைபலம் நாலதாகும்
நண்ணயமாம் வெள்ளுள்ளி பலம்நாலாகும்
நவிலுவென் நேர்வாளம் பலங்கால்கூட்டி
உண்மையுட னிம்மூன்றும் அரைத்தெடுத்து
உறுதிபெற மூன்னெண்ணெய் தனிற்கலக்கி
பிண்ணமில்லா தடுப்பேத்திப் பதமாய்க்காய்ச்சி
பிரபலமாய்க் காண்டிகொள்ளப் பிணிகள்போமே. ()

வாதத்தி லெழுந்ததொரு சூலைபோகும்
வருகாங்கை பித்தங்கா மாலைபோகும்
நீதத்தம கோதரங்க ளற்றுப்போகும்
நோான விப்புறுதிக் கட்டிபோகும்
பாதத்தி லுண்டான புத்துப்போகும்
பவுந்திரங்க ளரையாப்பும் பறந்துபோகும்
தீதுற்ற கண்ணத்தின் புற்றும்போகும்
சில்விஷத்தால் வந்தரணந் தீருந்தானே. (598)

தாட்டிகமா யெண்ணெயுண்ட பலனைக்கேளு
சலமேக மதுமேகந் தந்திமேகம்
வாட்டலருங் கிரீச்சனங்கள் ரத்தமேகம்
வயிற்றுவலி கொலையெறிவு மாந்தம்சோகை
கூட்டமரு மிடுப்புவலி கால்கைகுத்தல்
கொடுமையுள்ள நெஞ்சடைப்பு மூர்ச்சைவாய்வு
நாட்டமுடன் யெண்ணெயிதைக் கொண்டபோது
நவிலாம லோடிவிடும் புளியாகாதே. (599)

அபூர்வச் செந்தூரம்

கரும்பொன்னர் பொடியிடைக்குக் காரீகூட்டிக்
கல்வத்தி லிட்டுபழச் சாற்றுலாட்டி
விரும்பியதைக் காயவைத்துப் புடந்தானிட்டு
விருப்பமாய் மடலினிய அரிதாரத்தை
திரும்பவதை நாலிலொன்று சேர்த்தரைத்துத்
திறமாக வில்லைபண்ணிக் கதிரிலிட்டுக்
கரும்பிடவே பெரியபுடம் போட்டெடுக்கக்
கனகமுள்ள செந்தூர மாகுந்தானே. (600)

கூத்தனுட செம்புதனில் நாலுக்கொன்று
கொடுத்திடவே கருப்பாக யிருக்கும்பாரு
வேத்தமனஞ் செல்லாமல் மதியிலெட்டு
வீதமிரண் டிட்டுருக்கிப் பொன்னைச்சேர்த்து
பார்த்துமே உருக்கியிதை ஊதிப்போடப்
பண்டுபோல் பொன்னாகும் ஆணிக்கொக்கும்
சேர்த்துமே பணவிடைதா னுண்டாயானுற்
சித்திபெற லாகுமென்று செப்பினேனே. (601)

மண்டலத்திற் பணவிடைதா னந்திசந்தி
மரவாமற் தின்றுவர மேகம்போகும்
கொண்டவுடன் வாய்வுகுன்மஞ் சூலைபோகும்
கொடிதான சயரோகம் பித்தகாசம்
கண்டவுடன் பறந்துவிடும் கைகாலோச்சல்
கனகமென்ற மேனியுறும் விந்துகட்டும்
மூண்டகம்போற் முகமலர்ந்து குளிர்ந்துபோகும்
மொழிந்தாரே யோகோபு முறையிதாமே. (602)

சாம்பிராணித் தயிலம்.

மட்டிப்பால் பலம்நாலு கலையத்திட்டு
வயமான சாம்பிரானி யிடைதூள்சேர்த்து
நட்டியிலலா வாய்சரியாய்ச் சில்லும்போட்டு
நடுவிலே பொத்துசிறு குழலும்வைத்து
கட்டியதை சீலைமண் கணக்காய்ச்செய்து
காரணமா யங்கியிடு மெதுவாய்த்தானும்
விட்டுயெரி சாம்புராணித் தயிலம்வீழும்
வெற்றிபெற யாகோபு விளம்பினாரே. (603)

வாசமென்ன அதிதமது சிரசுகொந்தால்
வகைபெறவே துட்டிடைதான் தடவிப்போடு
நேசமுடன் பீனிசங்கள் சொல்லாதோடும்
நிலைமையா பித்தயிலம் சிறசிற்கொஞ்சம்
பாசமுடன் தேய்த்துநீ மூழ்கிப்பாரு
பரிவுள்ள தலைநோவு காசமெல்லாம்
தோசமுதல் சன்னிகளு மோடிப்போகும்
தூரைதெரிந்து யாகோபு சொல்லினாரே. (604)

மெஞ்ஞானம்.

தானான சிவஞானந் தெரிந்தோனுகில்
சடமழியா திருக்கக்கற்ப முண்டானுகில்
மானுர்கள் மயக்கத்தை விட்டோனுகில்
மானிலத்தி லாசைதனை மறந்தோனுகில்
தேனான ரிஷியாகிச் சித்தனுகி
செகமாயை தனைவெறுத்து முனிவனுகில்
வானான வானவர்கள் எதிராவார்கள்
வையகத்தில் யாகோபு வளங்கினாரே. (605)

நடலது துலாராசி பிறந்தோன்வேணும்
இல்லாட்டால் சிங்கமென்ற ராசிவேணும்
ஆடலுடன் கன்னியுட ராசிவேணும்
அல்லாட்டால் கற்கடக ராசிவேணும்
நாடதனி லாணமில்லா திருக்கவேணும்
நலமோடு பென்னாலைப் பார்க்கவேணும்
வீடடையா யோகமது புரியவேணும்
வெகுநாளும் பார்த்தறிய விளங்குந்தானே. (606)

அதிகசன்னி போகவே தயிலஞ்சொன்னேன்
அதனடுத்த கைபாகம் நூற்றுப்பத்தில்
அதிநடுவே யிருக்குமந்த விபரஞ்சொன்னேன்
அன்பத்தோ ரட்சரமும் விளங்கச்சொன்னேன்
விதிமிகுந்த சூத்திரமா னூறுசொன்னேன்
வேணுமென்றே யதைப்பார்த்தா லெல்லாமாகும்
பதியிருப்பு தன்னிலே உழைத்துப்பாரு
பாகமெல்லாஞ் சரியாகப் பலிக்குந்தானே. (607)

தங்கத்தைக் கண்டவுடன் கெற்சிக்காதே
தாசியர்மே லாசைகொண்டு யிச்சிக்காதே
இங்கிதமா யோரிடத்தி லிருந்துதேரு
இதமான வாதமெல்லாஞ் சித்தியாகும்
உங்களுட உள்ளன்பில் நினைத்துத்தேரு
ஒருவருடன் பேசாமல் உறுதிபாரு
மங்களமாய் கனகமது உண்டாம்நேரே
வாழ்வதற்கு பெரியோரை வணங்கித்தேரே. (608)

பிரண்டைரசம்.

காருநீ பிரண்டைபிடி சட்டியிட்டு
நல்லுள்ளி அதிகேரே பாணியிட்டு
பாருநீ சட்டியிலே போட்டவித்து
பதிவாக அதைக்கடைந்து வைத்துக்கொண்டு
மோருஒரு படிவார்த்து கலக்கிக்கொண்டு
முத்தமமாய் மிளகாயும் மிளகுஉப்பும்
சீருடனே புளியிட்டு கரைத்துப்போடு
செயமாகப் பிரண்டைரசம் உண்ணக்கேளே. (609)

உண்டிடவே திரிநேரம் வாந்திவாய்வு
உண்மைசெரி யாமாந்தம் பேதியெல்லாம்
கண்டவுடன் தெண்டனிடு மூலவாய்வு
கனலெழும்பி அப்புறந்தான் காணுதோடும்
மூண்டுசெய்யும் பசிஉண்டாம் வாய்வுநீங்கும்
மூலமூலை யுஞ்சுருங்கும் மூலையுமில்லை
பண்டுசெய்த பெரியோர்கள் சொன்னநீதி
பாருலகில் யாகோபு பலன்சொன்னதே. (610)

பூர்ணதிலேகியம்.

சடைக்கஞ்சா பலம்நாலு சட்டியிட்டுத்
தண்ணியிட்டுத் திரிகாள்வைத் தலம்பிவாங்கி
திடமாகப் பின்னுமொரு சட்டியிட்டுச்
சீரான பால்படியும் பாணிநேரே
விடையாக அதைத்தானும் போட்டுவைத்து
விதமாகப் பிழிந்தரசம் வாங்கிப்பின்பு
இடமிட்டு ஆவின்நெய் சேருமிட்டுக்
கிருபையாய் வைத்துநீ பாகங்கேளே. (611)

சக்கரையுஞ் சுக்கேலம் மிளகுமாஞ்சி
சாதிக்காய் பத்திரியுங் கிராம்புகோஷ்டம்
மிக்கஅதி மதுரமுடன் அமுக்கிராவும்
விதமான வால்மிளகு கசகசாவும்
தொக்கவகை பலம்ரெண்டு தூள்கள்செய்து
சுருதிபெறப் பாலிலிட்டுப் பாகாய்க்காய்ச்சி
பக்குமுள்ள மூன்ரசத்தை அதிலேவிட்டுப்
பாகமா யிறகுபதம் பார்த்திறக்கே. (612)

பார்த்துயெடு சாராயந் தேனும்விட்டுப்
பதமாக ஊத்தியள வாகவைத்து
சாத்திநீ லேகியத்தை யதிலேபோட்டு
தான்கொடுநீ சன்னிமுதல் பேதிநிற்கும்
காத்திடுநல் மூலமதிற் கிராணிநன்றாங்
கடிதான செரியாமை வாந்திநிற்கும்
போத்தியெடு தேகத்தைப் பார்த்துத்தாக்கு
புகலரிய யாகோபு புலன்சொன்னாரே. (613)

நபிமார்கள் சந்தோசம்

கூவென்ற சொற்கேட்டு நபிமாரெல்லாம்
குண்டலியைத் தானசைத்துத் தின்தீனென்றார்
ஆவென்ற சொற்கேட்டு ஓடிவந்தேன்
அசனுசனும் வேறல்ல நீதானென்றார்
மாவென்ற ரொட்டியொன்று யீந்துபின்பு
மக்கத்தி லேயிருங்க ளென்றுசொல்லி
சவென்றுஞ் சொல்லாது கலிமாவோதி
இருந்தேனே சிலகாலம் யாகோப்பென்றே. (614)

அண்டநீர் சீனச்சுண்ணம்.

காட்டெருமைப் பாலுழக்குக் கருவுகேரே
கலந்துமதைப் பீங்கானிற் றிரிகாள்வைக்க
காட்டிகமாய் மூரிந்துவிடும் நீரைவார்த்து
தப்பாமல் சீனத்தைக் கரியில்வைத்து
மாட்டியே ஊதியெடு சுண்ணமாகும்
வண்மையுள்ள கல்வமிட்டு முன்னீராலே
மூட்டியரை வில்லேக்குக் கவசஞ்செய்து
மூட்டிடவே கெசபுடத்தில் நீறுந்தானே. (615)

சங்குநிறம் நீறியதோர் சீனச்சுண்ணம்
சாங்கமற வெடுத்துவைத்துச் சாற்றக்கேளு
இங்கிதமாய் வன்னிரசம் உப்பிலிட்டு
இதமாக வெரித்திடவே பதங்கமாகும்
துங்கவதை வெடுத்துமுன் சுண்ணம்கேரே
தூடியாகச் சேர்த்துமே கல்வத்திட்டு
சங்கைபடப் பழச்சாற்றூல் சாமமாட்டிச்
சதிராகக் கிடத்திலிட்டு மூடிக்கேளே (616)

மூடியதைச் சீலைசெய்து யெரிகால்சாமம்
முடிந்தசுண்ணத் தேனில்மண் டலமுமுண்ண
கோடிநோ யோடிவிடுங் குஷ்டம்போகும்
குணமாக வாதவெடி சூலைபோகும்
நாடிவரு மகோதரமு மகன்றுபோகும்
நாட்டிலுள்ள நீரழிவு நடுங்கிஓடும்
வாடிமுகங் ஒளிகண்ட யிருள்போலாகும்
வகையாக யாகோபு சொன்னவாறே. (617)

பிரண்டைச் சூரணம்.

கோதையர்பால் நாழியதில் பிரண்டையிட்டுக்
குணமாக அவித்துத்தெடுத்துப் பிரண்டைதன்னை
ஆதரவாய் வெந்தபா லுடன்பிழிந்து
அதிலேயிடு திரிகடுகு கிராம்புயேலம்
போதரவாய் வகைக்கொன்று பலமுமிட்டுப்
போட்டுரலி காயவைத்துத தூளதாக்கி
சேதமில்லா மூவிரற்றூ ளாறுவேளை
சித்தமாய்க் கொள்ளென்று நிறஞ்சொன்னரே. (618)

கொண்டிடவே வாதபித்தம் மூலவாய்வு
குணமாகு வேகமுதற் குன்மம்போகும்
கண்டவுட னேடிவிடுஞ் செரியாமாந்தம்
கண்ணெரிவு சோகைமுதல் கரப்பானோடும்
மண்டலத்தில் காயமது உறுதியாகும்
மகத்தான மருந்திதுதான் கொண்டபோது
அண்டாமல் பலபிணியும் போகுமென்று
அருளினார் யாகோபு அன்பாய்த்தானே. (619)

மூப்பிரண்டைச் சூரணம்.

மூப்பிரண்டை ஒருதூக்குச் சட்டியிட்டு
மூலைபெருகும் பசும்பாலில் அவித்திருத்து
தப்பாமலே பிழிந்துபெரி ரசத்தினுள்ளே
தன்மைதிரி கடுகோமம் வகைக்குஒன்று
செப்பமுட னெடுவெருத்தப் பொடித்துத்தூவி
செயமாக ரவியிலிடு பொடித்துத்தேனே
கொப்பமுடன் விட்டுமூ விரல்த்தூளுண்ண
குறிப்பாக யாகோபு கூறினாரே. (620)

வில்லிடைகள் வலிகுன்மம் ருத்திரவாய்வு
விருத்தியுள்ள மகோதரங் காமாலைசோகை
கொல்லவருஞ் சன்னிகளும் மூலவாய்வு
குருதியுள்ள பெரும்பாடு குணமதாகும்
கல்லடைப்புக் கனல்மேகங் காணுதோடங்
கருதுபெருங் குடல்பிரட்டல் வாந்திநிற்கும்
நல்லபுளி தள்ளிவிட்டு உண்டுபாரு
நலமாக யாகோபு நவின்றதாமே. (621)

எலிகொல்லிப் பாஷாணக்கட்டு.

வச்சிரத்தின் பாலழக்குப் பிங்காணிலிட்டு
வசமாக அண்டவெள்ளைக் கருநேரிட்டு
தச்செயலாய்த் திரிகாள்வை மூரிக்குநீரும்
தகமைபெற வெலிகொல்லி ஒட்டிலிட்டு
வச்சபடி முன்னீராற் சுருக்குமிட்டு
வகையாக நால்சாமம் போட்டுத்தீரு
உச்சிதமா யண்டமென்ற சுண்ணங்கட்டி
ஊறியப் புடமிடவே கட்டுந்தானே. (622)

கட்டுகின்ற பாஷாணங் கரியிலாடும்
காதலா மெடுத்தவுதை வைத்துக்கொண்டு
வெட்டுகின்ற வெள்ளீபம் நூற்றுக்கொன்று
விரும்பியிடு ரசிதமாம் நீர்தானற்று
தட்டுநீ நாதமிடுங் கடையிலிவிற்று
தகமையுள்ள ஞானத்தைத் தரித்துக்கொள்ளு
பட்டுநூலிற் சாயம் யேறினப்போல்
பதிவாகத் தானிருக்கும் பாருபாரே. (623)

சன்னிக்குத் தைலம்.

நிம்பயெண்ணெய் படியழக்குக் கரண்டியிட்டு
நிஜவாக வெள்ளுள்ளி தாரங்கொஞ்சம்
தெம்புடனே போட்டெரித்துச் சூடுகண்ட
திரமான பருவமதிற் தலையிற்தேய்க்க
பம்பமது சன்னிகளிர் விட்டுப்போகும்
பதைப்புள்ள சலவைகளுஞ் சொல்லாதோடும்
ஈம்பியிட்ட பயிர்போலே நலமதாகும்
நாதாந்த யாகோபு நலஞ்சொன்னாரே. (624)

வாந்திபேதிக்கு மருந்து:

கருத்துடைய மானிடர்க்குப் பேதிகண்டால்
கைக்கடங்கப் பிடியதுதான் பிளகாய்தன்னை
இருத்தியரை வெண்ணெய்போல் தலையிற்தேய்த்து
இதமாக பத்திட்டு பின்புதீயும்
பெருத்ததொரு வன்னிபற்ப மூடனேதாக்கு
பேருலகிற் சன்னியற்று பிழைப்பார்பாரு
வருத்தமில்லாக் கைகண்ட தொழிலுமாகும்
வண்மையுள்ள யாகோபு வசனித்தாரே. (625)

பேதிகண்ட உடனேஎத் தனமுஞ்செய்து
பேதமில்லா ஆக்ராண கலிக்கம்போட்டு
நீதியாய் மாத்திரைகள் பற்பஞ்சேர்த்து
நிலையாக ஒருநாளிற் செய்துகொள்ளு
சோதிபெற நாள்ரெண்டிற் செய்யவேண்டாம்
சுருக்கிலே சன்னிவந்து மூடிப்போகும்
நாதிதா னில்லாட்டா லுயிரும்போகும்
நலமான யகோபு நவின்றவாறே. (626)

விதனைக்கு மருந்தில்லை நோய்கள்மிஞ்சும்
விதமான பீதிகண்டு வாந்திசெய்யில்
கெதியான கபமடைத்து சன்னிமிஞ்சில்
இளர்ந்தோமம் சாரம்சே ரிடைசுண்ணும்பு
பதியாக மத்தித்து நாசிதன்னில்
பாய்ச்சிடுநீ நாசிதன்னிற் பரிவாய்க்காட்ட
நிதிகதிரைக் கண்பனி போலேமாறும்
நேர்த்தியென்று யாகோபு நிகழ்த்தினாரே. (627)

லிங்கக்கட்டு.

நச்சரவம் பேதிகண்ட வுடனேலிங்கம்
நாட்டியெடு விராகனிடை சென்டுநாற்றம்
உச்சிதமாய்ப் படிதிரண்டு பொடித்துஓட்டில்
உறுதிபெற உருக்குமுகம் வன்னிபோட்டு
மெச்சவதை பிரட்டியெடு கட்டிப்போகும்
மேனியுட பாலிலே உரைத்துஉண்ண
தச்செயலாய்ப் பேதிநிற்கும் தாபசோபம்
தானடங்கு மென்றுசொன்னார் யாகோப்தானே. ()

தாளகச்சுண்ணம்.

வாஞ்மடந்தை பலம்ஒன்று சுண்ணத்துள்ளே
வைத்துஅவித் தெடுத்துக்கல்வ மிட்டுநன்றாய்
கேள்குமரி நீர்விட்டுத் திரிதாளாட்டிக்
கெட்டிஉண்டை கதிரவன்மூன் சுண்ணத்துள்ளே
மாளயிட்டுச் சாமம்நா லெரித்துவாங்கு
மடிந்துவிடும் யிம்முறைபோ லஞ்சுபண்ணு
தூள்சங்கு நிறமாகும் யிடைபோகாது
தூக்கியெடு சுண்ணமாம் சொகுசுமாமே. (629)

நச்சரவின் பல்விஷங்கள் எலிவிஷங்கள்
நாடியறும் மகாசயமும் பெருநோக்காடு
வச்சவிடந் தெரியாது அடைப்புநீங்கும்
வளருகின்ற குட்டமுதல் வண்மைபோகும்
நிச்சயமாய் வியாதியெல்லாங் கடலேபுக்கும்
நிகழாதே பத்தியமா யுண்டுதேறு
அச்சமாய் பருதிகண்ட பனிபோலாகும்
அன்பாக யாகோபு அறைந்தார்தாமே. (630)

பேதிக்குமருந்து

தையோடு மாசிபைங் குனியுஞ்சித் திரை
தற்காலம் பேதிவருங் காலந்தன்னில்
பையவே படுரெத்த மூரிந்துநீராம்
பதிவாக ஊழியாம் பேதிக்குத்தான்
உய்யவே யிதற்கடுத்த மருந்துதன்னை
உரைக்கிறேன் மருந்தினுட கருத்தெரிந்து
செய்யவே பிரயாசை மெத்தப்பாரு
சீர்பெறவே யாகோபு செப்பினாரே. (631)

கொம்புடனே திப்பிலியு மிளகுசேரே
கூட்டியெடு சந்தனமுஞ் சிவதைமட்டும்
தெம்புடனே அரைப்படிநீர் தனில்அவித்து
நிறப்பாக சுத்திசெய்து அவ்விடையாய்
நம்கடுகு ரோகணியுங் கல்வத்திட்டு
நலமான தந்தியிடை யாறுஞ்சேர்த்து
தும்பமறத் தட்டியதைத் தோடுபோக்கிச்
சுகமாகக் கரிக்கிமுன்னேர் சரக்கிற்போடே. (632)

நல்லபழச் சாறரைத்து உண்டைசெய்து
நாடிகதிர் காயவைத்து உண்டைதன்னை
உல்லாச மாகருகர் தனிலொருத்தர்
உரமாகப் பேதிகண்டு யிருந்தாரானால்
சல்லாப மாகயிந்த உண்டைதன்னைச்
சார்பாக உண்டிடவே கட்டிப்போகும்
கல்லாகச் சுகபேதி யாவதற்கும்
நலமாகச் சாப்பிடவே நலஞ்சொன்னாரே. (633)

மருந்தினற் பேதிகண்டால் வினையபேதி
மாயமா யோடிவிடும் அம்பைப்பாலைத்
தெரிந்தெடுத்து அம்மையிலாப் பேர்க்குப்போட
திரும்பிஅம்மை வார்க்காது செகத்தின்மீது
திருந்தவே ஆதிசிவ ரூபந்தன்னைத்
தெரிந்துஅர்ச் சனையுமே செய்துபூவில்
பெருகவே பேதிகண்டா லுடனேயுண்டை
பேதமறக் கொடுக்கமலங் கட்டிப்போமே. (634)

நாகபற்பம்.

சீருறின்ற வாசுகியைக் கரண்டியிட்டுச்
சேர்த்துருக்கு யெட்டிரண்டு பிரதங்கூட்டிப்
பார்கல்வ மிட்டுயிடை வெடியுப்பிட்டுப்
பண்பாக நாகவல்லிச் சாற்றூலாட்டி
ஏருகதிர் காயவைத்து அங்கியிட்டு
எடுத்துமே பற்பமதை யனுப்பானத்தில்
தீருமதை யிட்டிடவே மூலரோகம்
தேசத்தி லில்லாம லோடிப்போமே. (635)

பொன்முசுட்டை வேரதனை மேற்றோல் போக்கி
புகழ்நாகப் பூவுடனே கிராம்புசேரே
தண்ணிவிட்டு அரைத்துநீ உண்டைபோலே
தாக்கியிடு நாகபற்பம் பணமதாக
நன்னியிடு நாளேழு தனிலேமூலம்
நாடாது சீமூலம் பேதிக்கிராணி
வன்மமுள்ள நாய்கண்ட நரிபோலோடும்
மகிழ்வான யாகோபு வழுத்தினாரே. (636)

முத்தினசேங் கொட்டையெட்டு மூக்குவெட்டி
மூரியெருக்கம் வேரினுட தோலைக்கொய்து
சித்தியாய்ப் பிரம்மனுட களங்குநோய்
சிதறயிடி பாங்கியுட பட்டைநாலும்
சத்தியமா யம்மிதனிற் சேர்த்தரைத்து
தடையறவே ஆவினெய் விட்டுஆட்டி
நித்தியமாய் வெருகடியில் நாகபற்பம்
நிரையாகப் பணவிடையா யெடுத்துஉண்ணே. (637)

உண்டுவர மண்டலத்திற் குறைநோய்குன்மம்
உணர்வாகுங் கிரந்திமுத லானமேகம்
தொண்டுசெய்யும் விஷநீரால் தோல்கள்மேலே
தடர்ந்துபடர் பத்துகளுஞ் சொல்லாதோடும்
பண்டுமுன்போ லிருந்துவிடும் தேகந்தானும்
பதியைவிட்டு யேகும்நோய் புளியைத்தள்ளு
கொண்டுவர மாந்தளிர்போ லாகுமேனி
குணமான யாகோபு கூறினாரே. (638)

கதிரவன்பேர் கொண்டெருக்கு வேருவாங்கி
கத்தியினுர் சுரண்டியெடு பட்டைதன்னை
கதிரோன்மூன் காயவைத்துப் பொடியதாக்கிக்
கைமூன்று விரலெடுத்து வெண்ணீரிட்டு
கதிரவனை போற்றியுண்ண மண்டலத்தில்
கழிந்ததசை திமிர்குட்டம் விலகிப்போகும்
கதிரவன்போல் மேனியுமா மிந்தப்பாகம்
காட்டாதே யென்றுசொன்னர் யாகோப்தானே. (639)

விதிபிறந்த மதியோனும் வேகத்தோனும்
மிளகுயிஞ்சி தேனோடு கல்வத்தாட்டி
மதிகடலை போலுண்டை செய்துநெய்யில்
மத்தித்துக் கொடுத்திடவே சுரமுமேகும்
கெதிபடவே எலிகடியுஞ் கேட்டேயோடும்
கிருபைதரும் நோயகலும் புளிப்புத்தள்ளு
நிதிபெறவே வாய்வுபுத்திரன் போலிருப்பர்
நிதானித்தார் யாகோபு நிசமாய்த்தானே. (640)

கருநாகக்கிழங்கு

சீருகின்ற நாகமிடை காரியிட்டுச்
சிறுகரண்டி தனிலிட்டு உறுக்கிக்கொண்டு
பாருலகி லினுப்பைநெய் தன்னிலேதான்
பதினறு தாஞ்சாய்த்துக் கல்வத்திட்டு
சோருதன்னு லரைத்துயிரு சாமம்வில்லை
சுடுகதிரிற் காயவைத்துப் புடமூமூன்று
பாருயெடு கட்டினதோர் தாரந்தன்னை
பண்பாகச் செந்தூரஞ் செய்யக்கேளே. (641)

சொல்லிய தாரம்மூன் மருந்திற் சேர்த்து
துப்பரவாய்க் கல்வமிட்டு அன்னத்தாலே
நல்லாக அரைத்துவில்லை கதிரின்முன்னே
நாடியிடி புடமூன்றில் சிகப்புமாகும்
வெல்லாவி தன்னிலிடு நூற்றுக்கொன்று
விருதுபெற்ற யேமமாம் புடத்துக்கேகா
பொல்லாதார் தங்களுக்குச் சொல்லவேண்டாம்
பூட்டாக யாகோபு பொருள்சொன்னரே. (642)

பொய்யாது செந்தூரம் பணமூண்டாக்காற்
புகலரிய மேகமுதல் வாதம்வாய்வு
வையகத்திற் காசமுதல் ருத்திரவாய்வு
வலிகுன்மம் பெரும்பாடு குஷ்டஞ்சூலை
கைகாலில் விழுமேகம் யிளைப்புப்போகும்
காட்டிலே யாளிகண்ட யானைபோலாம்
மெய்ஞரம்பு பிறவிவிடுத் தாதுவிர்த்தி
வேணுமென்று யாகோபு சொன்னவாறே. (643)

அரையாப்புக் கட்டிக்கு.

மூத்தொன்றுச் சேராதின் கொட்டையொன்று
மூக்கைவெட்டி மஞ்சலிட்டு மூலைப்பாலிட்டு
சத்தையரை வீளக்கெண்ணெய் தனிற்குளைத்து
தனைத்துணியில் தடவியிடு கட்டியெல்லாம்
வெத்திபெருஞ் சூலைமுதல் விடுபட்டோடும்
வேகமது அரையாப்புக் கட்டிநீங்கும்
சத்தியமா யிம்மருந்து செய்துபாரு
சாஸ்திரமா யாகோபு சாற்றினாரே. (644)

உப்புக்கட்டு.

சருவகா லந்தானு மனிதருண்ணுஞ்
சதாசிவன்றன் பெண்டீரை ஈலிலொன்று
கருவைவிடு கல்வமிட்டு அரைத்துத்தீயில்
கட்டியெடு யிடித்துவடி கட்டிநீயுங்
குருவையிடு பித்தமுதல் வாய்வுபோகும்
குணம்பெரிய செரியாமை குன்மந்தீரும்
உருகியுடல் வெதுப்பதுவும் போகுமென்று
உற்றுணர்ந்து யாகோபு ஓதினாரே. (645)

வெடியுப்புக்கட்டு.

சீனமோர் படிரெட்டி வெடியுப்பிட்டு
சிறுசட்டி தன்னிலிட்டு அடுப்பில்வைத்து
மோனமாந் தீயெரிக்க உருகும்பாரு
மூக்கியமாய்ச் சாய்ந்தெடுத்து வைத்துத்தூளாய்
ஞானமதாய்த் திட்டிடைதா னெடுத்துக்கேளு
நன்மைபெறத் திரிகடுகிற் றிரிநாருண்ண
ஈனமுள்ள வாய்வுகுன்ம மெட்டுந்தீரும்
ஏகாந்த யாகோபு யிதஞ்சொன்னாரே (646)

காந்தமயங் கெந்திரசஞ் சாதிக்காயும்
கனதந்தி அதிவிடையம் பொன்முசுட்டை
பாந்தமாய்ப் பெரியோர்க ளுண்ணுங்கற்பம்
பரிவான அபினியொடு மேலங்கிராம்பு
சேர்ந்ததொரு காளீசம் உவருப்போடு
சிறக்கயெடு வகைக்குஞரு களஞ்சிவீதம்
நீர்ந்தவதைக் கல்மிட்டு அரைக்கக்கேளு
நிலையான மூன்றுநாள் நீராலாட்டே. (647)

சேதுபந்தனக் குளிகை.

ஆட்டியிரு சாமமெடு கடலேபோலே
அதையுருட்டி நிழலுலர்த்தி வியாதிவந்தால்
நீட்டிவிடு விகுழி அதி சாரங்கிராணி
நிலைவிட்டு மூலமுதல் நீங்கிப்போகும்
கேட்டவுடன் தெண்டனிட்டு யிம்மருந்திற்
கிருபைதருஞ் சேதுபந் தனமுமாகும்
நாட்டிலே பனிகண்ட சூரியன்போல்
நலமாகும் யாகோபு நவின்றார்தானே. (648)

சயத்துக்கு.

திப்பிலியும் பலம்பத்து கடுகுஐந்து
சிறந்ததொரு மிளகைந்து ஓமம்ரெண்டு
மூப்பிரியாம் வலம்புரிக்காய் அரத்தைசுக்கு
மேலான சீரகமும் லவங்கப்பட்டை
செப்பினதோர் தாளிசமும் லவங்கப்பத்திரி
திரிபலையுங் கிராம்பேலம் வேலிகூட்டி
மூப்படிக்கு வகைக்கிரண்டு சட்டிசேர்த்து
மூன்றினதோ டெல்லாநீ பொடிநீசெய்யே. (649)

தூக்கியிடை சர்க்கரைதேன் விட்டுக்கிண்டு
தூளாக வெருகடிதூ ளந்திசந்தி
நாக்கிலிட யீளைசயம் காசவாய்வு
நாடாது சிலேற்பனங்கள் தொண்ணூற்றுரும்
நோக்கிவிடு முதிரமுதல் வாய்வுபோகும்
நுனிமூக்கிற் சீருகின்ற நாத்தம்நீங்கும்
ஏக்கமுடன் வந்தவினை யெல்லாந்தீரும்
இதமான மருந்தாகு மியல்புதானே. (650)

வாதக்கிராணிக்கு.

வாதத்தாற் கண்டதொரு பேதிக்குந்தான்
வகைகண்டு யிஞ்சிச்சார் படியிழிந்து
தீதற்ற பிரண்டைபிடி பாணிவிட்டுத்
திறமாக அவித்திருத்து யிஞ்சிநீரில்
பேதமுடன் பிழிந்துஉப்பு மிளகாயிட்டுப்
பிரட்டுள்ளி புளியிட்டு ரசமாய்க்காய்ச்சி
நீதமுடன் புகட்டிடவே வாந்திபேதி
நிலைகெட்டுப் போகுமென்றார் யாகோப்தானே. (651)

பித்தக்கிராணிக்கு.

பித்தத்தால் வந்ததொரு விகுளிதன்னைப்
பிறகுஓரு பலமிளகாய் மிளகுமிட்டு
நித்தியமாய் வச்சிரத்தை யவித்திருத்து
நிலையாகக் கியாளமிட்டு உண்ணக்கேளு
மத்தவன்னி பற்பமதைக் கடுகுவீதம்
மாட்டிவிடு கியாளத்தில் வியாதிபோகும்
வித்தகனே கதிர்கண்ட பனிபோலாகும்
வேதாந்த யாகோபு விளம்பினாரே. (652)

அய்யக்கிராணிக்கு.

அய்யத்தால் வந்ததொரு பேதிதன்னை
அதைநிறுத்தக் கண்டத்திப் பிலியும்பத்து
மெய்யுள்ள பிரண்டையையும் அவித்தெடுத்து
விரும்பியதை ரசமிட்டு யிருத்துஉண்ண
பையவே லிங்கபற்ப மூடனேதாக்கு
பறக்குமே சிலேற்பனத்தின் பேதியெல்லாங்
எய்யவந்த கணைபோலே சுருக்குமாகும்
இருந்துரைத்தார் யாகோபு யிதமாய்த்தானே. (653)

தொந்திக்கிராணிக்கு.

தொந்தமாய் வந்ததொரு தேகபேதி
சுயமாக உள்ளியிலை அவித்திருத்து
அந்தமதாய் சேரைபெடு பரங்கிப்பட்டை
அந்திடைக்குச் சேர்த்துடனே சட்டியிட்டு
மூன்தயிடு சுரசமிட்டு வன்னிபற்பம்
மூறுதிபெறப் பணவிடையில் மூன்றதாகும்
தந்தகொடு பேதியது நீங்கிப்போகும்
தாட்டிசுவான் யாகோபு தாக்கினாரே. (654)

வாந்திநிற்க

நாலான பேதியதி னூலேஅய்யம்
கலமாக வாந்திபண்ணில் அன்னமிட்ட
மேலான காடிதனில் வெண்ணீரிட்டு
விதமான பழச்சாறு நாலிலொன்று
சேலாகக் கொடுத்துவரத் தாகசோபம்
சிறப்பான வாந்திமுதற் சன்னிநீங்கும்
காலான யெரிவுமுதல் போகுமென்றார்
கருத்துரைத்த யாகோபு கருணைதானே. (655)

கண்வலிக்கு.

சீவிவிழுஞ் கிகையதுதான் பலமுங்கால்தான்
சிறக்கயெடு சீனமிடை அதனில்விட்டு
தரவியெடு மண்வெட்டி யடுப்பில்வைத்து
தாக்கியெரி பழுத்துவிடு அதனிற்றனும்
தாவிவிடு உருகிநிற்கும் பதத்தில்த்தானும்
தடியுள்ள பழச்சாறும் விட்டரைத்து
பாவினிய பதமாகும் யெடுத்துப்பின்பு
பதமான கண்ரெப்பை யதனிற்பூசே. (656)

பூசியது காய்ந்திடவே மறுநாள்த்தானும்
புகழுங்கண் வலியற்று உறுத்தல்போகும்
பாசிபடாப் பாணியது அறுத்துஷத்தும்
பருதிகண்டாற் கூசாது வலியும்நிற்கும்
தூசியது விழுந்தாலும் ஒதுங்கிப்போகும்
தடியான முத்தெண்ணெய் காண்டிவீதங்
கூசாமற் குடித்திருக்கப் பேதியாகும்
குடிலமறும் கண்வலியுங் குணமதாமே. (657)

ரசமெழுகு.

நிம்பயிலே யிடையொன்று உரலிலிட்டு
நேகயிடி பாணிரெட்டிச் சாலிலிட்டு
சம்பமா யெட்டிலொன்றுக் காய்ச்சிக்கொண்டு
தினையெடுத்து வடிகட்டிப் பிழிந்துசாற்றில்
நம்பியிடு அரன்பீசம் பலமுமைந்து
காட்டியிடு வத்தயெரி குளம்புபோலே
தம்பியெடு கல்வமிட்டு அதைநார்சாம்ம்
தானரைக்க மெழுகாகும் தாக்கிப்பாரே. (658)

சாவெங் காயமுடன் கெழற்சிக்கொட்டை
இலையிடித்து ரெண்டிடைதூள் படியுமெட்டு
காரமுள்ள முத்தெண்ணெய் படியுமொன்று
கருத்தரிந்த தந்திவிரை பலமுங்கால்தான்
கூரயிடி காய்ச்சிவடி கட்டிப்பூசை
கொடுத்துமே எண்ணெயது பணமவ்வீதம்
பாரமுள்ள ரசமெழுகு பணங்கால்சேர்த்து
பாய்ச்சிடவே நோய்தீரும் பரிசுகேளே. (659)

பாரிந்த யெண்ணெய்தான் மூன்றுபோது
பாய்ச்சிடவே பாரிசமாஞ் சூலைவாய்வு
சாரியிட்டு குடிபோகு சோகமெல்லாம்
தாக்கிவிடு மகோதரங்கள் சாந்தமாகும்
கூரிவந்தப் படியேகும் வாதமெல்லாம்
கொள்ளைகொண்ட வாதுபோல் ஓடிப்போகும்
சோருமிதில் மேகவெட்டை நீர்மேகங்கள்
சுவரிடுங்காண் வாயுவெல்லாம் சூரையாமே. (660)

சுவரிடுங்காண் பவுந்திரமு மூலரோகம்
சொற்பெரிய நீராம்பல் துடிகள்போகும்
கவரதுபோ லாகிவிடும் யெண்ணெய்ப்போக்கு
கைகண்டு கும்பமுனி கருத்திற்கண்டு
தவரிடா தெனக்குரைத்தா ருலகத்தோர்கள்
தான்பிழைக்கச் சொன்னதிந்த மார்க்கந்தன்னை
எவரிடத்துஞ் சொல்லாதே புளிப்புத்தள்ளி
இதமாக உண்டவர்க்குப் பிணிகள்போமே. (661)

கருநாகப்பதங்கம்.

காரியிடை சோரனுமே கூடச்சேர்த்துக்
கரண்டியிட்டு உருக்கிமெள்ள யிலுப்பைநெய்யில்
சாரமிட்டுப் பத்துரெண்டு தரமுஞ்சாய்த்துச்
சரிவரவே கரண்டியிட்டு உருக்கிமெள்ள
கூரியதோர் சூதமிட்டு வுருக்குத்தானே
குற்றமற்ற முத்தெண்ணெய் நிறையவிட்டு
பாருநீ தீபிடிக்கும் யெரியவிட்டுப்
பாகமதா யெடுத்துநிரு யிடைபோகாதே. (662)

போகாது கல்வமிட்டு உடைத்து அன்னம்
பூட்டியரை வில்லேதட்டிக் கடத்திலிட்டு
யூகமா யெரித்திடவே பதங்கமேறும்
யுற்றுவழித் தெடுத்தவைத்து அடியில்நின்ற
தாகமாய் வில்லையதைச் சோறுமிட்டு
தாக்கியரை வில்லேதட்டிப் புடமூன்றிட்டால்
பாகமாய் வில்லையது சிவந்துபோகும்
பாரினிலே யாகோபு பகர்ந்ததாமே. (663)

சூதச்செந்தூரம்

ஞரிகின்ற சூதமிடை புகைநீர்விட்டு
னரிதனலிவ் விதம்பண்ணி வைத்துப்பாரு
கூரியதோர் காளானுஞ் சிவந்தவில்லே
கூட்டியரை கடத்திலிட்டு யெரித்துத்தானும்
மாரியெடு சிவந்துநிற்கும் ரவியில்நூறு
மயமாகத் தாக்கிடவே வொன்றுதானும்
பாரியது யேமமது பத்துமாகும்
பாலித்தார் யாகோபு பண்புமாமே. (664)

தேனிலிடச் சகலரோ யெல்லாந்தீருஞ்
செங்கதிரா மேனியது யிரும்புபோலாம்
வானிதனி லிப்பாகம் பொய்யோவென்றால்
வண்மையுள்ள ஆண்டவனும் பொய்யுமாச்சு
ஞானிகளுக் கிவ்வேதை சொன்னமார்க்கம்
நாட்டிலுள்ள நல்லவர்கள் செய்துகொள்வார்
கூனிகிமி ராதவர்கள் செய்யமாட்டார்
கொட்டினுர் யாகோபு குணமிதாமே. (665)

அயக்காந்தச்செந்தூரம்

காந்தஅயம் கேரிடைதான் கையாநீரால்
கணக்கஅரை வில்லேதட்டி உலையிலூது
பாந்தமா யிப்படிக்குத் தரமுமஞ்சு
பக்குவத்தி லெடுபருதி போலேயாகும்
சேர்ந்தயிடை நாலிலொன்று கெந்திசூதம்
திறமான தந்திவிரை தோட்டைப்போக்கி
பாந்தமொடு குழிக்கல்வந் தன்னிலிட்டுப்
பாங்காக மூன்றுமொன்றுய்ப் பொடித்துக்கொள்ளே.

பொடித்துயிதை அயக்காந்தச் செந்தூரத்தில்
புகழாக யிரண்டையு மொன்றுகச் சேர்த்து
எடுத்துவைத்து மிளகுசுக்கு நெல்லிமுள்ளி
இயல்பான கடுக்காயோ டிடையாய்வாங்கி
விடுத்துமே தானிடித்து சூரணித்து
வெய்யதனிற் காயவைத்துப் பீங்கானிட்டு
கொடுத்துவிடப் பாகமது சொல்வேனென்று
குறிப்பாக யாகோபு கூறினாரே. (667)

இயல்யுள்ள செந்தூர மிளகுவீதம்
எடுத்துமே தேனிலிட்டுக் குழப்பிக்கொண்டு
தயவாக லெறுகடி சூரணத்தூள் தன்னில்
தான்சேர்த்து ஆறுநாள் சாப்பிட்டாக்கால்
நயமாக அண்டவெட்டை நீராம்பல்தான்
நலமாகுஞ் சூலபதி னெட்டும்போகும்
வியமாக புளியோடு உப்புந்தள்ளு
விதனமறும் யாகோபு விளம்பினாரே. (668)

பதங்கமதை லிங்கமதி லெடுத்துநீயும்
பலம்நாலு சுக்குயிள கோமங்கூட்டி
விதம்பெறவே தந்திவிரை சுத்திசெய்து
வீதமிடு நெல்லிமுள்ளி கடுக்காய்நேராம்
அதம்படவே கையாநீ ரைத்துச்சாமம்
அதையெடுத்துக் குடுக்கைதனி லடைத்துக்கொள்ளு
இதம்படவே பணவிடைகால் கொள்ளச்சொல்லு
எந்தவிதம கோதரமும் ஏகுந்தானே. (669)

சூலமகோ தரம்போகு மாம்பற்கட்டி
துடர்ந்த குன்மம் வயிற்றுவலி சொல்லாதோடும்
வேலதனிற் போய்விடும்பார் கெண்டைகட்டி
விடுபடுங்காண் சிலேட்ம மகோதரமும்போகும்
ஆலதனிற் கரும்பாகும் உப்புத்தள்ளு
ஆறுநாள் சென்றபின்பு யெண்ணெய்ஸ்நானம்
காலையிலே செய்துகொண்டு தூங்கலாகா
கருத்தாரை த்தார் யாகோபு கருணைதானே. (670)

தூங்கினுர்க் சிரசதனில் நீருமேகி
சுகசன்னி மண்டையிடி தும்மல்ரோகம்
தாங்கியே வந்திடும்பார் பத்தியங்கள்
தவரினுல் கைகால்கள் முடக்கிக்கொள்ளும்
பாங்கியர் மேலாசைகொண்டு திரிவாயானுல்
பகையான சன்னியது மூடிக்கொள்ளும்
ஏங்கியிதில் மயங்காம லிருக்கவேதான்
இதமாக யாகோபு இயம்பினுரே. (671)

அயக்காந்தச் சூரணம்.

நல்லிரும்பு ஓரிடையாஞ் செம்புரேரே
நாட்டியரை பொடியாக்கி குகையிலிட்டு
வெல்லவதை யுருக்கிடவே புட்டுப்போலாம்
விரும்பியெடு சொண்டிமுக்கால் நாற்றஞ்சூடன்
செல்லவதை சொண்டுஅரை நிறுத்துக்கொள்ளு
சோன வீரமது சொண்டுகாலாம்
சொல்லவிந்து வைத்துடனே நிறுத்துக்கல்வம்
சுருதியுடன் பாணிவிட்டு அரைத்துக்கொள்ளே. (1)

அரைத்துவில்லை அங்கியிடு பத்துதானும்
அதின்பேரு சுயமக்கினி அவைநிறுத்து
மறைத்துபல மொன்றுநிரு வேலிவேறும்
வகைக்குகடு கோமமொடு சிறுதேக்காகும்
நிறுத்துயெடு ஆனைத்திப்பிலி யிக்குப்பாம்
நேரான கோஷ்டமொடு வகைக்குஒன்று
குரைத்துநிறு காயங்கால் வசம்புகாலாம்
குணமான கடுகுபொடி அரையும்போடே. (673)

இளவருப்பாய்ச் சூரணித்து சுயமக்கினிசேர்த்து
இதிலரைத்துச் சாமம்ரெண்டு வேலிநீரால்
குளம்பான சர்க்கரைதா னிடையேசேர்த்து
குற்றமற வைத்துவெரு கடிதான்கொள்ள
உளமகிழும் வெண்ணீரி லுரைக்கக்கிராணி
ஓடிவிடும் உதிரவலி முகவாதங்கள்
இளகிவிடும் வாதமெல்லாங் கடலேபுக்கும்
இருந்துரைத்தார் யாகோபு யிதமாய்த்தானே. (674)

நல்லிரும்பு ஓரிடையான் காந்தம்நேரே
நாட்டியரை கில்லைதட்டி ஊதிப்போடு
எல்லஇரு பலமொன்று கெந்திசூதம்
இதையரைக்கக் கரியாமுன காந்தமிட்டு
கொல்லஅரை பிற்பாடு முத்தக்காசு
கொத்தமல்லி கொடிமுந்திரி யேலமோடு
சொல்மிளகு கிராம்புடனே வேலிதிப்பிலி
சொற்பெரிய சாதிக்காய் கூகைநீரே. (675)

கூகைநீர் சாதிப்பத்திரி வால்மிளகு
கூடியே லவங்கப்பத் திரியுஞ்சுக்கும்
வேகமுடன் சமபாகங் கையாறீரை
விட்டரைப்பாய் சக்கரையுஞ் சமனுய்ச்சேர்த்து
ஏகமுடன் வெருகடிநெய் தேனிலேதான்
இதையாறு நாட்கொள்ள அந்திரவாய்வு
தாகமுடன் பாண்டுசுரம் மயக்கந்தூக்கம்
தங்காது மேகமெல்லாம் சாந்தந்தானே. (676)

நாற்பத்து ரெண்டுபித்த ரோகியங்கள்
நல்லவன்னத் தோசமொடு உஷ்ணநோய்கள்
காற்பத்து சேட்டுமங்கள் அக்கினிமந்தம்
கனவாய்வு கையெரிவு காந்தல்வீக்கம்
மேற்பத்து நோய்களெல்லாம் தீர்ந்துபோகும்
மெய்வலுக்கும் புளிஉப்புத் தள்ளிஉண்ணு
நாற்பத்து நாளுமிதை நேரேதாக்கு
நலமான யாகோபு நாட்டினாரே. (677)

அப்பிரேகம்.

வச்சிரத்தி னப்ரேகம் பலமுமொன்று
வதைநிறுத்து வீரங்கா லிட்டுப்பாணி
தச்செயலரைக் கல்வமிட்டு அரைக்கவெண்ணெய்
தனையெடுத்து கதிரில்வைத்து புடமூன்றிட்டு
இச்சையுட னெடுத்துபச்சைப் பூரந்தன்னை
இடைசேர்த்து அரைபாணி புடமூன்றிட்டு
உச்சிதமா யெடுத்துநிறு ரசசெந்தூரம்
உடனுக இடைசேர்த்து அரைத்துத்தானே. (678)

ஆவின்கோ ரோசனையுங் குங்குமப்பூ
அடைவான யேலமொடு கிராம்புகோஷ்டம்
தாவியெடு சாதிக்காய் அக்ருக்காம்
தனிலிறுத்து வகைகளொன்று கல்வமிட்டு
ஓவியமாய் சந்தனமும் லவங்கப்பூவும்
உடன்தண்ணீர் விட்டுயெட் டொன்றுய்க்காய்ச்சி
ஏவியே அதையிருத்துச் சாமம்நாலு
இதமாக அரைத்துமெழு காகச்செய்யே. (679)

நல்லாக வரைத்தருட்டித் குளுகையாக்கி
நற்கதிரிற் காயவைத்து மேஷப்பாலில்
வெல்லவே அதிலையொரு உண்டைதன்னை
விதமாக யிட்டிடவே தொண்டைக்கட்டும்
வெல்லவலி வீக்கசயம் சிலேட்டுமங்கள்
விதமான தொண்ணூற்றூர் வியாதிபோகும்
கொல்லவந்த நமர்சன்னி தோஷமெல்லாம்
கொடுமையுட னேகிவிடும் குணமதாமே. (680)

குணமாகு மயக்கமொடு வாந்திபோகும்
குடல்பிரட்டு வலியிசுவு குடிலங்குத்து
சினமாகு மினியமந் தாரகாசம்
செப்பரிய வாய்வுமந்தங் காசம்போகும்
இனமாகும் பிரயிசுவு நடுக்கல்போகும்
இன்பமுள்ள நோய்களெல்லா மேங்கயேங்க
கனப்பொழுது போக்கிவிடும் யாகோப்சொன்ன
கருத்திதுவாங் குளிகையிது கண்டுதேறே. (681)

காகிகாசூரணம்.

செக்காடும் இலுப்பைப் புண்ணாக்குதன்னைச்
செயம்பெறவே தீயிலதைச் சுட்டுத்தானே
மிக்கவே நாயுபலம் பெருக்கம்பாலில்
மிகவரைத்துக் கதிரினிலே காயவைத்து
தொக்கயெடு சுண்டைவேர் தும்பைமூலம்
துடியாக உலர்த்திமுன் னிடையேசேர்த்து
தக்கசுழ லடைத்துவிடு யென்றுசொன்னார்
தாட்டிக்மா யாகோபு தன்மைதானே. (682)

நாசிதனில் தக்கபொடி யிட்டுப்பாரு
நமர்சன்னி மண்டைவெடி பீனிசங்கள்
ஊசிவலிக் குத்துடனே சாரகளேகும்
ஒருத்தலைநோய் பூச்சிவிழுஞ் சிரசிலுள்ள
வாசினையாந் தோசமது சிங்கங்கண்ட
மதயானை போலாகு மாக்கிராணந்தான்
நேசமுடன் யாகோபு சொன்னரிந்த
நிலையான கைபாக நேர்மைதானே. (683)

குளிர்ச்சிக்கு யெண்ணெய்.

முத்தெண்ணெய் படியொன்று சட்டியிட்டு
முனிவாக யிந்திடைக்குப் பழத்தின்சாறு
சித்தம்வைத்துக் குமரிச்சார் படிதானொன்று
சிறுகடுக்காய் பலம்ரெண்டு அம்மியிட்டு
நத்தியரை யெண்ணெய்தனில் குழம்பாய்க்காய்ச்சி
நலமாக மெழுதுபதம வடித்துக்கால்சேர்
நித்தமொரு காண்டியுண்ணத் தீரும்வியாதி
நிசமான யாகோபு நியமித்தாரே. (484)

காலெரிவு கையெரிவு காந்தல்போகும்
கண்குளிரும் உந்தியது குளிர்ச்சியாகும்
சீலமுடன் வெட்டைநீர் குத்தல்போகும்
சினம்போகு முஷ்ணமுடன் வரட்சிதாகம்
காலமொடு மேனியது குளிர்ச்சிகாணும்
காட்டுமுன்னே விந்திறுகும் கருணைகூறும்
ஏலவே யேந்திழையாள் பிருதிவேணும
இருந்துரைதார் யாகோபு பிதமரைத்தானே. (685)

பச்சை வாதத்திற்கு ஐந்தெண்ணெய்.

நிம்பயெண்ணெய் படியளந்து சட்டியிட்டு
நேராக முத்தெண்ணெய் படியவ்வீதம்
புங்கயெண்ணெய் படியிட்டுக் கலக்கிப்பின்பு
புகளான புன்னையெண்ணெய் படியும்விட்டு
நம்பியெடு நல்லெண்ணெய் படியோடைந்து
நலமாக நாள்மூன்று கலக்கிப்பின்பு
தெம்புடனே கடைச்சரக்கைக் கேளுநீயும்
நீரமாம் யாகோபு செப்பினேனே. (686)

பேர்சொல்லா வசம்பு வெள்ளுள்ளிகாயம்
பெருமைபெறத் திரிகடுகு திராம்புஓமம்
ஓர்சொல்வார் சதகுப்பை கடுகுரோணி
ஆதிசித்ர மூலம்வகைக் கொன்றுகூட்டி
பேர்சொல்லத் தானரைத்து யெண்ணெய்தன்னிற்
பிரட்டியதை அடுப்பிலிட்டுச் சீராய்க்காய்ச்சி
வாரான மெழுகுபதந் தனில்வடித்து
வடிவாகக் கரண்டிகொள்ள வாதம்போமே (587)

வாதமெல்லாந் தீருமண்ட வாதந்தீரும்
மடிபிடித்துக் கடித்தநரி வாதந்தீரும்
சேதமுள பிடிம்வாதம் கடினவாதம்
செப்பமுள்ள மேல்க்கடுப்பு வாதம்நீங்கும்
வேதமது முகவாதம் சன்னிவாதம்
விருப்பமுள்ள திமிர்வாத மெல்லாம்நீங்கும்
ஆதரவாய்ப் புளிதள்ளி உண்டுபாரு
ஆதிநபி மாரெனக்கு அருளினாரே. (688)

பெருங்காய எண்ணெய்.

பெருங்காயந் கழற்சிவிரை யெட்டேயாகும்
பேசரிய முத்தெண்ணெய் நாழிதன்னில்
பருந்தந்தி தோல்போக்கிப் பலமுங்கால்தான்
பரமன்விந்து விராகனிடை ஐந்துங்கூட்டித்
தருகாமல் தானரைத்து சட்டியிட்டுத்
தயங்காம லதையெடுத்து திரிகாள்வைத்து
உருங்காம லடுப்பேற்றி மெழுகதாக்கி
உண்மையுட னுன்வடித்து உறுதிகேளே. (689)

உருகியாய்த் தட்டிடைதான் கொண்டபோது
உகந்துநின்ற வாயுவரு மண்டவாதம்
அருகியாஞ் சூலைமுதல் யோனிப்புற்று
அடைவான குதிவாத மடங்காத்தாகம்
பெருகிநின்ற மகோதரங்கள் ஆம்பற்கட்டி
பேசரிய உதிரவலி கெற்பச்சூலை
நிருதிஅஸ்தி சுரமோடு யிவைகள்தீரும்
நிச்சயமா யாகோபு நிசஞ்சொன்னாரே. (690)

அயக்காந்தச்செந்தூரம்.

நல்லிரும்பு ஓரிடையாங் கெவுரிநேராய்
நாடியிடு கல்வமிட்டுப் பாணியாலே
செல்லவரைத் திரிநாள்தான் சென்றபின்பு
சேர்த்துகுகை தன்னிலிட்டு உருக்குநன்றாய்
மெல்லவெடு வெங்கலமாம் யெடுத்துவைத்து
மேன்மைபெறப் பலயிரும்பில் வெள்ளேநேரே
சொல்லியே பாணியினு லரைத்துருக்கு
சூக்குமதாய் முன்போலே உருகுக்தானே. (691)

உருக்கினதை யெடுத்துவைத்து அரபொடியைவாங்கி
உண்மைபெற அதிநேரே கெந்தியிட்டு
பருகவரை பாணியினு லரைத்துருக்கப்
பதமாக உருக்கமுன்போ லுருகும்பாரு
பெருகவதை யெடுத்தபின்பு மூன்றும்நேராய்
பேசவே யிதைநிறுத்துக் கல்வமிட்டு
தருகவரை பொற்றலையி னீரினூலே
தாக்கிவில்லை அங்கியிட்டுப் புடத்தைப்போடே. ()

புடம்போடக் கருப்பாகும் யெடுத்துக்கல்வம்
பூட்டியிடைக் கிடைசேரு வீரந்தன்னை
துடந்துமே முன்சாற்று லரைத்துவில்லை
தூக்கிகதிர் காயவைத்துக் கடத்திலிட்டு
குடமூடிச் சீலைசெய்து அடுப்பிலேற்றிக்
குணமாகச் சாமமொன்று யெரிக்கயேறும்
கடம்வழித்து அடியில்நின்ற தோடேசேர்த்துக்
காட்டியெரி ஐந்துதர மெரித்துக்கொள்ளே. (693)

எரித்துயெடு செந்தூர மூருக்கம்பூப்போல்
இதமாயப் புரம்வைத்துக் காந்தம்நாலு
மூரத்துகெந்தி யிடைசேர்த்துக் கல்வமிட்டு
மூதலரைத்துக் குகையிலிட்டு உருக்கித்தீரு
விரித்துஅது உருக்கிடுங்காண் சத்துமாகும்
வீதமிடை மூன்னுருக்குச் செந்தூரத்தை
தரித்துயிடு யிதுநேரே கல்வத்திட்டுத்
தாக்கியரை பொற்றலையி னீரினூலே. (694)

சாத்திலரைத் தங்கியிட்டுப் புடத்தைப்போடு
சத்தஅரை கொள்ளினுட னியாளத்தாலே
பாத்தகதிர் வில்லைதனைக் காயவைத்துப்
பதிவாகச் சிவக்கமட்டும் புடத்தைப்போட்டு
சோத்திலிதை விட்டரைத்துப் புடமேபோடு
சுகமாகச் சிவந்தபின்பு சொல்லக்கேளு
நேத்தியாய் லிங்கமது பலமுமொன்று
நேராகவுடனே லிட்டுக்கொள்ளே. (695)

இட்டுபழச் சாற்றினுற் சுருக்குச்சரமம்
இதமாக லிங்கமிடை சீனங்கெந்தி
பட்டுமதைப் பொடித்துஒரு ஓட்டிலிட்டுப்
பதமாகக் கரிக்கிமெள்ள வன்னிதன்னே
தொட்டுஅதைப் பிரட்டிடுங்காண் பொடியுமிட்டுத்
துடியாகப் பிரட்டியெடு சாமமொன்று
கட்டுமது வம்பியது யிறுகிப்போகும்
கனிவாக யாகோபு கடாட்சித்தாரே. (696)

கருத்தரித்த செந்தூரம் காலிலொன்று
கருதியிடு வன்னிகற்பங் கல்வத்திட்டு
வருத்தரைநீ கொம்பரக்குக் கிஷாயத்தாலே
வலுமைபெற அரைத்துவில்லை அங்கியிட்டு
பொருத்தமுள்ள வில்லைதனைப் பூமியிட்டுப்
புகலரிய சட்டியினுற் மூடிப்போட்டு
பெருத்ததொரு புடம்போட்டு யெடுத்துப்பாரு
பேரான செந்தூர மாகுந்தானே. (697)

ஆகுமிந்தச் செந்தூரந் தருசுச்செம்பில்
அணைத்திடவே ஐம்பதுக்கு ஒன்றுபோடு
தாகமுடன் ஏமமது பத்துமாகும்
தனையெடுத்துப் பணவிடைதான் பாலிலுண்ணப்
போகமது வந்திடும்பார் தேகத்தன்னிற்
உகந்துவந்த நோயெல்லாம் ஓடிப்போகும்
பாகமது வறிந்தாலே வாதமாகும்
பார்த்துணர்ந்தார் யாகோபு பரிசுதானே. (698)

யாகோபு வயித்தியசிந்தா மணிபாமிர்நூல்
யானுமே சொல்லிவிட்டேன் வெளிபதாக
வாக்கதுவும் பொய்யாது செப்தபாரு
மகத்தான சாஸ்திரத்தை வெளிவிடாதே
பாக்கியம்பெற் றுய்யவென்று லெந்நூல்பாரு
பகரிய சுண்ணமறு நூறும்பாரு
நோக்கிப்பார் செந்தூரச் சுருக்கம்பாரு
நுணுக்கமெத்தக் கண்டறிந்து தேர்ந்துபாரே. (699)

மூற்றிலுமே எழுநூறு பாடலாக
முடித்துவிட்டேச் சுருக்கமோ சைம்பதாகக்
கற்றறிந்தோர் தங்களுக்குக் கிடைக்குமிந்நூல்
கைகண்ட பாகமிது திறவுகோலாம்
பற்றுதலாய் மக்கத்தி லிருந்துகொண்டு
பாடிவிட்டேன் புவியோர்கள் பிழைப்பதற்கு
உற்றுப்பார் யாகோபு இராமதேவர்
உறுதியாம் யெழுநூறு குருநூல் முற்றே. (700)

முற்றிற்று.





உ

பரமபதி துணை,

யாகோபு திருவாய்மலர்ந்தருளிய வைத்திய சிந் தாமணி எழுநூறுக்குச் சுருக்கம்.

குரு நூல் - 55.



வேதமுத லாய்நிறைந்த பொருளு மாகி
விகற்பசங் கற்பமிலா ரூப மாகி
நீதமுள பரப்பிரம அரூப மாகி
நிட்களநி ராமயமாய் விளங்கி நின்று
பேதமிலா தென்னாவிற் குடியி ருக்கும்
பெரியபரம் பொருளான வெளியைப் போற்றிச்
சாதகசற் குருமூலம் பாதம் போற்றித்
தன்மையுடன் குருநூலம் பதைச்சொல்வேனே. (1)

மூலமுத லாய்நிறைந்த நபியைப்போற்றி
முக்கியமா யைம்பதுவின் முறையேதென்னூல்
கோலமுட னெழுநூற்றின் குருவேயாகுங்
குவலயத்தோர் யாவர்களும் பிழைக்கக்கேளு
சீலமுடன் பூநீறு தானெடுத்துச்
சிறப்பாகத் தசதீட்சை தான்முடித்து
ஞாலமுடன் கரியுப்பு மதுபோற்றீட்சை
நலமாகச் செய்தபின்பு எடுத்துக்கொள்ளே. (2)

எடுத்தமே வெடியுப்பு ஐந்தாங்காய்ச்சல்
இயல்பாக நீவாங்கி மூன்றந்தினை
விடுத்தமே சமனிடையாய் வைத்துக்கொண்டு
மேலான எலுமிச்சம் பழச்சாறிட்டு
கொடுத்தமே கொதிக்கவைத் தெடுத்துப்பாரு
குணமாகு மெண்ணெய்க்கு வெழுத்துக்காணும்
அடுத்தமே அந்தஉப்பை யெடுத்துநீயும்
அன்பாகச் சேர்நீரி லாட்டக்கேளே. (3)

ஆட்டிடவே வெள்ளாக்கல் கொண்டுவந்து
அடைவாக நீற்றியே சுண்ணும்பாக்கி
தாட்டிகமாய்ச் சாரமதைச் சமனுய்ச்சேர்த்து
தானரைத்துப் பீங்கானிற் பனியில்வைக்க
நாட்டமுள செயநீராம் வீரப்பூரம்
நலமாகத் தான்போட்டு வைத்துக்கொண்டு
மேட்டிமையாய் மூன்வைத்த மூன்றுஉப்பும்
மேலாக அரைக்கின்ற வகையைக்கேளே. (4)

வகையாகக் கல்வத்தி லுப்பையிட்டு
மகிழ்வாகச் செயநீர்விட் டரைத்தெடுத்து
துகையாக வில்லைதட்டிக் ககிரில்வைத்துச்
சுகமாகப் பத்தெருவிற் புடத்திற்சுண்ணம்
நகைபோல முப்பூவின் குருவுமாச்சு
நன்மையுள்ள குருவண்டு மிதுவேயாச்சு
திகையாமற் புகைச்சரக்கு எதுவானலும்
திறமாகக் கொஞ்சமிடச் சுண்ணமாமே. (5)

கெந்தக பற்பம்

சுத்தருவைச் செயம்பண்ணுங் கெந்தகத்தைத்
தான்கட்டி யாகவொரு பலத்தைவாங்கிச்
சுத்திசெய்து தானெடுத்து வைத்துக்கொண்டு
சுகமான சிறுபூலை யிலையரைத்து
சித்திபெறக் குகைசெய்து அதற்குள்ளேதான்
சீரான கெந்தகத்தை வைக்குமுன்னே
உத்தமொரு குருச்சுண்ணம் வாய்நீராலே
ஒழுங்காக வேதடவிக் காயவையே (6)

சொல்லியதோர் கெந்தகத்தைக் குகைக்குள்வைத்துச்
சுகமான யிலைக்குகையை மேலேமூடி
மெல்லவே சீலாண் சரியாய்ச்செய்து
வெகுசுகமாய் மூன்றெருவிற் புடத்தைப்போடு
நல்லதொரு கெந்தகத்தின் பற்பந்தானும்
நலமான விபூதிபோல் நீறிப்போகும்
வல்லதொரு மெல்லிடையாய்ப் பற்பந்தன்னை
வாகுபெற உண்ணயாகோப் சொன்னேரே. (7)

சிரங்குமுதற் சூலைபோம் கரப்பான்போகும்
செயலான சூலைபதி னெட்டும்போகும்
கரங்குகின்ற கண்புகைச்சல் கண்ணீரோடல்
காணும லோடிவிடுங் கடலேபுக்கும்
பரங்கிமுதல் வியாதிகளும் பறந்தேபோகும்
பத்தியமோ பாலாகும் நெய்யுமாகும்
இரங்குகின்ற புளிதள்ளி உப்பைச்சேரு
இன்பமுடன் யாகோபு இயம்பினாரே. (8)

சிலாசத்துப் பற்பம்.

பச்சமுடன் சிலாசத்துக் கட்டிவாங்கிப்
பாகமுடன் வாய்நீராற் குருவைப்பூசி
நிச்சயமாய்ச் சுண்ணும்புச் சீலைசெய்து
கோரான குக்குடமாய்ப் புடத்தைப்போடு
அச்சமிலா பற்பமது வெள்ளையாகும்
அன்புடனே வெண்ணீரி னுள்ளேவுண்ண
எச்சமயத் தோருக்கும் யாகோபுந்தான்
இதமாகப் பிழைப்பதற்கு வகைசொன்னாரே. (9)

மலசலங்க ளடைப்புக்கு மருந்தையுண்ண
வகையுடனே கழிந்துவிடும் புகைச்சல்போகும்
நலமாக வாயில்நின்ற ரோகம்போகும்
நன்மையுடன் தொண்டைவலி யிருமல்போகும்
குலமான விம்மருந்தி லேகரோய்கள்
குடிபோகும் பத்தியமோ கரப்பான்தள்ளு
பெலமான யாகோபு சொன்னநீதி
பிசகாது ஒருகாலும் பேனிப்பாரே. (10)

காளகபற்பம்

அரிதாரம் பலம்வாங்கிச் சுத்திசெய்து
அன்புடனே அதைத்தானும் வைத்துக்கொண்டு
பெரிதான காயுருவி தன்னைச்சுட்டு
பிசகாம லமுதப்பால் விட்டரைத்து
சரியான குகைசெய்து அரிதாரத்தில்
சாற்றியதோர் மூன்குரு வாம்நீராற்பூசி
சிரிதான் குகைக்குள்வைத்துச் சீலைசெய்து
சித்திபெற குக்குடத்தில் புடத்தைப்போடே. (11)

நீறுபோல் நீறியது பற்பமாகும்
நிலையாக பணவிடைதான றேனிலுண்ண
ஆறுபோல் வந்ததொரு சயரோகங்கள்
அடைவான யீளைமுதற் காசத்தோடு
சீறுற்ற மூறைக்காச்சல் கண்டமாலை
சிறப்பில்லா சத்திகுன்மஞ் சூரமும்போகும்
பேறுபெற்ற யாகோபு சொன்னநீதி
பேருலகில் யாவருமே பிழைக்கத்தானே. (12)

வங்கபற்பம்.

சொல்லடங்கா வங்கத்தை சுத்திசெய்து
சுகமாகத் தகடுதட்டி ஆலம்பாலில்
வல்லமையா யூறியபின் கல்வத்திட்டு
வகையுடனே தானரைக்க மெழுகுமாகும்
நல்லாக அதையெடுத்து வில்லைதட்டி
நலமாகக் கலந்துமே லோடுமூடி
அல்லாமு மாகுமென்று யாகோப்சொன்னார்
அருமையுட னுலகோர்கள் பிழைக்கத்தானே. (13)

வங்கமது காய்ந்தபின்பு குருவைப்பூசி
வராகபுடம் போட்டெடுக்கப் பற்பமாகும்
தங்கம்போல் வெண்ணெயிலே தானேகொண்டால்
சரியாகத் தாதுவிர்த்தி புஷ்டியாகும்
பங்கமுள்ள சூலைபுண்ணும் பறந்துபோகும்
பறங்கிமுதற் பிறமியங்கள் நீர்ந்துபோகும்
திங்கள்போ லிருப்பதற்கு யாகோப்சொன்னார்
சிறப்பாகச் செய்துநீ முடித்துப்பாரே. (14)

சூதபற்பம்

சூதமது களஞ்சிபத்துக் கல்வத்திட்டுச்
சுகமான சிவகரந்தைச் சாறுவாங்கி
நீதமுடன் சூதமதிற் சேர்த்தரைத்து
நேர்மையுடன் வில்லைதட்டி ரவியிற்போடு
வாதமுடன் புதுஓட்டில் வைத்துநன்றாய்
வலையம்போல் ஓலைசுத்தி வைத்துக்கொண்டு
பேதமிலா நாயுருவி விதையைக்கொட்டிப்
பெலமாக மூடிநன்றாய் எருமேல்வையே. (15)

குக்குடமாய்ப் புடம்போடப் பற்பமாகும்
குணமாகத் தானெடுத்து வைத்துக்கொண்டு
தக்கதொரு புண்புரைகள் பொல்லாமேகம்
தானேகும் ரசவாத வித்தைக்காகும்
செக்கவே சிவர்துரு வுதடுதொண்டை
திறமாக யிருக்கின்ற வியாதிபோகும்
மிக்கதொரு யாகோபு சொன்னுரிந்த
விதமிந்து தெரிந்துகொடு மருந்துதானே. (16)

சவ்வீரமெழுகு

கல்லதொரு சவ்வீரஞ் சுத்திசெய்து
நலமாக ஐங்கோலத் தயிலந்தோய்த்து
வல்லவே ரவியில்வைத்துக் காய்ந்தபின்பு
வசமாகக் கவசமது செய்துகொண்டு
சொல்லவே மண்சீலை பெலமாய்ச்செய்து
சூரியனிற் காயவைத்துப் பின்னுமித்தை
கல்லமிலா யாகோபு கருதிச்சொன்னுர்
கபடற்றுச் செய்திடுவாய் கருணையோடே. (17)

தீபமது தானேற்றிக் காயவைக்கச்
செகமெய்க்கும் மெழுகாகும் சிமிழில்வைத்து
தாபமது நீங்கவே தாயைப்போற்றித்
தானெடுத்துத் தங்கத்தை ரேக்காய்ச்செய்து
சோபமதில் லாமலே மெழுகுக்கீய்ந்தால்
சுத்தமுள்ள மெழுகாகும் அதனிற்கொஞ்சம்
சாபமது நீக்கியே நவலோகத்தில்
தானீயவமம் யாகோப் சொன்னுரே. (18)

மூலிகைகற்பம்

கற்பமது நூற்றெட்டு மகான்கள்கொண்டார்
காதலுடன் மூலிகையின் கற்பமாகும்
சொற்பமிது ஆவரையின் பட்டையோடு
சுத்திசெய்த சிவன்வேம்பு வேங்கைப்பட்டை
அற்பமென்று நினையாமல் மூன்றுமொன்றாய்
அன்பாக வேபோட்டுப் பாண்டத்திட்டு
சற்குருவா யைங்கோலக் கருவுங்கூட்டிச்
சார்வாக யாகோபு சாற்றினுரே. (19)

பாண்டமதைச் சீலமண் சரிபாய்ச்செய்து
பட்சமொடு குழித்தயில மிறக்கிக்கொண்டு
ஆண்டவனைப் போற்றிசெய்து பணவிடைதான்
அருமையுட னுட்கொண்டால் வியாதிபோகும்
நீண்டதொரு ரசம்புகளும் வலுத்துப்போகும்
நிலையான தேகத்திற் சட்டைவாங்கும்
வேண்டியது இக்கற்பம் யோகிக்குத்தான்
மென்மேலும் யாகோபு விளம்பினாரே. (20)

மண்டலமே இக்கற்பங் கொண்டாயானால்
வயிரம்போற் றேகமது வலுத்துப்போகும்
அண்டசெல்லாங் கொண்டகற்ப மிதுதான்முன்பு
அழியாத தேகத்தோ டிருக்கலாச்சு
கண்டவர்க ளொருநாளுங் கைவிடார்கள்
கருவான சூதத்திற் கிட்டார்கட்டும்
கொண்டவனும் நானென்று யாகோப்சொன்னார்
கூறினே னுலகோர்க்குக் குறிப்பாய்த்தானே (21)

மேகத்திற்குத்தயிலம்

தயிலமது சொல்லுகிறேன் கழற்சியின்றன்
சாறுதா னொருபடியுந் தானெடுத்து
ஓயிலான செம்முள்ளிச் சாறுநாழி
உத்தமமாம் துத்தியுட சாறுநாழி
பயிலிலாகச் சங்கங்குப்பிச் சாறுநாழி
பக்குவமாய் நொச்சியிலைச் சாறுநாழி
அயிலான கௌதும்மைச் சாறுநாழி
அடைவாக வாங்க யாகோப்சொன்னாரே. (22)

உத்தமிலைப் பனைக்கிழங்குச் சாறுநாழி
ஊர்சுத்தி யமுரியது சாறுநாழி
பத்தமுள்ள விளக்கெண்ணெய் படியுமாழி
பண்பாகப் பாண்டத்தில் ஒன்றுயிட்டு
சுத்தமுள்ள அதிமதுரம் முத்தக்காசு
சுழிவான சாதிக்காய் கிராம்புகோஷ்டம்
சித்தமுள்ள ரோகனியும் ஏலஞ்சுக்கு
செயலான கார்போக அரிசிதானே. (23)

ஒன்பதையும் விராகனது ஒன்றுதூக்கி
உத்தமமாய் முன்சாற்றி லரைத்தமைபோல்
தென்புடனே முன்சாற்றில் கரைத்துக்கொண்டு
திறமாக அடுப்பேற்றித் தீயெரித்து
அன்புடனே மெழுகுபத மாகக்காய்ச்சி
அடைவாகத் தயிலமதை வடித்துவாங்கி
இன்பமுடன் குருவதனிற்கொஞ்சமிட்டு
எடுத்துவைத்து சாப்பிடுதற் கினிமைதானே (24)

ஓருகாண்டி தயிலமெழு நாளேகொள்ள
உற்றதொரு வியாதியெல்லா மொடுங்கிப்போகும்
கருணையிலாச் செங்கிரந்தி கருங்கிரந்தி
கள்ளிப்புக் கிரந்திவெட்டை மேகவாய்வு
பெருமையிலா மேகமென்ற திருபத்தெட்டும்
பிரமேக வியாதியுட னெல்லாம்போகும்
அருமையுடன் யாகோபு உலகோர்க்காக
அனபுடனே வெட்டவெளி யாக்கிட்டாரே. (25)

கஞ்சியுப்புக்கட்டு

கஞ்சியுப்பைப் படிகாலு அளந்துவைத்து
கனகஉப்புக் கொள்ளவே கலசம்வாங்கி
நஞ்சில்லாக் கொளுஞ்சியின்றன் வேர்கொணர்ந்து
நலமாகத் தோலுரித்து வைத்துக்கொண்டு
தஞ்சமென்ற புதுக்கலசத் தனிலேதானும்
சார்வாகக் கொஞ்சஉப்பும் உரித்ததோலும்
கொஞ்சங்கொஞ்ச மாய்ச்சரியாய்த் தானும்போடு
குணமாக செப்பியபின் சிட்டிமூடே. (26)

உப்பிட்ட கலசமதைக் கரியில்வைத்து
ஊதிவரத் தனலாகி உருகிநிற்கும்
செப்பமுடன் சாணைக்கிற் ருனும்ஊத்திச்
சீர்பெறவே தானெடுக்கக் கட்டிப்போகும்
தப்பரவாய்ப் பொடிசெய்து குன்மத்திற்குச்
சுயமாகத் தான்கொடுக்கக் கடலேபுக்கும்
தப்பிதமில் லாமலே யாகோப் சொன்னர்
சகலருக்கும் இந்தஉப்பு உதவுந்தானே (27)

திரிலோகச் செந்தூரம்

அயப்பெரிடியும் உருக்கினுடபொடியிலேதே
அன்பான கிட்டத்தின் பொடியுந்தானும்
செயமாகச் சுத்திசெய்து வகைவகைக்குத்
திறமாக வொருபலந்தா னெடுத்துக்கொண்டு
பயமில்லாக் கல்வத்தில் மூன்றும்விட்டு
பக்குவமாய் நாவற்பட்டைச் சாற்றூற்சாமம்
நயமாக வேயாட்டி ரவியில்வைத்து
நலமாகக் காய்ந்தபின்பு எடுத்துக்கொள்ளே. (28)

காய்ந்ததையும் மறுபடியே கல்வத்திட்டுக்
கனமான மூன்சாற்றூலரைத்துப்பின்பு
வாய்ந்தபடி ஐந்துமுறை யிவ்வண்ணமாய்
வகையோடே செய்தமதிற் குருவுக்கொஞ்சம்
ஆய்ந்தசித்தா மணக்கிலவை அரைத்துமேலே
அடைவாக வேபொதிந்து வைத்துக்கொண்டு
ஏய்ந்தபடி நெய்ப்பாண்டத் திட்டுமூட
இனிமையுடன் செந்தூரமாகும்பாரே (29)

செந்தூரம் பணவிடைதான் தேனிலுண்ணத்
தீருமே பாண்டுகா மாலைசோகை
சந்துவலி பெருவயிறுப் பிரவிபாண்டு
சதிரான உப்பிசநோய் கிராணியாறும்
வெந்துவருஞ் சலக்கழிச்சல் இளைப்பிருமல்
மிகத்தீரும் பத்தியமோ கரப்பான்தள்ளு
இந்தமுறை யுலகோர்க்கு யாகோப்சொன்னார்
இனிமையுடன் செய்தறிந்து பாகம்பாரே. (30)

பவளபற்பம்

கல்லதொரு பவளமது கொண்டுவந்து
நலமாக சுத்தசலந் தன்னிலிட்டு
வல்லவே இரவுபக லூறவைத்து
வாகுடனே அதையெடுத்துக்கழுவித்தேய்த்து
எல்லவே ஆவின்பால் தன்னிலிட்டு
இனிமையுட னெருநாளும் ஊறவைத்து
சொல்லவே அதையெடுத்து வைத்துக் கொள்ளச்
சொன்னாரே யாகோபு துணிவாய்த்தானே. (31)

முக்கியமாய்த் தேள்கொடுக்குக் காயிடித்து
முன்பாகப் புத்தோட்டில் பரப்பிக்கொண்டு
தக்கபடி முன்பவளம் அதிற்பரப்பித்
தயவாக அதன்மேல்முன் காய்பரப்பிப்
பக்குவமாய் மேல்மூடிச் சீலைசெய்து
பதராமல் கெஜபுடத்திற் போட்டெடுக்க
திக்கிலுள்ளோர் மெச்சுகின்றபற்பமாகும்
செகத்தோர்க்கு யாகோபு செப்பினாரே. (32)

மெச்சுகின்ற பற்பமதை பீங்கானிட்டு
மெதுவாக ஆவின்பால் தன்னைஊட்டி
பச்சமூள்ள ரவிதனிலே சாமமொன்று
பதிவாக வைத்தெடுக்க வெண்மையாகும்
உச்சிதமாய்க் குப்பிக்குள் வைத்துமூடி
உசிதமாய் நெற்பானைக் குள்ளேவைத்து
சச்சிதமாய் நாலுகாட் கழித்தெடுத்துக்
கருத்தாவே யாகோபு கருதினாரே. (33)

ஆவின்பால் நெய்தேனி லருந்தலாம்பின்
அனுப்பானந் தயிலவர்க்கம் லேகியங்கள்
பாவுடனே சாப்பிடும்போ திதையுஞ்சேர்த்துப்
பக்குவமாய்ச் சாப்பிடவே காசரோகம்
தாவுடனே சொரிகரப்பான் தொண்ணூற்றுறும்
சற்றங்கே நில்லாம லோடிப்போகும்
நாவுக்கும் பாவுக்குஞ் சரியதாக
நவின்றிட்டார் யாகோபு நன்மைதானே. (34)

அரிதார பற்பம்

அரிதாரம் பலமொன்று கட்டிவாங்கி
அன்புடனே துணிசுத்தி வைத்துக்கொண்டு
பெரிதான கண்ணாடிக் கல்தான்வாங்கிப்
பேசரிய புத்தோட்டில் சுண்ணம்புக்கல்
உரிதாக வேபரப்பித் தாரம்வைத்து
உகமையுள்ள சுண்ணம்பை மேலேபோட்டுச்
சரியான தேசிநீர் வார்த்துமூடித்
தானெரித்து யேழுதரஞ் சுத்திசெய்யே. (35)

சுத்திசெய்த அரிதாரம் பற்பஞ்செய்யச்
சுகமான வாழைபதின் கிழங்கெடுத்து
கத்திகொண்டு உள்க்குடைந்து அதனுள்வைத்துக்
கணக்காகக் கிழங்கதிலுல் வாயைமூடி
மத்தியிலே கிழங்குக்கு ஏழுசீலை
மண்செய்து காயவைத்து எடுத்துக்கொண்டு
பத்திபாய்க் குழிவெட்டிக் கெசபுடத்திற்
பற்பமென்று யாகோபு பகர்ந்திட்டாரே. (36)

நேரான பற்பமதிற் குருவைச்சேர்த்து
நேர்த்தியுள கெய்தனி லுண்ணவேதான்
சீரான மந்தார காசமீளை
சிறப்பான சிலேத்துமங்கள் தொண்ணூற்றும்
போரான கபவாதங் குஷ்டரோகம்
பெருங்கரப்பான் சிரங்குமூதல் நோய்களெல்லாங்
கூராம லோடுமென்று யாகோப்தானுங்
கூறினு ருலகோர்க்குக் குறிப்பாய்த்தானே. (37)

தாம்பூரப்பற்பம்

நல்லதொரு தாம்பூரக் தகடுதட்டி
நலமான வெள்ளெருக்கம் பாலிலிட்டு
வல்லதொரு தாம்புரத்தை யதிலேயிட்டு
வைத்துமே சூரியனிற் காயவைத்து
சொல்லுகின்ற மூன்பாலை வத்தவைத்துச்
சுகமாகக் குருப்பூசி ஓட்டில்வைத்து
மெல்லவே மேல்மூடி ஓடிவைத்து
விதமாக மண்சீலை அஞ்சுசெய்யே. (38)

அருமையுடன் கெசபுடத்தில் போட்டெடுக்க
அன்பான விபூதிபோல் நீறிப்போகும்
பெருமையுடன் பற்பமதை ஆவின்நெய்யில்
பேசரிய பாலதனி லுண்ணவேதான்
உரிமையுடன் குன்மமெட்டும் மேகசூலை
ஓடியே பதினெட்டுக் குட்டம்போகும்
வருமைகளு மித்தோடே அகன்றுபோகும்
வகையுடனே யாகோபு வசனித்தாரே. (39)

நாகபற்பம்

நாகமது ஒருகட்டி வாங்கிக்கொண்டு
நயமான அயக்காரண்டிக் குள்ளேயிட்டு
பாகமா யடுப்பேற்றிக் கரிசாலைச்சார்
பண்பான யிருள்ளிச் சாற்றிலேனும்
தாகமுள்ள சிறுநங்கைச் சாற்றிலேனும்
தயவாக மூன்றிலொன்று படிசார்வாங்கி
ஏகமதாய் நாற்சாமம் சுருக்குத்தாக்கி
இதையெடுத்து யாகோபு இயம்பினாரே. (40)

குகைதனிலே சிறுநங்கை கீழ்மேல்வைத்துக்
குறிப்பாக நாகத்தைநடுவேவைத்து
திகையாமற் குருவிட்டு ஊதுஊது
சிறப்புடனே பொருமியது நீறிப்போகும்
பகையிலா தேயெடுத்து வைத்துக்கொண்டு
பண்புடனே அனுப்பானந் தெரிந்தேயூட்டு
வகையோடு யிளைப்பிருமல் தீருமென்று
வாகாக யாகோபு வழுத்தினாரே. (41)

துருசுபற்பம்,

துருசதுவும் ஒருபலந்தான் வாங்கிக்கொண்டு
சுகமான கறுந்துளசிச் சாறுவாங்கிப்
பெருமையுள்ள துருசதுவை அதிலேபோட்டுப்
பேசரிய ஒருசாம மூறவைத்து
அருமையுட னந்தயிலை தன்னைத்தானும்
அரைத்துமே துருசுக்குக் கவசம்பூட்டி
மருவில்லா யெழுசீலை மண்ணுஞ்செய்து
வையென்று யாகோபு வழுத்தினாரே. (42)

மூதலாகச் சாணகலஞ் சாணீளந்தான்
முக்கியமாய்க் குழிவெட்டி யதற்குள்வைத்து
இதமாகக் குழிரெம்ப யெருவடுக்கி
இயல்பாகக் குழிப்புடந்தான் போட்டெடுத்து
விதமாகக் கல்வமிட்டு நொருக்கிக்கொண்டு
வேகமுடன் கருஊமத தஞ்சாற்றாலே
பதமாக ஒருசாமந் தானரைத்துப்
பக்குவமா யாகோபு பாலித்தாரே. (43)

அரைத்தெடுத்த தருசுதனிற் குருவைப்பூசி
அன்பாக மேற்சொன்ன இலையரைத்து
மரைத்துஅதை கவசமிட்டு ஓட்டில்மூடி
வகையாக சீலமண் மூன்றுஞ்செய்து
கரைத்ததொரு முழப்படத்தில் போட்டெடுக்கக்
கருத்தாக நீறியது பற்பமாகும்
உரைத்துவிட்டேன் குருவிதுதான் வேறொன்றில்லை
உத்தமமா யாகோபு உரைத்திட்டாரே. (44)

தருசுபற்பங் குருவதனை யனுப்பானத்தில்
சொகுசாகச் சாப்பிடவே சன்னிகாய்ச்சல்
கருவான கெண்டைகட்டி அட்டகுன்மம்
கருத்தான வாய்ச்சூலை கடலேபுக்கும்
திருவான வாதிமகன் செய்வான்வேலை
செப்பாமல் விட்டார்கள் சித்தரெல்லாம்
குருவாகும் யாகோபு துரையதாகக்
கூறினர் வாதிகளும் பிழைக்கத்தானே. (45)

உப்புத்தீட்சைவிதி.

நல்லதொரு பூநீரைப் பீங்கானிட்டு
நலமாகக் கரைத்தந்த தெளிவைவாங்கி
மெல்லனவே மருபீங்கான் தன்னிலிட்டு
மேன்மைபெற ரவியில்வைக்க உப்பேயாகும்
வல்லபமாய் மூன்போலே தெளிவைவாங்கி
மருபீங்கா னிட்டுரவி காயவைத்து
சொல்லவரு மிந்தமுறை பத்துப்பாகஞ்
சுத்திசெய்த பூநீறு இதுவாம் வையே. (46)

வையப்பா கரியுப்பை யிதுபோலாக
வகையாகத் தான்கரைக்க வழியைக்கேளு
செய்யப்பா கரியுப்பை கரைத்துக்கொண்டு
தீயெரித்துக் காய்ச்சியெடு பத்துதேரம்
மெய்யப்பா வெடியுப்பை யிதுபோலாக
மேவியே ஐந்துதரங் காய்ச்சசுத்தி
கையிலே குருமுடித்துக் கொடுத்துவிட்டேன்
கணக்கான தீட்சையது கண்டுகொள்ளே. (47)

நூற்கோர்வை.

பச்சமொடு யெழுநூறில் சொல்லுகின்ற
பற்பமொடு செந்தூரம் சுண்ணத்திற்கு
இச்சையொடு இடைபாகஞ் சரக்குவைப்பு
எரிப்புகிட்டம் புடபாகம் குருமுடிப்பு
வச்சதொரு சரக்குக்குச் செய்பாகந்தான்
வகையுடனே கைபாக மாகவேதான்
கச்சிதமாய் கோர்வைநூல் முறையதாக
கணக்குகளைச் சொல்லிவிட்டேன் கருத்தாய்ப்பாரே.

பாடினதோர் நூலதனி லெழுநூறுக்குள்
பற்பமொடு செந்தூரம் வாதப்போக்கு
தேடியே யலையாமல் கைபாகத்தால்
செய்துமே மூடிப்பதற்கு வகையுஞ்சொன்னேன்
கூடியே வழிதுரையாய்ச் செய்வானுகிற்
குபேரனென்ச் சொல்லுவர்க ளுலகிலுள்ளோர்
சாடையாய்ச் சொல்லிவிட்டேன் யாகோப்தானும்
தன்மையது தானறிந்து தான்செய்வாயே. (49)

சுண்ணமது அறுநூறு குருநூலாக
சொல்லினேன் வழிதுரையாய்க் கண்டுகொள்ள
முன்சொன்ன சுண்ணமூந் நூறும்பாரு
மூடியுமல்லால் தவருது வேறொன்றில்லை
கன்னலா யதைக்குறிக்கி நூற்றைம்பதுடன்
கருணையொடு ஐம்பதையுந் தானும்பாரு
மன்னவன்போல் வாழ்ந்திருக்க யாகோப்தானும்
வழுத்தினர் உலகோர்கள் பிழைக்கத்தானே. (50)

செந்தூர மூந்நூறு கைபாகந்தான்
சிறந்தநூ லதுபோலே நூல்கள்கிட்டா
சொந்தமுடன் குறிக்கிநூற் றைம்பதுந்தான்
சுருதியுத்தி அனுபவத்திற் கிசைந்துசொன்னேன்
பந்தமுட னதைக்குறிக்கி ஐம்பதுந்தான்
பாகமொடு வாதங்கள் பலிக்கச்சொன்னேன்
வந்தவினை தானகல யாகோப்சொன்னர்
வகையாக நூல்பார்த்து மகிழுவீரே. (51)

வயித்தியமு முன்னூறு பலசந்தத்தால்
வகையுடனே நபிமார்க்குச் சொல்லிவந்தேன்
பயமில்லா திந்தநூல் நாடிபாகம்
பாலித்தேன் மருந்துகளோ பன்புமெத்த
செயமாக நானூறு விரித்துச்சொன்னேன்
திருத்தமா யைம்பதுவுங் குறிக்கிச்சொன்னேன்
சுயமான இடைபாகம் பதினோடு
சொல்லினேன் செய்பாகம் பதினுர்பாரே. (52)

சுண்ணமுடன் செந்தூர முன்னூறுக்குச்
சுருக்கமா முன்னூறு களங்குசொன்னேன்
கண்ணியமாய் பஞ்சமித் திரமூன்னூறும்
கனிவுடனே சொல்லியைம் பதுவுஞ்சொன்னேன்
இன்னமெழு நூறுக்குச் சுருக்கந்தன்னை
இனிமையுட னிந்தவைம் பதுவுஞ்சொன்னேன்
சொன்னதொரு நூலுக்குக் குருநூலாகச்
சூட்டினேன் தண்டகமாம் நூற்றிப்பத்தே. (53)

சுந்தரம்போல் பதினேழு நூல்கள்சொன்னேன்
சுருக்கமாய் வாதத்தைப் பார்க்கச்சொன்னேன்
வந்தரச வாதமது செய்வதர்க்கு
வகையுடனே நூல்களெல்லாஞ் சொல்லிவைத்தேன்
விந்தையுட னிடைபாகஞ் செய்பாகங்கள்
விரும்பியே தெரிவதற்கு சொல்லிவிட்டேன்
சிந்தைமகிழ் வாக எந்நூல் முழுதும்பார்த்தோன்
சித்தனென்று யாகோபு செப்பினரே. (54)

ஆதியிலே யென்பேரு ராமதேவர்
அருமையுட னனேகநூல் சொல்லிவந்து
நீதியுடன் மக்கத்திற் போயிருந்து
நிலைபெறவே இந்நூல்கள் சொல்லிவைத்தேன்
வாதிகளும் பிழைப்பதற்குத் திறந்துசொன்னேன்
வகைதெரிந்தோன் வாதிமக னுவான்பாரு
சோதியது கண்டபின்பு தெரிந்து கொள்வாய்
சுகமான சுருக்கமைம் பத்துதைந்முற்றே. (55)

யாகோபு குரு நூல் 55.

முற்றிற்று.



கடவுள் துணை.

இராமதேவரென்ற

யாகோபுஅவர்கள் திருவாய் மலர்ந்தருளிய

வைத்திய சிந்தாமணி எழுநூறின்

அட்டவணைகள்

வகாரச்செந்தூரங்கள்.

வங்கச்செந்தூரம்.	468
வங்கச்செந்தூரம்.	53
வங்கச்செந்தூரம்	71
வங்கச்செந்தூரம்	481
வங்கச்செந்தூரம்	495
வங்கச்செந்தூரம்	593
நாகச்செந்தூரம்	388
நாகச்செந்தூரம்	399
நாகவங்கச்செந்தூரம்	229
அயச்செந்தூரம்	376
அயச்செந்தூரம்	489
அயச்செம்புச்செந்தூரம்	252
கருவங்கச்செந்தூரம்	476
இருவங்கச்செந்தூரம்	579
தருசுச்செம்புச்செந்தூரம்	115
சரியுப்புச்செந்தூரம்	127
திரிவங்கச்செந்தூரம்	216
தாளகச்செந்தூரம்	226
சிங்கிச்செந்தூரம்	428
உப்புச்செந்தூரம்	434
அயச்செந்தூரம்	558
அயநாகச்செந்தூரம்	600
அயக்காந்தச்செந்தூரம்	691

வகாரச் செந்தூரங்கள் மூடிக்கவேணுமாகிற் லோகச்செந்தூரமூற் நூற்றையும் அதன் சூல்திரங்ளையும் பார்த்தச்செய்வும்.

வகாரக்கட்டுச்சரக்குகள்.

தருசுக்கட்டு	368
தருசுக்கட்டு	157
வெடியுப்புக்கட்டு	51
வெடியுப்புக்கட்டு	436
பாரையுப்புக்கட்டு	72
நாகக்கட்டு	55
சூதகக்கட்டு	865
தாளகக்கட்டு	528
தாளகக்கட்டு	570
பாஷாணக்கட்டு	622
லிங்கக்கட்டு	628

வகாரத்திற்குத்தைலம்.

கெந்தகத்தைலம்	500
கெந்தகத்தைலம்	485
உரோமத்தைலம்	506
உரோமத்தைலம்	545

வகாரச்சரக்குக் கட்டுகளின்விபாமும்அவைகளைப்பஞ்சமித்திரஞ்செய்யக் கூடியவகைகளுந் தெரியவேண்டுமாலல்பஞ்சமித்திரம்மூன்நூறிற் சொல்லியிருக்கிறார் அதைப்பார்த்தால் நன்குவிளங்கும்.

நெய்வகைவிபரங்கள்.

பித்தவாயுவுக்குநெய்	202
சுக்கிலமேகத்திற்குநெய்	319
கால்கைநடுக்கலுக்குநெய்	447

வகாரச்சுண்ணங்கள்.

திருசுச்சுண்ணம்	57
திருசுச்சுண்ணம்	214
திருசுச்சுண்ணம்	344
திருசுச்சுண்ணம்	364
திருசுச்சுண்ணம்	414
திருசுச்சுண்ணம்	538
வெள்ளோத்திருசுச்சுண்ணம்	153
சித்தண்டச்சுண்ணம்	142
வெடியுப்புச்சுண்ணக்குரு	361
நாகச்சுண்ணம்	413
நாகச்சுண்ணம்	503

வகாரமுப்புக்குருமூடிக்க வேண்டுமானால் சுண்ணக்காண்டம் அறுநூறையும் தண்டகம்நூற்றிப்பத்தையும். இடைபாகம்பதினறையும்பார்க்க நன்முய்த்தெரியவரும்.

வகாரச்செம்பெடுக்கும்வகை

திருசுச்செம்பு	409
திருசுச்செம்பு	112
திருசுச்செம்பு	425
திருசுச்செம்பு	506
திருசுச்செம்பு	520
திருசுச்செம்பு	532
அயச்செம்பு	145
அயச்செம்பு	249
அயச்செம்பு	351
வேதைச்செம்பு	370
அரிதாரச்செம்பு	135
அரிதாரச்செம்பு	512
நாகஅயச்செம்பு	390
அயத்திருசுச்செம்பு	415

வகாரத்திராவகம்.

அழுரித்திராவகம்	77
சாரத்திராவகம்	38
சாக்குகள்கட்டத்திராவகம்	371
சூடதிராவகம்	566

வகாரசத்துவகைகள்.

கண்டர்சத்து	248
பஞ்சமித்திரம்	251
வங்கவெட்டை	375
சூதங்கட்டக்கிண்ணம்	379
சவுக்காரக்குரு	410
நாகச்செயநீர்	430
வங்கச்செயநீர்	453
அயமணி	487
சத்துக்களின்சோதனை	517
வேதைக்குப்புடபாகம்	562
கருவங்கமேவதை	641

வகாரக்களங்குகள்

சூதக்களங்கு	159
அயக்களங்கு	146
அரிதாரக்களங்கு	346
கருவங்கக்களங்கு	397
அயக்களங்கு	448

வகாரக்களக்குகள் சத்துக்கள் செய்யவேண்டு மாறுல்களங்குமுறைசொல்லியிருக்கிறார் அதைப்பார்த்தால்களங்காக்குகிறவிபரங்களும் சத்தாக்குகிறவிபரங்களுந் தெளிவாய்த தெரியவரும்.

பதங்கவகைவிபரங்கள்.

வாலரசபதங்கம்	13
அப்பிரேகப்பதங்கம்	257
குப்பிவைப்புப்பதங்கம்	16
நாகரசப்பதங்கம்	434
சூதப்பதங்கம்	574
கருநாகப்பதங்கம்	662
வீரரசப்பதங்கம்	444

செந்தூரவகைகள்.

அயச்செந்தூரம்	19
அயச்செந்தூரம்	95
அயச்செந்தூரம்	121
அயச்செந்தூரம்	138
அயச்செந்தூரம்	331
வங்கச்செந்தூரம்	147
வங்கச்செந்தூரம்	356
சருவங்கச்செந்தூரம்	119
சருவங்கச்செந்தூரம்	354
அயக்காந்தச்செந்தூரம்	244
அயக்காந்தச்செந்தூரம்	20
அயக்காந்தச்செந்தூரம்	380
அயக்காந்தச்செந்தூரம்	666
அயவீரச்செந்தூரம்	261
அப்பிரகச்செந்தூரம்	223
அப்பிரகவங்கச்செந்தூரம்	582
அப்பிரகச்செந்தூரம்	491
நாகச்செந்தூரம்	107
அக்கினிகுமாரச்செந்தூரம்	23
உப்புச்செந்தூரம்	123
தாம்பிரகாந்தச்செந்தூரம்	124
அன்னபேதிச்செந்தூரம்	126
பஞ்சசுண்ணச்செந்தூரம்	209
மண்டூரச்செந்தூரம்	219
தாளகச்செந்தூரம்	327
தருசுச்செந்தூரம்	342

இந்தச் செந்தூரங்களும் இன்னுமகேக செந்தூரங்களும் கைபாகம் செய்பாகம் எடைபாக முதலானவைகளே செந்தூரமுற் றாறில்லிரித்தும் அதற்குச்சூத்தி ரமாகக்குறுக்கிதூற்றியைத்தை ந்தும்அதைக்குறுக்கிஜம்பத்தை ந்துஞ்சொல்லியிருக்கிறார் அவை களையும்பார்த்துச்செந்தூரங்க செய்துகொள்ளவேண்டியது.

வல்லாதிவகை

சேங்கொட்டைவல்லாதி	46
சேங்கொட்டைவல்லாதி	687

பற்பவகைவிபரங்கள்.

தாமிரபற்பம்	37
தாமிரபற்பம்	21
தாமிரபற்பம்	30
தாமிரபற்பம்	69
நாகபற்பம்	28
நாகபற்பம்	151
நாகவங்கபற்பம்	162
நாகாசபற்பம்	170
நாகபற்பம்	655
அரிதாரபற்பம்	91
அரிதாரபற்பம்	154
அரிதாரபற்பம்	167
அரிதாரபற்பம்	328
அரிதாரபற்பம்	385
அரிதாரபற்பம்	441
கருவங்கபற்பம்	150
கருவங்கபற்பம்	165
கருவங்கப்பற்பம்	329
வெள்வங்கபற்பம்	149
சதுர்முகப்பற்பம்	32
பாஷாணப்பற்பம	70
பாஷாணப்பற்பம்	443
திரிலோகபற்பம்	101
தொற்பம்	140
சூதகாகப்பற்பம்	164
மாங்கொம்புப்பற்பம்	271
வெள்ளைக்குங்கிலியப்பற்பம்	272
லிங்கப்பதங்கப்பற்பம்	90

தைலவகைவிபரங்கள்.

மேகதத்திற்குக்கெந்தித்தைலம்	62
தலையிடித்தைலம்	67
வாதத்திற்குத்தைலம்	179
பீனிசத்துக்குதைலம்	183
வாதத்திற்குகெந்தித்தைலம்	186
வெள்ளைமூத்துகுத்தைலம்	457
கண்டமாலைகுத்தைலம்	454
குஷ்டத்திற்குத்தைலம்	452
சன்னிக்குத்தைலம்	962

திராவகவகைகள்.

கடுக்காய்த்திராவகம்	41
சந்தனத்திராவகம்	75
மெழுகுத்திராவகம்	73
சேங்கொட்டைத்திராவகம்	74
புதாகாக்கீரைத்திராவகம்	76
தாகுப்புல்திராவகம்	78
மிளகுத்திராவகம்	80
சுண்டைவற்றல்திராவகம்	81
பெருங்காயத்திராவகம்	83
திரிகடுகுத்திராவகம்	84
தென்னங்கள்ளுத்திராவகம்	85
திரிபலாதித்திராவகம்	86
கரியுப்புத்திராவகம்	87
சாரக்குக்கட்டத்திராவகம்	89
அருநெல்லித்திராவகம்	100
வெடியுப்புத்திராவகம்	109
சூதம்வெடியுப்புத்திராவகம்	213
சாரக்குக்கட்டத்திராவகம்	212
வெள்ளைப்பூடுத்திராவகம்	82
மூலிகைத்திராவகம்	321
புளிச்சானிலைத்திராவகம்	358
பூரீர்த்திராவகம	362
சாராயத்திராவகம்	382
சேங்கொட்டைத்திராவகம்	383
வெடியுப்புஓமத்திராவகம்	402
மிளகுத்திராவகம்	4 8
இஞ்சித்திராவம்	404
திப்பிலித்திராவகம்	405
ஆனைத்திப்பிலித்திராவகம்	406
கடைச்சரக்குத்திராவகம்	407
பூண்டுத்திராவகம்	408
வெடியுப்புத்திராவகம்	431
கம்மங்கஞ்சித்திராவகம்	464
காடித்திராவகம்	465
இஞ்சித்திராவகம்	467
ஓமத்திராவகம்	584
ஓமத்திராவகம்	79

பலரோகமருந்துவகைகள்.

காமாலைக்குமருந்து	239
வெட்டைக்குமருந்து	255
கள்ளிப்புக்கிரந்திக்குமருந்து	273
கண்வியாதிக்குமருந்து	275
நீர்ச்சுருக்குக்குமருந்து	50
சூலைக்கட்டுக்குமருந்து	97
மகோதரத்திற்குமருந்து	111
சத்திகுன்மத்திற்குமருந்து	27
விந்துகட்டமருந்து	59
உதட்டுப்புழுவுக்குமருந்து	203
கிராணிக்குமருந்து	208
மந்தாரகாசத்திற்குமருந்து	232
விரைவாதத்திற்குமருந்து	44
அண்டவாயுவுக்குமருந்து	295
விஷபாண்டுக்குமருந்து	118
குன்மத்திற்குமருந்து	36
கிராணிக்குமருந்து	205
நீரடைப்புக்குஉப்புமருந்து	94
சூதகத்திற்குமருந்து	291
வாதசூலைக்குமருந்து	292
மலடுநீங்கமருந்து	194
மந்தாரகாசத்திற்குமருந்து	320
மலசலக்கட்டுக்குமருந்து	322
அறைபாப்புக்குமருந்து	324
இரசப்விரடங்கருந்து	337
வெட்டைக்குமருந்து	341
எலிகடிக்குமருந்து	427
விக்கலுக்குமருந்து	451
காமாலைக்குமருந்து	460
காசத்திற்குப்புகைமருந்து	578
மூலக்கடுப்புக்குமருந்து	589
வாந்திபேதிக்குமருந்து	625
வாந்திபேதிக்குமருந்து	631
வாதகிராணிக்குமருந்து	651
தொந்தக்கிராணிக்குமருந்து	654
வாந்திபேதிச்குமருந்து	655

சுண்ணவகைவிபரங்கள்.

தாமிரச்சுண்ணம்	42
சினச்சுண்ணம்	241
சீனச்சுண்ணம்	61
தாளகச்சுண்ணம்	238
தாளகச்சுண்ணம்	242
தாளகச்சுண்ணம்	629
திராச்சுண்ணம்	68
நாகவங்கப்பரிச்சுண்ணம்	225
வங்கச்சுண்ணம்	355
அப்பிரகச்சுண்ணம்	412
வெடியுப்புச்சுண்ணம்	452
நாகச்சுண்ணம்	456

இத்தச்சுண்ணங்கள்செய்வதாயிருந்தால் இன்னுமநேகசுண்ணங்களெல்லாம் விரித்துசொல்லக்கூடிய சுண்ணக்காண்டம் அறுநூறும் அதைக்குறுக்கிச்சொல்லக்கூடிய சுண்ணமுந்நூறும்அதைக்குறுக்கிச் சூஸ்திரமாக நூற்றைம்பத்தைந்தும் அதைக்குறுக்கிஐம்பத்தைந்துஞ் சொல்லியிருக்கிறார் அவைகளைப்பார்த்துசெய்யவும்அன்றியும் செய்பாகங்கள்தன்குவினங்கும்.

கியாழவகைவிபரங்கள்.

சூதமூறிவுக்குக்கியாழம்	204
சீரடைப்புக்குக்கியாழம்	37
இருமலுக்குக்கியாழம்	240
சூகவலிக்குக்கியாழம்	256
கிருமிக்குக்கியாழம்	276
நீரழிவுவரட்சிக்குக்கியாழம்	314

இன்னுமநேக விதமான கியாழங்கள்வைத்திய முந்நூறில் சொல்லிருக்கிறார் அதைப்பார்த்தால்தெளிவாய்தெரியும்.

சரக்குச்சுத்திமுறைகள்.

அயஞ்சுத்தி	386
கெந்தகசுத்தி	338
வெள்ளிசுத்தி	334
கருவங்கசுத்தி	358
செம்புசுத்தி	369
கோவாளசுத்தி	378
பாஷாணங்கள்சுத்தி	394
வங்கசுத்தி	417
கெந்தகசுத்தி	418
தருசுச்செம்புசுத்தி	419
அரிதாரசுத்தி	420
நாகசுத்தி	421
தருசுச்செம்புசுத்தி	466
வங்கசுத்தி	479
விளக்கெண்ணெய்சுத்தி	589

இதில்சரக்குச் சுத்திகள் மாறிமாறிச் சொல்லியிருப்பதுவகாரத்திற்குச் செய்யவேண்டியசுத்திவேராகவும். வயித்தியத்திற்குசெய்யவேண்டிய சுத்திவேராகவுமிருக்கிறது இன்னுமனேகசுத்திமுறைகள் வயித்தியமுந்நூறில் சொல்லியிருக்குதார்அதையும்பார்த்துசரக்குசுத்தி செய்துகொள்ளவும்.

ரசாயணம்.

நீர்யெரிவுக்குரசாயணம்	301

கிருதவகைவிபரங்கள்.

உஷ்ணவாயுவுக்குக்கிருதம்	281
அண்டவாயுவுக்குக்கிருதம்	283
அண்டவாயுவுக்குக்கிருதம்	264
பித்தவெட்டைக்குக்கிருதம்	268
சால்கைகடுப்புக்குகிருதம்	484
சன்னிக்குபூரணிக்கிருதம்	611

மாத்திரை விபரங்கள்.

குன்மத்திற்குமாத்திரை	40
காசத்திற்குமாத்திரை	192
பச்சவாதத்திற்குமாத்திரை	196
வாதசூலைக்குமாத்திரை	206
விஷத்திற்குபூரமாத்திரை	233
சூலவாயுவுக்குமாத்திரை	27
மலடுநீங்கமாத்திரை	278
குன்மத்திற்குமாத்திரை	198
இசிவுக்குமாத்திரை	282
நீரழிவுக்குவங்கமாத்திரை	318
சுரத்திற்குமாத்திரை	323
குஷ்டரோகத்திற்குமாத்திரை	325
திமிர்மேகத்திறகுமாத்திரை	326
சுரத்திற்குமாத்திரை	357
சுரத்திற்குமாத்திரை	384
இரசபதங்கமாத்திரை	426
எலிகடிக்குமாத்திரை	610
கிராணிக்குபந்தனமாத்திரை	647
மேகவாயுவுக்குமாத்திரை	317
மகோதரத்திற்குமாத்திரை	869

மெழுகுவகைவிபரங்கள்.

நீரழிவுக்குமெழுகு	302
குன்மத்திற்குமெழுகு	197
தாதுவிறுதிக்குமெழுகு	61
நீர்ழிவுக்குசூகவங்கமெழுகு	309
வாதத்திர்குக்கெந்திமெழுகு	171
குன்மத்திறகுமெழுகு	49
இருமலுக்குமெழுகு	92
தனுர்வாதத்திற்குமெழுகு	174
உஷ்ணவாயுவுக்குமெழுகு	200
ஜலரோகத்திற்குமெழுகு	303
சுவாசகாசத்திற்குமெழுகு	45
இரசமெழுகு	658
பாண்டுக்குஅயமெழுகு	675
மேகவெள்ளைக்குமெழுகு	38
நீரழிவுக்குமெழுகு	311
அத்தரவாயுவுக்குமெழுகு	284
நீரழிவுக்குவங்கமெழுகு	307

எண்ணெய் விபரங்கள்.

ஆறுகபுண்ணுக்குஎண்ணெய்	66
சூலை18க்குஎண்ணெய்	184
கர்ப்பசூலைக்குஎண்ணெய்	185
கிலுகிலுப்பைஎண்ணெய்	188
எலிகடிக்குஎண்ணெய்	189
வாதசூலைக்குஎண்ணெய்	153
சூலைக்குஎண்ணெய்	177
ஸ்ரீசந்தனத்திற்குஎண்ணெய்	190
மலசலக்கட்டுக்குஎண்ணெய்	65
வாயுவுக்குஎண்ணெய்	176
குடல்வாதத்திற்குஎண்ணெ	287
சூதகவாயுவுக்குஎண்ணெய்	263
ரணங்களுக்குஎண்ணெ	264
மேகத்திற்குமரிஎண்ணெ	267
கற்பம்உண்டாகஎண்ணெய்	279
வலிப்புக்குகும்பயெண்ணெ	173
அண்டவாயுவுக்குஎண்ணெ	236
இளம்பிள்ளைவாதஎண்ணெ	338
சுகபேதிக்குஎணணெய்	387
விரைவாதத்திற்குஎண்ணெ	446
வெட்டைக்குஎணணெய்	590
பித்தங்காமாலைக்கெண்ணெ	596
சூலவாயுவுக்ஸ்ரீஎண்ணெய்	659
குளிர்ச்சிக்குஎண்ணெய்	684
பச்சைவாதத்திற்கெண்ணெ	686
சூலைக்குக்கோழியெண்ணெ	265
கர்ப்பசூலைக்குஎண்ணெய்	689

பலவியாதிமருந்துவகைகள்

அண்டவாதத்திற்குக்கட்டு	290
மதுவின்குணம்	207
சன்னிக்குஆக்ராணம்	199
அண்டவிருத்திற்குபத்து	295
அண்டவாத்திற்குப்புகை	289
ஞானம்	377
சத்திசிவஞானம்	378
மெஞ்ஞானம்	605
பிரண்டைமோர்க்குழம்பு	609

பலவியாதிமருந்துவகைகள்

அறையாப்புக்குக்களிப்பு	644
வாயுவுக்குஉப்பு	645
குன்மத்திற்குஉப்பு	646
மண்டையிடிக்கு ஆக்ராணம்	682
பித்தக்கிராணிக்குமருந்து	652
அய்யக்கிராணிக்குமருந்து	655
கண்வலிக்குமருந்து	656
சபிமார்கள்சந்தோஷம்	164

பலவியாதிகளுக்கு வைத்தியமூன்நூறில் விரித்துச் சொல்லியிருக்கிறார் அதைப்பார்த்தால் கன்குவிளங்கும்

லேகியவகைவிபரங்கள்.

மூலக்கிராணிக்குலேகியம்	104
பெரும்பாட்டுக்குலேகியம்	277
குஷ்டத்திற்குலேகியம்	296
மலக்கட்டுக்குலேகியம்	195
கடுகுலேகியம்	93

இன்னுமநேகவியாதிகளுக்குமருந்துகள் முறையோடுவைத்தியம்நாநூறிற்சொல்லியிருக்கிறது அதைப்பார்த்தால்வைத்தியபாகங்கள்தெளிவாய்த்தெரியும்.

சுடர்த்தைலவகைகள்.

வலிப்புக்குச்சுடர்த்தைலம்	172
குஷ்டத்திற்குசுடர்த்தைலம்	180
சூலைக்குசுடர்த்தைலம்	181
காசத்திற்குச்சுடர்த்தைலம்	201
அரிதாரச்சுடர்த்தைலம்	280
மூலமூலைக்குச்சுடர்தயிலம்	372

சூரணவகைவிபரங்கள்.

கிராணிச்சூரணம்	48
கால்சை யெரிவுக்குச்சூரணம்	60
மேகப்பற்றிற்குச்சூரணம்	68
குஷ்டத்திற்குச்சூரணம்	195
கெஞ்செரிவுக்குச்சூரணம்	274
அண்டவிக்கச்சூரணம்	288
காசத்திற்சச்சூரணம்	191
நீரழிவுக்குச்சூரணம்	305
நீரழிவுக்குஆவரைச்சூரணம்	315
சீதபுஷ்டிக்குச்சூரணம்	330
சுரஞ்சன்னிக்குச்சூரணம்	340
பெருவயிற்றுக்குச்சூரணம்	360
பாண்டுகாமலைக்குச்சூரணம்	359
கிராணிக்குச்சூரணம்	426
மூலவாய்வுக்குச்சூரணம்	587
மூப்பிரண்டைச்சூரணம்	620
திமிருகுட்டத்திற்கு சூரணம்	639
சயத்திற்சூரணம்	649
அஷ்டகுன்மத்திற்குசூரணம்	39
வாந்திபித்தத்திற்குசூரணம்	269
சலரோகத்திற்குச்சூரணம்	304
வாதபித்தத்திற்குச்சூரணம்	618
குன்மவாயுவுக்குச்சூரணம்	620
வீக்கசயத்திற்குச்சூரணம	378

குழித்தைலவிபரங்கள்.

இரத்தகாசத்திற்குத்தைலம்	65
குஷ்டத்திற்குகுளிதைலம்	175
ஈளைகாசத்திற்குத்தைலம்	103
சில்விஷத்திற்குத்தைலம்	343
குஷ்டத்திற்குத்தைலம்	428

யாகோபு வைத்திய சிந்தாமணி 700 ரின்
அட்டவணைகள்,
முற்றிற்று.

கடவுள் துணை.

இராமதேவரென்ற

யாகோபுஅவர்கள் இயற்றிய

சாஸ்திரங்கள்

வைத்தியசிந்தாமணி	700	வகாரக்களங்கு	800
ஷை–குருநூல்	50	ஷைபஞ்சமித்திரம்	800
சண்ணக்காண்டம்	600	ஷை இடைபாகம்	16
ஷைசண்ணம்	300	ஷைசெய்பாகம்	16
ஷைசண்ணசூஸ்திரம்	155	வயித்தியவாதசூஸ்திரம்	400
ஷைசூத்திரம்	55	ஷைவயித்தியம்	300
லோகச்செந்தூரம்	300	ஷைசூஸ்திரம்	55
ஷைசெந்தூரசூஸ்திரம்	155	ஷைதண்டகம்	110
ஷைசூஸ்திரம்	55	ஆகமொத்தம்சாஸ்திரங்கள்	17

இந்த சாஸ்திரங்கள் பதினேழும் பதிஞ்ரு புத்தகமாகஅச்சிட்டு விற்பனைசெய்து வருகிறது மேற்கண்ட சாஸ்திரங்களில் அனேக யிடங்களிற் பரிபாஷையாக சொல்லியிருப்பது தெரிவதற்கு அனேகமகான்கள் இந்த பதினேழு சாஸ்திரங்களுக்கும் அரும்ப தவுரைஅச்சிடுத் தரவேணுமென்று கேட்டுக் கொண்டபடியால் கோளிக்கொடி வாலியானந்த சுவாமிகள்ஆதீன பரம்பரை நமசி வாயக்குருக்கள் அவர்களிடமிருந்த ஓலேயேட்டுப் பிரதியை வைத்து அரும்பதவுரை அச்சிட்டு வருகிறது கூடிய சீக்கிரம் முடிந்துவிடும் ஆகப்புத்தகம் 12-ம் ஒரே மொத்தமாக கிறையத்திற்கு வாங்குபவர் களுக்குரூ 7-0-0 வீதங் கொடுப்பதாய் தீர்மானித்திருக்கிறது அன்னியில் இன்னும் அனேகவி, வைத்திய சாஸ்திரங்கள் ஓலே யேட்டுப் பிரதியிலிருந்து அச்சிட்டுத் தயாரிலிருக்கிறது தேவையு ள்ளவர்கள் வேண்டிய புஸ்தகங்களுக்கு யெழுதினால் கேட்டலாக்கு சந்தோமாய் வீபியில் அனுப்பிக்கக் கூடும்-

இங்ஙனம்

இரர்ம குருசாமிக்கோன்

புஸ்தகஷாப்,

புதுமண்டபம், மதுரை.

